ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை - 2019

# எதிர்காலத்திற்கான ஓர் தடம்பதிக்கும் பயணம்

## உத்வேகம் மிக்க எண்ணியல் யுகத்தினாலான புத்தூக்கம்



தேசிய சேமிப்பு வங்கி

# எதிர்காலத்திற்கான ஓர் தடம்பதிக்கும் பயணம்

**உத்வேகம் மிக்க எண்ணியல் யுகத்தினாலான புத்தூக்கம்**

நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் வலிமைமிக்க ஓர் பாரம்பரியத்துடன், எமது வாடிக்கையாளர்களுக்கு 360° நிதியியல் தீர்வுகளை வழங்கும் எதிர்காலத்திற்கான ஓர் தடம்பதிக்கும் பயணத்தில் நாம் உள்ளோம். தற்போது, எண்ணியல் தளப்பரப்பு மற்றும் அதன் அனைத்து சாத்தியக்கூறுகளும் தொழிற்துறைகள் இடையிலான பாரம்பரிய எல்லைகளை கலைத்துள்ள ஒரு அற்புதமான கட்டத்தில் நாம் இருக்கிறோம். இப் பயணத்தில் நாம் முன்னேறும் நிலையில், சேமிப்புக் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை, நிலைத்தன்மைக்கான எங்கள் உறுதிமொழியை அத்துடன் தேசத்திற்கு சேவை செய்வதற்கான நமது பொறுப்பையும் நாம் வலுப்படுத்துகிறோம்.

எமது பயணம் உத்வேகம் மிக்கது. எமது பயணம் தடம் பதிப்பது.

# உள்ளடக்கங்கள்

தொகுதி - 01
ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை 2019

## ப. 4

### முன்னுரை


4 இந்த அறிக்கை பற்றி
7 ஒரே பார்வையில் தே.சே.வங்கி
10 மைற்கற்கள்
11 முக்கிய விடயங்கள்
12 தலைவரது செய்தி
16 பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு


## ப. 19

### எமது பெறுமதி உருவாக்க மாதிரி

வங்கியின் பெறுமதி உருவாக்கச் செயன்முறை பற்றிய ஓர் முற்றடக்க கலந்துரையாடல் தேசிய சேமிப்பு வங்கியின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு, விழுமியங்கள் மற்றும் தந்திரோபாயம் என்பன மூலம் வழிநடாத்தப்பட்டதாகும். பெறுமதி உருவாக்கம் பற்றிய பொதுநோக்கு ஒன்றினை எடுத்துரைக்கின்ற தேசிய சேமிப்பு வங்கியின் வியாபார மாதிரியினை இப்பிரிவு உள்ளடக்குகின்றது. மேலும், இது, தொழிற்படுகின்ற சூழலினை எடுத்துரைப்பதுடன், வங்கியின் அக்கறையுடைய தரப்பினரின் ஈடுபாட்டுச் செயன்முறை, பொருண்மை இனங்காணல் செயன்முறை, மற்றும் வங்கியின் உபாயத்தினை வகுப்பதற்கு பங்களிக்கின்ற நிலைபேறான தன்மை மிக்க கொள்கை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றது.


20 எமது நிலைபேறான வணிக மாதிரி
22 தொழிற்பாட்டுச் சூழல்
49 தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு
70 ஒருங்கிணைந்த அக்கறையுள்ள தரப்பினர் ஈடுபாடு
78 பொருண்மை விடயங்கள்


## ப. 89

### முகாமை உரையாடல் மற்றும் ஆய்வு

இந்தப் பகுதி ஒவ்வொரு மூலதனத்தின் அடிப்படையிலும் தேசிய சேமிப்பு வங்கியின் தொழிற்பாடுகள், செயற்றிறன், சவால்கள் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் தொடர்பான மீளாய்வாகும். மேலும், எமது வணிகத் தொழிற்பாடுகள் மற்றும் செயற்றிறனின் ஓர் இணைப்பான பகுதி என்ற வகையில் நிலைபேறான தன்மை தொடர்பிலான தேசிய சேமிப்பு வங்கியின் நிலைப்பாடு தொடர்பிலும் வெளிப்படுத்துகிறது.


90 நிதி மூலதனம்
112 உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்
120 புலமை மூலதனம்
130 மனித மூலதனம்
144 சமூக மற்றும் உறவு மூலதனம்
162 இயற்கை மூலதனம்
170 பூகோளவியல் அறிக்கையிடல் முன்முனைவுகளின் (GRI) உள்ளடக்கச் சுட்டெண்


## ப. 175

### ஆளுகை

தேசேவ இன் கூட்டாண்மை ஆளுகையின் ஒருங்கிணைந்த முறைமை, இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமை சட்டகம் தொடர்பான கண்ணோட்டம். தேசேவ இல் கூட்டாண்மை ஆளுகை வினைத்திறனான தொழிற்பாடுகள், மூலதனத்துக்கான மேம்பட்ட அணுகல், இடர் இழிவாக்கல் மற்றும் அக்கறையுள்ள தரப்பினருக்கான பாதுகாப்பு ஆகியவற்றினை விளைவாகத் தருகிறது.


176 பணிப்பாளர் சபை
180 கூட்டாண்மை முகாமைத்துவம்
182 நிறைவேற்று முகாமைத்துவம்
184 பிரதான முகாமையாளர்கள்
185 கூட்டாண்மை ஆளுகை மீதான கூற்று
186 இடர் முகாமைத்துவம் மீதான கூற்று




தொகுதி - 02
தொகுப்பு 2019

## ப. 187

## நிதியியல் அறிக்கைகள்

வருமானக் கூற்று, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று ஆகியவற்றால் 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய சேமிப்பு வங்கியின் நிதிச் செயற்றிறன் மற்றும் நிதி நிலைமை ஆகியன சித்தரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் தொகுதி 02 இல் நிதியியல் கூற்றுக்கள் என்னும் தலைப்பின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளன.

188 வருமானக் கூற்று
189 அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று
190 நிதிநிலைமைக் கூற்று
192 கூட்டாண்மைத் தகவல்

## ஆளுகை
## (ப. 196)

196 கூட்டாண்மை ஆளுகை
233 சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை
237 சபை மனித வளங்களுக்கும் ஊதியங்களுக்குமான குழுவின் அறிக்கை
239 சபை நியமனக் குழுவின் அறிக்கை
241 சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை
244 சபை கடன் குழுவின் அறிக்கை
246 சபைத் தகவல் தொழில்நுட்ப மூலோபாயக் குழுவின் அறிக்கை
248 இடர்நேர்வு முகாமைத்துவம்

## நிதியியல் அறிக்கைகள்
## (ப. 275)

276 நிதி நாட்காட்டி
277 பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை
283 நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு தொடர்பான கூற்று
285 நிதி அறிக்கையிடல் மீதான அகக்கட்டுப்பாடுகள் பற்றிய பணிப்பாளர் கூற்று
287 உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம்
288 சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை
291 பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஸ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று
293 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை
295 நிதியியல் கூற்றுக்களின் உள்ளடக்கம்
296 வருமானக் கூற்று
297 அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று
298 நிதி நிலைமைக் கூற்று
300 பங்குரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று
304 காசுப் பாய்ச்சல்கள் கூற்று
306 நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## பிற்சேர்க்கைத் தகவல்
## (ப. 425)

426 உற்பத்திகளும் சேவைகளும்
430 ஐ.அ. டொலர்களிலான வருமானக் கூற்று
431 ஐ.அ. டொலர்களிலான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று
432 ஐ.அ. டொலர்களிலான நிதி நிலைமைக் கூற்று
433 2016 இன் 1 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரைகளின் III ஆம் அட்டவணைக்கு அமைய பாசல் III வெளிப்படுத்தல்கள்
446 உள்நாட்டில் – முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கி மதிப்பீட்டுச் செயன்முறை – 2019
448 இலங்கை மத்திய வங்கியினால் வேண்டப்பட்ட ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்
455 புள்ளிவிபரக் குறிகாட்டிகள் 2010-2019
457 வைப்புப் பகுப்பாய்வு
458 தொடர்புடைய வங்கிகள்
459 பரிமாற்றுக் கம்பனிகள்
461 Eurogiro உறுப்பினர்கள்
462 நிதியியல் மற்றும் வங்கியியல் அருஞ்சொற்கள் விளக்கத் தொகுப்பு

# இந்த அறிக்கை பற்றி GRI 102-1




தேசிய சேமிப்பு வங்கி (தே.சே.வ) 2019 ஆம் நாட்காட்டி ஆண்டில் தொடர்ச்சியான ஆறாவது ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கையை முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறது. இந்த அறிக்கை சூழவுள்ள பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளின் பின்னணியில் வங்கியின் நிதிச் செயற்திறன் தொடர்புபட்ட நிலைநிலைமை குறித்த விரிவான தகவல்களை வழங்குகிறது.

## பெறுமதி உருவாக்கத்திற்கான எமது ஒருங்கிணைந்த சிந்தனை அணுகுமுறை

ஒரு சிக்கலான உலகில் செயற்படும் ஒரு முன்மாதிரியான அமைப்பு என்ற வகையில், பெறுமதியை உருவாக்கும் நமது திறன் மீது செல்வாக்கு செலுத்தும் அக மற்றும் புற இயக்கிகள், ஒன்றிலொன்று சார்ந்த தன்மைகள் மற்றும் வர்த்தக மாற்றுத் தெரிவுகள் ஆகியவற்றின் சவால்களை நாம் கடந்து செல்கிறோம். நீடித்து நிற்கும் பெறுமதியை உருவாக்கும் எமது செயன்முறையில், எமது வாடிக்கையாளர்கள், அக்கறைதாரர்கள் மற்றும் எமது தந்திரோபாயம் என்பன எமது ஒருங்கிணைந்த சிந்தனைக்கு இசைவாக உள்ளன.

ஒருங்கிணைந்த சிந்தனை எமது வணிகத்தை நாம் முகாமை செய்யும் முறை மற்றும் எமது அக தந்திரோபாய விருத்தி மற்றும் அறிக்கையிடல் நடைமுறைகள் ஆகியவற்றுக்கு உள்ளார்ந்தமானதாகும். காலப்போக்கில் பெறுமதியை உருவாக்கத் தேவையான வகையில் வளங்கள் மற்றும் உறவு முறைகளை நாம் முகாமை செய்வதை உறுதிப்படுத்தும் விதமாக எமது தந்திரோபாயம் உருவாக்கப் பட்டுள்ளது. ஆறு மூலதனங்களுக்கான (IIRC இன் <IR> சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி) கருத்தில் கொள்ளப்பட்ட மதிப்பீடு இந்த அறிக்கையிடன் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கான எமது தந்திரோபாயம் மற்றும் பொருண்மை செயன்முறைகள் ஆகியவற்றை அறிவுறுத்துகிறது.அதன்படி, இந்த அறிக்கை வங்கியின் தந்திரோபாயம், ஆளுகை, செயல்திறன் மற்றும் வாய்ப்புகள் குறித்த சுருக்கமான மற்றும் பொருண்மையான தகவல்களை வழங்குகிறது. வேகமாக மாறிவரும் தளப்பரப்பில் நீடித்த வாழ்வுடைய போட்டி நன்மைகளை உருவாக்குவதற்கான எமது தந்திரோபாயத்தை இது விபரிப்பதுடன், அதனை செயற்படுத்துவதிலான எமது முன்னேற்றத்தினை மதிப்பிடுகிறது. எமது தந்திரோபாயத்தின் மையமாக இருக்கும் சிறந்த வாடிக்கையாளர் சேவைத் தரத்தை வழங்குவதற்கான எமது ஆற்றல் எமது அக்கறையுடைய தரப்பினருடனான எமது உறவுமுறைகளின் தரத்தைப் பொறுத்ததாகும். நம்பிக்கை மிகுந்த கூட்டுவணிக பிரஜையாக, எமது நம்பகத் தன்மை, எமது பிற பல அக்கறை நலன் தாரர்களின் நன்மதிப்பைப் பொறுத்தது ஆகும். எனவே, எமது அறிக்கை, நாம் பங்காளராகும், நாம் எமது பெறுமதி உருவாக்கம் தொடர்பில் வகை கூறும் எமது தொழிற்துறை மற்றும் சமுதாயத்தில் உள்ள அனைத்து அக்கறைதாரர்களுக்கும் இந்த அறிக்கை முகவரியிடப்படுகிறது.

## இந்த அறிக்கையை எவ்வாறு வாசிப்பது

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளாக வழங்கப்படுகிறது:

தொகுதி 01

### ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை 2019

ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கை 2019 தேசிய சேமிப்பு வங்கியின் தந்திரோபாயம், மூலதன முகாமை, இடர் முகாமை மற்றும் ஆளுகை பற்றிய விரிவான நோக்கினை வழங்குகிறது. இது வங்கியின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கான அதன் அக்கறை தாரர்களுக்கான பெறுமதி உருவாக்க செயன்முறையை வழங்குகிறது. இந்தப் பகுதி வங்கியின் செயற்பாடுகள், அதன் அடைவுகள், தந்திரோபாய நோக்க நிறைவேற்றம், அதன் உற்பத்தித் தொகுப்பின் விரிவாக்கம், சமூகத்திற்கான அதன் பங்களிப்பு மற்றும் சுற்றுச் சூழலுடனான அதன் உறவுமுறை ஆகியவற்றைக் குறிக்கிறது. பொருத்தமான இடங்களில், இவ் அறிக்கையில் உள்ள தகவல்கள் அறிக்கையிடல் தொகுப்பின் தொகுதி 02 தொகுப்பில் இருந்து பிரித்து எடுக்கப் பட்டுள்ளன.

தொகுதி 02

### தொகுப்பு

இணைச் சேர்க்கை தே.சே.வங்கியில் நடைமுறையிலுள்ள கூட்டாண்மை ஆளுகை, மற்றும் இடர் முகாமை நடைமுறைகளைப் பற்றிய விரிவான மீளாய்வைக் கொண்டுள்ளது. இது 2019 ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் குழுவின் நிதிப் பெறுபேறுகளை சித்தரிக்கும் குறிப்புகள் மற்றும் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான அதன் நிதி நிலைமையை உள்ளடக்கிய குறிப்புகளுடனான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை உள்ளடக்கும்.

### வழிச்செலுத்தல் சின்னங்கள்

இந்த அறிக்கை வழிச்செலுத்தலை எளிதாக்கவும், சாத்தியமான இடங்களில் உரை உள்ளடக்கத்துக்கு ஆதரவு வழங்க அல்லது பதிலீடு செய்யும் தொடர்பாடல் கருவியாகவும் சின்னங்களைப் பயன்படுத்துகிறது. சின்னங்கள் பிரதானமாக, மூலதனங்கள், அக்கறை தாரர்கள், தந்திரோபாய குறிக்கோள்கள் மற்றும் பொருள்மை சார்ந்த விடயங்களுக்காக உருவாக்கப் பட்டுள்ளன. அறிக்கையில் பயன்படுத்தப்படும் பிரதான சின்னங்களின் அட்டவணை 6 ஆம் பக்கத்தில் வழங்கப் பட்டுள்ளது.

### அறிக்கையிடலின் நோக்கெல்லை மற்றும் பரப்பு

GRI 102-10, 45, 46, 48, 49, 50, 51 மற்றும் 52

- **அறிக்கையிடல் பரப்பு**
  இந்த ஆண்டு அறிக்கையின் ஒட்டுமொத்த பரப்பு தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனங்களான தே.சே.வ. நிதி முகாமைத்துவக் கம்பனி லிமிட்டட் மற்றும் ஸ்ரீலங்கா சேமிப்பு வங்கி லிமிட்டட் ஆகியவற்றை உள்ளடக்கும். வங்கியானது “வங்கி” என்று தனியாகவும், “குழு” என மற்றைய அமைப்புக்களுடன் இணைந்ததாகவும் அடையாளம் காணப்படும். 2014 அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டமைப்பிற்கு இணங்க, முக்கிய நிதி அம்சங்கள் வங்கி மற்றும் குழுவின் சூழலில் விவாதிக்கப்படும் அதே வேளை குறிப்பிடப்பட்டாலன்றி, நிதிசாரா அம்சங்கள் வங்கியின் சூழலில் விவாதிக்கப்படுகின்றன.
- **அறிக்கையிடல் காலம்**
  தே.சே. வங்கியின் இன் ஆண்டு அறிக்கை 2019 இன் நோக்கெல்லை 1 ஜனவரி 2019 முதல் 31 டிசம்பர் 2019 வரையிலான 12

மாதங்களை உள்ளடக்கி இருப்பதுடன், இது நிதி மற்றும் நீடித்த வாழ்வுத் தன்மை அறிக்கையிடலுக்கான வருடாந்த அறிக்கையிடல் சுற்றோட்டத்துடன் இணங்கிப் போகிறது. இந்தத் திகதிக்குப் பின்னரான, சபை அங்கீகாரத் திகதியான 2020 மார்ச் 24 வரையிலான எந்தவொரு பொருண்மைமிக்க நிகழ்வுகளும் சேர்க்கப் பட்டுள்ளன.

முன்னைய அறிக்கையிடல் காலங்களிலிருந்து நோக்கெல்லை மற்றும் பரப்பு சார்ந்த அம்சங்களில் கணிசமான மாற்றங்கள் எதுவும் இல்லை. 31 மார்ச் 2018 தேதியிட்ட மிகச் சமீபத்திய ஆண்டு அறிக்கை, 31 டிசம்பர் 2018 இல் முடிவடைந்த 12 மாத காலத்தை உள்ளடக்கி இருந்தது. ஒப்பீட்டு நிதித் தகவல்கள், மீள வகைப்படுத்தப் பட்டிருந்தால் அல்லது மீள்கூற்று செய்யப் பட்டிருந்தால், தொடர்புடைய பிரிவுகளில் வெளிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப் பட்டுள்ளன.

GRI 102-46

- **நோக்கெல்லை மற்றும் பொருண்மை**

  இந்த அறிக்கை நிதி அறிக்கையிடலுக்கு அப்பாற்பட்டு விரிவாக்கப் பட்டு, எமது பெறுமதியை உருவாக்கும் இயலுமையின் மீது கணிசமான செல்வாக்கைக் கொண்டுள்ள நிதிசாரா செயற்திறன், வாய்ப்புகள், எமது முக்கிய அக்கறை தாரர்களுடன் தொடர்புபட்ட இடர்கள் மற்றும் விளைவுகள் முதலியவற்றை உள்ளடக்கும். மேலும், இது எமது தந்திரோபாயம் மற்றும் வணிக மாதிரி, தொழிற்பாட்டு சூழ்நிலைகள், பொருண்மைமிக்க இடர்கள், அக்கறை தாரர்களின் நலன்கள், செயற்திறன் மற்றும் ஆளுகை தொடர்பான பொருண்மைமிக்க தகவல்களை விளக்குகிறது.

  இந்த அறிக்கை பொருண்மை அல்லது முக்கியத்துவம் மிக்க அம்சங்களில் கவனம் செலுத்துகிறது. இந்தக் காரணிகள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு பெறுமதியை உருவாக்குவதற்கான வங்கியின் திறனை கணிசமாக பாதிக்கக்கூடிய அளவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதிப்பீடாகும். பக்கம் 78 இல் உள்ள பொருண்மை மிக்க விடயங்கள் என்ற தலைப்பின் கீழ் பொருள்மை மிக்க மதிப்பீட்டு செயன்முறைகள் கலந்துரையாடப்படுகிறது.

  இந்த அறிக்கை 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாய முன்நகர்வுகள் மற்றும் குறுகிய, நடுத்தர (இரண்டு முதல் மூன்று ஆண்டுகள்) மற்றும் நீண்ட கால (ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டவை) வங்கியின் தந்திரோபாய மற்றும் நிதி மற்றும் நிதிசாரா இலக்குகள் பற்றிய அறிவை வழங்குகிறது. கொவிட்-19 நோய்த்தொற்றின் தாக்கம் காரணமாக, 2020 க்கான வழிகாட்டல்கள் பின்னர் மீளப் பெறப்பட்டு, முக்கிய இலக்குகள் மீளாய்வு செய்யப் படுகின்றன.

- **இலக்கு வாசகர்கள்**

  இந்த அறிக்கை முதன்மையாக நீண்டகால முதலீட்டாளர்களின் (எமது பங்குதாரர், பிணைதாரர்கள் மற்றும் வருங்கால முதலீட்டாளர்கள்) தகவல் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கம் கொண்டது. எமது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், ஒழுங்கு விதிமுறையாளர்கள் மற்றும் சமூகம் உள்ளிட்ட பிற முக்கிய அக்கறை தாரர்களுக்கான பெறுமதியை உருவாக்கும் விதத்திலான தகவல்களையும் நாங்கள் முன்வைக்கிறோம்.

## அறிக்கையிடல் சட்டகம் மற்றும் இணக்கப்பாடு

GRI 102-12, 54

தே.சே.வங்கி தனது கடந்தகால ஆண்டு அறிக்கைகளை வடிவமைப்பதில் GRI வழிகாட்டல்களைப் பின்பற்றியுள்ளது. நீடித்த வாழ்வுத்தன்மை அறிக்கையிடலுக்காக, நாம் சமீபத்தில் வெளியிடப்பட்ட பூகோள அறிக்கையிடல் முன்முயற்சிகள் (GRI) நியமங்களுக்கு மாறியுள்ளதுடன், இந்த அறிக்கை GRI நியமங்களின் மையத் தெரிவுகளின் படி தயாரிக்கப்பட்டுள்ளது. நீடித்த வாழ்வுத் தன்மை வங்கியின் ஒட்டுமொத்த வணிகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும், இது வங்கியின் தற்போதுள்ள அக மற்றும் புறக் கட்டுப்பாட்டு மற்றும் உறுதிப்பாட்டு முறைமைகளுக்கு உட்பட்டது ஆகும்.

வங்கியின் செயற்பாடுகளை நிர்வகிக்கும் பிரதான சட்டங்களாக, 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியன காணப்படுகின்றன. இந்த அறிக்கையில் உள்ள நிதித் தகவல்கள், கடந்த காலத்தைப் போலவே, பிரயோகிக்கத்தக்க அனைத்து சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நியமங்களுக்கு இணங்குவதோடு, பக்கம் 296 இல் ஆரம்பிக்கும் நிதி அறிக்கைகள் என்ற பிரிவின் கீழ் தோன்றும் பல அறிக்கைகள் மற்றும் கூற்றுக்களில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை பொருந்தக்கூடிய இடங்களில் பின்வருவனவற்றில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணக்கருக்கள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை ஈர்க்கிறது:

- இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA Sri Lanka) வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்
- சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் ஆளுகைக்குழுவின் (IIRC) சட்டகம் (றறற. வாநநைசைஉ.ழசப)
- பூகோள அறிக்கையிடல் முன்முயற்சி (GRI) நீடித்த வாழ்வுத் தன்மை அறிக்கை வழிகாட்டல்கள் GRI நியமங்கள் (www.globalreporting.org)
- இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA Sri Lanka) வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறந்த நடைமுறை விதிப் பிரமாணங்கள்
- நீடித்த வாழ்வுத்தன்மை அபிவிருத்தி இலக்குகள் (SDGs) - 17 அபிலாஷை “பூகோள இலக்குகள்” ஐ.நா. முன்முயற்சி
- திறன் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் முறை (www.smart.lk)

## புற உறுதிப்பாடு

ஆண்டு அறிக்கையை தயாரிப்பதில் அனைத்து ஒழுங்குவிதிமுறை மற்றும் சட்டரீதியான தேவைகளுக்கும் வங்கி இணங்கியுள்ளது. நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட அதே வேளையில், நீடித்த வாழ்வுத்தன்மை மீதான அறிக்கையிடல் கேபிஎம்ஜி ஸ்ரீலங்காவினால் வழங்கப்பட்டது.

## முன்னோக்கு நோக்குநிலைக் கூற்றுக்கள்

எமது வணிக நடவடிக்கைகள் தொடர்பான இந்த அறிக்கையில் உள்ள சில கூற்றுக்கள் முன்னோக்கு நோக்குநிலைக் கூற்றுக்களாக இருக்கலாம். இவை வரலாற்று விடயங்களின் அறிக்கைகள் தவிர்ந்த, நிதிநிலைமை, வணிகத் தந்திரோபாயம், முகாமைத் திட்டங்கள் மற்றும் எதிர்கால தொழிற்பாடுகளுக்கான குறிக்கோள்கள் போன்றவையாக அனைத்து பிற கூற்றுக்களும் இதில் அடங்கும். முன்னோக்கிய நோக்குநிலைக் கூற்றுக்கள் தவறாக அல்லது துல்லியமற்றதாக இருக்கும் அனுமானங்கள், தரவு அல்லது முறைகள் போன்றவற்றில் பிரதானமாகத் தங்கியிருப்பதுடன், அடையப்படும் சாத்தியமற்றவையாக இருப்பதனால், எதிர்காலப் பெறுபேறுகளுக்கான உத்தரவாதம் வழங்குபவையாக இருக்காது, நியாயமான

எடுகோள்களின் அடிப்படையில் அமைந்த எமது தற்போதைய எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கலாம். வாசகர்கள் இந்த தகவலை உரிய எச்சரிக்கையுடன் பரிசீலிக்க அறிவுறுத்தப்படுவதுடன், தமது தீர்மானங்களை மேற்கொள்வதில் திட்டமிடப்பட்ட தரவுகளில் தேவையற்ற நம்பகத்தன்மையை வைக்க வேண்டாம் எனவும் கோரப்படுகின்றனர். புதிய தகவல்கள், எதிர்கால நிகழ்வுகள் அல்லது வேறு வழிகளின் விளைவாக, எந்தவொரு முன்னோக்கு நோக்குநிலைக் கூற்றுகளையும் புதுப்பிக்க அல்லது திருத்துவதற்கான எந்தவொரு கடமையையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

## வினாக்கள்

GRI 102-53

இந்த அறிக்கை தொடர்பான உங்களது கருத்துக்கள் அல்லது விசாரணைகளை நாம் வரவேற்கிறோம். அவற்றை பின்வருமாறு முகவரியிடலாம்:

சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்,
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு,
தேசிய சேமிப்பு வங்கி,
இலக்கம் 255, காலி வீதி, கொழும்பு 03
sdgm.kithsiri@nsb.lk

## தெரிவு செய்யப்பட்ட நீடித்த வாழ்வுத்தன்மை இலக்குகள்

எமது பொருளாதார ரீதியான, சுற்றுச்சூழல் ரீதியான மற்றும் சமூக ரீதியான நீடித்தவாழ்வுத்தன்மைக்காக, எமது தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக, நாம் பின்வரும் நீடித்த வாழ்வுத்தன்மை இலக்குகளுக்கு முன்னுரிமை வழங்குகிறோம்:

- 3 GOOD HEALTH AND WELL-BEING — சிறந்த சுகாதாரம் மற்றும் நலன் பேணல்
- 4 QUALITY EDUCATION — தரமான கல்வி
- 6 CLEAN WATER AND SANITATION — சுத்தமான நீர் மற்றும் கழிவகற்றல்
- 7 AFFORDABLE AND CLEAN ENERGY — தாங்கக்கூடிய மற்றும் சுத்தமான சக்திவலு

## வழிச்செல் உருக்களுக்கான சுட்டி

### மூலதனங்கள்

- நிதி மூலதனம்
- உருவாக்கப்பட்ட மூலதனம்
- உருவாக்கப்பட்ட மூலதனம்
- மனித மூலதனம்
- சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்
- இயற்கை மூலதனம்

### அக்கறையுள்ள தரப்பினர்

- பங்குதாரர்/முதலீட்டாளர்
- வாடிக்கையாளர்கள்
- ஊழியர்கள்
- வணிகப் பங்காளர்கள்
- சமூகம் மற்றும் சுற்றுச் சூழல்
- ஒழுங்கு விதிமுறையாளர்கள் மற்றும் அரச அமைப்புக்கள்

### நீண்டகாலத் தந்திரோபாயங்கள்

- வுாடிக்கையாளர் நோக்கு
- ஆளுகையிலான மேன்மை
- பலம் மற்றும் நீடித்தவாழ்வு
- நிலைமாற்றல் தலைமை

### குறுங்காலம் முதல் நடுத்தர காலத்துக்கான தந்திரோபாய குறிக்கோள்கள்

- வாடிக்கையாளர் அனுபவத்தை உச்சமாக்கல்
- ஊழியர் ஈடுபாட்டை மேம்படுத்தல்
- இடர்க் கலாச்சாரத்தை மீள வலியுறுத்தல்
- இயல்பான வளர்ச்சியை மேம்படுத்தல்
- உதாரணம் மூலம் தலைமை வகித்தல்

### பொருண்மைமிக்க விடயங்கள்

- வாடிகையாளர் சேவை மற்றும் அனுபவம்
- இடர் நோக்கிலான அமைப்புக் கலாச்சாரம்
- எண்ணியல் நிலைமாற்றல்
- இணையவழிப் பாதுகாப்பு, மோசடி தடுப்பு மற்றும் பணச்சலவைக்கு எதிரான விடயங்கள்
- பங்களிப்புக்களுக்கான பொருளாதாரப் பெறுமதி
- ஒழுங்கு விதிமுறைகள் இணக்கப்பாடு
- பொறுப்புமிக்க கடன்வழங்கல்
- நிதிசார் உள்ளடக்கம்
- பொருளாதார மற்றும் சமூக விளைவு
- திறன்களைக் கவர்தல், விருத்தி செய்தல் மற்றும் தக்க வைத்தல்
- பன்முகத் தன்மை மற்றும் உள்ளடக்கம்
- சுற்றுச்சூழல் வழித்தடம்
- வேலைத்தலப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்பேணல்
- வழங்கல் சங்கிலிப் பொறுப்பு
- தொழிற்பாட்டு வினைத்திறன்

# ஒரே பார்வையில் தே.சே.வங்கி GRI 102-7

தேசிய சேமிப்பு வங்கி 1972 இல் நாட்டில் இருந்த நான்கு பாரம்பரிய சேமிப்பு அமைப்புகளை ஒரே ஸ்தாபனமாக இணைத்த நாடாளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் உருவாக்கப்பட்டது. தே.சே.வங்கி அதன் உருவாக்கத்தில், 1832 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அதன் முன்னோடியான இலங்கை சேமிப்பு வங்கி (CBS) இலிருந்து ஒரு நூற்றாண்டுக்கும் மேலான சேமிப்பு மரபுரிமையைப் பெற்றுக் கொண்டது.

வர்க்கம், இனம், பாலினம் ஆகியவற்றைக் கடந்து அனைத்து இலங்கையர்களிடமும் சேமிப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதற்காக, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கீழ் தே.சே.வங்கிக்கு உரிமம் பெற்ற சிறப்பு வங்கி (LSB) அந்தஸ்து வழங்கப்பட்டது. சமூகத்தின் அனைத்துத் துறைகளினதும் பிரிவுகளின் கோரிக்கைகளை உள்ளடக்கத்தக்கவாறு, வங்கி 20.9 மில்லியன் கணக்குகளை வைத்திருக்கிறது.

## எமது தூரநோக்கு

சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தீர்வுகளுக்கான மிகவும் நம்பகமான மற்றும் விரும்பப்படும் தெரிவு.

## எமது பணிக்கூற்று

எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளை மேம்படுத்தும் மொத்த நிதித் தீர்வுகளை வழங்குவதுடன், அதே நேரத்தில் எங்கள் அனைத்து அக்கறையுள்ள தரப்பினர்களது எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்தல்.

## எமது பெறுமதிகள்

எமது நாளாந்த வணிகத்தை நடாத்துவதில் நாம் நம்பிக்கை, பரஸ்பர மரியாதை மற்றும் நேர்மையுடன் உடனடியாக பதிலளிப்பதுடன், ஆக்கபூர்வமாக செயற்படுவோம்.

## உரிமையாண்மைக் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள்

- கிளை வங்கியியல்
- கூட்டுவணிக நிதியியல்
- சர்வதேச வங்கியியல்
- திறைசேரி



**தேசிய சேமிப்பு வங்கி**

- தே.சே.வ. நிதி முகாமைத்துவக் கம்பனி லிமிட்டட் மற்றும் (100%)
  - முதன்மை முகவர்
- ஸ்ரீலங்கா சேமிப்பு வங்கி லிமிட்டட் (100%)
  - குத்தகை, சிறிய நடுத்தர வணிக மற்றும் நுண் நிதியியல்



## எது நம்மை வேறுபடுத்துகிறது?

- நாம் சேமிப்புக்களுக்கான மிகவும் நம்பகமான மற்றும் மிக விரும்பப்பட்ட தெரிவாக இருக்கும் நோக்கிலான தனித்துவமான கூட்டுவணிகக் கலாச்சாரம் மற்றும் முன்நகர்வுகளால் கட்டியமைக்கப்பட்ட, ஒரு நோக்கம் சார்ந்த வணிகமாவோம்.
- அனைத்து வைப்புக்கள் மற்றும் அவற்றின் மீதான வட்டிக்கு 100% அரச உத்தரவாதத்தை வழங்கும் நாட்டின் ஒரே வங்கி என்ற வகையில், தே.சே.வ. நாட்டின் உச்ச பாதுகாப்பான வங்கியாகும்.
- நாட்டின் முதன்மையான சேமிப்பு வங்கியான தேசிய சேமிப்பு வங்கி, அதன் சட்டத்தின் படி, அதன் வைப்புகளில் 60% உச்ச நம்பிக்கை கொண்ட (gilt-edged) அரச பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும்.
- 20.9 மில்லியன் கணக்குகளுக்கு சேவை செய்வதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்
- தேசிய பொருளாதாரத்தில் உறுதியாக வேரூன்றி, தே.சே.வ. வரிகள், தீர்வைகள், கட்டணங்கள் மற்றும் பங்கு இலாபங்கள் மூலம் பொதுத் திறைசேரி ஊடான நாட்டிற்குப் பங்களிப்பு செய்கிறது.
- தே.சே.வ. அரசின் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சமூக பொருளாதார திட்டங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் தேசத்தைக் கட்டி எழுப்புவதில் பங்கெடுக்கிறது.
- சமுதாயத்தை பெருமளவில் கட்டியெழுப்பும் வகையில் ஒரு வணிகத்தை செய்ய உறுதிபூண்டுள்ள வங்கியாக வலுவான நிலை
- சிறந்த ஆளுகை மற்றும் அனுபவம் வாய்ந்த முகாமைக் குழுக்கள்
- தேர்ந்தெடுக்கப்பட்ட உருவாக்கம் மற்றும் சிறப்பான இடர் முகாமை ஆகியவை செயற்பாடற்ற கடன்களின் (NPL) விகிதத்தை தொழிற்துறை சராசரியிலும் பார்க்கக் குறைவாகப் பேண எமக்கு உதவியது

## நாம் செல்வாக்கு செலுத்திய பெறுமதிகள்

### நிகர வட்டி வருமானம்




### நிகர வட்டி எல்லை




### வரிக்கு முன் இலாபம்




### மொத்த சொத்துக்கள்




### வாடிக்கையாளர் வைப்புக்கள்




### கடன்கள் மற்றும் முற்பணங்கள்




### மொத்த தொழிற்படாக் கடன் விகிதம்




### சொத்துக்கள் மீதான திரும்பல்




### உரிமையாண்மை மீதான திரும்பல்




### கிரய-வருமான விகிதம்




### மொத்த மூலதனப் போதுகை விகிதம்




### திரவக் காப்பு விகிதம் (அனைத்து நாணய அலகு)



**எமது வாடிக்கையாளர்கள்**

20.9 மில்லியன்
கணக்குகள்
(2018: 20.4 மில்லியன்)

வாடிக்கையாளர்களுக்கு
செலுத்திய வட்டி
ரூபா. 89,898 மில்லியன்
(2018: ரூபா. 85,622 மில்லியன்)

256
கிளைகள்
(2018: 255)

தானியக்க/காசு
மீள்சுழற்சி/காசு
வைப்பு இயந்திரம்
334
(2018: 310)

4,063 தபால்
மற்றும் உப தபால்
நிலையங்கள்
(2018: 4,062)

**எமது ஊழியர்கள்**

எமது 4,715 ஊழியர்களுக்கு நாம் செலுத்திய தொகை
ரூபா 10,158 மில்லியன்
(2018: 4,512 ஊழியர்களுக்கு, ரூபா 9,263 மில்லியன்)

ரூபா 40.3 மில்லியன்
திறன் விருத்தி மீது முதலீடு
செய்யப்பட்டது
(2018: 38.7 மில்லியன்)

எமது மொத்த
ஊழியர்களில்
54%ஆனவர்கள்
பெண்கள் (2018: 54%)

98.1%
தக்கவைத்தல் விகிதம்
(2018: 97.9%)

296 புதிய வேலை
வாய்ப்புக்கள்
உருவாக்கப்பட்டன
(2018: 145)



எமது 351 உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்தான
கொள்வனவுகளுக்காக ரூபா 2,207 மில்லியன்
செலவிடப்பட்டது. (2018: 153 உள்நாட்டு வழங்குனர்களுக்கான,
ரூபா 2,067 மில்லியன்)

55% ஆன எமது
நிரந்தர ஊழியர்கள்
பெண்கள் ஆவர்
(2018: 56%)

ரூபா 193 மில்லியன்
பெறுமதியான 222
சுற்றுச்சூழல் கடன்கள்
வழங்கப்பட்டன.
(2018: ரூபா 656.6 மில்லியன்
பெறுமதியான 781 கடன்கள்)

35,696 ஜிகாஜுல்ஸ் சக்தி
நுகரப்பட்டது
(2018: 33,417 ஜிகாஜுல்ஸ்)

79,368 கன மீட்டர் நீர்
நுகரப்பட்டது
(2018: 76,161 கன மீட்டர்)

**எமது சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்**

ரூபா 2.0 பில்லியன்
பங்கு இலாபங்கள்
பங்குதாரருக்கு
வழங்கப்பட்டன.
(2018: ரூபா 500 மில்லியன்)

ரூபா 613 பில்லியன்
அரச பிணைங்கள் மீது
முதலீடு செய்யப்பட்டது.
(2018: ரூபா 523 பில்லியன்)

நேர் மற்றும் நேரில்
வரியாக ரூபா
8.9 பில்லியன்
செலுத்தப்பட்டது
(2018: ரூபா 6.6 பில்லியன்)

60.9% ஆன மொத்த
வைப்புக்கள் அரச
பிணையங்கள் மீது மதலீடு
செய்யப்பட்டன.
(2018: 60.9%)

**அரசாங்கம்**

# மைற்கற்கள்

**1972**

நாட்டில் தொழிற்பட்டு வந்த நான்கு பாரம்பரிய சேமிப்பு நிறுவனங்கள் தேசிய சேமிப்பு வங்கி என அழைக்கப்படும் ஒரே நிறுவனமாக இணைக்கப்படுவதற்கு, ஓர் பாராளுமன்ற சட்டமூலம் வசதியளித்தது.

**1979**

ஓர் சீட்டிழுப்புடன் கூடிய சேமிப்புச் சான்றிதழ்களின் அறிமுகம்

**1981**

கிராமப்புற மக்களை அடைவதற்காக, தே.சே.வங்கி ஓர் நடமாடும் வங்கிப் பிரிவை அமுல்படுத்தியது

**1994**

முதலாவது தானியக்க இயந்திரம் நிறுவப்பட்டது

**1995**

வணிகப் பன்முகப்படுத்தலுக்கு வசதியளிக்கும் வகையில் தே.சே.வ சட்டம் திருத்தப்பட்டது

**1998**

ஹப்பன் புஞ்சி ஹப்பன் திட்டம் அறிமுகம்

**1999**

NSB நிட்டம்புவவில் தனது 100வது கிளைக்கான கதவுகளைத் திறந்தது.

இத்துரு மித்துரு திட்டம் அறிமுகம்

**2000**

தே.சே. வங்கியின் சேய் நிறுவனமாகிய தே.சே.வ நி.மு.கம்பனி உருவாக்கப்பட்டது.

**2002**

ஸ்த்ரீ திட்டத்தின் அறிமுகம்

**2003**

பிட்ச் ரேடிங் லங்கா லிமிடட் நிறுவனத்திடமிருந்து AAA (LKR) தரப்படுத்தலைப் பெறும் இலங்கையின் முதலாவது வங்கியாக தே.சே.வ சாதனை

**2004**

சர்வதேச வங்கியியல் தொழிற்பாடுகள் அங்குரார்ப்பணம்

**2008**

24x7 NSB அழைப்பு நிலையம் உருவாக்கம்

**2011**

தே.சே.வ தனது 200வது கிளைக்கான கதவுகளை மதவாச்சியில் திறந்து வைத்தது.

**2012**

தே.சே.வ அதன் 40வது ஆண்டுநிறைவைக் கொண்டாடியது

**2013**

இலங்கையின் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொ 750 மில்லியனான தனியொரு பாரிய சிரேஷ்ட பத்திரம் வழங்கப்பட்டது.

**2014**

“புத்தி” உயர் கல்வி நெறிகளுக்கான தனிநபர் கடன்திட்டம் ஆரம்பம்

ஐ.அ.டொ 250 மில்லியன் பெறுமதியான சிரேஷ்ட பத்திரங்கள் வழங்கல்

**2016**

250வது கிளை கோப்பாயில் திறக்கப்பட்டது.

குலோபல் பைனான்ஸ் நிறுவனம் தே.சே. வங்கியினை “இலங்கையின் அதிக பாதுகாப்பான வங்கி” எனத் தரப்படுத்தியது.

**2017**

ஒரு திரில்லியன் சொத்துத் தளத்தைக் கொண்ட முதலாவது விசேட உரிமம் பெற்ற வங்கி என்னும் ஸ்தானத்தை அடைந்தது.

**2018**

ஐ.அ.டொ 750 மில்லியன் பெறுமதியான சிரேஷ்ட பத்திரங்களை வெற்றிகரமாக மீட்பு செய்தது.

முதலாவது வெளிநாட்டு நாணய நீண்டகாலக் கடன் வழங்கல்

**2019**

PCI-DSS தரச் சான்றிதழைப் பெற்ற இலங்கையின் முதலாவது அரச வங்கியானது.

ஸ்ரீலங்கா சேமிப்பு வங்கி தே.சே.வங்கியின் முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனமானது.

ரூபா 1 திரில்லியன் வைப்புத் தளத்தைக் கடந்தது.

ஐ.அ.டொ 250 மில்லியன் பெறுமதியான சிரேஷ்ட பத்திரங்களை வெற்றிகரமாக மீட்பு செய்தது.

# முக்கிய விடயங்கள் GRI 102-7

| | வங்கி | | | குழு | | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2018 | மாற்றம் % | 2019 | 2018 | மாற்றம் % |
| **ஆண்டுக்கான பெறுபேறு (ரூபா மில்லியன்)** | | | | | | |
| மொத்த வருமானம் | **121,929** | 111,902 | 8.96 | **125,810** | 112,760 | 11.57 |
| நிதியியல் வரிவிதிப்பின் முன்னான இலாபம் (பெ.கூ.வ, தே.நி.வ மற்றும் க.மீ.தீ) | **15,659** | 11,171 | 40.17 | **18,487** | 11,181 | 65.34 |
| வரிவிதிப்பின் முன்னான இலாபம் | **10,462** | 7,941 | 31.74 | **13,092** | 7,944 | 64.79 |
| வருமான வரிச் செலவினம் | **3,764** | 3,441 | 9.36 | **4,062** | 3,444 | 17.93 |
| வரிவிதிப்பின் பின்னான இலாபம் | **6,698** | 4,500 | 48.84 | **9,030** | 4,500 | 100.66 |
| **ஆண்டிறுதியிலான நிலைமை (ரூபா மில்லியன்)** | | | | | | |
| பங்குதாரர் நிதிகள் (மொத்த உரிமையாண்மை) | **44,377** | 43,095 | 2.97 | **47,834** | 44,118 | 8.42 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை/ வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | **1,016,574** | 839,574 | 21.08 | **1,015,635** | 839,574 | 20.97 |
| காலத் தேய்மானமிட்ட கிரயத்திலான நிதிச் சொத்துக்கள் - கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் (மொத்தம்) | **615,649** | 518,957 | 18.63 | **619,754** | 522,982 | 18.50 |
| மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **458,662** | 426,741 | 7.48 | **462,441** | 426,766 | 8.36 |
| மொத்த சொத்துக்கள் | **1,157,967** | 1,036,846 | 11.68 | **1,175,575** | 1,051,316 | 11.82 |
| **சாதாரண பங்கு ஒன்றுக்கான தகவல்கள் (ரூபா)** | | | | | | |
| உழைப்புக்கள் (அடிப்படை) | **7.13** | 6.72 | 6.09 | **9.61** | 6.72 | 43.02 |
| உழைப்புக்கள் (ஐதாக்கப்பட்ட) | **7.13** | 6.72 | 6.09 | **9.61** | 6.72 | 43.02 |
| நிகர சொத்துக்களின் பெறுமதி | **47.21** | 45.85 | 2.97 | **50.89** | 46.93 | 8.42 |
| **விகிதங்கள் (%)** | | | | | | |
| நிகர வட்டி எல்லை (NIM) | **2.63** | 2.43 | 8.10 | **2.65** | 2.44 | 8.45 |
| சராசரி பங்குதாரர் நிதி மீதான திரும்பல் (ROE) | **0.95** | 0.78 | 22.91 | **1.18** | 0.77 | 53.11 |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) | **15.32** | 10.95 | 39.86 | **19.64** | 10.68 | 83.87 |
| வருடாந்த உழைப்பு வளர்ச்சி | **48.84** | (53.68) | 190.99 | **100.66** | (50.85) | 297.94 |
| **ஒழுங்கு விதிமுறைசார் திரவத்தன்மை விகிதம் (%)** | | | | | | |
| சட்டநியதி திரவ சொத்துக்கள் (SLAR) - குறைந்தபட்ச தேவைப்பாடு (20%) | **60.20** | 54.88 | 9.69 | **N/A** | N/A | – |
| தி.கா.வி - ரூபா - குறைந்தபட்சத் தேவைப்பாடு (2019 - 100%, 2018 - 90%) | **278.12** | 245.06 | 13.49 | **N/A** | N/A | – |
| தி.கா.வி - அனைத்து நாணய அலகு - குறைந்தபட்சத் தேவைப்பாடு (2019 - 100%, 2018 - 90%) | **276.64** | 321.29 | (13.90) | **N/A** | N/A | – |
| நிகர நிலைத்த நிதியிடல் விகிதம் (NSFR) குறைந்தபட்சத் தேவைப்பாடு (100%) | **175.18** | 146.67 | 19.44 | **N/A** | N/A | – |
| **ஒழுங்கு விதிமுறை மூலதனத் தேவைப்பாடுகள்: பாசல் III** | | | | | | |
| மட்டம் 1 - குறைந்தபட்சத் தேவைப்பாடு (2019-8.5%, 2018-8.875%) | **12.02** | 13.08 | (8.07) | **13.90** | 13.90 | 0.01 |
| மொத்த மூலதனம் - குறைந்தபட்சத் தேவைப்பாடு (2019-12.5%, 2018-12.875%) | **14.35** | 15.90 | (9.74) | **16.27** | 16.65 | (2.27) |
| இணைப்பு விகிதம் - குறைந்தபட்சத் தேவைப்பாடு (3%) | **5.13** | 4.76 | 7.77 | **5.57** | 4.91 | 13.44 |

## நிதிசார் இலக்குகள் மற்றும் அடைவுகள் - வங்கி

| | இலக்குகள் | அடைவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| **நிதிசார் குறிகாட்டி** | 2019 | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 |
| நிகர வட்டி எல்லை (NIM) (%) | **2.45** | **2.63** | 2.43 | 2.61 | 2.89 | 3.32 |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) (%) | **0.72** | **0.95** | 0.78 | 1.47 | 1.51 | 1.60 |
| சராசரி பங்குதாரர் நிதி மீதான திரும்பல் (ROE) (%) | **9.31** | **15.32** | 10.95 | 27.24 | 29.37 | 31.15 |
| வருமான வளர்ச்சி (%) | **7.65** | **8.96** | 3.62 | 23.36 | 10.24 | 1.79 |
| ஆண்டுக்கான இலாபத்திலான வளர்ச்சி (PAT) (%) | **(5.90)** | **48.84** | (53.68) | 1.18 | 9.52 | 26.29 |
| மொத்த சொத்துக்களிலான வளர்ச்சி (%) | **8.20** | **11.68** | 2.56 | 11.01 | 7.50 | 8.80 |
| **மூலதனத் தேவைப்பாடுகள் : பாசல் III** | | | | | | |
| மட்டம் 1 - குறைந்தபட்சத் தேவைப்பாடு (2019-8.5%, 2018-8.875%) | **Over 8.5%** | **12.02** | 13.08 | 11.93 | 11.31 | N/A |
| மொத்த மூலதனம் - குறைந்தபட்சத் தேவைப்பாடு (2019-12.5%, 2018-12.875%) | **Over 12.5%** | **14.35** | 15.90 | 15.31 | 13.86 | N/A |

# தலைவரது செய்தி GRI 102-14



**வைப்புக்கள் மற்றும் அவற்றின் மீதான வட்டிகளுக்கான 100% அரச உத்தரவாதம் கொண்ட இலங்கையின் ஒரேயொரு வங்கி**

**இலங்கை சேமிப்பு வங்கியினை**

## ரூபா 3.1 பில்லியனை

**முதலீடு செய்வதன் மூலம் கையகப்படுத்தியது**

**பல வருடகாலமாக நாம் அர்ப்பணிப்புடன் கட்டியெழுப்பிய எமது பலமான பெறுபேற்றுத் தடம், வணிக அடிப்படைகள் மற்றும் வர்த்தக நாம நற்பெயர் ஆகியன பேரினப் பொருளாதார சூழலிலான தடங்கல் விளைவிக்கும் நிகழ்வுகளுடன் கூடிய 2019 இல் சிறந்த தளமாயிருந்து சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலைத் தந்தன.**

| ரூபா 11.3 பில்லியன் | வைப்புச் சந்தைப் பங்குகள் 10.75% | [SL] AAA (நிலைத்த) |
|---|---|---|
| அரசுக்கான பங்களிப்பு | க்கு அதிகரித்தன | (ICRA லங்கா லிமிட்டட்) |

நாம் முன்னெடுத்திருந்த நிலைமாற்றம் மிக்க பயணம் மற்றும் புதிய சுற்றுச் சூழல் முறைமை ஒன்றின் உருவாக்கம் ஆகியன வேறுபடுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவம், பொருத்தமான நிலை பேணல், எமது அக்கறையுள்ள தரப்பினருடனான இணைந்த மற்றும் ஈடுபாடு மிக்க உறவுமுறை ஆகியவற்றுடன் கூடிய எண்ணியலாக்கத்தின் நன்மைகளை இலங்கையர்களில் பெரும்பாலானவர்களுக்கு வழங்கும்.

இலங்கையின் மிகப்பெரிய உரிமம் பெற்ற சிறப்பு வங்கி என்ற வகையில், நாம் தேசம் முழுவதும் உள்ள அனைத்து இலங்கையர்களிடமும் சேமிப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான எங்கள் தனித்துவமான கலச்சாரத்துக்காக தளராத உறுதியுடன் உள்ளோம். 20.9 மில்லியன் கணக்குகள் சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்குமான வங்கி என்ற எமது கூற்றை உறுதிப் படுத்துகின்றன. வருடகாலமாக நாம் அர்ப்பணிப்புடன் கட்டியெழுப்பிய எமது பலமான பெறுபேற்றுத் தடம், வணிக அடிப்படைகள் மற்றும் வர்த்தக நாம நற்பெயர் ஆகியன பேரினப் பொருளாதார சூழலிலான தடங்கல் விளைவிக்கும் நிகழ்வுகளுடன் கூடிய 2019 இல் சிறந்த தளமாயிருந்து சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலைத் தந்தன. தற்போது நாம் கடந்து வரும் சவாலான நேரங்களுக்கு மத்தியிலும் கூட எங்கள் செயற்திறனைத் தக்கவைக்க இது உதவும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆண்டின் போதான சவால் மிக்க தொழிற்பாட்டு சூழல் நிலைமைகள் காணப்பட்டு இருந்த போதிலும், நாங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிகமான வைப்பு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதுடன், வரிக்குப் பின்னான இலாபத்தில் பாராட்டத்தக்க வளர்ச்சியை அடைந்தும், அதே நேரத்தில் சொத்து தரத்தைப் பாதுகாத்ததுடன், எமது நிகர வட்டி எல்லையினையும் பாதுகாக்கிறோம்.

## ஒரு சவால் மிக்க தொழிற்பாட்டு சூழல்

கடந்த ஆண்டுகளில் நீடித்த வர்த்தகப் பிணக்குகள் மற்றும் பரந்த அளவிலான கொள்கை நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக உலகப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க மற்றும் பரந்த அடிப்படையிலான சரிவைக் கண்டு இருந்தது. உலகின் மொத்த உற்பத்தி வளர்ச்சி 2019 இல் 2.3% ஆக சரிந்தது. இது 2008-2009 இன் பூகோள நிதி நெருக்கடிக்குப் பின்னரான மிகக் குறைந்த விகிதமாகும். பாரதூரமான சமத்துவமின்மைகள் மற்றும் ஆழ்ந்த காலநிலை நெருக்கடிக்கு மத்தியில் பொருளாதார வளர்ச்சியின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தரம் காரணமாக வளர்ந்து வரும் அதிருப்தியினால் இந்த மந்தநிலை ஏற்பட்டது. ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தின் சரிவு காரணமாக, சர்வதேச வழங்கல் சங்கிலிகளில் கணிசமான இடையூறுகள் ஏற்பட்டன.

ஈஸ்டர் ஞாயிறு தீவிரவாத தாக்குதல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட நுகர்வோர் நம்பிக்கை இழப்பு மற்றும் முதலீட்டாளரின் உணர்வுகள் காரணமாக, இலங்கைப் பொருளாதாரம் 2019 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3% என்கின்ற ஓர் மிதமான வளர்ச்சியையே பதிவு செய்தது.

பெரும்பாலும் ஒவ்வொரு துறையுமே குறிப்பாக சுற்றுலா, விவசாயம் மற்றும் நிர்மாணத் துறைகள் பாதிப்படைந்தன. அதிக பெயரளவு மற்றும் மெய் சந்தை வட்டி வீதங்கள் மத்தியிலும், குறைவடைந்த பொருளாதார வளர்ச்சி, முடக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் மற்றும் வீழ்ச்சியடையும் தனியார்துறைக் கடன் வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி (CBSL) பொருளாதாரத்தைத் தூண்டுவதற்கான ஓர் உள்ளடக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைப் பின்பற்றியது. மேலும், மத்திய வங்கி சந்தை வட்டி வீதங்களைக் குறைக்கும் நோக்கிலான ஒழுங்குவிதிமுறை நடவடிக்கைகள் ஊடாக பொருளாதாரத்துக்கான பணக் கொள்கை நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்தது.

வங்கியியல் தொழிற்துறை குறைவடைந்த கடன் வளர்ச்சி மற்றும் செயற்பாடற்ற கடன்களால் ஏற்பட்ட சொத்துத் தரத்தின் வீழ்ச்சி போன்ற இயல்புகளைக் கொண்டிருந்தது.

## ஒரு சவால்மிக்க தொழிற்பாட்டு நிலைமையின் மத்தியில் ஓர் பலம்மிக்க செயற்திறனை வழங்குதல்

2019 ஆம் ஆண்டில், NSB சொத்துக்களிலான 11.7% வருடாந்த வளர்ச்சியுடன் ரூபா 1.2 திரில்லியனை அடைந்த வகையில் ஒரு வலுவான நிதி செயற்திறனை பதிவு செய்தது. ரூபா 1 திரில்லியன் என்னும் வரலாற்று சாதனை அடைவைக் கடந்து வைப்புத் தளம் ரூபா. 1.02 திரில்லியனான அதிகரிக்க, கடன் தொகுதி 7.4% வருடாந்த வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் ரூபா. 454.4 பில்லியனாக உயர்ந்தது. சொத்துத் தரத்தைப் பேணி, நிகர வட்டி எல்லையினையும் பாதுகாத்த அதேவேளை வரிக்குப் பின்னான இலாபம் 48.8% ஆக ரூபா 6.7 பில்லியனாக அதிகரித்தது. தொழிற்பாட்டு வினைத்திறனில் மேம்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில், கிரய-வருமான 49.35% ஆக மேம்பட்டது. மீளாய்வுக்கு உட்படும் இந்த ஆண்டில் ரூபா 2.0 பில்லியன் பங்கு இலாபங்கள் செலுத்தப்பட்டன.

நாம் அடைந்த பல வரலாற்று அடைவுகள் ஒரு சவால் மிக்க தொழிற்பாட்டு சூழலில் எங்கள் மீண்டெழுதிறன் மற்றும் விரைவுத்தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தும் நீடித்த கவர்வினை வெளிப்படுத்துகின்றன. NSB அதன் வைப்பாளர்களின் பணத்திற்கான 100% அரச உத்தரவாதம் கொண்ட இலங்கையின் ஒரேயொரு வங்கியாக உள்ளது. எனவே, நாம் பல்வகை வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் இலங்கையின் மிகப்பெரிய மற்றும் பாதுகாப்பான உரிமம் பெற்ற சிறப்பு வங்கியான இருக்கிறோம்.

## கூட்டாண்மை ஆளுகையைப் பலப்படுத்துதல்

இறுக்கமான ஆளுகை மற்றும் இடர் முகாமை நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலமும் பிரயோகிக்கத்தக்க சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதன் மூலமும் வங்கியின் நீடித்த வாழ்வுத் தன்மை பலப்படுத்தப்பட்டுள்ளது. சபை அகக் கட்டுப்பாடுகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மையமாகக் கொண்டு பயனுறுதி மிக்க கூட்டாண்மை ஆளுகை மற்றும் இடர் முகாமைக்கான முழுமையாக அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது. ஒழுங்கு விதிமுறையாளர்கள் மற்றும் முக்கிய அக்கறையுள்ள தரப்பினருடனான நேரடியான மற்றும் மீண்டெழும் ஈடுபாடுகள் மூலமான எமது திறந்த மனத்துடனான மற்றும் வெளிப்படையான அணுகுமுறை, எமது பங்குதாரருக்குத் தொடர்ந்தும் சேவையாற்றுவதோடு வெளிப்படுத்தல்களுக்கான கணிசமான மேம்பாடுகளுக்கும் வழிவகுத்தது.

சபைக்கான புதிய உறுப்பினர்களின் நியமனம் சபையை கணிசமாக வலுப்படுத்துவதுடன், வங்கியின் நீண்டகால நீடித்த வாழ்வுத் தன்மையையும் மேலும் மேம்படுத்தும். மேலும், முக்கிய கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் புதிய கொள்கைகளை நிறுவுதல் வங்கியினை படிப்படியாக ஆரோக்கியமான வகையிலான வளர்ச்சியை வழிநடாத்தும். தொழிற்பாட்டு சூழலைப்

பற்றிய சிறப்பான புரிதலுடன், வலுவான பெறுமதிகளில் கட்டமைக்கப்பட்டுள்ள எமது தந்திரோபாயம் எமது அனைத்து அக்கறையுள்ள தரப்பினர்களுக்கும் நீடித்த வாழ்வுத் தன்மை மிக்க விளைவுகளை வழங்கும் அதே வேளையில், ஆளுகை மற்றும் இடர் முகாமைத் திறன்களை மேம்படுத்துவதை நோக்கி வங்கியை இட்டுச் செல்லும். 11 அக்டோபர் 2019 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தே.சே. வங்கியானது முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனமாக மாற்றமடைந்த வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியினைக் (SLSB) கையகப்படுத்தும் செயன்முறைக்கு சபை மேற்பார்வை வழங்கியது. SLSB இலங்கையில் அபிவிருத்தி நிதியிடலுக்கான உச்ச நிறுவனமாக நிலைப்படுத்தப்படும்.

## எண்ணியல் எதிர்காலத்தை ஏற்றுக்கொள்ளல்

தொழிநுட்பத்தின் சீர்குலைக்கும் செல்வாக்கு நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் மாற்றுகிறது. இணைய வசதி அளிக்கப்பட்ட சாதனங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவைத் தமது கொள்வனவுப் பழக்கவழக்கங்களில் ஒருங்கிணைக்கும் வழிகளை வாடிக்கையாளர்கள் அதிகளவில் ஆராய்ந்து வருவதன் மூலம் வணிக முயற்சிகள் தமது பாரம்பரிய வணிக மாதிரிகளில் ஒரு புரட்சியை எதிர்கொள்கின்றன. இந்த விருத்திகளை எதிர்கொண்டு, எமது வர்த்தகநாமத்தை வலுப்படுத்தும் மற்றும் எண்ணியல் சந்தையினை எதிரொலிக்கும் வழிகளில் வாடிக்கையாளர்களது மாறிவரும் முன்னுரிமைகளைப் பூர்த்தி செய்ய நாம் முயற்சிக்கிறோம். நாம் முன்னெடுத்திருந்த நிலைமாற்றம் மிக்க பயணம் மற்றும் புதிய கூற்றுச் சூழல் முறைமை ஒன்றின் உருவாக்கம் ஆகியன வேறுபடுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவம், பொருத்தமான நிலை பேணல், எமது அக்கறையுள்ள தரப்பினருடனான இணைந்த மற்றும் ஈடுபாடு மிக்க உறவுமுறை ஆகியவற்றுடன் கூடிய எண்ணியலாக்கத்தின் நன்மைகளை இலங்கையர்களில் பெரும்பாலானவர்களுக்கு வழங்கும். மைய வங்கியியல் தீர்வு, திறைசேரி முகாமைத் தீர்வு மற்றும் மனிதவள முகாமை முறைமை ஆகியவற்றை மிகக் கிட்டிய எதிர்காலத்தில் செயற்படுத்துவது அதிக வினைத்திறனுடன் விவேகமான வளர்ச்சியை அடைய எமக்கு உதவும். எமது தொழிற்பாடுகளின் எண்ணியல் நிலைமாற்றம் எமது திறைசேரி நடவடிக்கைகளை திறம்பட ஒழுங்குபடுத்துவதற்கும், ஊழியர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், செலவு வினைத்திறனை அடைந்து கொள்ளவும் எமக்கு உதவும்.

## எமது நிலைபேறான தன்மையை உருவாக்குதல்

எமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதில்தான் எங்கள் வெற்றி உள்ளது, அவர்களின் இலக்குகளை அடைய அவர்களுக்கு நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் ஒருமைப்பாடு மற்றும் பகிரப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் தொகுக்கப்படுவதை உறுதிசெய்கின்றன. ஊழியர் ஈடுபாடு, சமூக மற்றும் சுற்றுச்சூழல் நீடித்த வாழ்வுத் தன்மை, நிதி உறுதிப்பாடு, இடர் முகாமை மற்றும் கொள்கை ஈடுபாடு மற்றும் சந்தை விருத்தி ஆகியவற்றுடன் எமது நீடித்த வாழ்வுத் தன்மை எமது தந்திரோபாயத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

எமது மக்கள் இந்த அர்ப்பணிப்பு மிக்க இதயத்தில் இருப்பதுடன், அவர்களது திட சங்கற்பம் நிதியியல், சமூக மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை வெற்றிகரமாக நிர்வகிக்கும் எமது இயலுமைக்குப் பின்பலமாக உள்ளது. சுற்றுச்சூழல் நீடித்த வாழ்வுத் தன்மைக்கான எமது அர்ப்பணிப்பு மற்றும் எமது உற்பத்திகளுக்கான அணுகலை மேம்படுத்துவதற்கான தொடர் முயற்சிகள் ஆகியவற்றால் வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகங்கள் பயனடைகின்றன. மிகவும் பன்முகப்பட்ட மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஊழியர்களை உருவாக்குவதிலும் ஆரோக்கியமான வேலை-வாழ்க்கை சமநிலையை ஊக்குவிப்பதிலும் நாங்கள் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளோம்.

நாங்கள் தொடர்ந்தும் எமது நாட்டின் தேசிய அபிவிருத்திக்கும் தேசத்தின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு மற்றும் நீடித்த வாழ்வுத் தன்மையைப் பேணுவதற்கும் ஆதரவு அளிக்கிறோம். 2019 ஆம் ஆண்டில் நாங்கள் ரூபா 11.3 பில்லியனை வரிகள், தீர்வைகள் மற்றும் பற்கு இலாபங்கள் மூலம் அரசாங்கத்திற்குப் பங்களித்து, பொருளாதார மற்றும் சமூக செயற்திட்டங்கள் மூலம் பெறுமதியை உருவாக்க அரசால் பயன்படுத்தப்பட்டது. எமது வணிகம் மறறும் எமது தொழிற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புடைய SDG களை நாங்கள் தொடர்ந்தும் முகம்கொடுப்பதன் மூலம், ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு (UN SDG) எமது ஆதரவை உறுதியளித்துள்ளோம். SDG களுக்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் தொடர்ச்சியான முயற்சிகள் இந்த ஆண்டு அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## வெற்றிகரமான எதிர்காலத்தை வடிவமைத்தல்

187 ஆண்டுகளாக, ஓர் வளம்மிக்க நிதிப் பாரம்பரியத்துடனான, தேசத்தின் மிகப்பெரிய அரசுக்கு சொந்தமான சிறப்பு வங்கியாக, நாம் தொடர்ந்தும் எமது அக்கறையுள்ள தரப்பினருக்கு அதிகரித்த பெறுமதியை வழங்குவதுடன், நிலைத்த தன்மையான, போட்டிமிக்க, இலாபகரமான மற்றும் பொறுப்புமிக்க நிலைபேறான பெறுமதி உருவாக்கத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் பலம்மிக்க மற்றும் விவேகமான வளர்ச்சியை அடைவோம். தொழிற்பாட்டு மேன்மை, நிதிச் சேர்க்கை, வாடிக்கையாளர் சேவை மற்றும் வணிக நெறிமுறைகள் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் வரையறையை அமைப்பதன் ஊடாக நாம் முன்னுதாரணமாக வழிநடப்போம்.

கூட்டாண்மை ஆளுகையில் நாம் மிக உயர்ந்த நியமங்களைப் பேணுவதுடன், இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமைக் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலம் ஆளுகை மற்றும் இடர் முகாமை ஆகியன நாம் கவனம் செலுத்தும் முக்கிய பகுதிகளாக உள்ளன.

வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேலும் தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் உள்ளுணர்வு மிக்கதாக மாற்றுவதற்கான தொழிநுட்பம் மற்றும் தரவு உந்துதல் கலாச்சாரத்தின் ஆற்றலை நாங்கள் ஆராய்வதுடன், மேலும் எமது தொழிற்பாடுகளை உரியவாறு நெறிப்படுத்துவோம். அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் குழு எமது வலுவான சொத்து ஆகும். தொடர்ச்சியான முதலீட்டின் மூலம், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துவதற்கான, சரியான வகிபாகங்களில் சிறந்த அணிகள் செயற்படுவதை உறுதிசெய்ய, எமது மக்களை வலுப்படுத்துவதோடு அவர்களின் இயலுமைகள் மற்றும் திறன்களை தொடர்ந்தும் வளர்த்துக் கொள்வோம். கணினி மோசடிகளை முன்கூட்டியே அகற்றுவதற்காக அதிநவீன கணினி பாதுகாப்பையும் நாம் நிறுவுவதுடன், தொடர்ச்சியான பயிற்சியளித்தல் திட்டங்கள் மூலம் எமது ஊழியர்களிடையே இடர் உணர்வுக் கலாச்சாரத்தையும் உருவாக்குவோம். எமது முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனமான வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி (SLSB) ஊடாக புதிய உற்பத்திகள் மற்றும் நிதியியல் சேவைகளுடன் அணுகப்படாத சந்தைப் பிரிவுகளை அடைவதன் மூலம் இலங்கையின் வங்கித் துறையில் எமது தொழிற்பாடுகளை பன்முகப்படுத்தி விரிவுபடுத்துவோம்.

எங்கள் சேவைகளின் மூலம் அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்துவதோடு அனைத்து வணிக செயன்முறைகள், விநியோக ஊடகங்கள் மற்றும் உருவாகும் வாய்ப்புகளை மூலதனமிடுவதன் மூலம் புத்தாக்கங்களையும் மேம்படுத்துவோம்.

இந்த செய்தியை எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில், கொவிட்-19 பரவல் ஒரு உலகாளாவிய தொற்றுநோயாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது உலகளாவிய வழங்கல் சங்கிலிகள் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் கடுமையான இடையூறுகளை ஏற்படுத்துவதுடன், சர்வதேச சுற்றுலா மற்றும் வணிகப் பயணங்களில் வீழ்ச்சியை ஏற்படுத்தல், குறைந்த நுகர்வு போன்றவை மூலம் கணிசமான சவால்களை 2020 மற்றும் அதற்கு அப்பாலும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் ஏற்படுத்தும். இதற்கு இலங்கை விதிவிலக்காக இருக்காது. எமது ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய நாம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துள்ள நிலையில், எமது வங்கியின் நிலைபேறான செயற்திறனைப் பாதுகாக்க விசேட செயற் திட்டங்களை நாம் செயற்படுத்துவோம்.

நாம் தொடர்ந்தும் புத்தூக்கத்துடன், நோக்கினைக் கொண்டவர்களாக மற்றும் நேர்க்கணிய சிந்தனை மிக்கவர்களாக இருக்கிறோம். நாம் ஒரு பலமான மற்றும் நிலைபேறான ஒழுங்கமைப்பு, ஒரு வலுவான மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வணிகச் சேர்க்கை, வலுவான ஐந்தொகை மற்றும் மூலதன நிலைப்பாடு, ஒழுங்குவிதிமுறை இணக்கப்பாட்டிற்கான ஒரு உறுதியான அர்ப்பணிப்பு: வங்கியின் ஒவ்வொரு மட்டத்திலுமான அர்ப்பணிப்புள்ள மக்கள், செயற்படும் மற்றும் பெறுமதியை உருவாக்கும் ஒரு தந்திரோபாயம், பன்முகத்தன்மை மற்றும் சேர்க்கைக்கான அர்ப்பணிப்பு மற்றும் ஒருமைப்பாடு மிக்க கலாச்சாரம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறோம்.

## பாராட்டுக்களை வெளிப்படுத்துதல்

சபையில் உள்ள எனது சகாக்களின் வலுவான மற்றும் நிலையான ஆதரவு மற்றும் நுண்ணறிவு வழிகாட்டுதல்களுக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். தேசிய சேமிப்பு வங்கியின் எமது புதிய பதில் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி தமிதா குமாரி இரத்நாயக்க அவர்களை நான் அன்புடன் வரவேற்கிறேன். தே.சே. வங்கியை எதிர்வரும் ஆண்டுகளில் பாரிய உயர்நிலைகளுக்கு வழிநடாத்துவதில் பாரிய பலமாக இருக்கத்தக்க அறிவு மற்றும் அனுபவத்தின் செல்வச் சேர்க்கையை அவர் கொண்டுவருகிறார். தே.சே. வங்கியின் முன்னாள் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு எஸ் டி என் பெரேரா அவர்கள் வங்கிக்கு அளித்த பெறுமதியிட முடியாத பங்களிப்புக்காக அவருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

எமது பொது முகாமையாளர் மற்றும் முகாமைக் குழுவின் தலைமையிலான எமது விசுவாசம் மிக்க மற்றும் அர்ப்பணிப்புள்ள ஊழியர் குழுவுக்கு எனது நேர்மையான பாராட்டுக்கள் உரித்தாகட்டும். வெற்றியை நோக்கிய பயணத்திலான அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் இடைவிடாத கவனம், எமது வாடிக்கையாளர்களுடனான ஈடுபாடு, புத்தாக்கம் மிக்க தீர்வுகளை உருவாக்குதல் மற்றும் எமது வர்த்தக நாமத்தைப் பலப்படுத்துதல் ஆகியவை எங்கள் வெற்றிக்கு ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளன. எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் மதிப்புமிக்க ஆதரவிற்கும் விசுவாசத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், எல்லா நேரங்களிலும் எமக்கு வழங்கப்படும் உறுதியான ஆதரவிற்கான எமது பங்குதாரர் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

தொடர்ச்சியான ஆதரவு மற்றும் உதவிகளுக்காக கௌரவ நிதி, பொருளாதார மற்றும் கொள்கை விருத்தி அமைச்சர் மற்றும் கௌரவ நிதி இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கும் நான் நன்றியோடு இருக்கிறேன். நாடு முழுவதும் தே.சே. வங்கிக்கு வழங்கப்பட்ட முக்கிய உதவிகளுக்காக தபால் மா அதிபர் மற்றும் தபால் திணைக்கள அதிகாரிகளுக்கு எனது ஆழ்ந்த பாராட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. திறைசேரி செயலாளர் மற்றும் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் அதிகாரிகள் வழங்கிய ஆதரவையும் வழிகாட்டலையும் நான் பாராட்டுகிறேன். எனது பாராட்டுக்கள் சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோருக்கும் உரித்தாகட்டும்.



**திருமதி கேசிலா ஜயவர்தன**

தலைவர்

24 மார்ச் 2020

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

GRI 102-14



**ஓர் சவால்மிக்க சூழலிலான எமது பயணத்தில் நாம் எமது மக்கள் மற்றும் வங்கியினால் பின்பற்றப்பட்ட புத்திசாதுர்யம் மிக்க தந்திரோபாய நடைமுறைகளின் ஊடாக ஓர் அபரிமிதமான பெறுபேற்றை எம்மால் பதிவு செய்து கொள்ள முடிந்திருக்கிறது.**

48.8%
அபரிமிதமான வருடாந்த வரிக்குப் பின்னரான இலாப வளர்ச்சி

ரூபா 1.0 திரில்லியன்
வாடிக்கையாளர் வைப்புக்கள் வரலாற்றுச் சாதனையைக் கடந்துள்ளோம்

1.57%
தொழிற்துறையிலேயே மிகக் குறைவான தொழிற்படாக் கடன்களின் விகிதம்

PCI-DSS தர நிர்ணயத்தைப் பெற்ற முதலாவது அரச வங்கி

இலங்கையின் பாதுகாப்பானதும் பாரியதுமான விசேடத்துவமான வங்கி

11.7% வருடாந்த சொத்து வளர்ச்சி வீதம் ரூபா 1.2 திரில்லியன் வரை

**நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் முதலீடுகள் நோக்கி வழிப்படுத்தப்பட்ட சேமிப்புக்களை அதிகரிப்பதன் மூலம் நாம் நேரடியான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புக்களின் மேம்பாட்டுக்கும், செழுமைமிக்க நாட்டின் உருவாக்கத்திற்க்கும் நாம் உறுதுணை புரிகின்றோம்.**

187 ஆண்டு கால தலைமைத்துவ வலிமை மற்றும் நற்பெயரால் ஈர்க்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி, அனைவருக்கும் ஆரோக்கியமான, நிலைபேறான மற்றும் பாதுகாப்பான சேமிப்பு நெறிமுறையை வளர்ப்பதற்கு உறுதியளித்த இலங்கையின் பாதுகாப்பான மற்றும் மிகப்பெரிய சிறப்புரிமை வங்கியாக உள்ளது. ஒரு சவாலான சூழலில் பயணித்து, எமது மக்களின் தீர்மானத்தின் மூலமாகவும், எமது வங்கி பின்பற்றும் நடைமுறைசார் தந்திரோபாயத் திசைமுகப்படுத்தல் மூலமாகவும் ஒரு வலுவான செயற்திறனைப் பதிவு செய்துள்ளோம்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்த பொருளாதார வளர்ச்சி, உயர் சந்தை வட்டி வீதங்கள், கொள்கை நிச்சயமற்ற தன்மை மற்றும் வணிக நம்பிக்கை இழப்பு ஆகியவற்றின் மூலம் இந்த ஆண்டின் தொழிற்பாட்டுச் சூழல் கட்டமைக்கப் பட்டிருந்தது. இந்த மோசமான விளைவுகளின் தாக்கங்கள் கடனுக்கான குறைந்த கேள்வி மற்றும் கடன் தரத்தை மோசமாக்கும் சூழலிலான இறுக்கமான கடன் திரையிடல் மூலம் வங்கித் துறையில் பிரதிபலித்தன.

## ஒரு குறிப்பிடத்தக்க செயற்திறன்

சவால் மிக்க தொழிற்பாட்டு சூழலுக்கு மத்தியிலும், விவேகமான மேலாண்மை மற்றும் எங்கள் இலட்சிய வளர்ச்சித் திட்டத்தின் வினைத்திறனான அமுலாக்கம் காரணமாக 2019 நிதியாண்டில் ரூபா 6.7 பில்லியன் வரிவிதிப்பின் பின்னான இலாபத்தின் மூலம் 48.8% வருடாந்த வளர்ச்சியைப் பதிவு செய்தோம்.

நிகர வட்டி வருமானம் ரூபா 28.8 பில்லியனாக, 15.9% இனால் அதிகரித்த அதேவேளை, நிகர வட்டியல்லா வருமானம் ரூபா 3.1 பில்லியன், 144.6% வருடாந்த அதிகரிப்பு என்னும் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. தொழிற்பாட்டு செலவுகள் 11.2% இனால் அதிகரித்த போதிலும், கிரய-வருமான விகிதம் 49.35% ஆக உயர்ந்ததன் மூலம் வங்கி முழுதுமான உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் மேம்பாடுகளை பிரதிபலிக்கிறது. முக்கியமாக கடன் திருப்பிச் செலுத்தல் தீர்வை காரணமாக, வரிகள் ரூபா 9.0 பில்லியனாக, அதாவது 34.3% இனால் அதிகரித்தது.

சொத்துத்தளம் 11.7% அதிகரித்து 2019 இல் ரூபா 1.2 திரில்லியனை அடைந்தது. இது பெரும்பாலும் 21.1% வளர்ச்சியைப் பதிவு செய்த, 2019 முடிவில் ரூபா 1.02 திரில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட வைப்புக்களினால் பெரிதும் உதவியளிக்கப்பட்டது. வங்கியின் வைப்புத் தளம் மீளாய்வு செய்யப்படும் இது வரையில் ஆண்டொன்றில் பெறப்பட்ட ரூபா 171.4 பில்லியன் எனும் மிக உயர்ந்த திரட்டலை வங்கியின் வைப்புத் தளம் பதிவு செய்தது. இது எமது வங்கியின் வலுவான வாடிக்கையாளர் நம்பிக்கையின் ஸ்திரமான பிரதிபலிப்பாகும். வங்கியின் உயர் சொத்துத் தரத்தைப் பிரதிபலிக்கும் 1.57% இனை அடைந்த செயற்படாக் கடன்களின் விகிதம் மூலம் பிரதிபலிக்கும் வகையில் எங்கள் சொத்து தரத்தை பாதுகாத்த அதே வேளையில் நாம் எமது கடன் வழங்கல் தளத்தை 7.4% ஆல் அதிகரித்து ரூபா 454.4 பில்லியனாக உயர்த்திக் கொண்டோம். அமெரிக்க டொலர் 250 மில்லியன் பெறுமதியான அமெரிக்க டொலர் வடிவிலான சிரேஷ்ட பத்திரங்களை முதிர்வின் போது நாம் தீர்ப்பனவு செய்தோம். எனினும், மேற்கூறப்பட்ட அமெரிக்க டொலர் வடிவிலான சிரேஷ்ட பத்திரங்களுக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட USD/LKR தெரிவுமாற்று ஒப்பந்தத் தீர்ப்பனவுக்கான தேவைப்பாடுகளுக்கு நிதியீட்டுவதற்காக சிரேஷ்ட தொகுதிக் கடன்களை வழங்கி, ரூபா 20.0 பில்லியன் திரட்டப்பட்டது.

1 ஜனவரி 2019 முதல் நடைமுறைக்கு வந்த குத்தகைகள் தொடர்பான SLFRS 16 கணக்கீட்ட நியமத்தினை வெற்றிகரமாகப் பின்பற்றியுள்ளதுடன், இணங்கியிருக்கிறோம். புதிய நியமம் குத்தகை பெறுபவர் குத்தகையை தொழிற்படு குத்தகைகள் அல்லது நிதிக் குத்தகைகள் என வகைப்படுத்துவதை நீக்கி, அதற்குப் பதிலாக, ஐந்தொகையில் குத்தகைப் பரிப்பு மற்றும் பயன்பாட்டு உரிமைக்கான சொத்து ஆகியவற்றை ஏற்பிசைவு செய்வதன் மூலம் பெரும்பாலும் அனைத்துக் குத்தகைகளும் மூலதனமாக்கப்படுகின்றன.

ஆண்டின் போது, நாங்கள் அண்மைத் தளத் தொடர்பாடல் (Near Field Communication -NFC) இயக்கப்பட்ட வரவு அட்டைகள் மற்றும் அகப் பதிப்பாக்க EMV வரவு அட்டைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தினோம். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலனுக்காக, அவர்கள் ரூபா 10 மில்லியனை, இரண்டு வருடங்கள் தயவுக் காலத்துடன் 15 வருட மீள் செலுத்துகைக் காலம் கொண்ட கடனாகப் பெற்று வீடொன்றினை அமைப்பதற்கான “சிஹினா மாலிகா”, ஒரு சிறப்பு வீடமைப்புக் கடன் ஆரம்பிக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அட்டைதாரர் தரவு பாதுகாப்பு தர நிர்ணயமாகிய “கொடுப்பனவு அட்டை தொழிற்துறை தரவுப் பாதுகாப்பு நியமம் (Payment Card Industry Data Security Standard/PCI-DSS) தரச்சான்றிதழைப் பெற்ற முதலாவது அரச வங்கி நாமாவோம். மேலும் இலங்கையின் 5 வது மிக மதிப்புமிக்க வர்த்தகநாமம் என்னும் விருது Brand Finance Lanka Ltd நிறுவனத்தினால் எமக்கு வழங்கப்பட்டது.

பல்வகை நோக்கங்களுக்காக கவர்ச்சிகரமான மற்றும் தாங்குதிறனுள்ள புதிய உற்பத்திகளை நாம் தொடர்ந்தும் வழங்குகிறோம். எண்ணியல் வங்கியியலுக்கான திறன் வலயங்களின் உருவாக்கம், இணைய வங்கியியல் சேவைகளின் ஆரம்பம் மற்றும் ஞெயஎநச மற்றும் NSB Reach போன்ற உற்பத்திகள் சிறந்த சேவைத் தரத்தையும், அனைத்துத் தொடுபுள்ளிகளிலும் வாடிக்கையாளர் ஈடுபாட்டின் உயர் மட்டத்தையும் உறுதி செய்துள்ளன.

Global Finance சஞ்சிகை 2019 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 4 வது முறையாகவும் இலங்கையின் உச்சப் பாதுகாப்பு மிக்க வங்கியாக NSB யை உறுதிப்படுத்தியுள்ளது. ஜுன் 2019 இல் Moody’s முதலீட்டாளர் சேவைக் குழும நிறுவனமான ICRA Lanka Limited இனால் ஓர் நிலையான கண்ணோட்டத்துடனான [SL] AAA தரப்படுத்தல் வழங்கப்பட்டது. இந்தத் தரப்படுத்தல் எமது 100% அரச உடமை மற்றும் வைப்புக்கள் மீதான வெளிப்படை உத்தரவாதம், உயர் தரமான கடன் வழங்கல் தொகுப்பு, தற்போதைய மூலதனப் போதுகை சுயவிவரம் மற்றும் குறைந்த இடர் முதலீட்டுத் தொகுதி ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

## எங்கள் தந்திரோபாய நிகழ்ச்சி நிரலிலான நிலையான முன்னேற்றம்

2017 முதல் 2019 வரையிலான எங்கள் வேலைத்திட்டத்தை உருவாக்கிய எங்கள் மூன்று ஆண்டு வணிகத் திட்டத்தின் தந்திரோபாய நிகழ்ச்சி நிரலில் 2019 இல் நாம் ஓர் நிலையான முன்னேற்றம் கண்டோம். எமது கூட்டாண்மை நிலைபேறான கொள்கைகள் மூலமாக, எமது கூட்டாண்மைத் தந்திரோபாயம் மற்றும் வணிக மாதிரியில் எமது நிலைபேறான தன்மையை ஒருங்கிணைத்துள்ளோம்.

எமது தொழில்நுட்ப முதலீடுகள் வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதுடன், மேலும் அனைத்து மட்டங்களிலும் எமது ஊழியர்களின் வினைத்திறனையும், விளைதிறனையும் அதிகரிக்க உதவுகின்றன. மனித மற்றும் எண்ணியல் இடைத் தொடர்புகளை தடையின்றி ஒருங்கிணைப்பதன் மூலம், மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்கி, எமது வாடிக்கையாளர்களுடன் இன்னும் நெருக்கமாகியுள்ளோம்.

வாடிக்கையாளர்களின் பிரத்தியேக எதிர்பார்ப்புகளையும், பாதுகாப்பான, வசதியான, விரைவான மற்றும் செலவு குறைந்த தீர்வுகளுக்கான அவர்களின் தேவைகளையும் புரிந்துகொள்வதன் மூலம், நாட்டிலுள்ள எந்தவொரு வணிக வங்கிக்கும் இணையான வேகமான, திறனான மற்றும் புதுமைமிக்க தொழிநுட்ப அடிப்படையிலான சேவைகளை சமமாக வழங்குவதற்கான

அர்த்தமுள்ள முன்மொழிவை நாங்கள் வழங்கியுள்ளோம்.

மக்களின் சேமிப்பின் பாதுகாப்பு மற்றும் அவதானம் எமது தேசத்தின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானதாக நாம் கருதுகிறோம். நெறிமுறையாக செயற்படுவதற்கும், நேர்மையுடன் நடந்துகொள்ளவும், எமது இடர்களை விளைதிறன் மிக்க வகையில் முகாமை செய்யவும் ஒரு வலுவான கலாச்சாரத்தைக் கொண்டிருப்பதால், கடன் இடர்களைத் தணித்தல், தகவல் பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் வலுவான மூலதன மற்றும் திரவத்தன்மைத் தளத்தைக் கொண்டிருத்தல் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தி வங்கி முழுவதும் இடர் முகாமை மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்த அத்தியாவசிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

நாம் செய்யக்கூடிய சிறந்த முதலீடுகளில் ஒன்று எமது அணியினர் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். கடந்த பல ஆண்டுகளில், நாங்கள் எமது தலைமைத்துவக் குழுக்களில் கணிசமாக முதலீடு செய்துள்ளமை, எமது வங்கியின் வலிமையையும் செயற்திறனையும் மேம்படுத்துகிறது. அதே நேரத்தில் நாம் எமது ஊழியர்களின் அக, புற மற்றும் நாடு கடந்த பயிற்சியளித்தல் மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் வணிகத் தேவைகள் மற்றும் தொழில் அபிலாஷை களுடன் தொழில் திட்டமிடலை அதிக அளவில் சீரமைத்துள்ளது. நாம் எமது ஊழியர்களின் நலன்புரி வசதிகளையும் மேம்படுத்தி அவர்களின் வேலை-வாழ்க்கை சமநிலையை மேம்படுத்தியுள்ளதுடன், மிகவும் ஊக்கம் மிக்க, ஈடுபாடு மிக்க மற்றும் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் குழுவை வளர்த்துள்ளோம். பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கலை மேம்படுத்துவதற்கான எமது முயற்சிகளில், கூட்டாண்மை முகாமையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வெற்றிகரமாக அதிகரித்துள்ளோம். 2019 ஆம் ஆண்டின் இறுதியில், கூட்டாண்மை முகாமையில் 43% உறுப்பினர்கள் பெண்கள் ஆவர்.

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு மற்றும் நிலைபேறான வணிக நடைமுறைகள் மீதான எமது அர்ப்பணிப்பு எமது பெறுமதிகள் மற்றும் கூட்டாண்மை கலாச்சாரத்தில் உள்ளார்ந்ததாகும். இந்த அர்ப்பணிப்பு எமது அக்கறையுள்ள தரப்பினருக்கு நீண்டகால பெறுமதியை சேர்க்க உதவுவதுடன், மேலும் எமது அனைத்து சேவைகள் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் அனைத்திலும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பை ஒருங்கிணைத்துள்ளோம்.

இந்த ஆண்டில், நாம் எமது கார்பன் தடங்களைக் குறைத்து, சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மைக்கு பங்களிக்கும் எமது முயற்சிகளில் 2018 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட காலத்திற்காக, இலங்கை காலநிலை நிதியத்தால் வழங்கப்பட்ட கார்பன் நடுநிலை சான்றிதழினைப் பெற்றுக் கொண்டோம்.

இலங்கையின் இரண்டாவது பாரிய அரசாங்கப் பிணை வைத்திருப்பவராக இருப்பதுடன் அரசாங்கத்திற்கான மிகப் பெரிய கடன் வழங்குனர்களில் ஒருவராக, வரிகள், தீர்வைகள், கட்டணங்கள் மற்றும் பங்கு இலாபங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுத் திறைசேரிக்குப் பங்களிப்பதன் மூலம் நாங்கள் தேசத்திற்கு சேவை அளிக்கின்றோம். நாட்டின் நீண்டகால அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பிற சமூக-பொருளாதார திட்டங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் நாங்கள் அரசின் தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களுடன் இணைந்து கொள்வதுடன், நிதி முறைமையின் உறுதிப்பாடு மற்றும் நிலைபேறான தன்மையைப் பேண அரசுக்கு உதவி அளிக்கிறோம். ஒரு சில்லறைவணிக நோக்கில், இலங்கையின் வீடமைப்பு சந்தையில் கூடுதலாக சந்தைப் பங்கு கொண்ட மிகப்பெரிய கடன் வழங்குனராக நாம் இருக்கிறோம். நாம் நாட்டை முன்னோக்கி செல்லும் முதலீட்டை நோக்கி செலுத்தப்படும் அதிகரித்த சேமிப்புகள் மூலம் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களைத் தூ ண்டுவதுடன், தேசத்தில் செல்வத்தை உருவாக்குகிறோம்.

## ஒரு நிலைபேறான வங்கிக்கான எமது பகிரப்பட்ட நோக்கு

நாம் ஒரு பலமான மற்றும் நிலையான வங்கியை உருவாக்கியுள்ளோம். சூழல் வேகமாக மாறிக்கொண்டே இருந்தாலும், நாம் எமது எண்ணியலாக்கம் மற்றும் புத்தாக்க முயற்சிகளை அதிகரித்து, மேலும் எமது வாடிக்கையாளர்களுக்கு உச்ச உயர்வான சேவையை தொடர்ந்து வழங்குவோம். இந்த செயற்பாட்டில் எமது ஊழியர்கள் தொடர்ந்தும் கணிசமான பங்கை வகிப்பார்கள்.

கொவிட்-19 தொற்றுநோய் காலத்திலும் அதன் பின்னும் எமது அக்கறையுள்ள தரப்பினர்களுக்கு சேவை செய்வதற்கும் ஆதரவளிப்பதற்கும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எமது அக்கறையுள்ள தரப்பினர்களைப் பாதுகாப்பதற்கும் எமது வணிக நடவடிக்கைகளைத் தொடரவும் தேவையான பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் 100% அரச உத்தரவாதம் கொண்ட ஒரேயொரு சிறப்பு சேமிப்பு வங்கி நாமேயாவோம். எமது வங்கி அதன் தொடக்கத்திலிருந்தே மிகவும் திறமையான முகாமை மற்றும் சபையினால் முகாமை செய்யப்படுவதுடன், நமது நாட்டு மக்களின் அபிலாஷைகளையும் நிறைவேற்றியுள்ளது. எமது மிகப்பெரிய பெருமைக்கான மூலாதாரமான மேன்மைமிக்க வர்த்தக நாமம் மற்றும் நற்பெயரை நாம் கொண்டுள்ளோம். நாம் தொடர்ந்து எங்கள் உத்வேகத்தை உருவாக்கி, எமது வாடிக்கையாளர்களுக்கு இன்னும் பொருத்தமானவர்களாக மாறுவதுடன், மேலும் எமது அக்கறையுள்ள தரப்பினருக்கு அதிகரித்த பெறுமதியை வழங்கும் இன்னும் சிறப்பான வங்கியை உருவாக்குவோம்.

## பாராட்டுக்கள்

எமது வாடிக்கையாளர்களுக்கு, அவர்கள் எம்மீது கொண்ட விசுவாசம் மற்றும் ஆதரவிற்காகவும், பங்குதாரருக்கு அவர்களது உறுதியான ஆதரவிற்காகவும் நான் நன்றி கூறுகிறேன். தலைவர் மற்றும் சபையின் வழிகாட்டல் மற்றும் தூரநோக்குமிக்க் தலைமைத்துவம் ஆகியவற்றை நான் பெரிதும் மதிப்பதுடன், பாராட்டுகிறேன். தே.சே. வங்கியின் முன்னாள் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு எஸ் டி என் பெரேரா அவர்கள் வங்கிக்கு அளித்த மதிப்புமிக்க பங்களிப்புக்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். முகாமைக் குழு மற்றும் ஊழியர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பை நான் மிகவும் பாராட்டுகிறேன். தபால் மா அதிபர், மற்றும் தபால் திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளுக்கும், தீவு முழுவதும் தே.சே. வங்கிக்கு வழங்கிய உதவிகளுக்காக எனது மிகுந்த பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கௌரவ நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், கௌரவ நிதி இராஜாங்க அமைச்சர், திறைசேரி செயலாளர் மற்றும் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அவரது குழுவினர், பிற ஒழுங்குமுறை அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அவர்களது குழுக்கள் ஆகியோருக்கு அவர்களின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுக்காக எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.



**திருமதி தமிதா ரத்நாயக்க**

பதில் பொது முகாமையாளர்/
பிரமத நிறைவேற்று அதிகாரி

24 மார்ச் 2020

# எமது பெறுமதி உருவாக்க மாதிரி

வங்கியின் பெறுமதி உருவாக்கச் செயன்முறை பற்றிய ஓர் முற்றடக்க கலந்துரையாடல் தேசிய சேமிப்பு வங்கியின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு, விழுமியங்கள் மற்றும் தந்திரோபாயம் என்பன மூலம் வழிநடாத்தப்பட்டதாகும். பெறுமதி உருவாக்கம் பற்றிய பொதுநோக்கு ஒன்றினை எடுத்துரைக்கின்ற தேசிய சேமிப்பு வங்கியின் வியாபார மாதிரியினை இப்பிரிவு உள்ளடக்குகின்றது. மேலும், இது, தொழிற்படுகின்ற சூழலினை எடுத்துரைப்பதுடன், வங்கியின் அக்கறையுடைய தரப்பினரின் ஈடுபாட்டுச் செயன்முறை, பொருண்மை இனங்காணல் செயன்முறை, மற்றும் வங்கியின் உபாயத்தினை வகுப்பதற்கு பங்களிக்கின்ற நிலைபேறான தன்மை மிக்க கொள்கை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றது.


20 எமது நிலைபேறான வணிக மாதிரி

22 தொழிற்படும் சூழல்

49 எமது தந்திரோபாயம்

70 அக்கறையுள்ள தரப்பினர்

78 பொருண்மை விடயங்கள்




# எமது நிலைபேறான வணிக மாதிரி

தொழிற்பாட்டுச் சூழல் (பக்கம் 22 முதல் 48 வரை)

அரசியல் மற்றும் பொருளாதார தளங்களிலான மாற்றங்கள்
(பக்கம் 36 முதல் 38 வரை)

**அக்கறையுள்ள தரப்பினர்**
பக்கம் 70 முதல் 77 வரை




**உள்ளீடுகள்**

**நிதி மூலதனம்** — பக்கம் 90 முதல் 111 வரை

ஓர் திடமான மூலதனத் தளம் மற்றும் வைப்புக்களை ஏற்கும் மற்றும் கடன்களை வழங்கும் தொழிற்பாடுகள் மற்றும் வணிகத்துக்கு ஆதரவு வழங்கும் வகையிலான சமப்படுத்தப்பட்ட நிதியிடல் சேர்க்கை.

- பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்
- காசு மற்றும் காசுக்கு சமமானவை
- நீண்ட மற்றும் குறுங்கால கடன்படுகைகள்
- வாடிக்கையாளர் வைப்புக்கள்

**உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்** — பக்கம் 112 முதல் 119 வரை

உற்பத்தி மற்றும் உற்பத்திகளின் விநியோகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் தொழிநுட்பம் உள்ளடங்கலான உட்கட்டமைப்பு.

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்
- எண்ணியல் உட்கட்டமைப்பு
- வாடிக்கையாளர் தொடுகைப் புள்ளிகள்

**மனித மூலதனம்** — பக்கம் 130 முதல் 143 வரை

அர்ப்பணிப்பு மிக்க, ஈடுபாடான மற்றும் உயர் செயற்றிறனுடைய ஊழியர் அணிகள்.

- 296 புதிய ஊழியர்கள்
- 32,138 மணிநேரப் பயிற்சியளித்தல்
- 645 பதவியுயர்வுகள்
- சம வாய்ப்பு தொழில்வழங்குனர்
- ஆரோக்கியமான தொழில்-வாழ்க்கை இணக்கப்பாடு

**சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்** — பக்கம் 144 முதல் 161 வரை

வாடிக்கையாளர்கள், வணிகப் பங்காளர்கள், ஒழுங்குவிதிமுறையாளர்கள் மற்றும் நாம் தொழிற்படும் சமுதாயம் ஆகிய பல்வேறு வகையான அக்கறையுள்ள தரப்பினர்களுடனான ஒத்துழைப்பு மிக்க உறவுமுறை.

- 351 பதிவு செய்யப்பட்ட வணிகப் பங்காளர்கள்
- விரிவுபடுத்தப்பட்ட உற்பத்திச் சேர்க்கை
- வைப்புக்கள் மற்றும் அவற்றுக்கான வட்டி மீதான 100% அரச உத்தரவாதம்
- பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தொடுகைப் புள்ளிகள்
- உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்தான 100% கொள்வனவு
- வணிகப் பங்காளர்களுடனான மேம்படுத்தப்பட்ட உறவுமுறைகள்
- ரூபா 30 மில்லியன் கூட்டுவணிக சமூகப் பொறுப்பு செயற்றிட்டங்கள் மீதான முதலீடுகள்

**புலமை மூலதனம்** — பக்கம் 120 முதல் 129 வரை

பலமான வர்த்தகநாமம், வாடிக்கையாளர் விசுவாசம், உள்ளக முறைமைகள் மற்றும் செயன்முறைகள், கூட்டுவணிகப் பெறுமதிகள் மற்றும் விசேட திறன்கள் மற்றும் ஊழியர்களின் திறமைகள்.

- கூட்டுவணிகக் கலாச்சாரம்
- நிறுவனம்சார் அறிவு
- புத்தாக்கக் கலாச்சாரம்
- கொள்கைகள், சட்டகங்கள் மற்றும் செயன்முறைகள்
- பொறுப்புமிக்க தலைமைத்துவம்

**இயற்கை மூலதனம்** — பக்கம் 162 முதல் 169 வரை

சக்தி, நீர் மற்றும் கழிவு முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மை.

- NSB நிலைபேறான தன்மைக் கொள்கை
- NSB காட்டு வேளாண்மை மீதான ரூபா 1.3 மில்லியன் முதலீடு
- பசுமை வங்கியியல் முன்முயற்சிகள்
- தொழிற்பாடுகளின் எண்ணியலாக்கம்
- பொறுப்புமிக்க கடன்வழங்கல்
- பசுமைக் கடன்கள்

சட்ட ஒழுங்குகளிலேற்படும் மாற்றங்கள்
(பக்கம் 46 முதல் 47 வரை)

குடியியல்சார் மாற்றங்கள்
(பக்கம் 44 முதல் 46 வரை)

சவால்மிக்க தொழில்நுட்பங்களுடனான எண்ணியல் யுகத்தில் தொழிற்படல்
(பக்கம் 38 முதல் 40 வரை)




நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

(பக்கம் 90 முதல் 169 வரை)

## வெளியீடுகள்

**உற்பத்திகள்**

(பக்கம் 426 முதல் 429)

**i. வைப்புக்கள்**

(21% வருடாந்த வளர்ச்சி)

சேமிப்பு வைப்புக்கள்

தவணை வைப்புக்கள்

**ii. கடன் வழங்கல் உற்பத்திகள்**

(7.5% வருடாந்த வளர்ச்சி)

**சில்லறை கடன் வழங்கல்**

தனிப்பட்ட கடன்கள்
வீடமைப்புக் கடன்கள்
அடகு முற்பணங்கள்
வாகனக் கடன்கள்
வைப்புகளுக்கு எதிரான கடன்கள்

**கூட்டுவணிகக் கடன்வழங்கல்**

நிதி நிறுவனங்களுக்கான நேரடிக் கடன் வழங்கல்

கடன் ஒருங்கிணைப்பு

செயற்றிட்டக் கடன் வழங்கல்

**சேவைகள்**

உள்முக மற்றும் வெளிநோக்கிய மாற்றல்கள்

வர்த்தக நிதி

பாதுகாப்பு வைப்புப் பெட்டகம்

**பெறுமதி கூட்டிய சேவைகள்**

அட்டைச் சேவைகள்

பயன்பாட்டுப் பட்டியல் கொடுப்பனவுகள்

**கார்பன் வழித்தடம்**

மூலப்பிரமாணங்களுக்கு அமைவான GRI உள்ளடக்கச் சுட்டி

(பக்கம் 170 முதல் 174 வரை)

## விளைவுகள்

**நிதி மூலதனம்**

ரூ 6.7 பில்லியன் வரிக்குப் பின் இலாபம்
ரூபா 2 பில்லியன் பங்கு இலாப செலுத்தல்
ரூபா 4.5 பில்லியன் நிறுத்திவைத்த உழைப்பு
ரூபா 12.7 பில்லியன் அரச பிணைகளிலான முதலீடுகள்
கடன் வழங்கலிலான 7.4% வளர்ச்சி
ரூபா 1.2 திரில்லியன் சொத்துத் தளம்

- தந்திரோபாய முன்னுரிமைகளின் அடிப்படையிலான நிதியிடல் தந்திரோபாயம்
- சிறந்த நிதி மற்றும் சமூகவிளைவுகளைத் தரும் மூலதன முதலீடு
- உறுதிப்படுத்தப்பட்ட நிதிசார் உறுதிப்பாடு மற்றும் பலம்
- பொருத்தமான மற்றும் நிலையான கடன் சேர்க்கை

**உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்**

256 கிளைகள்
39 திறன் வலயங்கள்
16000+ i-saver புள்ளிகள்
17,847 இணைய வங்கி வாடிக்கையாளர்கள்

- சுய சேவை ஊடகங்கள் மூலமான பெறுமதி மையப்படுத்தல்கள்
- பெறுமதிச் சங்கிலி முழுதுமான எண்ணியல் நிலைமாற்றம்
- வணிகத் தொடர்ச்சித்தன்மை
- பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பு நம்பகத்தன்மை
- தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் மேம்பட்ட உற்பத்தித் திறன்

**மனித மூலதனம்**

4,715 மொத்த ஊழியப் படை
98.1% தக்கவைத்தல் வீதம்
1.9% புரள்வு வீதம்
7 மணி சராசரி பயற்சியளித்தல் நேரம்
99.7% பிரசவ விடுமுறையின் பின் திரும்பல்
54% பெண் ஊழியர்கள் (மொத்தம்)
ரூபா 25.9 மில்லியன் ஊழியருக்கான தலா மொத்த வருமானம்

- விருப்பத்துக்குரிய தொழில் வழங்குனர்
- திறன்மிக்க மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட ஊழியப்படை
- பாதுகாப்பான வேலைச் சூழல்
- உள்ளடக்கமான மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட ஊழியப் படை
- சம வாய்ப்புத் தொழில் வழங்குனர்

**சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்**

20.9 மில்லியன் கணக்குகள்
495,000 புதிய வாடிக்கையாளர் கணக்குகள்
100% உள்நாட்டு வேலைவாய்ப்பு
ரூபா 11.3 பில்லியன் அரசுக்கான பங்களிப்பு
40,000+ பாடசாலைப் பிள்ளைகளுக்கான மேம்படுத்தப்பட்ட ஆங்கில அறிவு

- வாடிக்கையாளர் மைய மற்றும் நம்பகமான சேவை வழங்கல்
- தொழிற்பாட்டுக்கான சமூக அனுமதியின் தக்கவைத்தல்
- நியாயமான மற்றும் சமத்துவமான மனுக் கோரல் முறைகள்
- முன்னேற்பாடான மற்றும் ஒத்துழைப்பு மிக்க வழங்குனர் விருத்தி
- நியாயமான, வெளிப்படையான மற்றும் நெறிமுறைசார் முகாமை

**புலமை மூலதனம்**

ICRA Lanka Ltd. இன் AAA தரப்படுத்தல்
AA வர்த்தக நாம தரப்படுத்தல்
25% வாத்தக நாமப் பெறுமதி உயர்வு
இலங்கையின் உச்சப் பாதுகாப்பான வங்கி
10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட 1,225 ஊழியர்கள்
விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

- தனித்துவமான உற்பத்திகள் மற்றும் சேவைகள்
- பலமான ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் மேற்பார்வை
- துரித எண்ணியல் தொழிநுட்பங்கள் மற்றும் இயலுமைகள்
- அறிவுசார் அமைப்பு
- ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் வள ஒதுக்கீடு
- புத்தாக்கக் கலாச்சாரம்
- மேம்பட்ட, ஒருங்கிணைந்த எண்ணியல் தளங்கள் ஊடான மேம்பட்ட வெளிப்படைத்தன்மை

**இயற்கை மூலதனம்**

222 பசுமைக் கடன்கள் வழங்கப்பட்டன
6,500 மரங்கள் நாட்டப்பட்டன
79,368 கன மீட்டர் நீர் நுகர்வு
42 கிளைகள் சூரிய சக்திக்கு மாற்றம்
26 கிளைகள் தேறிய அளவை ஊடாக தேசிய மின்சார வலையமைப்பில் இணைப்பு
7.6GJ தலா ஊழிய சக்தி நுகர்வு
139.4GJ தலா கிளை சக்தி நுகர்வு
16.8 லீட்டர் தலா ஊழியர் நீர் நுகர்வு

- சூழலியல் பொறுப்புடைமை
- செயற்றிறனில் அபிவிருத்தி
- சக்தி செயற்றிறனிலிருந்தான சேமிப்பு
- பசுமை வணிகத்திற்கான வாய்ப்புக்களை இனங்காணுதல்

## NSB க்காக உருவாக்கப்பட்ட பெறுமதி

எமது மூலதனத்தினை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் முகாமை செய்தல் நிச்சயமற்ற சூழலில் குறுங்கால, நடுத்தரகால மற்றும் நீண்ட கால நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வசதியளிக்கிறது.

- தொடர்ச்சியாக மாற்றமடையும் சமூக-பொருளாதார சூழலில் துரிதமாக இருத்தல்
- சேவை வழங்கல் மற்றும் வாடிக்கையாளர் மைய அணுகுமுறையில் எமது நம்பகமான தன்மையினை பலப்படுத்தல்
- மனித இயலுமைகள் மற்றும் உற்பத்தித்திறன் இயலுமைகளை வலுப்படுத்தல்
- எமது தொழிற்பாடுகளின் நெறிமுறைசார் வணிக நடைமுறைகள் மற்றும் பொருத்தமான நிலைபேற்றுத் தன்மை விடயங்களை மேம்படுத்தல்
- தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளைத் திருப்தி செய்வதற்கான பன்முகமான மற்றும் அனுபவம் மிக்க திறன்கள்
- நிலைபேறான வளர்ச்சிக்காக பங்குடமைகளை உருவாக்குதல்
- எமது தொழிற்பாடுகளிடையே இணக்கப்பாட்டைப் பேணுவதற்காக, ஒழுங்குவிதிமுறைசார் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செயற்படல்
- வளர்ச்சிக்கு நிதியிடுவதற்காக நிலையான மூலதனம் மற்றும் திரவத் தன்மையைக் கட்டியெழுப்புதல் மற்றும் வேறுபட்டப மூலங்களிலிருந்த முதலீட்டைக் கவர்தல்

## ஏனையவர்களுடன் பகிரப்பட்ட பெறுமதி

எமது நடவடிக்கைகள் ஊடாக, எமது பங்குதாரர்கள், பொருளாதாரம் மற்றும் பிற அக்கறையுள்ள தரப்பினர்களுக்கு இந்த விளைவுகளை நாம் வழங்குகிறோம்.

**பொருளாதாரம்**

- முதலீடுகளின் மீதான அதிகரித்த வட்டி மூலமாக வாடிக்கையாளர் செல்வத்தை மேம்படுத்தல் (வாடிக்கையாளர், பங்குதாரர்/முதலீட்டாளர்)*
- வங்கியியல் துறை மீதான பொதுமக்களது நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் (வாடிக்கையாளர், பங்குதாரர்/முதலீட்டாளர்)*
- இலங்கைப் பொருளாதாரத்தில் நிலைத்த தன்மை மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் (வாடிக்கையாளர், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதியியல் உள்ளடக்கத்துக்கு இட்டுச் செல்லும் நிதிச் சேவைகளுக்கான மேம்பட்ட அணுகை (வாடிக்கையாளர், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தினூடாக அதிகரித்த ஊழியர் செழுமை (ஊழியர், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- இலங்கையர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் (ஊழியர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- அதிகரித்த பொருளாதார பெறுமதியை உருவாக்குதல் (பங்குதாரர்/முதலீட்டாளர், ஒழுங்குமுறையாளர்கள் மற்றும் அரச நிறுவனங்கள்)*

**சமூகம்**

- வசதியான வங்கியியல் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கான நிதி உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான மேம்பட்ட அணுகல் (வாடிக்கையாளர்கள்)*
- ஒழுங்குவிதிமுறையாளர்கள் மற்றும் அரசாங்க விதிமுறைகளுடன் முழுயான இணக்கப்பாடு (ஒழுங்குவிதிமுறையாளர்கள் மற்றும் அரச நிறுவனங்கள், ஊழியர்கள், வணிகப் பங்காளர்கள்)*
- அதிக ஈடுபாடு கொண்ட மற்றும் திறமையான ஊழியர்களை வளர்த்தல் (ஊழியர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல், வாடிக்கையாளர்கள்)*
- இலங்கையின் தொழிற் சந்தையில் மனிதத் திறன்களையும் உற்பத்தித் திறனையும் உயர்த்துல் மற்றும் மேம்படுத்துதல் (ஊழியர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- சமூகங்களின் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் நல்வாழ்வை மேம்படுத்துதல் (ஒழுங்குவிதிமுறையாளர்கள் மற்றும் அரச நிறுவனங்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- கருத்தரங்குகள் மற்றும் கல்விக் கடன்கள் மூலம் எதிர்கால சந்ததியினரின் அறிவை மேம்படுத்துதல் (சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- நிலைபேறான தேசிய அபிவிருத்திக்கான பங்களிப்பு (ஒழுங்குவிதிமுறையாளர்கள் மற்றும் அரச நிறுவனங்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- தபால் வலையமைப்பு வழியாக சமூகத்தில் பரந்துபட்ட சேமிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் நிதிச் சேர்க்கைக்கு பங்களித்தல் (வாடிக்கையாளர், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- நிதியிடல் செயற்திட்டங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டை ஊக்குவித்தல் (ஒழுங்குவிதிமுறையாளர்கள், அரச நிறுவனங்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- எமது ஊழியர்கள் மற்றும் நாம் செயற்படும் சமூகங்களின் பௌதீக மற்றும் மன நலனை மேம்படுத்துதல் (ஊழியர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*

**சுற்றுச்சூழல்**

- கார்பன் குறைந்த மற்றும் சுற்றுச்சூழல் சிநேகமான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்தல் (சமூகம் மற்றும் சுற்றுச்சூழல், ஒழுங்குவிதிமுறையாளர்கள் மற்றும் அரச நிறுவனங்கள்)*
- SGD களை அடைவதற்கு இலங்கைக்கு/அரசுக்கு ஆதரவளித்தல் (சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- பசுமைப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் (சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*
- வருங்கால சந்ததியினரின் வளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, இயற்கை சூழலின் திறனை மேம்படுத்துதல் (சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்)*

* *தொடர்புடைய அக்கறையுள்ள தரப்பினர்*

நிலைமாற்ற சமூகம் மற்றும் சூழல்
(பக்கம் 41 முதல் 43 வரை)

மீதமுள்ள அத்தியாயங்கள் வணிக மாதிரியுடன் ஒருங்கிணைந்த வழியில் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பதை இது கோடிட்டுக் காட்டுகிறது.

**1. தொழிற்பாட்டு சூழல்**

பூகோள பொருளாதார நிலைமை, உள்நாட்டுப் பொருளாதாரம், புவிசார் அரசியல் பதட்டங்கள், தொழிற்துறைப் போக்குகள், தொழிற்பாட்டு சவால்கள் மற்றும் அதிகரிக்கும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கரிசனைகள் உள்ளிட்ட, நாம் தொழிற்படும் சூழல் பெறுமதியை உருவாக்குவதற்கான நமது இயலுமையைப் பாதிக்கிறது. எமது புற தொழிற்பாட்டு சூழல் குறித்த விபரங்களுக்காக பக்கம் 22 முதல் 35 வரை பார்வையிடவும்.

**இடர்கள் மற்றும் வாய்ப்புகள்**

எமது அக்கறையுள்ள தரப்பினருக்கு பெறுமதியை வழங்குவதை பொருண்மையாக பாதிக்கக்கூடிய இடர்கள் மற்றும் வாய்ப்புகளால் எமது தந்திரோபாயம் பாதிக்கப்படுகிறது. இடர் முகாமையின் முக்கிய நோக்கம், நமது தந்திரோபாயம் மற்றும் பெறுமதி உருவாக்கம் ஆகியவற்றின் செயற்பாட்டை பொருண்மையாக பாதிக்கக்கூடிய இடர்களைப் புரிந்துகொள்வதற்கும் பதிலிறுப்பதற்கும் வங்கியை போதுமான அளவு நிலைநிறுத்துவதாகும். இடர் முகாமை குறித்த விபரங்களுக்கு பக்கங்கள் 248 முதல் 274 வரை பார்வையிடவும்.

**3. அக்கறையுள்ள தரப்பினர்**

அக்கறையுள்ள தரப்பினருக்கு பெறுமதியை வழங்குவது எமது நற்பெயரை பாதிக்கிறது. எமது வெற்றி மற்றும் நிலைத்த தன்மை எமது அக்கறையுள்ள தரப்பினரின் ஆதரவில் தங்கியிருப்பதுடன், மேலும் அவர்களின் தேவைகள் மற்றும் நலன்களைப் புரிந்துகொள்வதும் பதிலிறுப்பதும் நமக்கு அவசியமாகும். எமது அக்கறையுள்ள தரப்பினர் ஈடுபாட்டின் விபரங்களுக்கு, பக்கங்கள் 70 முதல் 77 வரை பார்வையிடவும்.

**4. எமது தந்திரோபாயம்**

எமது தந்திரோபாயம் எம்மை நோக்குநிலையில் வைத்திருப்பதுடன், குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு நிலைபேறான பெறுமதியை வழங்குவதற்கான தெளிவான பாதையை அமைக்கிறது. எமது வணிகத்தில் வளர்ச்சியடைவதற்கு எமது தந்திரோபாயத்தை செயற்படுத்த உதவும் ஒரு வலுவான அடித்தளம் எம்மிடம் உள்ளது. ஒரு நிலைபேறான சமுதாயத்திற்கு பங்களிப்பதற்கான எமது பொறுப்பை நாங்கள் ஏற்பிசைப்பதுடன், மேலும் அன்றாட தீர்மானம் மேற்கொள்ளலில் நிலைபேறான தன்மையை நாம் தொடர்ந்தும் ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் அதேவேளை, அதை எமது தந்திரோபாயத்திலும் உட்பொதித்து வருகிறோம். எமது தந்திரோபாயம் குறித்த விபரங்களுக்கு பக்கங்கள் 49 முதல் 69 வரை பார்வையிடவும்.

**5. ஆறு மூலதனங்கள்**

எமது வணிகத்தை எவ்வாறு முகாமை செய்வது மற்றும் வளர்ப்பது என்பது குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, பெறுமதியை உருவாக்குவதற்கான நமது திறனுக்கு முக்கியமான வளங்களையும் உறவுகளையும் கருத்தில் எடுத்துக் கொள்கிறோம். இவற்றை நாம் ஆறு மூலதனங்கள் என்று குறிப்பிடுகிறோம். ஒவ்வொன்றின் உள்ளீடுகளும் எமது பொருட்கள் மற்றும் சேவைகளின் விளைதிறனான உற்பத்தி மற்றும் விநியோகம், வெளியீடு மற்றும் விளைவுகளை உருவாக்குதல், இதன் மூலம் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் பெறுமதியை உருவாக்குவதற்கு அவசியமாக உள்ளன. பெறுமதியை உருவாக்க ஆறு மூலதனங்களை நாம் பயன்படுத்தும் முறை மற்றும் இந்த மூலதனங்களுக்கு இடையிலான வர்த்தக மாற்றுத்தெரிவுகள் பற்றிய விவரங்களுக்கு, பக்கங்கள் 90 முதல் 169 வரை பார்வையிடவும்.

**6. பொருண்மை விடயங்கள்**

பொருண்மை விடயங்கள் என்பது நமது பெறுமதி உருவாக்கம் மற்றும் எமது தந்திரோபாயத்தின் அடைவு ஆகியவற்றை பாதிக்கும் திறன் கொண்ட விடயங்கள் ஆகும். குறுகிய, நடுத்தர அல்லது நீண்ட காலத்தில் பெறுமதியை உருவாக்குவதற்கான நமது திறனை கணிசமாக பாதிக்கக்கூடிய பொருண்மை விடயங்களில் (பக்கங்கள் 78 முதல் 88 வரை பார்வையிடவும்) விரிவான உரையாடலை நாம் வழங்கியுள்ளோம். இந்த விடயங்கள் இந்த அறிக்கை முழுவதும் உள்ளடக்கத்திற்கான நங்கூரத்தை உருவாக்குகின்றன.

**7. வலுவான ஆளுகை நெறிமுறைகளின் ஆதரவு**

நாம் வணிக ஒருமைப்பாடு மற்றும் நெறிமுறைகளின் உயர் நியமங்களுக்கு உறுதிபூண்டுள்ள ஒரு அரசுக்கு சொந்தமான அமைப்பு ஆவோம். அனைத்து அக்கறையுள்ள தரப்பினருக்கும் வகைகூறல் மற்றும் பொறுப்பாக இருப்பது ஒரு முன்னுரிமைத் தெரிவு ஆகும். எமது ஆளுகைக் கண்ணோட்டம் குறித்த விபரங்களுக்கு பக்கங்கள் 196 முதல் 247 வரை பார்வையிடவும்.

# தொழிற்பாட்டுச் சூழல்

## 2019 இல் பூகோளப் பொருளாதாரம்

பூகோளப் பொருளாதாரம் நாடுகளிடையேயான பொதுவான செல்வாக்குகளையும் நாடு சார்ந்த காரணிகளையும் பிரதிபலிக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டில் தசாப்தத்துக்கான அதன் மிகக் குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்து, 2.9% ஆகக் குறைந்துள்ளது (ஆதாரம்: சர்வதேச நாணய நிதியத்தின் உலக பொருளாதாரக் கண்ணோட்டம்). அமெரிக்கா, சீனா மற்றும் யூரோ பிராந்தியத்தின் பலவீனமான வளர்ச்சியும், அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகப் பிணக்குகளும் 2019 ஆம் ஆண்டில் பூகோளரீதியான வளர்ச்சியைக் கணிசமாகப் பாதித்தன. உலகின் பல பகுதிகளிலும், உற்பத்தித் துறைகள் மந்தநிலையை அண்மித்தோ அல்லது மந்தநிலையிலோ இருந்தன. இதற்கான பதிலிறுப்பாக, பல மத்திய வங்கிகள் ஒரு வருடத்திற்கு முன்பு எதிர்பார்த்தபடி பணக் கொள்கையை தளர்த்தத் தொடங்கின - சில நாடுகள் (குறிப்பாக சீனா மற்றும் அமெரிக்கா) மேலதிக ஊக்கிகளை வழங்கின.

வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடையும் நாடுகளிலிருந்து (பிரேசில், இந்தியா, மெக்ஸிகோ, ரஷ்யா மற்றும் துருக்கி உள்ளிட்ட EMDE கள்) நாடு சார்ந்த பலவீனத்திலிருந்து மேலும் அழுத்தங்கள் உருவாகின. கடுமையான நிதி நிலைமைகள் (அர்ஜென்டினா), புவிசார் அரசியல் சூழ்நிலைகள் (ஈரான், சவுதி அரேபியா, தென் சீனக் கடல்) மற்றும் சமூக அமைதியின்மை (வெனிசுலா, லிபியா மற்றும் யேமன்) தொடர்பான மோசமான பொருளாதார ஸ்திரத்தன்மையும் உலகப் பொருளாதார மந்தநிலைக்கு பெருமளவில் பங்களித்தது.

## பூகோளப் பொருளாதாரத்தின் கண்ணோட்டம்

### அமெரிக்க - சீன வர்த்தகப் போர்

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் அதிகரித்து வரும் வர்த்தகப் பிணக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மை சர்வதேச வர்த்தகம், வணிக நம்பிக்கை ஆகியவற்றில் சுமையை அதிகரித்ததுடன் சர்வதேச உலகளாவிய வர்த்தகம் மற்றும் முதலீட்டை தொடர்ந்தும் பலவீனப்படுத்தியது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் 18 மாதங்களாக நீடித்த வர்த்தக மோதல்கள் உலகளாவிய வர்த்தகத்தை சீர்குலைத்து, பூகோள வளர்ச்சியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின. இருப்பினும், முதல் கட்ட ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் சீனாவும் இணங்கிக் கொண்டதால், 2019 டிசம்பரில் நிலைமை தளர்வடைந்தது.

### ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார மந்தநிலை, சீனா மற்றும் யூரோ பிராந்தியம்

அமெரிக்கா, யூரோ பிராந்தியம் மற்றும் சீனா ஆகிய உலகின் மிகப்பெரிய பொருளாதாரங்கள் 2019 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க சரிவை சந்தித்தன. இந்த பொருளாதாரங்களில் ஏதேனும் ஒரு ஆழமான மந்தநிலை நேரடி வர்த்தக இணைப்புகள் மற்றும் பொருட்களின் விலைகள் மற்றும் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் பொருளாதார வாய்ப்புகளை மோசமாக்கும். நிதி மற்றும் நம்பிக்கை ஊடகங்கள் மூலம் சீனாவின் மந்தநிலையின் விளைவுகளை பரப்புவது நாட்டின் வர்த்தக பங்காளிகள் மற்றும் பொருட்கள் உற்பத்தியாளர்களிடையே கணிசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதியிலான சரிவுக்கு மத்தியிலும் அமெரிக்க பொருளாதாரம் 2019 இல் 2.3% ஆக வளர்ச்சியடைந்தது. ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி ஒதுக்கு பாரிய வரிக் குறைப்புக்களுடன் வட்டி வீதங்களை 2019 இல் மூன்று முறை குறைத்தது. சீனாவில், உள்நாட்டு தேவையை மென்மையாக்கம் மற்றும் வர்த்தக பதட்ட அதிகரிப்புக்கள் இடையே வளர்ச்சி 6.1% ஆகக் குறைவடைந்தது. அரசாங்கம் ஒரு வசதியான நாணயக் கொள்கையைப் பின்பற்றி, வரிக் குறைப்புக்கள் மற்றும் பொது முதலீட்டு செலவினங்களுக்கு உள்ளாட்சி அரசாங்கங்களுக்கான ஆதரவு உள்ளிட்ட நிதி உதவிகளை வழங்கியது.

யூரோ பிராந்தியத்தில் பொருளாதார செயற்பாடுகள் கணிசமாக மோசமடைந்தது. பல பொருளாதாரங்கள் மந்தநிலையின் விளிம்பில் இருந்தன, ஜேர்மனிய தொழிற்துறையில் குறிப்பாக பலவீனம் ஏற்பட்டதால், ஆசியாவிலிருந்தாக கேள்வி குறைவடைந்து, கார் உற்பத்திக்கு இடையூறு ஏற்பட்டது. ஆண்டு முழுவதும் ப்ரெக்ஸிட் தொடர்பான நிச்சயமற்ற தன்மையும் வளர்ச்சிக்குத் தடை போட்டது. ஐரோப்பிய மத்திய வங்கி (ECB) அதன் கொள்கை வீதத்தை எதிர்மறையான எல்லைக்குள் ஆழமாகத் தள்ளி, அளவு தளர்த்தலை மீள ஆரம்பித்து வங்கிகளுக்கு மலிவான கடனை வழங்குவதன் மூலம் பண ஊக்கத்தை வழங்கியுள்ளது.



## உலகளாவிய தளர்வான நிதி மற்றும் பணக்கொள்கை

வளர்ச்சி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதால், பல பொருளாதாரங்களில் முக்கிய மத்திய வங்கிகள் நாணயக் கொள்கைகளை தளர்த்த, வட்டி வீதங்கள் கடந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத குறைந்த அளவினை எட்டின. வரிக் குறைப்பு மற்றும் பொது முதலீட்டு செலவினங்களுக்கு உள்நாட்டு அரசாங்கங்களுக்கான ஆதரவு உள்ளிட்ட நிதிசார் ஆதரவை அரசாங்கங்கள் முடுக்கிவிட்டன. ஐக்கிய அமெரிக்காவில், 2015 மற்றும் 2018 க்கு இடையிலான தொடர்ச்சியான ஒன்பது உயர்வுகளுக்குப் பின், சமஷ்டி ஒதுக்கு அதன் இலக்கு வட்டி விகிதத்தை 2018 டிசம்பரில் 2.50% ஆக இருந்து 2019 ஆம் ஆண்டில் 1.75% ஆகக் குறைத்தது. ஐரோப்பிய மத்திய வங்கி (ECB) அதன் வைப்பு வீதத்தை செப்டம்பர் 2019 இல் -0.50% ஆக வரலாற்றில் குறைந்த அளவிற்குக் குறைத்தது. ஜப்பான் வங்கியின் வைப்பு வீதம் பிப்ரவரி 2016 முதல் -0.10% ஆக உள்ளது. இத்தகைய குறைந்த விகிதங்கள் வங்கி முறைமைகளின் பொருத்தமான தன்மை குறித்து கவலைகளை எழுப்புகின்றன.

## பாரிய உலகளாவிய கடன்

வளர்ந்த அல்லது வளர்முக நாடுகள் என்ற வேறுபாடின்றி, உலகளாவிய கடன் 2018 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 230% என்ற உயர் மட்டத்தை எட்டி, மேலும் வளர்ந்து, (உலக வங்கி: சிறப்பு அறிக்கை) நாடுகளை எந்த அதிர்ச்சியும் குறிப்பாக பாதிப்புக்குள்ளாக்குகிறது.

## பொருட்கள் சந்தை மற்றும் விலைகள்

எண்ணெய் விலைகள் 2019 ஆம் ஆண்டில் சராசரியாக 61/bbl ருளுனு ஆக இருந்தன, இது 2018 ஆம் ஆண்டிலிருந்து 10% குறைந்துள்ளது, இது பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) மற்றும் அதன் பங்காளர்களால் குறைக்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் ஈரான், சவூதி அரேபியா மற்றும் வெனிசுலாவில் உற்பத்தி தடைகள் ஆகியவற்றால் குறைக்கப்படுகிறது. புவிசார் அரசியல் மற்றும் உள்நாட்டு காரணிகள். இதேபோல், பெரும்பாலான அடிப்படை உலோகங்களின் விலைகள் 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் பலவீனமடைந்துள்ளன, இது உலகளாவிய வளர்ச்சி மற்றும் வர்த்தக பதட்டங்களை பலவீனப்படுத்தியது. பெரும்பாலான பொருட்களின் விலைகள் 2019 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தன, இது முக்கியமாக வளர்ச்சிக் கண்ணோட்டத்தின் சரிவை பிரதிபலிக்கிறது-குறிப்பாக வளர்ந்து வரும் மற்றும் வளரும் பொருளாதாரங்கள் (EMDE), அவை பொருட்களின் தேவைக்கு அதிக வருமான நெகிழ்ச்சித்தன்மையைக் கொண்டிருக்கின்றன.

பெரும்பாலான அடிப்படை உலோகங்களின் விலைகள் 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் பலவீனமடைந்துள்ளன, இது அடிப்படையில் பலவீனமான உலகளாவிய வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. வர்த்தக பதட்டங்கள், மேம்பட்ட வானிலை காரணமாக 2019 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் விவசாய விலைகள் சரிந்தன, இது தானியங்களுக்கான பங்கு அளவை உயர்த்தியது. (ஆதாரம்: உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள்: உலக வங்கி, ஜனவரி 2020).

## புவிசார் அரசியல் காலநிலை

புவிசார் அரசியல் இடர்கள் உலகளவில் மற்றும் பல பிராந்தியங்களில் கடுமையாக உள்ளன. ஆழ்ந்த அரசியல் விளைவுகள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை சேதப்படுத்தியது மற்றும் செழிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படை நிலைமைகளான அரசியல் ஸ்திரத்தன்மைக்கு இடையூறாக அமைந்தது. அமெரிக்க அரசியல் நிறுவனங்களுக்குள் ஸ்திரமின்மை, ஐரோப்பிய ஒன்றிய உடைவு, உலகளாவிய கூட்டணிகளை மாற்றுவது மற்றும் ஜனரஞ்சக மற்றும் தேசியவாத இயக்கங்கள் மீதான பிராந்திய அதிகார அரசியல் ஆகியவை 2019 ஆம் ஆண்டில் நிலவிய அரசியல் சூழலின் உந்துதல்களாகும்.

செப்டம்பர் நடுப்பகுதியில் சவூதி எண்ணெய் உற்பத்தியில் ஏற்பட்ட இடையூறு செப்டம்பர் நடுப்பகுதியில் புதுப்பிக்கப்பட்ட பதட்டங்களுக்கான சாத்தியத்தை எடுத்துக்காட்டுகிறது. மத்திய கிழக்கு. புவிசார் அரசியல் கவலைகளுக்கு மத்தியில், எண்ணெய் உற்பத்தியில் தொடர்ச்சியான இடையூறு எரிசக்தி விலையை அதிகரிக்கக்கூடும், இது பாதிக்கப்பட்ட வழங்குனர்கள் மற்றும் பொருட்கள் இறக்குமதியாளர்களுக்கு தீங்கு விளைவிக்கும். கூடுதலாக, கிழக்கு ஐரோப்பாவிலும் தெற்காசியாவிலும் மோதல்கள் அதிகரித்தால், அதனுடன் தொடர்புடைய பிராந்தியங்களில் வளர்ச்சிக்கு முக்கியமான விளைவுகள் ஏற்படக்கூடும்.

## சமூக எழுச்சி

சமத்துவமின்மையால் உந்தப்படும் சமூக எழுச்சி வளர்ச்சியைத் தடுப்பதுடன். நாடுகளின் பொருளாதார அடிப்படைகளையும் ஸ்திரத் தன்மையையும் சேதப்படுத்துகிறது. அமைதியின்மை செயற்பாட்டை சீர்குலைக்கும் மற்றும் உட்கட்டமைப்பை சேதப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது. பதட்டங்களைத் தணிக்க முயற்சிக்கும் அரசாங்கங்களுக்கு இது நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகளை மிகவும் சவாலாக மாற்றக்கூடும்.

சமத்துவமின்மை, மெதுவான வளர்ச்சி, ஆட்சி மற்றும் பொருளாதாரக் கொள்கை குறித்த அதிருப்தி காரணமாக பல்வேறு பிராந்திய நாடுகளில் சமூக அமைதியின்மை அதிகரித்து வருகிறது. பிரேசில், சிலி, பிரான்ஸ், ஹாங்காங், லெபனான், ஸ்பெயின் மற்றும் பிற நாடுகளில் 2019 ஆம் ஆண்டில் தொடர்ச்சியான காலப்பகுதிகளில் அமைதியின்மை நிலவிவந்துள்ளது.

## பருவநிலை மாற்றம்

காலநிலை மாற்றம், வானிலை தொடர்பான பேரழிவுகளின் அதிகரித்த எண்ணிக்கையிலான மற்றும் கடுமைத் தன்மைமிக்க காரணி, ஏற்கனவே நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டுமல்லாமல், சுகாதார மற்றும் பொருளாதார விளைவுகளுக்கு ஆபத்தை விளைவிக்கிறது. காலநிலை மாற்றம் கடுமையான வானிலை நிலைமைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், சில பிராந்தியங்களில் விவசாய உற்பத்தித் திறனைக் குறைக்கிறது. இதேபோல், பெரிய கடலோர மக்கள் தொகை கொண்ட பகுதிகள் தீவிர வானிலையிலிருந்து மட்டுமல்ல, கடல் மட்ட உயர்வு அபாயத்திலும் உள்ளன. வெப்பமண்டல புயல்கள், வெள்ளம், வெப்ப அலைகள், வறட்சி மற்றும் காட்டுத் தீ போன்ற வானிலை தொடர்பான பேரழிவுகள் சமீபத்திய ஆண்டுகளில் பல பிராந்தியங்களில் கடுமையான மனித வள அழிவுகளையும் வாழ்வாதார இழப்பையும் விதித்துள்ளன. எல்லை தாண்டிய இடம்பெயர்வு அல்லது நிதி அழுத்தத்தின் மூலம் நேரடி விளைவுகளை இன்னும் உணராத பிற பகுதிகளுக்கு இது சவால்களை ஏற்படுத்தக்கூடும். இவ்வாறான போக்குகளின் தொடர்ச்சியானது அதிகமான நாடுகளில் இன்னும் பெரிய இழப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

## கண்ணோட்டம்

கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட பலவீனமான வர்த்தகம் மற்றும் முதலீடுகளின் மத்தியில் நெருக்கடிக்கு பிந்திய குறைந்த 2.3% இல் இருந்து மீட்சிபெற்று, உலகளாவிய வளர்ச்சி 2020 ஆம் ஆண்டில் 2.5% ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஆதாரம்: உலக வங்கியின் உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள், ஜனவரி 2020). இருப்பினும் 2019 ஆம் ஆண்டில் 2.9% என மதிப்பிட்ட, சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீடுகளின் படி (ஆதாரம்: உலக பொருளாதாரக் கண்ணோட்டம், ஜனவரி 2020), உலகளாவிய வளர்ச்சி, 2020 ஆம் ஆண்டில் 3.3% ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 3.4% ஆகவும் அதிகரிக்கும் என்று கணிக்கப்படுகிறது.

சீனாவும் வளர்ந்த பொருளாதாரங்களும் அவற்றின் சாத்தியமான வளர்ச்சி விகிதங்களை நோக்கி படிப்படியாக நகரும் அதே வேளை ஒப்பீட்டளவில் வலுவான செயற்திறனைப் பேணி வளர்ந்து வரும் சந்தை பொருளாதாரங்கள் தங்கள் ஆரோக்கியத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் மேம்பட்ட மற்றும் வளர்ந்து வரும் சந்தை பொருளாதாரங்களில் கணிசமான பணத் தளர்த்தலின் விளைவுகள் 2020 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தின் ஊடாக தொடர்ந்து செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டுக் கேள்வியின் மீட்சியை பிரதிபலிக்கும் மற்றும் குறிப்பாக முதலீடு, அத்துடன் வாகன மற்றும் தொழிநுட்பத் துறைகளிலான சில தற்காலிக பின்னடைவுகளின் மறைவு ஆகியவற்றில் பிரதிபலிக்கும் உலகளாவிய மீட்சி, வர்த்தக வளர்ச்சியில் ஒரு முன்னேற்றத்துடன் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முடிவுகள் அமெரிக்க-சீனா வர்த்தக பதட்டங்களில் மேலும் அதிகரிப்பதைத் தவிர்ப்பது, ஒரு ஒப்பந்தமில்லாத பிரெக்ஸிட்டைத் தவிர்ப்பது, சமூக அமைதியின்மை மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களினால் கொண்டு வரும் பொருளாதார மாற்றங்களை தொடர்ந்தும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றை பொறுத்தவையாகும்.

அதிகரித்துவரும் புவிசார் அரசியல் பதட்டங்கள், குறிப்பாக அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான, உலகளாவிய எண்ணெய் விநியோகத்தை சீர்குலைக்கும், உணர்வை புண்படுத்தக்கூடும், ஏற்கனவே உள்ள தற்காலிக வணிக முதலீட்டை பலவீனப்படுத்தக்கூடும். மேலும், பல நாடுகளில் சமூக அமைதியின்மை தீவிரப்படுவது செயற்பாட்டை சீர்குலைக்கும், சீர்திருத்த முயற்சிகளை சிக்கலாக்கும் அத்துடன் உணர்வை பலவீனப்படுத்தி, திட்டமிடப்பட்டதை விட வளர்ச்சியை குறைக்கும்.

### இலங்கைப் பொருளாதாரத்திற்கான தாக்கங்கள்:

- உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி இலங்கையின் வர்த்தகம், சுற்றுலா மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் பணம் அனுப்பலை பாதிக்கும்
- இலங்கையின் வர்த்தக பங்காளிகளின் வீழ்ச்சி பொருளாதாரம் மற்ற நாடுகளுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ள அளவிற்கு குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும். இது ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் முதலீடுகளை பாதிக்கலாம்
- உலகளாவிய முதன்மை பொருட்களின் விலைகள் எப்போதும் இலங்கையில் பணவீக்கத்தை பாதித்தன, அதே நேரத்தில் பணவீக்கம் மற்றும் மறுகொள்வனவு வீதமும் இதே மாதிரியைப் பின்பற்றியது ஆகும்
- இது இலங்கையின் எரிசக்தி இறக்குமதியை கணிசமாக அதிகரிப்பதுடன், நாட்டின் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள சென்மதி நிலுவை மற்றும் அந்நிய செலாவணி இருப்புக்கள் மீது கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தும்
- நாட்டின் பொருளாதார அடிப்படைகளில் ஏற்படும் மாற்றங்கள் இலங்கையின் ரூபாயை மதிப்பிழக்க/மதிப்பேற வைக்கும்
- நாட்டின் பொருளாதார நிலைமைகளை வலுப்படுத்துவது அல்லது பலவீனப்படுத்துவது நிதி உணர்வுகளைத் தூண்டும், பாதுகாப்பான சொத்துக்களை நோக்கி முதலீட்டுத் தொகுதிகளை மீள் ஒதுக்கீடு மற்றும் நிதிச் சந்தைகளில் முதலீடுகளை பாதிக்கும் (வட்டி விகித வேறுபாடுகள் இலங்கைக்கு வெளிநாட்டுப் பண வருகையை தீர்மானிக்கிறது)
- நிதிச் சந்தைகள் மற்றும் நாணய மாற்று வீதத் தளம்பல்கள் ஆகியவை வெளிநாட்டு கடன் வாங்குதல், வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் இறக்குமதி செய்யும் திறன் ஆகியவற்றை பாதிக்கின்றன
- வர்த்தக பொருளாதாரத்தில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இடையூறுகள் விவசாய இறக்குமதியின் அளவு மற்றும் பெறுமதியைப் பாதித்து இறுதியில் நாட்டின் விலை நிலைமைகளை பாதிக்கலாம்
- அமெரிக்காவிற்கும் அதன் வர்த்தக பங்காளிகளுக்கும் இடையிலான அதிக தீர்வைத் தடைகள் வணிக உணர்வுகளை பாதித்து ஒன்றுதிரட்டும்
- பல பொருளாதாரங்களில் சுழற்சி மற்றும் கட்டமைப்பு மந்தநிலை இறுதியில் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை பாதிக்கிறது
- தேசத்திற்குள் அரசியல் மாற்றங்கள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை பாதிக்கக்கூடும்

[இலங்கை பொருளாதாரத்தில் உலகளாவிய பொருளாதார விருத்திகளின் தாக்கம் மற்றும் 2019 ஆம் ஆண்டில் அதன் செயற்திறன் ஆகியவை அடுத்த அத்தியாயத்தில் “இலங்கை பொருளாதாரம்” பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 25 முதல் 35 வரையில் பார்வையிடுக]

## இலங்கைப் பொருளாதாரம்

**ஜனவரி 2019 -** புதிய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப, தற்போதுள்ள வடிவங்களைப் பதிலீடு செய்வதற்கான உரிமம் பெற்ற வங்கிகளால் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற வெளிப்படுத்தல்களை வெளியிடுவதில் பின்பற்றப்பட வேண்டிய நிதிக் கூற்றுக்களின் புதிய தொகுப்புக்கள் வெளியிடப்பட்டன.

**மார்ச் 2019 -** உள்நாட்டுக் கொடுப்பனவுகளுக்கான தேசிய விரைவுத் துலங்கல் குறியீடு நியமத்தின் நிறுவுகை - 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் வழங்கல்.

**ஏப்ரல் 2019 -** இலங்கை ரூபாய் வைப்புக்களுக்கான வட்டி விகித உச்ச வரம்பு விதிக்கப்பட்டது

**ஏப்ரல் 2019 -** Basel III கட்டமைப்பின் கீழ் மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளின் நோக்கத்திற்காக சிறிய நடுத்தர நிறுவனங்களை அடையாளம் காண ஒழுங்குமுறை தேவைப்பாடுகள்

**ஏப்ரல் 2019 -** ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்

**ஏப்ரல் 2019 -** மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களை (LC) திறப்பதற்கான கட்டுப்பாடுகள் நீக்கம்

**மே 2019 -** 31 மார்ச் 2020 வரை நிலுவையில் உள்ள கடன் வசதிகள் தொடர்பாக சுற்றுலாத்துறையில் உள்ள தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் தயவுக் காலம் வழங்கப்பட்டது.

**ஜூன் 2019** - மோட்டார் வாகனங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கான கடன் பெறுமதி (LTV) விகிதங்களில் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டலில் திருத்தம் செய்யப்பட்டது



**ஜூன் 2019 -** 2 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள சர்வதேச இறையாண்மை பத்திரம் வழங்கல்

**டிசம்பர் 2019 -** உள்நாட்டு முறைசார் விருத்தி வங்கிகளை (D-SIB) கையாள்வதற்கான புதிய கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டு, சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப மற்றும் புதிய கட்டமைப்பின் அடிப்படையில் உரிமம் பெற்ற நான்கு வங்கிகள் னு-ளுஐடீ களாக நிர்ணயம்.

**நவம்பர் 2019 -** ஜனாதிபதித் தேர்தல்

**நவம்பர் 2019 -** சில கடன் உற்பத்திகளுக்கு (கடனட்டைகள், தற்காலிக வங்கி மேலதிகப் பற்றுக்கள்) வட்டி வீத உச்ச வரம்புகள் விதிக்கப்பட்டன.

**அக்டோபர் 2019 -** இலக்கு தேதியின்படி ரூபாய் மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டன

**செப்டம்பர் 2019 -** இலங்கை ரூபாய் வைப்புக்கான அதிகபட்ச வட்டி விகிதங்கள் இரத்து செய்யப்பட்டன

**செப்டம்பர் 2019 -** பணக் கடன் மற்றும் நுண்நிதி வணிகங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் நாணய சபையினால் முன்மொழியப்பட்ட நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை ஆணைய சட்டம் அங்கீகாரம்

**ஆகஸ்ட் 2019 -** உரிமம் பெற்ற வங்கிகளின் சந்தைப்படுத்தல் நடத்தை மற்றும் திறைசேரி நடவடிக்கைகள் குறித்து வங்கிச் சட்ட வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன

**ஆகஸ்ட் 2019 -** SDFR மற்றும் SLFR முறையே 50 அடிப்படை புள்ளிகள் குறைத்து 7.00% மற்றும் 8.00% ஆக மாற்றப்பட்டன.

**ஜூலை 2019 -** மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4,102 அமெரிக்க டொலர் GNIயுடன் அதிகரித்ததன் விளைவாக இலங்கை உயர் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடாக உயர்த்தப்பட்டது.

## அரசியல் விருத்திகள்

2019 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலும், 2020 ல் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலும் அரசாங்க செயன்முறைகளையும் சட்டமன்ற வினைத்திறனையும் மேம்படுத்துவதோடு, அரசாங்கத்திற்குள் ஆழ்ந்த வேரூன்றிய பிரிவினைவாதத்துடன் தொடர்புடைய நாட்டில் அரசியல் நிச்சயமற்ற தன்மையையும் பெருமளவில் தீர்க்கும். தொடர்ச்சியான அரசியல் மோதல்கள் சமீபத்திய ஆண்டுகளில் கொள்கை வகுப்பதில் பதிலிறுப்பு மற்றும் முற்கணிப்புக்குத் தடையாக உள்ளன, மேலும் குறிப்பாக வணிக நம்பிக்கை, முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி வாய்ப்புகள் ஆகியவற்றில் எடையுள்ளன. சமீபத்திய ஆண்டுகளில் சிவில் சமூகத்தில் பிளவுகளை விரிவாக்குவது, குறிப்பாக இன மற்றும் மத அடிப்படையில் அரசியல் ஸ்திரத்தன்மைக்கான இடரினை அதிகரிக்கிறது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2015 முதல் கீழ்நோக்கி செல்லும் பாதையில் உள்ளதுடன், மேலும் இது 2018 ல் 3.3% உடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் 2.3% ஆக, இது 2001 க்குப் பிறகான மிகக் குறைவான வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது முக்கியமாக மந்தமான பொருளாதார நடவடிக்கைகளுக்குக் காரணமாவதுடன் ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் மோசமான வானிலையால் விவசாயத் துறையின் செயல்திறன் குறைத்தமை என்பனவும் தாக்கம் செலுத்தின.

2018 இன் 4 ஆம் காலாண்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019 இன் 1 ஆம் காலாண்டில் மீட்சி கண்டது. இருப்பினும், ஏப்ரல் 2019 இல் நடந்த ஈஸ்டர் தாக்குதல்கள் சேவைத் துறையில் பேரழிவு தரக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், முந்தைய காலாண்டில் இடம்பெற்ற வேகத்தை குறைத்தது. 2019 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டு காலத்தில், சேவைகள் மற்றும் தொழிற்துறைகள் மீட்பு மற்றும் நவம்பர் 2019 ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்த நேர்மறை உணர்வுகளால் பொருளர்தார நடவடிக்கைகள் மேம்பட்டன. 4,102 அமெரிக்க டொலர் பெறுமதியாக தலா உள்நாட்டு உற்பத்தி அதிகரித்ததன் விளைவாக, தலா தேசிய வருமானம் (GNI) அடிப்படையில் இலங்கை உயர் நடுத்தர வருமான நிலைக்கு உயர்த்தப்பட்டது.

### வங்கித் துறைக்கான தாக்கங்கள்:

- எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சியைக் காட்டிலும் குறைவான வளர்ச்சி மக்களின் நுகர்வு, முதலீடு மற்றும் கொள்வனவு சக்தியைக் குறைக்கிறது, இதன் விளைவாக குறைந்த கடன் மற்றும் வைப்பு வளர்ச்சி ஏற்படுகிறது
- உயர் நடுத்தர வருமான நிலையை அடைவது, அதிகரித்த செலவுகள் மற்றும் இடர்களுடன் இலங்கையை அதிக வணிக ரீதியாக கடன் பெற வைக்கிறது.
- குறிப்பிட்ட துறைகளுக்கு (நிர்மாணம், சுற்றுலா மற்றும் வேளாண்மை) கடன் வெளிப்பாடு திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் வங்கி மற்றும் நிதித் துறையின் அதிகரித்து வரும் தொழிற்படாக் கடன்கள் ஆகியவற்றில் தாக்கம் புரிகிறது.

  **(மேலதிக வாசிப்புக்கு இந்த அத்தியாயத்தின், வங்கித் துறை கண்ணோட்டத்தின் கீழ் உள்ள “கடன் வளர்ச்சி” மற்றும் “கடன்கள் மற்றும் முற்பணங்கள்” ஆகிய பிரிவுகளைப் பார்வையிடுக)**
- முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது சொத்துத் தளம் மெதுவான வேகத்தில் தொடர்ந்து வளர்ந்து வந்தது.
- வணிக நிலைமைகளை மேம்படுத்த கொள்கை ஊக்கிகள் தேவைப்படுகிறது.

  **(மேலும் குறிப்புக்களுக்கு, வட்டி வீதங்கள், திரவத்தன்மை மற்றும் பணச் சந்தை மற்றும் அரசு பத்திரங்கள் பிரிவைப் பார்வையிடுக)**

## பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி (CCPI) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI) ஆகிய இரண்டினாலும் அளவிடப்பட்ட பணவீக்கம் 2019 ஆம் ஆண்டில் 4.8% மற்றும் 6.2% ஆக முறையே ஒற்றைத் தானத்தில் காணப்பட்டது. இது முக்கியமாக பாதகமான காலநிலைகளினால் இடம்பெற்ற உணவு விலைகளின் தளம்பல் மற்றும் தீர்வை மீளாய்வுகள் மற்றும் அதிகரித்த வீட்டு வாடகைகளின் விளைவு ஆகியவற்றால் ஏற்பட்டது. ஒரே தடவை சீராக்கத்தின் தாக்கம் வீழ்ச்சியடைந்த கேள்வியுடன் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது தொடர்ந்து இருக்கும் 2020 இல விரும்பப்பட்ட வரம்பு 4% - 6% இனுள் காணப்படும். ஆயினும் கூட, நடுத்தர காலப்பகுதியில், பணவீக்கம் சரியான நேரத்தில் பணக் கொள்கைகளால் ஆதரவளிக்கப்பட்டு விரும்பிய வரம்பிற்குள் பராமரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வீழ்ச்சியடைந்த பொருளாதார நடவடிக்கைகளை பிரதிபலிக்கும் வகையில், வேலையின்மை வீதம் 2018 இல் 4.4% ஆக இருந்து, 2019 இல் 4.8% ஆக அதிகரித்தது.

### வங்கித் துறைக்கான தாக்கங்கள்:

- பணவீக்கம் பொது மக்களின் கொள்வனவு சக்தியையும் வங்கித் துறையின் ஊதியங்கள் மற்றும் சம்பளத்தையும் பாதிக்கிறது.
- எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றங்கள் போக்குவரத்து செலவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்
- தங்கத்தின் விலையில் அதிகரிப்பு அடகுத் தொகுதியை விரிவுபடுத்தியதுடன் அடகு வணிகத்திலிருந்து கிடைக்கும் வருவாயையும் அதிகரித்தது
- நிலவும் பணவீக்க வீதம் பெரும்பாலும் இலங்கை மத்திய வங்கி (CBSL) மேற்கொள்ளும் பணக் கொள்கை முடிவுகளைத் தீர்மானிக்கிறது.

## வட்டி விகிதங்கள்

மத்திய வங்கி 2018 ஆம் ஆண்டில் தாராள நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு நகர்ந்தது. இது பெருமளவில் உலகளாவிய தாராள நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு அமைவானதாகவே இருந்ததுடன், அதே நேரத்தில் உள்நாட்டு நிலைமைகளான பொருளாதார வளர்ச்சி, வீழ்ச்சியடைந்த தனியார் துறைக் கடன் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து முடங்கிய பணவீக்க எதிர்பார்ப்புகள் போன்றவை மத்திய வங்கியை ஓர் பணவியல் தூண்டுதலை வழங்கும் இக் கொள்கைக்குத் தூண்டின. பொருளாதாரத்தில் நிலவிய வைப்பு மற்றும் கடன் உற்பத்திகளுக்கான அதிகரித்த மெய் வட்டி வீதங்களைக் கருத்தில் கொண்டு, நிதி நிறுவனங்களின் நிதிச் செலவினங்களைக் குறைப்பதற்கும், பணக் கொள்கை பரிமாற்றத்தை விரைவுபடுத்துவதற்கும் நிதி நிறுவனங்களின் வைப்பு வீதங்கள் மீதான தற்காலிக உச்ச வரம்புகள் ஏப்ரல் 2019 முதல் அமுல்படுத்தப்பட்டன.

இருப்பினும், வைப்பு வட்டி விகிதங்களில் காணப்பட்ட சரிவுடன் ஒப்பிடும் போது சந்தை கடன் வீதங்கள் கீழ்நோக்கிச்

சீராக்கப்படவில்லை. கடன் வீதங்களுக்கு கொள்கை நடவடிக்கைகளை கடத்துவதில் இந்த தேவையற்ற தொடர்ச்சியான பின்னடைவுகளை நிவர்த்தி செய்வதற்காக, மத்திய வங்கி அனைத்து ரூபாய் மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் நிலைமாற்றுகை செயற்திறனை மேம்படுத்துவதற்காக செப்டம்பர் 2019 இல் கடன் விகிதங்களுக்கு தற்காலிக உச்ச வரம்புகளை விதித்ததுடன், அதே நேரத்தில் உரிமம் பெற்ற வங்கிகளின் மீதான வைப்பு வீத உச்ச வரம்புகளை நீக்குகிறது. இந்த நாணய மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளின் விளைவாக, கடன் விகிதங்களில் கணிசமான குறைப்பு எதிர்பார்க்கப்பட்டது, இது படிப்படியாக கடனுக்கான கேள்வியை அதிகரிக்கும், இதனால் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பங்களிக்கும். இந்த நடவடிக்கைகள் மற்றும் எளிதான நாணய நிலைமைகளின் விளைவாக, சந்தை வட்டி வீதங்கள், குறிப்பாக, சந்தை வைப்பு வீதங்கள் மற்றும் அரசாங்க பத்திரங்களின் திரும்பல் ஆகியவை கீழ்நோக்கி சீராக்கம் செய்யப்படத் தொடங்கின.

### வங்கித் துறைக்கான தாக்கங்கள்:

- இலங்கை ரூபாய் வைப்புக்களுக்கான உச்ச வட்டி வீதங்கள் (2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மீளப் பெறப்பட்டது) மற்றும் கடன் வழங்குதல் ஆகியவை வங்கிகளுக்கு அதன் வைப்பு உற்பத்திகளையும் கடன் உற்பத்திகளையும் மீண்டும் மேற்கொள்ள வைக்கிறது.
- வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்களின் அடிப்படையில் தொழிற்துறையில் உள்ள நிறுவனங்களிடையே உள்ள போட்டியை நீக்குகிறது.
- குறைவான நிதிக் கிரயங்கள் மூலம் நிதி மற்றும் வங்கித் துறையின் இலாபத்தை மேம்படுத்தல்

  **(வங்கித் துறையின் கண்ணோட்டத்தின் கீழ் "கடன்கள் மற்றும் முன்னேற்றங்கள்" மற்றும் "இலாபத்தன்மை" பிரிவுகளுடன் இணைத்து இதைப் படியுங்கள்)**

### திரவத்தன்மை மற்றும் பணச் சந்தை வீதங்கள்

சந்தையில் திரவத்தன்மை நிலையற்று இருந்ததுடன், மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் கலப்புத் திரவநிலைப் பதிவு செய்து இருந்தது. 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும், 2019 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் திரவத்தன்மை பற்றாக்குறை நிலவியது. சந்தையில் திரவத்தன்மையை வெளியிடுவதற்காக, மத்திய வங்கி 2019 மார்ச் மாத இறுதியில் சட்டநியதி ஒதுக்கு விகிதத்தை (SRR) 100 அடிப்படை புள்ளிகளால் குறைத்து, கொள்கை அணுகையினை ஒட்டுமொத்தமாக 100 புள்ளிகளால் முறையே மே மற்றும் ஆகஸ்ட் 2019 இல் குறைத்தது. ஈஸ்டர் தாக்குதல்களைத் தொடர்ந்து நிலவிய பலவீனமான கடன் கேள்வியும் திரவத்தன்மையை மீட்டெடுக்க உதவியது. மேலும், மத்திய வங்கி நிலைமாறு மீள் கொள்வனவு ஏலம் ஒன்றை நடாத்தியதுடன், அமெரிக்க டொலர் 2.4 பில்லியன் மற்றும் 2.0 பில்லியன் ஆன சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் (ISB) மார்ச் மற்றும் ஜூன் மாத காலப்பகுதிகளில் வெற்றிகரமாக வழங்கபட்டிருந்ததோடு, சர்வதேச நாணய நிதியத்தால் (IMF) திரவத்தன்மைத்தையைப் பேணுவதற்காக விஸ்தரிக்கப்பட்ட நிதி வசதி (EFF) 3.27 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டது. டிசம்பர் 2019 இறுதிக்குள் மத்திய வங்கி சுமார் ரூ. 47.7 பில்லியன் திறைசேரிப் பத்திரங்களை கொள்வனவு செய்ததன் மூலம் உள்நாட்டு பணச் சந்தைக்கு நிதி வழங்கியது. இந்த நடவடிக்கைகளின் விளைவாக திரவத்தன்மை மிகை ரூபா 37.8 பில்லியனாக 2019 இறுதியில் காணப்பட்டது.

மத்திய வங்கி திரவத்தன்மை உட்பாய்ச்சல் மற்றும் மத்திய வங்கி எடுத்த பிற கொள்கை நடவடிக்கைகளின் பின்புறத்தில் பணச் சந்தை வட்டி விகிதங்களை பிரதிபலிக்கும் சராசரி எடையுள்ள அழைப்பு பணம் வீதம் (AWCMR) மற்றும் சராசரி எடையுள்ள மீள் கொள்வனவு வீதம் (AWRR) படிப்படியாக குறைந்து வருகின்றன. பணச் சந்தையில் வட்டி விகிதங்கள் குறைந்து வருவது, குறைந்து வரும் திறைசேரி உண்டியலில் பிரதிபலித்தது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில், AWCMR மற்றும் AWRR முறையே 7.45% மற்றும் 7.53% ஆக இருந்தது.

### அரச பத்திரங்கள்

இரண்டாம் நிலை சந்தையில் வெளிநாட்டு இருப்பு வீழ்ச்சியடைந்த போதிலும், முதன்மை சந்தையில் உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து வலுவான கேள்வியின் பின்னணியில், அரச பத்திர சந்தை ஆண்டுக் காலத்தில் (முக மதிப்பு அடிப்படையில்) விரிவடைந்தது.

அரச பத்திரங்களில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை வருமானம் குறிப்பிடத்தக்க சரிவைக் கண்டதுடன் வலுவான கொள்வனவு ஆர்வத்தால் ஆதரவளிக்கப்பட்ட ஆண்டின் பெரும்பகுதிக்கு வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக, வங்கிகளிடமிருந்து மிகைக் கேள்வி முதன்மை சந்தையில் காணப்பட்டது, ஏனெனில் அவை கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான கேள்வி குறைந்து வருவதைத் தொடர்ந்து இடரற்ற அரச பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான அதிகளவு நிதிகளைத் திருப்பிவிட்டிருந்தன. இருப்பினும், உலகளாவிய சந்தை நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை மோசமடைந்தமை வெளிநாட்டு முதலீட்டாளர்களை அரசாங்கப் பத்திரங்களின் இரண்டாம் நிலை சந்தையிலிருந்து தங்கள் முதலீடுகளை வெளியேற்ற நிர்ப்பந்தித்தது.

2019 ஆண்டில் அரச பத்திரங்களில் இருந்து நிகர வெளியேற்றம் 333.7 மில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆக இருந்தது. திறைசேரி பத்திரங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் நிலுவையில் உள்ள வெளிநாட்டு இருப்பு, 2018 இல் இருந்த ரூ. 158.6 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 103.9 பில்லியன் ஆக 34.5% குறைவடைந்தது.

### திறைசேரி முறிகள் சந்தை

திறைசேரி முறிகள் சந்தை செப்டம்பர் 2018 இல் ரூபா 4,007 பில்லியனில் இருந்து ரூபா 4,550 பில்லியனாக 13.5% வருடாந்த வளர்ச்சியை (முகப் பெறுமதி அடிப்படையில்) பதிவு செய்ததுடன், முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுமிடத்து 6.2% வளர்ச்சியுடன் 2019 செப்டம்பர் இறுதியில் வளர்ச்சியைப் பதிவு செய்தது. உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து, குறிப்பாக வங்கித் துறையினரிடமிருந்து அதிகமான கேள்வி, திறைசேரி முறிகளுக்கான முதன்மை சந்தையில் மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் காணப்பட்டது, இது திறைசேரி முறிகள் சந்தையின் விரிவாக்கத்திற்கு பங்களித்தது.

முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தையில் திறைசேரி முறிகளின் வருமானம் 2019 ஆம் ஆண்டில் கணிசமாகக் குறைந்தது. ஆயினும், அரசாங்கம் அந்நியச் செலாவணியைக் குறிக்கும் கடன் பத்திரங்களை (SLDB மற்றும் ISB) வழங்கியது. உள்நாட்டு சந்தை திரவத்தன்மை இரண்டாம் பத்திர சந்தை வருமான விகிதங்களை பாதித்ததுடன், 2018 ஆம் ஆண்டின் இறுதியில் திரும்பலுடன் ஒப்பிடுகையில், வட்டி விகிதங்களின் நீண்டகால இயக்கத்தை வெளிப்படுத்தும் திறைசேரி முறிகளுக்கான இரண்டாம் நிலை சந்தையின் ஐந்தாண்டு வருமானம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து குறைந்து வந்தது. இது முதலீட்டாளர்கள் மத்தியிலான நீண்ட கால முதிர்ச்சிக்கான குறைந்த இயலளவை பிரதிபலிக்கிறது.

2 ஆண்டு, 5 ஆண்டு மற்றும் 10 ஆண்டு திறைசேரி முறிகளிலான இரண்டாம் நிலை சந்தை வருமானம் 2019 இறுதிக்குள் முறையே 256 bps, 191 bps மற்றும் 182 bps 8.6%, 9.67% மற்றும் 10.05% ஆகக் குறைந்துள்ளது.

**திறைசேரி உண்டியல் சந்தை**

வட்டி வீத நகர்வைக் குறைப்பதற்கான பணக் கொள்கை நடவடிக்கைகளைத் தொடர்ந்து திறைசேரி உண்டியல்களுக்கான முதன்மை சந்தையில் உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து ஒரு வலுவான கேள்வி காணப்பட்டது.

முதன்மை சந்தை மேம்பாடுகளுக்கு ஏற்ப, திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாம் நிலை சந்தைக்கான விளைவு 2019 தொடக்கத்தில் இருந்து கணிசமாகக் குறைந்ததுடன், 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களுக்கு பொருந்தக்கூடிய விளைவு விகிதங்கள் 215 bps, 208 bps மற்றும் 255 ஆக முறையே 7.25%, 7.88% மற்றும் 8.36% ஆக 2019 ஆம் ஆண்டு இறுதிக்குள் காணப்பட்டது. அதன்படி 2019 ஆம் ஆண்டில் 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களில் முதன்மை சந்தை விளைவு 250, 197 மற்றும் 275 அடிப்படை புள்ளிகள் குறைந்து முறையே 7.51%, 8.02% மற்றும் 8.45% ஆக இருந்தது.

நாட்டின் குறிப்பிட்ட முன்னேற்றங்களுடன் உலகளாவிய சந்தை நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் திறைசேரி உண்டியல்களில் அந்நிய முதலீடுகள் 2015 முதல் 2019 அக்டோபர் வரை தொடர்ந்து குறைந்து வருகின்றன.

## வங்கித் துறை மீதான தாக்கங்கள்:

- அரச பத்திரங்களுக்கான சந்தையில் நிலவும் திரவத்தன்மை மற்றும் வட்டி விகிதங்கள் நிலையான வருமான பத்திரங்களிலான வள ஒதுக்கீடு/ முதலீடுகளை பாதிக்கிறது.
- மூலதன ஆதாயங்கள்/இழப்புகள் மற்றும் சந்தை ஆதாயங்கள்/ இழப்புகளுக்கான குறி ஆகியவை சாதனங்களின் விலை மற்றும் விளைவிலிருந்து வெளிப்படுகின்றன.
- நிதிச் சாதனங்களின் தன்மை (திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், கடன் பத்திரங்கள், நம்பிக்கை சான்றிதழ்கள் மற்றும் SLDB கள்) மற்றும் அந்த பத்திரங்களில் செய்யப்படும் முதலீட்டின் இடர் எடையுள்ள சொத்துக்களின் அளவு, மூலதன போதுமான தன்மை மற்றும் துறையின் நிலையான நிதி நிலையை தீர்மானிக்கிறது.
- பணச் சந்தை கருவிகள் திரவத்தன்மை நிலையை பலப்படுத்துகின்றன.

- வாடிக்கையாளர் நம்பிக்கையை வலுப்படுத்தவும், எங்கள் வங்கியை வேறுபடுத்தவும் இணையவழிப் பாதுகாப்பு தந்திரோபாயத்தை செயற்படுத்தல்.

## பொருண்மை விடயங்கள்



## கண்ணோட்டம்

இலங்கை மத்திய வங்கி 2020 ஆம் ஆண்டை இலங்கையில் எண்ணியல் பரிவர்த்தனை ஆண்டாக அறிவித்துள்ளது. இந்த முயற்சியின் முக்கிய நோக்கம் எண்ணியல் கொடுப்பனவு முறைகளை பிரபலப்படுத்துவதும் குறைந்த பணமுள்ள சமூகத்தை மேம்படுத்துவதும் ஆகும். எண்ணியல் கொடுப்பனவுப் பிரயோகங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பது புதுமைகளில் நேர்க்கணியத் தாக்கத்தை உருவாக்கும், போட்டித்தன்மையை உயர்த்த உதவும், இதன் மூலம் நிதி சேவைகளின் வளர்ச்சி அதிக அளவில் எண்ணியல் கொடுப்பனவு கட்டண நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வங்கி லங்கா கியு ஆர் குறியீடு (Lanka QR Code) மற்றும் ∴பின்டெக் ஒழுங்குமுறை சாண்ட்பாக்ஸ் (Fintech Regulatory Sandbox) மற்றும் தொகுதிச் சங்கிலி அடிப்படையிலான பகிரப்பட்ட வாடிக்கையாளரை அறிதல் (KYC) தீர்வு மற்றும் திறந்த வங்கி திட்டம் போன்ற பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

## நிலைமாறும் சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்

### முக்கிய இயக்கிகள் மற்றும் அம்சங்கள்

- கடுமையான சுற்றுச்சூழல் பேரழிவுகளை விளைவாக ஏற்படுத்தும் மோசமான வானிலை.
- காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாப்பதற்குமான உலகளாவிய அர்ப்பணிப்பு.
- பரந்த அளவிலான சமூக, சுற்றுச்சூழல் மற்றும் ஆளுமை தொடர்பில் வளர்ந்து வரும் ஒழுங்குமுறை மற்றும் அறிக்கையிடல் தேவைகள்
- முதலீட்டு தீர்மானங்களில் நிறுவனங்களின் நிலைத்தன்மை தொடர்பான கரிசனைகளில் அதிகரித்த அக்கறையுள்ள தரப்பினர் கவனம்.
- செயற்பாட்டை அதிகரித்தல் மற்றும் சமூகத்தின் சமத்துவமின்மைகளின் விரிவாக்கம்.
- காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை துல்லியமாக கணிக்க கிடைக்கக்கூடிய தரவுகளின் சிக்கலான தன்மை.
- ஆளுகை நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர்களுடன் நேர்மையாகவும், வெளிப்படையாகவும், நியாயமாகவும் நடந்து கொள்ள வங்கிகளின் தேவைப்பாடு
- பொறுப்பான நிதியாளர்களாக வங்கிகளுக்கான கேள்வி அதிகரிப்பு.
- கூட்டுவணிக வெளிப்படுத்தல்களில் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கான தேவை.

### எமது பெறுமதிகள் மீதான தாக்கம்

சமூக, ஆளுமை மற்றும் சுற்றுச்சூழல் விடயங்களுக்கான வளர்ந்து வரும் கரிசனைகள் வங்கிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் தொழிற்பாட்டு சூழலைப் பாதிக்கின்றன. காலநிலை மாற்றம் சமூகங்களின் நிலைபேறான தன்மைக்கு கடுமையான சவால்களை ஏற்படுத்துகிறது, இதன் விளைவாக குறிப்பிடத்தக்க கடன் இடர்த் தாக்கங்கள் ஏற்படுகின்றன. வங்கிகள் தங்கள் உற்பத்தி வழங்கல், முதலீட்டுத் தீர்மானங்கள் மற்றும் பற்றாக்குறை வளங்களைப் பயன்படுத்துவதில் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புடன் இருக்க வேண்டும். நிலையான வணிக நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலமும், அரசாங்கம் வகுத்துள்ள விதிமுறைகளை பின்பற்றுவதன் மூலமும் ஐ.நா. SDG களுடன் வங்கிகள் இணங்குவதற்கு அதிக தேவைப்பாடு உள்ளது. இணக்கத்தின் தோல்வி வங்கியில் பங்குதாரர்களின் நம்பிக்கையைக் குறைத்து, நற்பெயர் இடரை வெளிப்படுத்தும்.

காலநிலை மாற்றம், வளங்களின் பற்றாக்குறை, சுற்றுச்சூழல் முறைமைகளின் பாதுகாப்பு, சமத்துவமின்மை, மனித உரிமைகள் உள்ளிட்ட சமூக மற்றும் சுற்றுச்சூழல் கரிசனைகளுக்கு தீர்வு காண்பது வணிகத் தேவையாகிவிட்டது. எனவே, எங்கள் மதிப்பு உருவாக்கும் மாதிரியுடன் சமூக மற்றும் சுற்றுச்சூழல் கரிசனைகளை நாங்கள் ஒருங்கிணைக்கிறோம், மேலும் நாங்கள் புதுமையான தீர்வுகளைத் தேடுகிறோம், மேலும் எங்கள் பங்குதாரர்களுக்கு நீடித்த மதிப்பை உருவாக்க அர்த்தமுள்ள வியாபாரக் கூட்டுக்களை நாம் உருவாக்குகிறோம். கார்பன் குறைந்த பொருளாதாரமாக மாற்றுவதில் நாங்கள் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறோம்.

### இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

| வாய்ப்புக்கள் | தாக்கம் | | இடர்கள் | தாக்கம் | |
|---|---|---|---|---|---|
| | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் | | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் |
| நிலைபேறான நிதிக்கான கேள்வி அதிகரித்தல், கார்பன் குறைந்த பொருளாதாரத்தை நோக்கி நிதியளிப்பதில் மாற்றம். | ▲ | ▲ | வங்கிகள் தங்கள் வணிகத் தீர்மானங்களில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். | ▲ | ▲ |
| அதிகரித்த வெளிப்படைத்தன்மை வங்கியின் வலுவான நம்பிக்கையையும் புகழையும் உயர்த்தியது. | ▲ | ▲ | ஊழல் மற்றும் வெளிப்படைத்தன்மை இன்மை நற்பெயர் இடர்களுக்கு வழிவகுக்கிறது. | ▲ | ▲ |

| வாய்ப்புக்கள் | தாக்கம் | | இடர்கள் | தாக்கம் | |
|---|---|---|---|---|---|
| | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் | | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் |
| புதிய வணிக மாதிரிகளைப் பின்பற்றுவதற்கான நிதிசார் புத்தாக்கம். | ▲ | ▲ | காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் நேரடியாக வங்கியின் சொத்துக்கள் மற்றும் வணிகத்தின் மூலமாகவும், மறைமுகமாக வாடிக்கையாளர் நடவடிக்கைகள் மூலமாகவும் அதிக செலவுகள் மற்றும் பொருளாதார இழப்புகள் ஏற்படுதல். | ▲ | ▲ |
| கார்பன் குறைந்த பொருளாதாரத்தை பின்பற்ற, நிறுவன வாடிக்கையாளர்கள், வணிகங்கள் மற்றும் தொழில் வல்லுநர்களை ஆதரிக்கும் முதலீடு மற்றும் நிதித் தீர்வுகளின் வளர்ச்சி. | ▲ | ▲ | உற்பத்திகள் மற்றும் சேவைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இல்லாவிட்டால் சந்தை பங்கு இழக்கப்படல். | – | ▲ |
| பசுமைத் தீர்வுகளை மாற்றியமைக்க நுகர்வோருக்கு உதவும் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் விருத்தி. | ▲ | ▲ | இயற்கையின் நிச்சயமற்ற தன்மை மற்றும் கார்பன் குறைந்த பொருளாதாரமாக நிலைமாறுதல். | – | ▲ |
| மூலப்பொருள் மூலங்களில் பசுமை நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் வழங்கல் சங்கிலியுடன் பிற்புலத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துதல். | ▲ | ▲ | பொருளாதாரத்தில் பயனுள்ள முதலீடுகளுக்கான தேவை. | ▲ | ▲ |
| நல்லாட்சி மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலை ஊக்குவிக்க வெளிப்படைத்தன்மைக்கான அழைப்பு விடுத்தல். | ▲ | ▲ | காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் கடன் வாங்குபவர்களின் திரவத்தன்மைகளை குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய வணிகங்களை பாதிக்கின்றன. | ▲ | ▲ |
| | | | சூழல் நிலைமைகளில் உள்ள பாதிப்புகள் பொருளாதார மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மையின் பின்னணியில் சில தொழிற் துறைகளில் வேலை இழப்புக்களை ஏற்படுத்துகின்றன. | ▲ | ▲ |
| | | | இயற்கை பேரழிவுகள் வங்கியின் கடன் வெளிப்பாட்டை அதிகரிக்கும். | ▲ | ▲ |
| அதிகரித்த வெளிப்படைத்தன்மை வங்கியின் வலுவான நம்பிக்கையையும் புகழையும் உயர்த்துதல் | ▲ | ▲ | கார்பன் குறைந்த பொருளாதாரத்திற்கு மாறுவது விரிவான கொள்கை, சட்ட, தொழில்நுட்பம் மற்றும் சந்தை சவால்களை ஏற்படுத்தக்கூடும், இது கடன், தொழிற்பாட்டு மற்றும் நற்பெயர் இடருக்கு வழிவகுக்கும். | ▲ | ▲ |
| | | | பொறுப்பான நிதியுதவிக்கான சமூகக் கோரிக்கையுடன் இணங்கத் தவறினால் கடன் மற்றும் நற்பெயர் இடர்கள் ஏற்படக்கூடும். | – | ▲ |

▲ 2018 முதல் அதிகரித்த வாய்ப்பு  ▲ 2018 முதல் அதிகரித்த இடர்  – 2018 முதல் இடர்/வாய்ப்பு சமமாகவே உள்ளது

▼ 2018 முதல் குறைந்த வாய்ப்பு  ▼ 2018 முதல் குறைந்த இடர்

## எங்கள் அணுகுமுறை மற்றும் செயற்திறன்

- சமூகத்தில் உத்வேகம் மிக்க பங்கு வகிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக சமூகங்களுடன் ஈடுபடுவது மற்றும் சமூக முயற்சிகளை ஆதரித்தல்.
- சமூக சவால்களுக்கு புதிய மற்றும் புதுமையான தீர்வுகளுக்கு பங்களிக்க தொழில் வாதாட்டக் குழுக்களில் பங்கேற்றல்
- மாறும் சுற்றுச்சூழல் காரணிகளால் எங்கள் இடர் சுயவிவரத்தில் ஏற்படும் தாக்கத்திற்கு எதிரான எங்கள் உற்பத்திகள் மற்றும் வாடிக்கையாளர் மதிப்பு முன்மொழிவுகளின் பொருந்தக்கூடிய தன்மை மற்றும் தந்திரோபாய சீரமைப்பு ஆகியவற்றை தொடர்ந்து மதிப்பீடு செய்தல்.
- இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கையைப் பின்பற்றல்.
- பணமோசடி, பயங்கரவாத நிதியுதவி, அனுமதி, இணக்கம், அக்கறை முரண்பாடுகள் மற்றும் ஊழல் உள்ளிட்ட நிதி அல்லாத இடர்கள் குறித்து எங்கள் ஊழியர்களுக்கு கல்வி கற்பித்தல்.
- வங்கியின் நிலைத்தன்மைக் கொள்கை எங்கள் நீண்டகால தந்திரோபாய நோக்கங்களுடன் இணைந்திருக்கும் எங்கள் நிலைபேறான தன்மை தந்திரோபாயத்தை ஆதரிக்கிறது.
- நிலைபேறான தன்மை திட்டங்கள் மூலம் அக்கறையுடைய தரப்பினருடன் ஈடுபடுவது, மற்றும் பாதிப்புகள் மற்றும் வாய்ப்புகளை மதிப்பீடு செய்தல்.
- எங்கள் கடன் பெறுனர்களையும் அவர்களின் முதலீட்டு தீர்மானங்களையும் கடுமையான வடிகட்டல் செயன்முறை மூலம் எங்கள் கடன் நடைமுறைகளில் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுமை இடர்களை வலுப்படுத்துதல்.

## பொருண்மை விடயங்கள்



## கண்ணோட்டம்

நிதி முறைமை நிலைபேறான தன்மையை திறமையாகவும் வெற்றிகரமாகவும் பாதுகாக்க முக்கிய கொள்கை அமுலாக்க கட்டமைப்பில் காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை பின்னடைவை இணைப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, மத்திய வங்கி "நிலைபேறான நிதிக்கான பாதை வரைபடத்தை" அறிமுகப்படுத்தியது. இது இலங்கையில் காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு போராடுவதற்கான காலநிலை மீள்நிலை திட்டங்களுக்கான நிதியுதவியை ஊக்குவிக்க நிதி முறைமையை ஊக்குவிக்கிறது. இந்த வரைபடம் நிதி கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவர்களின் நிதி, திட்டங்களுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுமை (ESG) இடர்களை திறம்பட நிர்வகிக்க ஒரு பரந்த திசையை வழங்குகிறது. இது பசுமையான, மற்றும் சமூக உள்ளடக்கம் கொண்ட வணிகங்களுக்கு உதவியை ஊக்குவிக்கிறது. இது நிதித் துறையின் பங்களிப்பை மேலும் நெகிழ வைக்கும், நிலையான பசுமை பொருளாதாரத்தை உருவாக்க உதவுகிறது.

## குடியியல்சார் மாற்றங்கள்

### முக்கிய இயக்கிகள் மற்றும் அம்சங்கள்

- தொழிலாளர் பங்களிப்பு அதிகரித்தல் மற்றும் உயர் கல்விக்கான சேர்க்கை.
- தொழிலாளர் சக்தியை உள்ளடக்கிய மில்லினியல்கள் மற்றும் Z தலைமுறை எண்ணிக்கை அதிகரித்தல்.
- வளர்ந்து வரும் நகரமயமாக்கல் மற்றும் அதிக வேலை வாய்ப்புகள் நகர்ப்புறங்களில் குவிந்துள்ளமை.
- வயதான மக்கள் தொகை மற்றும் அதிகரித்த சுதந்திரம் (தனித்துவத்தை நோக்கிய முனைப்பு).
- வேலைவாய்ப்பு பிரிவுகளின் பல்வகைப்படுத்தல் மற்றும் வெவ்வேறு வாழ்க்கைப் பாதைகள்.
- அதிகரித்த நகர்வு
- திறமையான நபர்களைக் கண்டுபிடிப்பதில் முக்கியமான திறன்கள் மற்றும் சவால்களின் பற்றாக்குறை.
- வாடிக்கையாளர் தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பின்பற்றல்.
- நேரத்தைக் குறைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்கும் ஸ்மார்ட் வேலை முறைகளுக்கான தேவை.
- குறைந்த முயற்சி தேவைப்படும் மேம்பட்ட முறைமைகளுக்கான தேவை.

### எமது பெறுமதி மீதான தாக்கம்

சமூகத்தின் மக்கள்தொகை சேமிப்பு, முதலீடுகள் மற்றும் கடன் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், சேவை வழங்கலில் நீண்டகால தாக்கங்களை உருவாக்குகிறது. மக்கள்தொகை கட்டமைப்பு மற்றும் நடத்தை மாற்றங்கள் உற்பத்திகள் மற்றும் சேவைகள், விநியோக முறைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பெறுமதி முன்மொழிவுகளின் தன்மையை பாதிக்கின்றன. நாங்கள் உள்நாட்டு சமூகங்களிலிருந்து திறன்களை நியமிக்கிறோம், எனவே மக்கள்தொகை எங்கள் பெறுமதி உருவாக்கம் மற்றும் வணிக வளர்ச்சியை பாதிக்கிறது. சமுதாயத்தின் போக்குகள் எங்கள் வங்கியின் சமூக பொருத்தத்தை தீர்மானிப்பதுடன், திறமைகளை ஈர்க்கவும் தக்கவைக்கவும் தவறினால் நமது அடுத்தடுத்த திட்டமிடல் மற்றும் விரிவாக்க திட்டங்களுக்கு இடையூறு ஏற்படுத்தும்.

### இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

| வாய்ப்புக்கள் | தாக்கம் | | இடர்கள் | தாக்கம் | |
|---|---|---|---|---|---|
| | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் | | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் |
| தொழிற்பாட்டு சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலளிப்பதில் விரைவாக இருக்கும் திறன். | ▲ | ▲ | புதிய மற்றும் வளர்ந்து வரும் திறன்களைக் கொண்ட அதிக திறமையான ஊழியர்கள் ஆட்சேர்ப்புக்கு அதிக கிரயம் மிக்கவர்களாகவும் திறன்களின் முடுக்கம் மற்றும் கல்வி இடம்பெயர்வுக்கு இடையில் தக்கவைத்துக்கொள்வது கடினமாக இருத்தல். | ▲ | ▲ |
| திறன்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் வளர்ப்பதற்கும் முதலீடு செய்வது தே.சே. வங்கியின் வர்த்தக நாம வளர்ச்சி மற்றும் தேசத்தை அபிவிருத்திக்கு உதவுகிறது. | ▲ | ▲ | முக்கிய திறன்களுக்கான பற்றாக்குறை மற்றும் போட்டி. | ▲ | ▲ |
| உற்பத்திகள் மற்றும் சேவைகள் மற்றும் செயன்முறைகளில் புதுமைகளை வளர்ப்பதற்கான வாய்ப்பு. | ▲ | ▲ | வளர்ந்து வரும் வாடிக்கையாளர் விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றமடைதல். | ▲ | ▲ |

| வாய்ப்புகள் | தாக்கம்: குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | தாக்கம்: நீண்ட காலம் | இடர்கள் | தாக்கம்: குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | தாக்கம்: நீண்ட காலம் |
|---|---|---|---|---|---|
| எங்கள் ஊழியர்களை புதுமையான, எண்ணியல் ஆர்வமுள்ள மற்றும் தரவு சார்ந்த திறனுள்ளவர்களாக மாற்றுவதற்கான வாய்ப்பு. | ⊖ | △ | அதிகரிக்கும் சமத்துவமின்மை, அரசியல் ஸ்திரமின்மை மற்றும் உயரும் வாழ்க்கைச் செலவு போன்ற பேரின சூழல் சவால்கள் ஊழியர்களின் மீதான அழுத்தத்தை அதிகரிப்பதுடன், எங்கள் வணிக தந்திரோபாயத்தின் செயற்பாட்டையும் பாதிப்பதுடன் ஊழியர்களின் வேலை-வாழ்க்கை சமநிலையையும் பாதிக்கிறது. | ▲ | ⊖ |
| ஊழியர் தொகுப்பில் இளைஞர்களின் விகிதத்தை அதிகரிப்பது மற்றும் தனிநபர் வருமானத்தை அதிகரிப்பது செல்வ வளர்ச்சி மற்றும் செல்வத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது. | ⊖ | △ | எண்ணியல் யுகத்தில் செயற்திறனைத் தக்கவைக்கத் தேவையான திறன்களைக் கொண்டு தங்களை புதுப்பித்துக் கொள்ளாவிட்டால், ஊழியர்கள் வழக்கற்றுப் போகும் இடரை எதிர்கொள்கின்றனர். | ▲ | ▲ |
| | | | திறமைகளை ஈர்க்கவும் தக்கவைக்கவும் தவறுதல் அடுத்தடுத்த திட்டமிடல் மற்றும் வணிக விரிவாக்கத்திற்கு தடையாக இருக்கிறது. | ▲ | ▲ |

△ 2018 முதல் அதிகரித்த வாய்ப்பு
▲ 2018 முதல் அதிகரித்த இடர்
⊖ 2018 முதல் இடர்/வாய்ப்பு சமமாகவே உள்ளது
▽ 2018 முதல் குறைந்த வாய்ப்பு
▼ 2018 முதல் குறைந்த இடர்

## எங்கள் அணுகுமுறை மற்றும் செயற்திறன்

- தொடர்ச்சியான பெறுமதி சேர்த்தல்களுடனான எங்கள் விரிவான விநியோக வழிமுறைகள் மற்றும் உற்பத்திகள் மூலம் வெவ்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு சேவை வழங்குதல் மற்றும் அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்தல்.
- வாடிக்கையாளர் விழிப்புணர்வைத் தொடரவும், இளைய மக்களில் கணிசமான சந்தைப் பங்கைக் கைப்பற்ற புதுமையான தயாரிப்புகளை உருவாக்குதல். இதில் பிரார்த்தனா +, ஐ.எம் மற்றும் புத்தி கடன்கள் போன்ற திட்டங்கள் உள்ளடங்கும்.
- வளர்ந்து வரும் இளம் உழைக்கும் மக்களுக்கான செல்வத் திட்டமிடல் தயாரிப்புகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்களை உருவாக்க போதுமான வாய்ப்பை வழங்குதல்.
- ஊழியர்களின் நல்வாழ்வை ஊக்குவிக்கும் திட்டங்களை செயற்படுத்துதல்.
- எங்கள் ஊழியர்களை மீட்டெடுப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மற்றும் எதிர்காலத்தில் பொருந்தக்கூடிய பணியாளர்களை வளர்ப்பதற்கும் திறன் மேம்பாடு மற்றும் தலைமைத் திட்டங்களில் தொடர்ச்சியாக முதலீடு செய்தல்.

## பொருண்மை விடயங்கள்



## கண்ணோட்டம்

அதிகரித்து வரும் வயதான மக்கள் தொகையுடன் இலங்கை மக்கள்தொகை மாற்றத்தின் மேம்பட்ட கட்டத்தை எட்டியுள்ளது. இது சேவை வழங்கல், ஓய்வூதியம், வேலைவாய்ப்பு மற்றும் பொது நிதி ஆகியவற்றிற்கு நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உழைக்கும் வயது மக்கள் தொகையில் இலங்கையின் பங்கு 2005 இல் உயர்ந்த நிலையில், காலப்போக்கில் படிப்படியாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நடுத்தர கால வளர்ச்சியைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2015 இல் இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் உழைக்கும் வயது மக்கள் தொகையின் விகிதமான 51% ஆகும். மக்கள்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் 15 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் பத்தில் ஒரு பங்கிற்கு 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள். 2050 ஆம் ஆண்டளவில் முதியவர்கள் இளைஞர்களை விட 23% அதிகமாக இருப்பார்கள், இது 17% என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் ஊழியர் பங்களிப்பு வீதம் 2019 டிசம்பரில் 53.4% ஆக இருந்தது. இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான தொழிலாளர் பங்களிப்பு விகிதங்களில் உள்ள இடைவெளியைக் குறைப்பது முக்கியம், ஏனெனில் இது தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் இருந்து தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் தணிக்கும் வளர்ச்சியில் புள்ளிவிவரங்களின் தாக்கம். தொழிலாளர் சந்தைகளில் பெண்கள் நுழைவதை வளர்க்கும் கொள்கைகளை வைத்திருப்பது முக்கியம். கல்வி அடைவதில் அதிகரிப்பு இளையவர்களின் உற்பத்தித்திறன் மற்றும் பங்கேற்பு விகிதங்களை உயர்த்தலாம் என்பதுடன் அதிக உற்பத்தித் துறைகளை நோக்கி உழைப்பை மறு ஒதுக்கீடு செய்வது உற்பத்தித்திறன் ஆதாயங்களுக்கு வழிவகுக்கும்.

## ஒழுங்குவிதிமுறை சவால்கள்

### முக்கிய இயக்கிகள் மற்றும் அம்சங்கள்

- ஒழுங்குமுறை மற்றும் சட்டரீதியான தேவைகள் மற்றும் இறுக்கமான விதிகளின் வேகம் மற்றும் வளர்ந்து வரும் சிக்கலான தன்மை.
- விதிமுறைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் வலுவான பாதுகாப்பு.
- பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்துப் போராடுதல்
- காலநிலை இடர்கள் மற்றும் குழலியல், சமூக மற்றும் ஆளுகை அளவுகோல்களை ஒருங்கிணைத்தல் மற்றும் சமூக பொறுப்புணர்வு முயற்சிகளில் வெளிப்படைத்தன்மைக்கான கோரிக்கை
- நிதிச் சேர்க்கைக்கு அழைப்பு விடுத்தல்
- தொழிற்துறையில் போட்டியை ஊக்குவித்தல்.
- செயலில் உள்ள கட்டுப்பாட்டாளர்கள், கடுமையான கண்காணிப்பு மற்றும் வலுவான ஆளுகை நடைமுறைகள்.
- நிதி ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துதல்

### எமது பெறுமதி மீதான தாக்கம்

பாசல் சீர்திருத்தங்கள், கணக்கியல் நியமங்களை மாற்றியமைத்தல், நாணய மற்றும் நிதிக் கொள்கைகளில் மாற்றங்கள், நிதிக் குற்றங்கள் குறித்த விதிமுறைகள், வளர்ந்து வரும் தனியுரிமை, இணைய பாதுகாப்பு மற்றும் நடத்தை தொடர்பான சட்டங்கள் உள்ளிட்ட வளர்ந்து வரும் ஒழுங்குமுறை மற்றும் அறிக்கையிடல் பரப்பு எங்கள் வணிக மாதிரியை பாதிப்பதுடன், இணக்கமின்மை இடருக்கு வழிவகுக்கும். ஒழுங்குமுறை மாற்றங்கள் வட்டி விகிதங்கள் மற்றும் வரிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும், மேலும் இறுதியில் வங்கியின் அடிமட்டத்தை பாதிக்கும். அரசாங்க கொள்கைகளில் மாற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை மற்றும் சமூக-பொருளாதார காரணிகளின் ஒருங்கிணைப்பு வணிக மாதிரியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

### இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள்

| வாய்ப்புக்கள் | தாக்கம் | | இடர்கள் | தாக்கம் | |
|---|---|---|---|---|---|
| | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் | | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் |
| வங்கியின் செயன்முறைகள் மற்றும் நெறிமுறை கட்டமைப்பை தொடர்ந்து மேம்படுத்தல். | − | ▲ | அதிக மூலதன தேவைகள் மற்றும் கடுமையான திரவத்தன்மை முகாமை. | ▲ | ▲ |
| பொருளாதாரத்திற்கு நிதியாளராக மேம்பட்ட பங்கு. | ▲ | ▲ | இணக்கம் தொடர்பான செலவுகள் மற்றும் தொழிற்பாட்டு செலவுகளிலான அதிகரிப்பு. | ▲ | ▲ |

| வாய்ப்புக்கள் | தாக்கம் | | இடர்கள் | தாக்கம் | |
|---|---|---|---|---|---|
| | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் | | குறுங்காலம் முதல் நடுத்தரகாலம் வரை | நீண்ட காலம் |
| புதிய இடர்களை (காலநிலை மாற்றம்) கண்டறிந்து முகாமை செய்வதிலான முன்னேற்றம். | ▲ | ▲ | குறைந்த ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைத் நிறுவனங்களின் நுழைவுடன் சிதைவடைந்த போட்டி. | ▲ | ▲ |
| கவர்ச்சிகரமான உற்பத்தி சலுகைகளுடனான அதிகரித்த புதுமை. | ▲ | ▲ | வட்டி விகிதங்களில் கொள்கை மாற்றங்கள் முக்கிய விகிதங்களை பாதிக்கும். | ▲ | ⊖ |
| ஒழுங்குமுறை தேவைகளுக்கு மேலான மூலதனத்துடன், தற்போதுள்ள மற்றும் புதிய வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்கான வலுவான நிலையில் நாங்கள் இருக்கிறோம், மேலும் மூலதன மற்றும் திரவத்தன்மைத் திட்டத்தில் அதிக நெகிழ்வுத்தன்மையைக் கொண்டுள்ளோம். | ▲ | ▲ | முக்கிய விகிதங்களை குறைப்பதற்கு முன் வைப்பு விகிதங்கள் குறைக்கப்படும்போது வைப்பு காரணமாக உரிமையாண்மை மற்றும் பரஸ்பர நிதிகளை நோக்கி நகரும் இடர். | ▼ | ⊖ |
| இலங்கையில் ஒரு முன்னணி வங்கியாக, ஒழுங்குமுறை தேவைகள் குறித்து ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு பொருத்தமான பதில்களை வழங்க நாங்கள் நன்கு நிலைப்படுத்தப் பட்டுள்ளோம். | ▲ | ▲ | நியமங்களுக்கு இணங்கத் தவறுதல், இணக்கமின்மை மற்றும் நற்பெயர் இடர்களுக்கு வழிவகுப்பதுடன் மற்றும் வங்கியின் அக்கறை தாரர்களின் நம்பிக்கையை அழிக்கிறது. | ▲ | ▲ |
| ஒரு நற்பெயர் வாடிக்கையாளர்களையும் முதலீட்டாளர்களையும் ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது. | ▲ | ▲ | | | |

▲ 2018 முதல் அதிகரித்த வாய்ப்பு ▲ 2018 முதல் அதிகரித்த இடர் ⊖ 2018 முதல் இடர்/வாய்ப்பு சமமாகவே உள்ளது

▼ 2018 முதல் குறைந்த வாய்ப்பு ▼ 2018 முதல் குறைந்த இடர்

## எங்கள் அணுகுமுறை மற்றும் செயற்திறன்

- ஒழுங்குமுறை மாற்றங்களை மதிப்பீடு செய்ய, பதிலளிக்க மற்றும் கண்காணிக்க ஒருங்கிணைந்த, விரிவான மற்றும் முன்னோக்கு அணுகுமுறையைப் பராமரித்தல். வங்கி முழுவதும் மக்கள், செயன்முறைகள் மற்றும் அமைப்புகளில் தொடர்ந்து முதலீடு செய்வதன் மூலம் இது செய்யப்படுகிறது.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச ஒழுங்குமுறை மற்றும் சட்டரீதியான விவாதக் குழுக்களில் பங்கேற்றல்.
- அத்தகைய இடர்களை மதிப்பிட்டு, அந்த இடர்களைத் தணிக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல்.
- அந்தந்த குழுக்களால் பல மதிப்பீடுகள், போக்கு அவதானிப்புகள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் மட்டக்குறி மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

## பொருண்மை விடயங்கள்



## கண்ணோட்டம்

2021 ஆம் ஆண்டில் ஒரு புதிய வங்கிச் சட்டம் இயற்றப்படும், அதில் வங்கிகளுக்கான விதிமுறைகளை விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் காணப்படும். மத்திய வங்கி நெருக்கடி தயார்நிலை மற்றும் வங்கிகளின் பின்புலத்தை வலுப்படுத்த பல விதிமுறைகளையும் அறிமுகப்படுத்தும். சர்வதேச நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப தகவல் தொழில்நுட்பம் மற்றும் வங்கிகளின் பாதுகாப்பு தொடர்பாக ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை கட்டமைப்பில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்படும். முன்மொழியப்பட்ட விதிமுறைகள் வங்கிகளை தங்கள் தகவல் முறைமைகள் மற்றும் தொடர்புடைய தொழிநுட்ப தளங்களை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் ஊக்குவிக்கும், மேலும் மேம்பட்ட இடர் முகாமையை செயற்படுத்தும்.

## தொழிற்துறைக் கவர்ச்சி மற்றும் போட்டித் திறன்

இலங்கையின் வங்கித் துறையில் ஒரு முக்கிய போட்டியாளராக எங்கள் சந்தை நிலையைத் தக்க வைத்துக் கொள்ள மைக்கேல் போர்ட்டர் உருவாக்கிய ஐந்து படைகள் பகுப்பாய்வை நடத்தினோம். இது எங்கள் தொழில் சூழலுக்கு குறிப்பிடத்தக்க வெளிப்புற காரணிகளைப் புரிந்துகொள்ளவும், வங்கியின் பொருண்மை மிக்க சிக்கல்களை அடையாளம் காணவும், எங்கள் தந்திரோபாய முன்னுரிமைகளை வகுக்கவும் உதவுகிறது. இந்த கரிசனைகளை தந்திரோபாய ரீதியாக நிவர்த்தி செய்வதற்கான எங்கள் திறன் வங்கியின் பிற்பலத்தைப் பாதிக்கிறது. வங்கித் தொழில் சூழலில் ஐந்து சக்திகளின் தாக்கம் பின்வருமாறு:

**01**

### புதிய நுழைவர்களின் அச்சுறுத்தல்

- அதிக மூலதனத் தேவை ஒரு வங்கியை கூட்டிணைப்பதற்கான வங்கித் தொழிலுக்கான உரிமம் பெறுவதில் ஒரு சவாலாக உள்ளது.
- பாசல் III தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிக முதலீடுகள் தேவைப்படும்
- மக்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் விநியோக வழிமுறைகளிலான அதிக மூலதன முதலீடுகளுக்கான தேவை
- ஒழுங்குமுறை மற்றும் இணக்க அம்சங்களில் தேவைப்பாடுகளின் அதிகரிப்பு

**02**

### வாடிக்கையாளர்களின் பேரம் பேசும் பலம்

- தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் உயர் தரமான சேவைகளுக்கான வாடிக்கையாளர்களிடமிருந்து அதிகரிக்கும் கேள்வி
- சந்தையில் ஒத்த உற்பத்திகள் மற்றும் சேவைகளின் கிடைப்பனவுத் தன்மை
- வாடிக்கையாளர்கள் அதிக செலவுகளைச் செய்யாமல் போட்டியாளர்கள் மற்றும் மாற்று நபர்களுக்கு மாற முடியும்
- புதிய தலைமுறை வாடிக்கையாளர்களுக்கு வாடிக்கையாளர் விசுவாசம் காணப்படாமை
- அதிக நிகர மதிப்புள்ள வாடிக்கையாளர்களுக்கு குறைந்த கட்டணங்களுக்கு பேரம்பேசும் திறன் உள்ளது

**03**

### வழங்குனர்களது பேரம் பேசும் பலம்

- அதிக வருமானம் மற்றும் குறைந்த இடர்களுக்கான வைப்பாளர்களிடமிருந்தான கேள்வி
- எண்ணியல் சேவைகளின் வழங்குனர்கள் மீது அதிகளவில் தங்கியிருத்தல்
- தொழிற்சங்கங்கள் மூலம் ஊழியர்களின் அதிக பேரம் பேசும் சக்தி
- எழுதுபொருள் வழங்குனர்கள், புற வழங்கல் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள். போன்ற பிற வழங்குனர்கள் மீதான குறைந்தளவில் தங்கியிருத்தல்




**04**

### சந்தையிலுள்ள போட்டியாளர்களின் அச்சுறுத்தல்

- தொழிற்துறையில் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் (26 உரிமம் பெற்ற வணிக வங்கிகள் [உ.வ.வ. கள்] மற்றும் 6 உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் [உ.வ.வ. கள்]
- வாடிக்கையாளர்களின் குறைந்த மாறுதல் செலவு மற்றும் ஒத்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குதல் காரணமாக நிறுவனங்களிடையே கடுமையான போட்டி

**05**

### பதிலீட்டுப் பொருட்களின் அச்சுறுத்தல்

- தொலைதொடர்பு நிறுவனங்கள் மற்றும் திறமையான கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்கும் பிற கொடுப்பனவு சேவை வழங்குநர்களிடமிருந்து அதிகரிக்கும் அச்சுறுத்தல் (நிதித் தொழிநுட்ப நிறுவனங்கள்)
- விலை, தரம் மற்றும் ஏனைய அம்சங்களில் எந்தவொரு வேறுபாடும் இல்லாமல் குறைவான கிரயத்தில் ஒத்த தயாரிப்புகளின் கிடைக்கும் தன்மை
- வைப்பாளர்கள் மற்றும் கடன் வழங்குநர்கள் விலைகளை மாற்றங்களுக்கு அதிக உணர்திறன் கொண்டவர்கள்

# தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

வலுவான பெறுமதிகளில் கட்டமைக்கப்பட்ட எங்கள் தந்திரோபாயம், நம்முடைய தீவிரமான புரிதலை பிரதிபலிப்பதுடன், தொழிற்பாட்டு சூழல், ஆளுகை மற்றும் இடர் முகாமைத் திறன்களை மேம்படுத்த உதவும் அதே நேரத்தில் எங்கள் அனைத்து பங்குதாரர்களுக்கும் நிலையான விளைவுகளை வழங்கும்.

## ஒருங்கிணைந்த சிந்தனையுடனான தந்திரோபாய திட்டமிடல்



நாம் யார், எங்கள் திறன்கள், தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகள், எங்கள் பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் மற்றும் எங்கள் தொழிற்பாட்டு சூழல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த சிந்தனை மூலம் எங்கள் தந்திரோபாயம் பெறப்படுகிறது. எங்கள் ஒருங்கிணைந்த தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறையின் முக்கிய அம்சம், பாதிக்கும் ஆறு மூலதனங்களுக்கு இடையேயான இணைப்பு, ஒன்றுக்கொன்று சார்ந்திருத்தல் மற்றும் வர்த்தக பரிமாற்றங்கள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு பெறுமதியை உருவாக்கும் எங்கள் வங்கியின் திறன் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையை பாதிக்கும். எங்கள் ஒருங்கிணைந்த தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறை குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு தந்திரோபாய விருத்தி மற்றும் அமுலாக்கத்தை உந்துகிறது.

எமது ஒருங்கிணைந்த தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறையின் மூன்று மூலக் கூறுகளாவன:




## தந்திரோபாய அமுலாக்கம்

எங்கள் தந்திரோபாயங்கள் எங்கள் தூரநோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் பெறுமதிகளுடன் தெளிவாக இணைக்கப்பட்டுள்ளன. விருத்தி செயன்முறை வெளிவாரி மற்றும் உள்ளக சூழலை அறிந்து கொள்ளும் வணிக சூழல், வாய்ப்புகள், சவால்கள் மற்றும் கடந்தகால கற்றல்கள் ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

எங்கள் தந்திரோபாய திட்டமிடல் செயற்பாட்டின் ஒரு பகுதியாக, வெளிவாரிச் சூழலை அவற்றின் போக்குகளை பகுப்பாய்வு செய்து, இந்தப் போக்குகள் வங்கித் துறையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளுகிறோம். செயற்திறன்மிக்க பங்குதாரர் ஈடுபாட்டுடன் எங்கள் வணிக மாதிரி மற்றும் தொழிற்பாட்டு சூழலை மதிப்பீடு செய்வது எங்கள் பொருண்மை மிக்க சிக்கல்கள் மற்றும் பெறுமதி சேர்க்கும் அல்லது திசைதிருப்பும் அம்சங்களை வடிவமைக்கிறது. இதன் விளைவாக ஏற்படும் இடர்கள் மற்றும் பொருண்மை மிக்க விடயங்களிலிருந்து வரும் வாய்ப்புகள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு எங்கள் தந்திரோபாய முன்னுரிமைகளைப் பிரிக்க உள்ளீடுகளை வழங்குகிறது.

## தந்திரோபாய அமுலாக்கம் மற்றும் வள ஒதுக்கீடு

எங்கள் ஒருங்கிணைந்த திட்டமிடல் செயன்முறை எங்கள் தந்திரோபாயத்தையும் முக்கிய மூலாதாரக் கருத்தாய்வுகளையும் எங்கள் நிதி மற்றும் செயற்படுத்தல் திட்டங்களில் ஒருங்கிணைப்பதை உறுதி செய்கிறது. இடையில் ஒரு சீரான அணுகுமுறையை உறுதிப்படுத்த எங்கள் இடர் இயற்திறன் கட்டமைப்பிற்குள் சாத்தியமான வாய்ப்புகள் மதிப்பிடப்படுகின்றன.

எதிர்கால வளர்ச்சி மற்றும் பொறுப்பான இடர் முகாமை தொடர்புடைய நிறைவேற்றுக் குழுக்களால் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட எங்கள் நீண்டகால தந்திரோபாய முன்னுரிமைகள் நிறைவேற்றுவதற்கான நீண்டகால திட்டமிடல் செயற்பாட்டில் சேர்க்கப்படுகின்றன. நீண்ட கால தந்திரோபாய நோக்கங்களுடன் இணைந்த குறுகிய மற்றும் நடுத்தர கால உத்திகள் மற்றும் இலக்குகள் வங்கி முழுவதும் செயற்படுத்தப்படுகின்றன. இந்த தந்திரோபாயங்கள் மற்றும் திட்டங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் தனிப்பட்ட பிரிவுகளுக்கு இணைக்கப்படுவதுடன், ஒவ்வொரு பிரிவிற்கும் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளாக அமையும். எங்கள் தந்திரோபாய வணிக திட்டமிடல் கட்டமைப்பானது, கூறப்பட்ட தந்திரோபாய நோக்கங்களை அடைய தேவையான ஆதாரங்களை (தகவல் தொழிநுட்பம், மனித வளம், நிதி) அடையாளம் காண உதவுகிறது. எங்கள் செயற்பாட்டுக் குழுக்கள் எங்கள் குறுகிய முதல் நடுத்தர கால செயல் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட வளங்களின் கிடைப்பனவை உறுதி செய்கின்றன.

தேவையான திறன்களையும், எங்கள் இலட்சியங்களை அடைய மேற்கொள்ளப்பட்ட கவனம் செலுத்தும் முயற்சிகளையும் கோடிட்டுக் காட்டுகிறது. வளக் கிடைப்பனவுத் தன்மை மற்றும் தற்போதைய

மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில், மாற்ற முயற்சிகள் மற்றும் புதிய திட்டங்களுக்கு மீண்டும் முன்னுரிமை அளிக்கும் சில வர்த்தக பரிமாற்றங்கள் செய்யப்படுகின்றன.

**கண்காணிப்பு கட்டம்**

சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலளிக்க வங்கியை செயற்படுத்த, தந்திரோபாயங்கள் மற்றும் திட்டங்களின் முன்னேற்றம் முகாமைக் குழுக்கள் மற்றும் சபையினால் பல்வேறு அறிக்கைகள் மூலம் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட இடைவெளியில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. அடையப்பட்ட முன்னேற்றத்திற்கு எதிரான எங்கள் தந்திரோபாய முன்முயற்சிகளின் வலிமையைக் கண்டறிந்து எதிர்கால சாத்திய நிலைமைகளுக்கு எதிராக சோதிக்க இந்த செயன்முறை நமக்கு உதவுகிறது.

எங்கள் செயற்திறன் பாதீட்டு மற்றும் வரலாற்று செயற்றிறனுக்கு எதிராக முகாமைத்துவ தகவல் முறைமை/தளப் பலகைகள் மூலம் மாதாந்த செயற்திறன் மதிப்பிடப்படுகிறது. ஒரு காலாண்டு பகுப்பாய்வு, இலக்குகளுக்கு எதிராக எங்கள் தந்திரோபாய செயற்திறனை நாங்கள் கண்காணிக்கிறோம், முக்கிய திட்டங்களின் நிலை மற்றும் செயற்திட்ட மதிப்பாய்வு மூலம் தந்திரோபாய கண்ணோட்டத்தின் அடிப்படையில் தேவைப்பட்டால் திருத்தங்களை செய்கிறோம்.

எங்கள் செயல்திறனை மதிப்பாய்வு செய்ய சீரான பெறுபேற்று அட்டை மூலம் எங்கள் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளை (KPI) அடிப்படையாகக் கொண்டுள்ளோம். அவை நிதி மற்றும் நிதி சாராத குறிகாட்டிகளையும் அளவு மற்றும் பண்புசார் காரணிகளையும் உள்ளடக்கியது. தொடர்ச்சியான கண்காணிப்பு, செயற்பாட்டு சிக்கல்களின் பகுதிகளை அடையாளம் காணவும், சந்தை போக்குகளை மதிப்பாய்வு செய்யவும், வாடிக்கையாளர் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் மதிப்பிடுவதற்கும், வணிகத்தை பகுப்பாய்வு செய்வதற்கும் தீர்மானங்கள் மற்றும் சிறந்த முன்னுரிமைகள் மற்றும் தொடர்புடைய மற்றும் போட்டித்தன்மையுடன் இருக்க எங்கள் தந்திரோபாய மற்றும் வணிக மாதிரியை செம்மைப்படுத்தவும் உதவுகிறது.



## மிகவும் நிலைபேறான வங்கியை உருவாக்குதல்

எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் நாங்கள் வாழும் சமூகங்களுக்கும் மிகவும் வளமான எதிர்காலம் ஒன்றை உருவாக்கும் ஒரு சிறந்த வங்கியை நாங்கள் தொழிற்படுத்த விரும்புகிறோம். எங்கள் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், சமூகங்களுக்கான சுற்றுச்சூழல் பெறுமதி மிக்க எங்கள் கிரகம் ஆகியவற்றுக்கு பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச் சூழல் பெறுமதியை உருவாக்குவதுடன் அதே நேரத்தில் எங்கள் பங்குதாரருக்கு வருமானத்தை வழங்கும் வகையில் நாம் இதனை அடைகின்றோம். அரசுக்கு சொந்தமான முன்னணி நிதி நிறுவனம் என்ற வகையில், இலங்கை பொருளாதாரத்தில் ஒரு நேர்க் கணிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தை உருவாக்க நாங்கள் முக்கிய பங்கு வகிக்கிறோம். எங்கள் அணுகல் மற்றும் செல்வாக்கு ஒரு நிலையான வணிகத்தை உருவாக்குவதில் ஒரு தலைவராக இருப்பதற்கான வாய்ப்பை எங்களுக்கு வழங்குவதுடன், மேலும் இந்த இலட்சியத்தை வழங்க சரியான பெறுமதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் உள்ளன. வங்கியை மிகவும் நிலையானதாக மாற்றுவதற்கும் சிறந்த உலகத்திற்கு பங்களிப்பதற்கும் நாங்கள் ஆழ்ந்த கடமைப்பட்டுள்ளோம்.

### எங்கள் நிலைபேறான வணிக மாதிரி

எங்கள் வணிக மாதிரி எங்கள் தூரநோக்கு, பணிக் கூற்று, பெறுமதிகள் ஆகியவற்றால் வழிநடத்தப்பட்டு வலுவான ஆளுகை மற்றும் நெறிமுறைகளால் ஆதரிக்கப்படும் வங்கியின் பெறுமதி உருவாக்கும் செயன்முறையின் கண்ணோட்டத்தை வழங்குகிறது. அனைத்து சமூக-பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் கரிசனைகள் எங்கள் வணிக மாதிரி மற்றும் முக்கிய வணிக செயன்முறைகளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எங்கள் இறுதி இலக்கு நிலையான சமூக பெறுமதி மற்றும் கூட்டு வணிக பெறுமதி இரண்டையும் உருவாக்குவதாகும். ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பெறுமதி சேர்க்கவும், வங்கி, பங்குதாரர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பெறுமதியை உருவாக்குவதற்கும் எங்கள் முக்கிய பலங்கள், நிபுணத்துவம் மற்றும் வளங்களை மேம்படுத்துவதன் மூலம் இதைச் செய்கிறோம். சவால்களை எதிர்பார்த்து, மாறும் சூழலில் கிடைக்கும் வாய்ப்புகளை மூலதனமாக்குவதன் மூலம் இலங்கையில் சேமிப்பு நிறுவனமாக எங்கள் நிலையை தக்க வைத்துக் கொண்டுள்ளோம். எங்கள் அக்கறை தாரர்களுடன் உரையாடலில் ஈடுபடுவதன் மூலம், அவர்களின் தேவைகள் மற்றும் கரிசனைகள் இந்த தேவைகளை ஒரு பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ள முறையில் பூர்த்தி செய்ய உறுதி பூண்டுள்ளன என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். உள் ஈடுபாடு மற்றும் நிலைத்தன்மை தந்திரோபாய வளர்ச்சியில் இன்றியமையாத சிக்கல்களுக்கு முன்னுரிமை அளிக்க ஒரு பொருண்மை மிக்க மதிப்பீடு நடாத்தப்படுகிறது.

தே.சே.வ. இன் பெறுமதி உருவாக்கும் மாதிரிக்கு 20-21 பக்கங்களைப் பார்க்கவும்.



## வணிகத் தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக நிலைபேறான தந்திரோபாயம்

கூட்டு வணிகத் தந்திரோபாயம், நிதியிடல் தீர்மானங்கள் மற்றும் உற்பத்தி/சேவை வரைவிலக்கண செயன்முறைகளில் நாம் நிலைபேறான தன்மை கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளோம். பின்வரும் அம்சங்கள் ஊடாக நிலைபேறான தன்மை, தந்திரோபாயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது:

**ஊழியர் ஈடுபாடு**

எமது வணிகம் மற்றும் சமுதாயத்தில் நிலைபேறான தன்மை முன்னேற்பாட்டிற்காக எமது ஊழிர்களுடன் ஒத்துழைத்து செயற்படல்

**சுற்றுச் சூழல் நிலைபேறான தன்மை**

சுற்றுச் சூழல் உணர்வு மிக்க கலாச்சாரத்தைப் பின்பற்றுதல், தீர்ந்து போகக் கூடிய வளங்களின் நிலைபேறான பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் எமது வலையமைப்பு முழுவதும் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்

**சமூக நிலைபேறான தன்மை**

மனித உரிமைகள், நியாயமான வேலை நிபந்தனைகள், பன்முகத் தன்மை மற்றும் பாலின சமத்தவம் ஆகியவற்றை உத்வேகமாக மேம்படுத்துவதன் மூலம் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்




**நிதிசார் நிலைபேறான தன்மை**

வங்கியின் நீண்ட கால போட்டித் திறனைப் பலப்படுத்துதல் மற்றும் அதன் மூலமாக பொருத்தமான மற்றும் நீடித்த நிற்கத்தக்க பொருளாதாரத்தை மேம்படுத்தல்

**இடர் முகாமை**

எமது நிதியிடல் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட சமூக மற்றும் சுற்றுச் சூழல் இடர்களைப் பயனுறுதி மிக்க வகையில் முகாமை செய்தல்.

**கொள்கை ஈடுபாடு மற்றும் சந்தை விருத்தி**

அக்கறையுள்ள தரப்பினருடன் கூட்டான வகையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் புதிய வாய்ப்புக்களை முன்னடாத்தல்.

### நிலைபேறான தன்மை தந்திரோபாயம்

மிதமான இடர் சுயவிவரத்துடன் தே.சே.வ. தொடர்ந்தும் இலாபகரமான, நன்கு மூலதனப்படுத்தப்பட்ட வங்கியாக இருக்கும். நிதி ஸ்திரத்தன்மையை பராமரிக்க வலுவான மூலதனம் மற்றும் திரவத் தன்மை இடையகங்கள் அவசியமாகும். எனவே, திடமான மூலதனத்தை நாம் பராமரிப்பதுடன், எங்கள் பங்குதாரர்களுக்கு நீண்டகால பெறுமதியை உருவாக்க எங்களுக்கு உதவும் திரவத் தன்மை நிலை மற்றும் ஒரு சுத்தமான மற்றும் வலுவான நிதிநிலைமையைப் பேணுவோம். நிலைபேறான தன்மை கொள்கைகள் மூலம் நிலைபேறான தன்மை எங்கள் வணிக மாதிரியில் தடையின்றி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் கொள்கை, மனித உரிமைகள் கொள்கை, கூட்டு வணிக சமூக பொறுப்புணர்வு (CSR) கொள்கை மற்றும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் இடர் முகாமை (ESRM) கொள்கை ஆகியவற்றால் எங்கள் நிலைபேறான தன்மை கட்டமைப்பை பெரிதாக்கியுள்ளது.

கூட்டு வணிக முகாமை உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்கள் நடாத்தப்பட்டன. எங்கள் நடவடிக்கைகளை எஸ்டிஜி களுடன் இணைக்க எங்கள் வணிக வரிசைகளில் பல முயற்சிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன, இதனால் சமூக மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களில் எங்கள் கவனத்தை மேலும் மேம்படுத்துகிறது. எஸ்டிஜி கள் குறித்து நாங்கள் எடுத்துள்ள ஆரம்ப விபரங்களுக்கு, பக்கங்கள் 90 முதல் 169 ஐப் பார்க்கவும்.

### நிலைபேறான தன்மை

ஆளுகை வங்கியை வெற்றிக்காக நிலைநிறுத்துவது, வங்கியின் நீண்டகால பெறுமதியை ஈட்டுவதற்காக எங்கள் மாறுபட்ட பங்குதாரர்களின் நலன்களை கவனமாக சமநிலைப்படுத்த வேண்டும். வங்கியின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் (ESE) தாக்கங்கள் மற்றும் இடர்களின் ஆளுகை மற்றும் மேற்பார்வை ஆகியன சபையின் பொறுப்பு ஆகும்.

ESE விடயங்கள் வங்கியில் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை, பெறுமதியை உருவாக்குவதற்கான விடயங்கள் சமப்படுத்தப்பட்ட பெறுபேற்று அட்டையில் ஒருங்கிணைக்கப்படுகின்றன, இது எங்கள் ஊழியர்களின் செயற்திறன் அளவீட்டுக்கு உட்பட்டது. கூட்டு வணிக முகாமைக் குழுவின் தலைவரான பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு வங்கியின் தந்திரோபாயத்தை நிறைவேற்ற சபை அனுமதி வழங்கியுள்ளதுடன் எங்கள் வங்கியின் நாளாந்த செயற்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பும் இவர்களுக்கானதே. கூட்டு வணிக சமூக பொறுப்பு மற்றும் நிலைபேறான தன்மைக் குழு (CSRSC) தந்திரோபாயங்களை நிறைவேற்றுவதை கண்காணிப்பதுடன், சபை மற்றும் பிற அக்கறையுள்ள தரப்பினருடன் உரையாடலைப் பேணுகிறது.

## நிலைபேறான தன்மைக்கான எமது அர்ப்பணிப்பு

**உட்கட்டமைப்பு அபிவிருத்தி**



எங்கள் நிலைபேறான வணிக அணுகுமுறை எங்கள் தேசத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களை ஆதரிப்பதை உள்ளடக்கியது ஆகும். இந்த திட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதுடன், உள்நாட்டு சமூகங்களை மேம்படுத்தி, இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. அரச நிறுவனங்களுடன் ஒத்துழைத்து, போக்குவரத்து, நீர், தொலைத்தொடர்பு மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முதலீடு செய்கிறோம்.

*பக்கம் 159 இல் மேலும் காண்க.*

**கல்வி, கற்றல் மற்றும் அபிவிருத்திகளை மேலுயர்த்துதல்**



நாங்கள் தொடர்ந்து அதிக அளவு பொருளாதார ஈடுபாட்டிற்காக பாடுபடுவதுடன், எண்ணியலாக்க பொருளாதாரத்துக்கான மாற்றத்திற்கான அறிவு மற்றும் திறன்களில் முதலீடு செய்கிறோம். இந்த முயற்சிகள் மூலம், அனைத்து ஊழியர்களும் தங்கள் எதிர்காலத்தை உருவாக்க உதவுகிறோம். பாடசலைக் கல்வியை நிறைவு செய்தோர் மற்றும் பட்டதாரிகளுக்கு எங்களுடன் தங்கள் தொழில் வாழ்க்கையை உருவாக்க வாய்ப்புக்களை வழங்குகிறோம். கல்வியை ஆதரிக்கும் மற்றும் போட்டிப் பரீட்சைகளில் சாதனை புரிபவர்களுக்கு அங்கீகாரத்தை வழங்கும் கூட்டு வணிக சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நாம் ஆதரவு வழங்குகிறோம். எங்கள் ஆதரவு விசேட தேவையுடைய சிறுவர்கள் அவர்களின் அழகியல் திறன்களை வளர்ப்பதற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

*136 முதல் 137 மற்றும் 160 முதல் 161 பக்கங்களில் மேலும் காண்க*

**உள்ளடக்க, நிலைபேறான வளர்ச்சிக்கு ஆதரவளித்தல்**



தேசத்தில் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை எளிதாக்குவதற்காக நாங்கள் நிதி சேர்க்கையை ஊக்குவிக்கிறோம். அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட கடன் திட்டங்களை ஆதரிப்பதன் மூலம், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதியளித்து, நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதாரத்தை நாங்கள் நேரடியாக ஊக்குவிக்கிறோம். நாங்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கும் நிதியளிக்கிறோம்.

*109 மற்றும் 159 பக்கங்களில் மேலும் காண்க.*

**நிதியியல் குற்றங்களை ஒழித்தல்**



நிதிகளைச் சேகரிப்பதிலும் நகர்த்துவதிலும், பாதுகாக்கும் அமைப்புகளை திறம்பட கட்டுப்படுத்துவதிலும் நிதி முறைமையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் வங்கி முறைமை முக்கிய பங்கு வகிக்கிறது. பணமோசடி தடுப்பு முறையை நாங்கள் செயல்படுத்தியுள்ளதுடன், சந்தேகத்திற்கிடமான நிதிப் பரிவர்த்தனைகளை நாங்கள் தொடர்ந்து கண்டறிந்து அறிக்கையிடுகிறோம். மோசடி, ஊழல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் அமைப்புகளுக்கான நிதியைக் குறைப்பதற்கு இது ஓர் முக்கிய செயற்பாடாகும். எங்கள் வலுவான கட்டுப்பாடுகள் கணினி ஒருமைப்பாட்டையும் எங்கள் வாடிக்கையாளர்களின் நிதிகளின் பாதுகாப்பையும் பேணுகின்றன.

*119, 127, 152 மற்றும் 158 பக்கங்களில் மேலும் காண்க*

**கார்பன் குறைவான பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்தல்**



இலங்கையின் பன்முகப்படுத்தலுக்கு உதவும் புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்கை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தந்திரோபாயத்துடன் நாங்கள் இணைந்திருக்கிறோம். மின்சாரம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பசுமை பொருட்கள் மற்றும் சேவைகளை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை உருவாக்கும் திட்டங்களுக்கு கடன் வழங்குவதற்கும் நிதியளிப்பதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் முக்கிய கவனம் இலங்கை மின்சார சபையுடன் (CEB) நெருக்கமாக ஒத்துழைப்பதன் மூலம் சூரிய சக்தி திட்டங்களை ஆதரிப்பதாகும். எங்களுக்கு சொந்தமான கட்டிடத்தில் சூரிய சக்தியை நிறுவியுள்ளோம்.

*166 முதல் 169 பக்கங்களில் மேலும் காண்க.*

**ஆரோக்கியமான சமுதாயங்களைக் கட்டியெழுப்புதல்**



பொருளாதார மற்றும் சமூகத்தின் முக்கிய பகுதிகளாக சமுதாயங்கள் காணப்படுகின்றன. சமூகங்களில் முதலீடு செய்வதன் மூலம், மிகவும் துடிப்பான, வளமான எதிர்காலத்தை உருவாக்க நாங்கள் உதவுகிறோம். எங்கள் ஊழியர்களுக்கு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்கும் அதே வேளையில், இலங்கையில் மருத்துவ ரீதியாக பாதிக்கப்படக்கூடிய முதியோருக்கான நடமாடும் மருத்துவ முகாம்களுக்கு நாங்கள் நிதியுதவி செய்கிறோம். ஆரோக்கியமான மற்றும் வளமான தேசத்தை உருவாக்க, விதைகள் மற்றும் பயிர்களைவிநியோகிப்பதன் மூலம் வீட்டு தோட்டக்கலை மற்றும் சேதனப் பயிர்ச் செய்கை உற்பத்தியை நாம் ஊக்குவிக்கிறோம்.

*பக்கம் 161 இல் மேலும் காண்க*

**வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தல்**



வெறும் இணக்கப்பாட்டிற்கு அப்பால், எங்கள் செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மையைப் பேண எங்கள் அனைத்து அக்கறையுள்ள தரப்பினருடனும் ஒரு திறந்த உரையாடலை நாங்கள் பேணுகிறோம். இது எங்கள் அக்கறையுள்ள தரப்பினரின் வளர்ந்து வரும் எதிர்பார்ப்புகளுக்கு மிகவும் பதிலளிக்க எங்களுக்கு உதவுகிறது.

*70 முதல் 77 பக்கங்களில் மேலும் காண்க.*

ஒரு மாறும் தொழிற்பாட்டு சூழலில், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலங்களில் எங்கள் அக்கறையுள்ள தரப்பினருக்கு நிலைபேறான பெறுமதியை உருவாக்க ஒரு சிறந்த தந்திரோபாயம் இருப்பது அவசியம் ஆகும். தொழிற்பாட்டு சூழலை பிரதிபலிக்கும் வலுவான அடித்தளங்களில் தொகுக்கப்பட்டுள்ளது எங்கள் தந்திரோபாயம். எங்கள் அமைப்பின் ஒவ்வொரு மட்டத்திலும் பணியாளர்களிடமிருந்து உள்ளீட்டை கணக்கில் எடுத்துக்கொள்வதன் மூலம் வங்கிக்கு பொருண்மை சார்ந்த காரணிகளை பகுப்பாய்வு செய்ய வங்கி அளவிலான உள்ளடக்கிய அணுகுமுறையை நாங்கள் பின்பற்றுகிறோம்.

## SWOT பகுப்பாய்வு

எங்கள் தந்திரோபாய உருவாக்கம் மற்றும் தந்திரோபாய முன்னுரிமைகளை செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்டமாக ஒரு SWOT பகுப்பாய்வு நடத்தப்பட்டது. இது நமது உள்ளக பலங்கள் மற்றும் பலவீனங்கள் பற்றிய நுண்ணறிவுகளையும் வெளிவாரி சூழலின் வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களையும் வழங்குகிறது.

### பலங்கள்

- வைப்பு மற்றும் அதன் மீதான வட்டி ஆகியவற்றுக்காக அரசின் முழுமையான உத்தரவாதம்
- 187 ஆண்டுகளின் வங்கிப் பாரம்பரியம்
- 100% அரசுக்கு சொந்தமான வங்கி
- இலங்கையில் தொடர்ந்து நான்காவது ஆண்டாக உச்ச பாதுகாப்பான வங்கி
- இலங்கையின் 5 வது மிக மதிப்புமிக்க வர்த்தக நாமமாக அங்கீகரிக்கப்பட்ட நற்பெயர்
- தீவு முழுவதும் 4,000 சேவை புள்ளிகளைத் தாண்டிய விரிவான வாடிக்கையாளர் அணுகல்
- அதிக தக்கவைப்பு விகிதத்துடனான வலுவான ஊழியர் விசுவாசம்
- ICRA Lanka Ltd. இன் AAA கடன் மதிப்பீடு
- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதில் நிபுணத்துவம் மற்றும் தூய்மையான எரிசக்தி நிதியிடல்
- தொழிற்துறை சராசரியுடன் ஒப்பிடும் போது குறைந்த தொழிற்படாக் கடன் விகிதம்

### பலங்களை ஒன்றிணைப்பதன் மூலம் வாய்ப்புக்களை உச்சப்படுத்தல்

- இலங்கையின் உள்கட்டமைப்பை உருவாக்க தே.சே. வங்கியின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தல்
- ஊழியர்களை வளர்த்து ஊக்குவிப்பதன் மூலம் வாடிக்கையாளர் சேவை அனுபவத்தை மேம்படுத்தல்
- மாறுபட்ட கடன் வாய்ப்புகளிலிருந்து வருவாய் மற்றும் இலாபத்தை அதிகரித்தல்
- பசுமை பொருளாதாரம் தொடர்பாக உற்பத்திகளை விரிவுபடுத்துதல் மற்றும் தூய்மையான எரிசக்தி நிதியுதவியை ஊக்குவிக்க எங்கள் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துதல்

### பலவீனங்கள்

- தே.சே.வ. சட்டம் மூலம் வணிக விரிவாக்கத்திற்கு விதிக்கப்பட்ட வரம்புகள் (நுண் நிதி, SME துறைக்கு கடன் வழங்குதல்)
- 60% வைப்புத்தொகையை அரசுப் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டிய கட்டாயத் தேவை
- அதிகாரவியல் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள்
- ஒரு முழுமையான ஒருங்கிணைந்த அமைப்பு இன்மை, நெகிழ்வுத்தன்மையைக் குறைத்தல்
- கடுமையான நடைமுறைகள், புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை குறைத்தல்
- நிதியத்தின் முதன்மை ஆதாரமாகக் கால வைப்புக்கள் காணப்படுதல்
- கட்டணம் மற்றும் தரகு அடிப்படையிலான வருமானத்தை உருவாக்குவதற்கான வரையறைகள்
- முன்னெச்சரிக்கை மிக்க இடர்க் கலாச்சாரம் மற்றும் வணிகக் கொள்கை



## SWOT பகுப்பாய்வு

### வாய்ப்புக்களை உச்சப்படுத்துவதற்காக பலங்களை ஒன்றிணைத்தல்

- விசேட அறிவைப் பயன்படுத்தி நாட்டின் உட்கட்டமைப்புத் தேவைகளைப் பயன்படுத்துதல்
- ஊக்குவித்தல் மற்றும் திறமைகளை வளர்ப்பதன் மூலம் சேவை சிறப்பை மேன்மைப்படுத்தல்
- பரந்த அளவிலான அணுகல் புள்ளிகளின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் கடன் வாய்ப்புகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் மற்றும் இலாபத்தை அதிகரித்தல்
- பசுமை பொருளாதாரம் தொடர்பாக கடன் வழங்கும் திட்டங்களை வழங்குதல் மற்றும் தூய்மையான எரிசக்தி நிதியுதவியில் விசேட திறன்களைப் பயன்படுத்துதல்

### அச்சுறுத்தல்கள்

- பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகியவற்றின் வீழ்ச்சி
- வணிக வங்கிகள் மற்றும் வங்கி சாராத போட்டியாளர்களிடமிருந்து கடுமையான போட்டி
- வங்கி மற்றும் நிதிச் சேவைத் துறையில் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை கட்டமைப்பு இறுக்கமாதல்
- பாரம்பரிய வணிக மாதிரிகளை சவால் செய்யும் சீர்குலைக்கும் தொழில்நுட்பங்கள்
- வாடிக்கையாளர் விருப்பத்தேர்வுகள் மற்றும் எதிர்பார்ப்புகளில் மாறும் மாற்றங்கள்
- கடன் மதிப்பீட்டின் வீழ்ச்சி
- பலங்களை அதிகரிப்பதன் மூலம் அச்சுறுத்தல்களைக் குறைத்தல்
- எங்கள் உற்பத்திகளை வேறுபடுத்துவதற்கு எங்கள் 100% அரசாங்கத்தின் உத்தரவாதம், வர்த்தக நாமம் மற்றும் தனித்துவமான நிலையில் முதலீடு செய்தல்
- எங்கள் வாடிக்கையாளர் தொடு புள்ளிகளை விரிவுபடுத்தி, எங்கள் எண்ணியல் உட்கட்டமைப்பைப் பயன்படுத்தி எங்கள் வாடிக்கையாளர் தளத்தை வளர்த்தல்
- எங்கள் பரந்த அணுகல் வழிமுறைகள் மூலம் விதிவிலக்கான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல்

### பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்களைக் குறைத்தல்

- எங்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்த எங்கள் முறைமைகள் மற்றும் செயன்முறைகளை மேலும் சுறுசுறுப்பாக்குதல்
- தகவல் தொழிநுட்பம் மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற எதிர்கால வங்கிக்கு தேவையான திறன்களுடன் புதிய திறமைகளைப் பெற்றுக் கொள்ளுதல்
- குறைந்த கிரய வைப்பு, நீண்ட கால வைப்பு மற்றும் நீண்ட கால கடன் வாங்குவதில் கவனம் செலுத்துதல்

### வாய்ப்புக்களில் மூலதனமிடுவதன் மூலம் பலவீனங்களைக் குறைத்தல்

- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு கடன் வழங்குதல் மற்றும் எங்கள் வாடிக்கையாளர் தளத்தை வளர்ப்பதன் மூலம் வருவாயை அதிகரித்தல்
- செயற்திறன், உற்பத்தித்திறனை அதிகரிக்க மற்றும் பிழைகளை குறைக்க தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்ளுதல்
- கடன் வழங்கும் தொகுப்பினை வளர்க்கும் போது குறைந்த தொழிற்பாடற்ற கடன் விகிதத்தை பராமரிக்க இடர் உணர்வுள்ள கலாச்சாரத்தை பின்பற்றுதல்
- சேமிப்பு வைப்புகளை அதிகரிக்க செயல்முறைகளை தன்னியக்கமாக்கல்
- பணம் அனுப்பும் சந்தையில் ஊடுருவி, கட்டண அடிப்படையிலான வருமானத்தை வளர்த்தல்

### வாய்ப்புக்கள்

- இலங்கையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதில் தே.சே. வங்கியின் பங்கு
- ஐ.நா. எஸ்டிஜி களுக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு
- காலநிலை மாற்றத்தில் கவனம் செலுத்தி பசுமை பொருளாதாரத்தை நோக்கி நகர்வடைதல்
- நுகர்வோர் மற்றும் கடன் கலாச்சாரத்தை அதிகரித்தல்
- சிறிய மற்றும் நடுத்தர நிறுவனத் துறையை அதிகரித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் அதன் முக்கியத்துவம்
- வங்கியில் மாறும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள்
- வெளிநாட்டு நாணய அனுப்புதலுக்கான வளர்ந்து வரும் சந்தை

# தந்திரோபாய வரைபடம்

## நீண்ட காலத் தந்திரோபாயங்கள்

### வாடிக்கையாளர் மைய செயன்முறை

தேசேவ இல் வாடிக்கையாளர்களே எங்கள் “வட துருவ நட்சத்திரங்களாக” இருப்பதுடன், அவர்களின் வெளிப்பாடுகளே நாம் செய்யும் அனைத்தையும் வழிநடத்துகின்றன. அனைவரது விருப்பத்துக்குரிய வங்கியாக மாறுவதற்கான எங்கள் முயற்சிகளில், எங்கள் வாடிக்கையாளர் தொடர்புகள் அனைத்து விடயங்களிலும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் வள ஒதுக்கீட்டு தந்திரோபாயத்தை வாடிக்கையாளர் தேவைகளுடன் சீரமைக்கும் வேளையில், நாங்கள் எப்போதும் எங்கள் வாடிக்கையாளரை மதிப்பிடும், அவர்களுடனான எங்கள் உறவுகள் மற்றும் எங்களது அவர்களுக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றை மதிப்பளிக்கும் வாடிக்கையாளரால் இயக்கப்படும் வங்கியாக இருப்போம்.

### ஆளுகையில் மேன்மை

கூட்டாண்மை ஆளுகையில் மிக உயர் நியமங்களைப் பேணுவதுடன், இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமை மிக்க கலாச்சாரத்தை வளர்ப்போம். வங்கி முழுவதும் வணிக செயன்முறைகள் மற்றும் ஆளுகைச் சோதனைகள் திறமையானவையாக, சுறுசுறுப்பானவையாக, வலுவானவையாக மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைக்கு ஏற்ப இருப்பதை உறுதிசெய்வதன் மூலம் ஒரு தந்திரோபாய மற்றும் போட்டி வேறுபாட்டாளராக ஆளுகையினை இணைக்கிறோம்.

### பலம் மற்றும் நிலைபேறான தன்மை

நிலையான, போட்டி மிக்க, இலாபகரமான மற்றும் பொறுப்பான பெறுமதிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் வலுவான, நிலையான மற்றும் சீரான வளர்ச்சியை அடைவோம். இது சம்பந்தமாக, நீண்ட கால பொறுமதியை அதிகரிப்பதன் மூலம் நிதிசார் தீர்க்கும் ஆற்றலை வலுப்படுத்துதல், மூலதன நிலையை ஸ்திரப்படுத்தல், வருவாய் வழிமுறைகளை அதிகரித்தல், புதுமை மற்றும் நிலைத்தன்மையை எற்படுத்தல் ஆகியவற்றுக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம்.

### நிலைமாற்றத் தலைமை

தேசத்தில் முதன்மையான அரசுக்குச் சொந்தமான சிறப்பு வங்கி என்ற வகையில், தொழிற்பாட்டு மேன்மை, நிதிச் சேர்க்கை, வாடிக்கையாளர் சேவை மற்றும் வணிக நெறிமுறைகள் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் புதிய வரையறையை அமைப்பதன் மூலம், நாங்கள் எப்போதும் உதாரணம் மூலம் வழிநடத்துகிறோம். எங்கள் சேவைகளின் மூலம் அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்துவதோடு, அனைத்து வணிக செயன்முறைகள், விநியோக வழிமுறைகளிலும், வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதன் மூலமும் புதுமைகளை மேம்படுத்துகிறோம்.

தந்திரோபாயங்கள்




குறுங்காலம் முதல் நடுத்தர காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள் பக்கம் 58 முதல் 69 வரை முன்னோட்டமாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

நிலைமாற்றல் தலைமை

இயல்பான வளர்ச்சியைத் தூண்டுதல்

உதாரணம் மூலம் தலைமை வகித்தல்

## குறுங்காலம் முதல் நடுத்தர காலத்துக்கான தந்திரோபாயங்கள்

- தொலைதூர மற்றும் எண்ணியல் வாடிக்கையாளர் சேவை மாதிரியை மேம்படுத்துதல்
- முழு வங்கிக்கும் பெருந் தரவுகளின் திறனைப் பயன்படுத்துதல்
- கிளைகளை நிதி ஆலோசனை மையங்களாக மாற்றுதல்
- வாடிக்கையாளர் பயணத்தின் துண்டமாக்கல் மற்றும் பகுப்பாய்வு
- செயன்முறைகள் மற்றும் கட்டமைப்புகளை எளிதாக்குதல்
- வாடிக்கையாளர் தரவுப் பாதுகாப்பு

- சுறுசுறுப்பான பணி முறையைப் பயன்படுத்தி அணிகளை அதிகரித்தல்
- புத்தாக்கங்களுக்கு வெகுமதி அளித்து ஊக்குவித்தல்
- தொழில்சார் திறன்களை விருத்தி செய்தல்
- தகுதி மற்றும் பன்முகத்தன்மை மிக்க கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்
- அதிகாரமளிப்பதன் அடிப்படையில் முகாமை மாதிரியை ஊக்குவித்தல்
- பன்முகத்தன்மை, சம வாய்ப்புகள் மற்றும் வேலை-வாழ்க்கை சமநிலை

- ஊழியர்களின் நடத்தை மற்றும் பெறுமதிகளில் வலுவான கவனம்
- நிதிக் குற்றங்கள் மற்றும் இணையவழி இடர்களைக் குறைப்பதற்கான திறன்களை மேம்படுத்துதல்
- இணக்கப்பாடின்மைக்கான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை
- வெளிப்படைத்தன்மை மிக்க கலாச்சாரத்தை ஊக்குவித்தல்

- சந்தை பங்கை அதிகரித்தல்
- வாடிக்கையாளர் கைப்பற்றல் மற்றும் தக்கவைத்தல்
- மையப் பகுதிகளில் நிலைபேறான வளர்ச்சி
- மூலதனத்துக்கான கிரயத்தை விட மேலான இலாபத்தை அதிகரித்தல்
- சொத்து-பரிப்பு பொருத்தமின்மையைக் குறைத்து ஐந்தொகையின் தரத்தை மேம்படுத்துதல்

- நிதிச் சேர்க்கைக்கான ஈடுபாடு
- பொறுப்பான மற்றும் நிலைபேறான நிதியுதவியை ஊக்குவித்தல்
- "பசுமையான" வணிகத்தை ஊக்குவித்தல்
- சுற்றுச்சூழல் விளைவைக் குறைத்தல் (சுற்றுச்சூழல் சிநேக முயற்சிகள் மூலம் கார்பன் தடத்தைக் குறைத்தல்)
- அர்த்தமுள்ள சமூக ஈடுபாடு

## தந்திரோபாய இயலுமைக் காரணிகள்

தொழிநுட்பம்

இடர் முகாமை

தலைமைத்துவம் மற்றும் ஆளுகை

மக்கள் மற்றும் கலாச்சாரம்

புத்தாக்கம்

செயன்முறை

## 2019 தந்திரோபாயங்களின் விளைவு வெளிப்பாடுகள்

- 20.9 மில்லியன் கணக்குகள்
- ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப முறைமைகள்
- ஆரோக்கியமான ஐந்தொகை வருமான/இலாப வளர்ச்சி
- மேம்படுத்தப்பட்ட இலாப எல்லை மற்றும் மூலதன வளர்ச்சி
- NPA களின் குறைந்த நிலை
- அதிக ஊழியர் தக்கவைப்பு
- அரச பத்திரங்களில் இரண்டாவது பாரிய முதலீட்டாளர்

# வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவத்தை உச்சப்படுத்தல்

வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவது எங்கள் உச்ச முன்னுரிமைகளில் ஒன்றாகும். பல வாடிக்கையாளர் தேவைகளுடன் ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்த பல வழிமுறை அணுகுமுறையை நாங்கள் எடுக்கிறோம். ஒரு வாடிக்கையாளர் எங்கள் வர்த்தக நாமத்துடன் ஈடுபடும் ஒவ்வொரு கட்டத்திலும் ஒப்பிடமுடியாத வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

தொழில்நுட்பம், மக்கள், செயல்முறைகள், உற்பத்திகள் மற்றும் சேவை முன்மொழிவுகள் மீதான எமது முதலீடுகள் ஒரு ஒருங்கிணைந்த மற்றும் வேறுபட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கான எங்கள் முயற்சிகளுக்கு உறுதுணையாகின்றன. எங்கள் எண்ணியலாக்க உட்கட்டமைப்பை வளர்க்கும் அதே வேளையில், நாங்கள் எங்கள் பௌதீகத் தொடர்பு புள்ளிகளைத் தக்கவைத்து மேம்படுத்துவதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பல வழிமுறைகளுக்கு இடையில் தடையின்றி மாறுவதற்கு நாங்கள் உதவுகிறோம்.

## இது ஏன் மிகவும் முக்கியமானது

வாடிக்கையாளர் சேவை என்பது ஒரு வலுவான மற்றும் நிலைபேறான நிதி செயற்திறனை வழங்க எங்களுக்கு உதவும் ஒரு போட்டி எல்லையை வழங்கும் ஒரு தந்திரோபாய வேறுபாட்டுக் கருவியாகும். எங்கள் வணிகத்தின் எதிர்காலம் ஒரு கட்டாய மற்றும் நிலைபேறான வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவத்தை வழங்குவதையும், மக்கள் தன்னம்பிக்கை கொள்ள அதிகாரம் அளிப்பதையும் சார்ந்துள்ளது என்று நாங்கள் நம்புகிறோம்.

## வள ஒதுக்கீடு

தகவல் தொழில்நுட்ப திறன்கள், தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் முதலீட்டை அதிகரித்து அறிவுசார் மூலதனத்தை உருவாக்குவதுடன், பௌதீக மற்றும் எண்ணியல் சொத்துக்கள் உள்ளிட்ட உற்பத்தி மூலதனத்தையும் உருவாக்க எங்கள் நிதி மற்றும் மனித மூலதனத்தை ஒதுக்குகிறோம்.



## தொடர்புடைய பொருண்மை விடயங்கள்

எங்கள் பொருண்மைசார் விடயங்களை நாங்கள் எவ்வாறு நிர்வகிக்கிறோம் என்பது பற்றிய மேலதிக தகவலுக்காக பக்கங்கள் 78 முதல் 88 வரை பார்வையிடவும்.



## நீண்ட காலக் குறிக்கோள்கள் மற்றும் எஸ்டிஜி (SDG) களுக்கான பங்களிப்பு

வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கு நாம் புத்தாக்கத்துடன் இருந்து, எண்ணியல் உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதுடன் எமது மக்களை வளர்த்துக் கொள்ள வேண்டும், அத்துடன் வணிக கூட்டாளர்களுடன் ஒத்துழைப்பது எங்கள் நீண்டகால நிலைபேறான தன்மையை பலப்படுத்தும்.




## வர்த்தக விட்டுக்கொடுப்புக்கள்

- வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் செயற்பாட்டு செயற்திறனை மேம்படுத்த எண்ணியல் மயமாக்கலை அதிகரிப்பது மேலதிக தகவல் தொழிநுட்ப மேம்பாடு மற்றும் நிலையான மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த பராமரிப்பு செலவில் அதிகரிப்பு தேவைப்படுகிறது.
- இணையவழிப் பாதுகாப்பு இடரைத் தணிக்கும் அதே வேளையில், வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்களையும் தனியுரிமையையும் பாதுகாக்கும் வகையில் புத்தாக்கம் மிக்க, அணுகக்கூடிய எண்ணியல் முறையில் இயக்கப்பட்ட தீர்வுகளை விருத்தி செய்வது அவசியமாகும்.

## தந்திரோபாய முன்னுரிமைகளை அடைவதற்கான நடவடிக்கைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
2018 இல் ரூபாயின் 19. 6% தேய்மானத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாய் இந்த ஆண்டில் நிலையானதாக இருந்ததுடன் அமெரிக்க டொலருக்கு எதிராக 1.0% பெறுமதி உயர்வடைந்து ரூபாய் 181.63 ஆக மதிப்பு ஏற்றம் பெற்றது.

### வட்டியல்லா வருமானத்தின் பகுப்பாய்வு




#### முன்நோக்கு

குறைந்த மட்டத்தில் இருந்து நடுத்தர ஒற்றைத்தானத்துக்கு வளர்ச்சி அடைதல்.

## C கடன் சேத இழப்புக்கள் கணிசமான அளவில் மேம்பட்டன

வருமானக் கூற்றில் விதிக்கப்பட்ட நிகர சேத இழப்பு 2019 ஆம் ஆண்டிற்கு மட்டும் 0.6 பில்லியன் ரூபாவாக இருந்தது, இது 2018 ஆம் ஆண்டில் 0.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது 35.1% வீழ்ச்சி ஆகும். சேத இழப்பு ஏற்பாடு குறைவதற்கான காரணம் பெரும்பாலும் தனிநபர் கடன்கள் மற்றும் அடகு முற்பணங்களுக்கான பிரயோகிக்கத் தக்க சேத இழப்பு வீதத்தைக் குறைப்பதுடன், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு (KDU) இலங்கை ரூபா வடிவில் வழங்கப்பட்ட அமெரிக்க டொலர் மதிப்பிடப்பட்ட கடனுடனும் ஓரளவு தொடர்புபட்டிருந்தது. அதன் இலாபத்தன்மை மீதான சேத இழப்புக் கட்டணங்களின் தாக்கத்தைத் தணிக்க வங்கி சேகரிப்பு மற்றும் மீட்பு செயன்முறைகளில் அதிக கவனம் செலுத்துகிறது.

குறிப்பிட்ட மற்றும் பொது ஏற்பாடுகள் உள்ளிட்ட ஏற்பாட்டுக் காப்பு விகிதம் டிசம்பர் 2019 நிலவரப்படி 50.7% ஆக உயர்ந்துள்ளது, இது 2018 ஆம் ஆண்டில் 42.6% ஆக இருந்தது, இதன் விளைவாக கடன்கள் மற்றும் முன்னேற்றங்களின் வளர்ச்சி ஏற்பட்டு உள்ளது.

**ஏற்பாட்டு உள்ளடக்கம்**




**முன்நோக்கு**

தற்போதைய மட்டத்திலேயே ஏற்பாட்டுக் காப்பு விகிதத்தை முகாமை செய்தல்.

## D முதலீடு செய்யும் அதே வேளையில் கிரயங்கள் சிறப்பாக முகாமை செய்யப் பட்டன

ஊழியர்களின் செலவுகள், பெறுமானத் தேய்வு மற்றும் கடனழிவு மற்றும் பிற செலவுகள் அடங்கிய மொத்த தொழிற்பாட்டு செலவுகள் 2018 ஆம் ஆண்டில் 14.1 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடும் போது 11.2% அதிகரித்து மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபாய் 15.7 பில்லியன் ஆகப் பதிவு செய்யப்பட்டது.

பெரும்பாலும் புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலமும், ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்களை நிரந்தர ஊழியர்களாக உள்வாங்குவதன் மூலமும் உந்தப்பட்டதன் விளைவாக, தொழிற்பாட்டு செலவினங்களில் 64.8% இனைக் குறிக்கும் ஊழியர் செலவுகள் 9.7% ஆக 2018 இல் இருந்த ரூபா 9.3 பில்லியனை விட ரூபா 10.2 பில்லியன் ஆக அதிகரித்தது.

தொழிற்பாட்டு செலவினங்களில் 6% மட்டுமேயான போதிலும், தேய்மானம் மற்றும் கடனழிவுத் தொகைகளுக்கான செலவுகள், 2018 பில்லியன் 0.6 பில்லியனுக்கு எதிராக 63.3% அதிகரித்து இவ் ஆண்டில் ரூபாய் 1.0 பில்லியன் ரூபாவாக இருந்தது. இது முக்கியமாக எண்ணியல் மயமாக்கலை மேம்படுத்தல், புதிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் செய்யப்பட்ட முதலீடுகள், 34 புதிய ஸ்மார்ட் ஏடிஎம்/சிஆர்எம் மண்டல வசதிகளைச் சேர்த்தல், இணைய பாதுகாப்பை வலுப்படுத்தல், வலையமைப்பு அணுகலை வலுப்படுத்தல் மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல் மற்றும் ஒரு புதிய பௌதீக கிளையைத் திறந்து வைக்கப்பட்டமை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டு இருந்தது.

நிர்வாக மற்றும் ஸ்தாபன செலவினங்களை பிரதிபலிக்கும் பிற தொழிற்பாட்டு செலவுகள் 2019 ஆம் ஆண்டில் 7% அதிகரித்து 4.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளன. இத்தகைய செலவினங்களுக்கு மத்தியில், வங்கி அதன் கிரய - வருமான விகிதத்தினை (பெறுமதி சேர் வரிக்கு முன்) 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 54.18% இல் இருந்து வெற்றிகரமாக 2019 ல் 49.35 சதவீதமாக உயர்த்தியது. உட்கட்டமைப்பு, செயன்முறை செயற்திறன், மக்கள் மற்றும் தொழில்நுட்பத்தின் மீதான முதலீடுகள் காரணமாக செயற்பாட்டு திறன் தொடர்ந்தும் மேம்படுகிறது.

**கிரயம் மற்றும் வருமான வளர்ச்சி**




**முன்நோக்கு**

புதிய ஆட்சேர்ப்புகளின் திட்டம், தந்திரோபாய இடங்களில் புதிய கிளைகளைத் திறத்தல் மற்றும் எண்ணியல் உள்கட்டமைப்பிலான முதலீடுகள் (தேய்மானம் மற்றும் கடனழிவு) ஆகியவற்றின் காரணமாக நடுத்தர ஒற்றைத் தானங்களுக்கு மேலே சற்றே ஓரளவு வளர்ச்சி அடைகின்றது.

## E விளைவுள்ள வரி வீதம் ஒப்பீட்டளவில் உயர்வாக உள்ளது

இந்த ஆண்டில், வரி மூலமான தேசத்திற்கான வங்கியின் பங்களிப்பு 2018 ஆம் ஆண்டில் 6.7 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடும் போது 34.3% உயர்ந்து 9.0 பில்லியன் ரூபாவாக இருந்தது. மொத்த வரிகளில், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி (NBT), கடன் மீள் செலுத்துகை (DRL) மற்றும் வருமான வரி ஆகியன உள்ளடக்கப்படுகின்றன.

ஆண்டின் போது வருமான வரி ஆண்டுக்கு 3.8 பில்லியன் ரூபாவாக இருந்தது, இது 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபாயை விட 3.4 பில்லியனாக 9.4% அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் நிதி சேவைகளுக்கான வரி 60.9% அதிகரித்து 2019 ஆம் ஆண்டில் 5.2 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட DRL இன் முழு ஆண்டு தாக்கம், நிதிச் சேவைகளின் வரி 2.0 பில்லியன் ரூபாயால் அதிகரிக்க காரணமாக அமைந்தது, இருப்பினும் அதிகரித்ததன் காரணமாக அதிக கடன் திருப்பிச் செலுத்தும் வரிக்கு மத்தியில் அனுமதிக்கக்கூடிய

செலவுகளின் காரணமாக விளைவுள்ள வரி விகிதம் 2018ல் 59.7% விருந்து 2019ல் 57.2% ஆக குறைந்தது.

### லாபத் தன்மை மீதான வரித் தாக்கம்




- செலுத்தப்பட்ட மொத்த வரிகள் (ரூபா மில்லியன்)
- வரிக்குப் பின்னான இலாபம் (ரூபா மில்லியன்)
- விளைவுள்ள வரி வீதம் (தொழிற்பாட்ட இலாபத்தின் அடிப்படையில் (%)
- வருமான வரி விளைவுள்ள வீதம் (வரிக்கு முன் இலாபதின் அடிப்படையில்) (%)

#### முன்னோக்கு

விளைவுள்ள வரி விகிதம் ஓரளவு குறைய வாய்ப்புள்ளது.

## F பாதுகாப்பான வருவாய்

சவாலான பொருளாதார நிலைமைகள் மற்றும் அதிக வரிச்சுமையின் மத்தியில் 2018 ஆம் ஆண்டின் 7.9 பில்லியன் ரூபாயை விட 31.7% ஆக வளர்ச்சி அடைந்து 2019 ஆம் ஆண்டில் 10.5 பில்லியன் ரூபாயாக வரிக்கு முந்தைய இலாபத்தை வங்கி பதிவு செய்துள்ளது. வரிக்குப் பின் வங்கியின் இலாபம் ரூபா 6.7 பில்லியன் ஆகும், இது கடந்த ஆண்டு அறிக்கையிடப்பட்ட 4.5 பில்லியன் ரூபாய்க்கு எதிராக 48.8% ஆல் அதிகரித்து உள்ளது. இதன் விளைவாக, ஒரு சாதாரண பங்கின் உழைப்பு 2018 ஆம் ஆண்டின் 6.72 ரூபாயிலிருந்து 6.1% அதிகரித்து 7.13 ரூபாவாக உயர்ந்துள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான வங்கியின் இலாபத்தின் எழுச்சி, பல்வேறு வருமான ஓட்டங்களில் அடைந்த முன்னேற்றங்கள் மற்றும் சேவை வைப்புத்தொகையின் செலவு குறைந்து உள்ளதால் அடையப்பட்டது.

கொள்கை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை, நிதி நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வரி நிவாரணங்கள் மற்றும் நிவாரணப் பொதி ஆகியவற்றிலிருந்து 2020 ஆம் ஆண்டில் பொருளாதாரம் மற்றும் வங்கித் தொழில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதால், 2020 ஆம் ஆண்டில் வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு செயற்திறன் மேலும் மேம்படும் என்று நாங்கள் கருதுகிறோம். எஸ்எம்இ(SME) களுக்கு இவ் வசதிகள் நீட்டிக்கப்படுவது மீட்டெடுப்பை விரைவுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உரிமையாண்மை மீதான எமது திரும்பல் கடந்த ஆண்டின் 10.95 சதவீதத்திலிருந்து 2019 இல் 15.32 சதவீதமாக கணிசமாக உயர்த்தப்பட்டது, மேலும் கடுமையான தொழிற்பாட்டு சூழலுக்கு மத்தியில் ஒரு நெகிழ்ச்சியான செயற்திறன் பதிவ செய்யப்பட்டதுடன், சொத்துக்களின் மீதான திரும்பலும் கடந்த ஆண்டில் பதிவான 0.78 சதவீதத்திலிருந்து 0.95% ஆக உயர்வு அடைந்தது.

வரிக்குப் பிந்தைய எங்கள் இலாபம் வங்கியின் நிலையான தொழிற்பாட்டு செயற்திறனின் பொருத்தமான குறிகாட்டியாக நாங்கள் கருதுகிறோம். கீழேயுள்ள வரைபடம் 2019 இன் வருவாய் செயற்திறனை உந்திய காரணிகளை சுருக்கமாகக் கூறுகிறது.

### உழைப்பு மீதான தாக்கம்




A – 2018 வரிக்குப் பின் இலாபம்
B – நிகர வட்டி வருமானம்
C – நிகர வட்டியல்லா வருமானம்
D – சேத இழப்பு
E – நிர்வாக மற்றம் ஏனைய மேந்தலைச் செலவினங்கள்
F – வரிகள்
G – 2019 வரிக்குப் பின் இலாபம்

### பங்கு ஒன்றுக்கான உழைப்பு




#### முன்நோக்கு

பங்குக்கான உழைப்பை நடுத்தர அளவு முதல் உயர் இரட்டைத் தான விகிதத்தில் பேணுதல்.

#### முற்றடக்க வருமானக் கூற்றிலான மாற்றங்கள்

முற்றடக்க வருமானக் கூற்றின் நட்டம் அதிகரிப்பதற்கான முக்கிய பங்களிப்புக் காரணி வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படாத உருப்படிகள் ஆகும். பதிவு செய்யப்பட்ட நட்டங்களில் 92% ஆனவை பங்களிப்பு செய்த வேலைவாய்ப்பின் பின்னான நன்மைக் கடப்பாடுகளை மீள்பரிசீலனை செய்வதால் ஏற்பட்டது. 2018 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபாய் 418.3 மில்லியனுக்கு எதிராக 2019இல் ஏனைய முற்றடக்க வருமானத்தின் மூலம் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்ட திறைசேரி முறிகளின் தொகுப்பின் சந்தை ஆதாயங்கள் மூலம் ஏற்பட்ட வருமான அறிக்கைக்கு மீள வகைப்படுத்தப்படும் உருப்படிகளிலிருந்து வங்கி 114 ரூபா மில்லியன் இலாபத்தைப் பதிவு செய்தது.

**உரிமையாண்மை மீதான திரும்பலின் விளக்கமான கட்டமைப்பு (உரிமையாண்மை மீதான திரும்பலின் முக்கிய இயக்கிகள்)**




**இலாபத்தன்மை விகிதங்கள்**




| | | 2019 % | 2018 % | 2017 % | 2016 % | 2015 % |
|---|---|---|---|---|---|---|
| | நிகர வட்டி எல்லை | **2.63** | 2.43 | 2.61 | 2.89 | 3.32 |
| கூட்டுக | வட்டி அல்லாத வருமானம்/சராசரி சொத்துக்கள் | **0.28** | 0.12 | 0.45 | 0.10 | 0.13 |
| கழிக்க | சேத இழப்புக்கள்/சராசரி சொத்துக்கள் | **0.05** | 0.09 | 0.08 | (0.01) | 0.26 |
| கழிக்க | மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்/ சராசரி சொத்துக்கள் | **1.43** | 1.38 | 1.15 | 1.18 | 1.28 |
| கழிக்க | நிதிச் சேவைகள் மீதான வரி/ சராசரி சொத்துக்கள் | **0.47** | 0.32 | 0.36 | 0.32 | 0.30 |
| சமன் | சொத்துக்கள் மீதான திரும்பல் | **0.95** | 0.78 | 1.47 | 1.51 | 1.60 |
| பெருக்குக | 1-நேர் வரி வீதம் | **64.03** | 56.67 | 68.74 | 71.40 | 66.54 |
| சமன் | வரியின் பின் இலாபம்/சராசரி சொத்துக்கள் | **0.61** | 0.44 | 1.01 | 1.08 | 1.07 |
| பெருக்குக | உரிமையாண்மைப் பெருக்கி | **25.09** | 24.92 | 26.95 | 27.21 | 29.23 |
| சமன் | உரிமையாண்மை மீதான திரும்பல் | **15.32** | 10.95 | 27.24 | 29.37 | 31.15 |

# சுருக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்று

| | | | 2019 | 2018 | 2017 | (2019 எதிர் 2018) வருடாந்த மாற்றம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில். | % |
| | | **மொத்த சொத்துக்கள்** | **1,157,966.7** | 1,036,845.6 | 1,010,977.4 | 11.7 |
| பக்கம் 100 | E | காசு மற்றும் காசுக்கு சமமானவை | **5,376.7** | 3,434.5 | 3,849.5 | 56.5 |
| | | வங்கியில் உள்ள வைப்புக்கள் | **12,364.5** | 17,588.5 | 23,437.3 | (29.7) |
| பக்கம் 99 | C | உய்த்தறி நிதிச் சாதனங்கள் | **11.6** | 4,740.1 | 1,360.7 | (99.8) |
| | | இலாப நட்டத்தின் மூலமான சீர் மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் | | | | |
| | | – சீர் மதிப்பில் அளவிடப்படுபவை | **11,459.9** | 16,680.4 | 6,472.3 | (31.3) |
| | | காலத் தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்திலான நிதிச் சொத்துக்கள் | | | | |
| பக்கம் 99 | B | – கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **454,395.0** | 422,894.7 | 375,703.7 | 7.4 |
| பக்கம் 99-100 | C | – கடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் | **615,634.3** | 518,948.0 | 555,468.6 | 18.6 |
| | | ஏனைய முற்றடக்க வருமானம் மூலமான சீர் மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் | **3,478.8** | 6,184.4 | 5,693.8 | (43.7) |
| | | சேய் உரிமத்திலான முதலீடுகள் | **4,811.0** | 1,700.0 | 900.0 | 183.0 |
| | | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | **14,163.5** | 13,465.8 | 12,395.7 | 5.2 |
| | | பயன்பாட்டுச் சொத்த உரிமைகள் | **1,073.5** | 0.0 | 0.0 | 100.0 |
| பக்கம் 100 | D | ஏனைய சொத்துக்கள் | **35,197.9** | 31,209.2 | 25,695.7 | 12.8 |
| பக்கம் 100 | F | **மொத்தப் பரிப்புக்கள்** | **1,113,589.3** | 993,750.3 | 971,881.7 | 12.1 |
| பக்கம் 100 | G | வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | **35,045.3** | 77,119.1 | 48,596.6 | (54.6) |
| | | உய்த்தறி நிதிச் சாதனங்கள் | **0.0** | 1.5 | 956.9 | (100.0) |
| | | காலத் தேய்மானம் செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படும் நிதிப் பரிப்புக்கள் | | | | |
| பக்கம் 100 | H | – வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | **1,016,574.3** | 839,574.4 | 737,212.6 | 21.1 |
| பக்கம் 100 | G | – கடன் வழங்கியோருக்கு செலுத்த வேண்டியவை | **21,203.2** | 14,804.8 | 12,837.0 | 43.2 |
| பக்கம் 100 | I | குத்தகைப் பரிப்பு | **1,066.9** | 0.0 | 0.0 | 100.0 |
| பக்கம் 100 | G | வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் | **26,691.7** | 52,389.1 | 162,709.0 | (49.1) |
| பக்கம் 100 | I | இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள் | **6,508.7** | 3,830.8 | 3,711.4 | 69.9 |
| | | பிற்போட்ட வரிப் பரிப்புக்கள் | **547.2** | 582.5 | 507.1 | (6.0) |
| | | ஏனைய பரிப்புக்கள் | **5,951.5** | 5,447.3 | 5,350.2 | 9.3 |
| | | சேய் உரிமங்களுக:கு செலுத்த வேண்டியவை | **0.5** | 0.8 | 0.8 | (27.0) |
| பக்கம் 101 | J | **மொத்த பங்குதாரர் உரிமையாண்மை** | **44,377.3** | 43,095.3 | 39,095.7 | 3.0 |
| | | கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கப்பட்ட மூலதனம் | **9,400.0** | 9,400.0 | 6,700.0 | 0.0 |
| | | சட்ட நியதி ஒதுக்க நிதி | **3,562.9** | 3,228.0 | 3,003.0 | 10.4 |
| | | நிறுத்தி வைத்த உழைப்பு | **4,464.4** | 3,984.7 | 1,102.8 | 12.0 |
| | | ஏனைய ஒதுக்கங்கள் | **26,950.0** | 26,482.6 | 28,289.9 | 1.8 |
| | | மொத்த மூலதனம் மற்றும் பரிப்புக்கள் | **1,157,966.7** | 1,036,845.6 | 1,010,977.4 | 11.7 |
| பக்கம் 101 | I | எதிர்பாராத பரிப்புகள் மற்றும் கடப்பாடுகள் | **10,355.2** | 4,481.4 | 18,320.3 | 131.1 |

## A வலுவான ஐந்தொகை வளர்ச்சி

வங்கியின் சொத்துத்தளம் முந்தைய ஆண்டின் இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 1.04 திரில்லியன் இல் இருந்து 11.7% அதிகரித்து ரூபா 1.16 திரில்லியன் ஆக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மதிப்பிடப் பட்டது. ஐந்தொகை வளர்ச்சி முறையே ரூபா 454.4 பில்லியன் மற்றும் ரூபா 422.9 பில்லியன் ஆக 2018 இறுதியில் மதிப்பிடப்பட்டு, 2019 இல் முதலீடுகள் 14.5% அதிகரித்து ரூபா 647.8 பில்லியன் ஆகவும், நிகர கடன்கள் 7.4% விரிவாக்கத்துடன் ரூபா 565.8 பில்லியன் ஆகவும் உயர்வடைந்து இருந்தன.

பொறுப்பு முக அடிப்படையில், வங்கியின் வைப்புத் தளம் ரூபா 1.02 திரில்லியன் ஆக 2019 ஆம் ஆண்டின் இறுதியில், முந்தைய ஆண்டின் ரூபா 839.6 பில்லியனுக்கு எதிராக 21.1% வளர்ச்சி அடைந்தது. இருப்பினும், எங்கள் கடன்பெறுகை ஒரு வருடம் முன்பு ரூபா 144.3 பில்லியன் என அறிக்கையிடப்பட்ட தொகையிலிருந்து 42.5% குறைந்து ரூபா 82.9 பில்லியன் ஆக, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்டிருந்தது.

## B சவால்களுக்கு மத்தியில் கடன் வழங்குவதில் மிதமான வளர்ச்சி வேகத்தைப் பேணுதல்

கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பது வீடமைப்பு வசதி மற்றும் மெய்ச் சொத்துக் கடன்கள், தனிநபர் கடன்கள், வாகனக் கடன்கள், கல்விக் கடன்கள், ஒன்றிணைந்த நிதிக் கடன்கள், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் தங்கக் கடன் முற்பணம், ஊழியர்களின் கடன்கள், அரசாங்கத்திற்கான கடன்கள் மற்றும் மறு கொள்வனவு விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வாங்கிய பத்திரங்களுக்கான விற்பனை ஒப்பந்தம் போன்ற நீண்ட காலக் கடன்களை உள்ளடக்கியது ஆகும். கடன்கள் மற்றும் முற்பணங்கள் கடந்த ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ. 422.9 பில்லியன் இல் இருந்து 7.4% அதிகரித்து ரூ. 454.4 பில்லியன் ஆக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்டது, இது முக்கியமாக சில்லறை கடன்களால் ஏற்பட்டது ஆகும். தனிநபர் நுகர்வுக்காக வழங்கப்பட்ட கடன்கள் (35.7%), கட்டுமான வேலைகளுக்காக/வீடமைப்பு வசதிக்காக வழங்கப்பட்ட கடன்கள் (27.9%) மற்றும் உட்கட்டமைப்பு விருத்திக்காக வழங்கப்பட்ட கடன்கள் (15.5%) ஆகியவற்றக்கான தேவைப்பாடுகள் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த மட்டத்தில் கடன்கள் மற்றும் முற்பண தொகுப்பில் ஆதிக்கம் செலுத்தின.

மொத்த செயற்படாத கடன்கள் (NPL) விகிதம் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 1.57% ஆக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து 13 அடிப்படைப் புள்ளியிலான அதிகரிப்பு, ஈஸ்டர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு கடன்களை மீட்டெடுப்பதில் உள்ள சிரமங்களால் ஏற்பட்ட தொழிற்துறை தொழிற்படாக் கடன்களின் பரந்த போக்கை பிரதிபலிக்கிறது. இருப்பினும், வங்கியின் கடன் தரம் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் தொழிற்துறை சராசரியான 4.7% உடன் ஒப்பிடும்போது நிலையான முறையில் பேணப்பட்டு இருந்தது.

### முன்னோக்கு

உயர் ஒற்றைத் தான நடுப்பகுதியிலான கடன் வளர்ச்சியை அடைதல் மற்றும் தொழிற்துறை சராசரியை விட தொழிற்படாக் கடன் விகிதத்தை குறைத்தல்.

## C முதலீடுகளுக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல்

### கடன் மற்றும் பங்கு பிணையங்கள் மீதான முதலீடுகள்

வங்கியின் மொத்த முதலீட்டுத் தொகுதி 2018 இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 541.8 பில்லியன் பெறுமதிக்கு எதிராக 16.4% வளர்ச்சியைக் கண்டு, ரூபா 630.6 பில்லியன் ஆக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்டன. அரச பத்திரங்கள், கூட்டு வணிகக் கடன் சாதனங்கள் மற்றும் நம்பிக்கை வைப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட கடன் சாதனங்கள் மொத்த தொகுப்பில் 99.2% பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தாலும், மீதமுள்ளவை பங்குகளை உள்ளடக்கியது ஆகும். வங்கியின் பங்குத் தொகுதி 2018 இல் ரூபா 1,878.9 மில்லியனாக இருந்து, முதலீட்டு மீளப் பெறுதல்கள் காரணமாக, 5.1% குறைந்து ரூபா 1,782.3 மில்லியனாக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்டது. அரசாங்கத்தின் நிதித் தேவைகளுக்கு பங்களிப்பதன் மூலம் வங்கி தொடர்ந்து தனது ஆணையை நிறைவேற்றி வருகிறது. அதன்படி, இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் (மொத்த முதலீட்டுத் தொகுதியில் 98.0% பங்கைக் கொண்டது) உள்ளிட்ட அரச பத்திரங்கள் 2018 ஆண்டின் ரூபா 523.2 பில்லியனை விட 17.1% அதிகரித்து ரூபா 612.7 பில்லியன் ஆகக் காணப்பட்டது. முக்கியமாக திறைசேரி முறித் தொகுதியில் 17.8% அதிகரிப்பு ஏற்பட்டது. கூட்டு வணிகக் கடன் பத்திரங்கள் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்கள் உள்ளிட்ட பிற கடன் சாதனங்கள், நம்பிக்கை சான்றிதழ் தொகுதியிலேற்பட்ட வீழ்ச்சி காரணமாக 3.0% குறைந்து ரூபா 12.6 பில்லியன் ஆகக் காணப்பட்டது.

### உய்த்தறி நிதி சாதனங்கள்

வங்கியின் உய்த்தறி நிதி சாதனங்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 4.7 பில்லியன் பெறுமதிக்கு எதிராக, 2019 டிசம்பர் முடிவில் ரூபா 11.6 மில்லியன் ஆகக் காணப்பட்டது. வெளிநாட்டு நாணய ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் இடருக்கு எதிராக தளம்பல் காப்புச் செய்து பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட அந்நிய செலாவணி இடமாற்று ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. இலங்கை ரூபா/அமெரிக்க டொலர் நாணய மாற்று விகிதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமான வெளிநாட்டு நாணயத்தின் மூலதனப் பகுதியின் இடரைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இலங்கை மத்திய வங்கியுடன் 249.31 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் அடிப்படையில் ஒரு மாத புதுப்பித்தல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, அதற்கு எதிராக 2014 செப்டம்பரில் வங்கி 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை, அமெரிக்க டொலர் வடிவில் வெளிநாட்டு கடன் மூலம் ஐந்து வருட காலத்திற்கு திரட்டியது. இக் கடன் பெறுகை முதிர்வில் 2019 செப்டம்பரில் தீர்க்கப்பட்டது.

நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளவாறு தற்போதுள்ள ரூபா 11.6 மில்லியன், ஸ்ரீலங்கா டெலிகொம்மிற்கு வழங்கப்பட்ட 2.0 பில்லியன் நீண்ட கால கடனினால் ஏற்பட்ட வட்டி வீத இடரை எதிர்கொள்வதற்காக DFCC வங்கியுடனான ஒப்பந்தங்களை குறிக்கிறது.

### ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முக்கியமாக காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் கணினி வன்பொருள் கொள்வனவினால் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக, கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 13.5 பில்லியன் மதிப்பில் இருந்து 5.2% அதிகரித்து ரூபா 14. 2 பில்லியன் ஆகக் காணப்படுகிறது.

### பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள்

2019 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கைக் கணக்கீட்ட நியமம் SLFRS 16, “குத்தகைகள்”, சில குறுகிய கால குத்தகைச் சொத்துக்கள் மற்றும் குறைந்த மதிப்பு சொத்துக்களைத் தவிர்த்து நிதி நிலைமைக் கூற்றில் கிட்டத்தட்ட அனைத்து குத்தகை ஒப்பந்தங்களையும் குத்தகைதாரர் ஏற்பிசைப்பதுடன், நிதிக் குத்தகை (நிதி நிலைமைகள் மீது) மற்றும் தொழிற்பாட்டுக் குத்தகை (நிதி நிலைமைக் கூற்றுக்கு புறம்பான) ஆகியவற்றுக்கு இடையில் ஓர் தெளிவான வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும் எனத் தேவைப்படுத்துகிறது. அதன்படி, வங்கி ரூபா 1.1 பில்லியன் பெறுமதியான அதன் அனைத்து குத்தகை ஒப்பந்தங்களுக்கும் 31 டிசம்பர் 2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதி நலைமைக் கூற்றில் தொடர்புபட்ட குத்தகைப் பரிப்புக்களுக்காக, “பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களை” ஏற்பிசைவு செய்துள்ளது.

### சேய் நிறுவனங்கள் மீதான முதலீடு

சேய் நிறுவனங்கள் மீதான முதலீடு 2018 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 1.7 பில்லியன் இல் இருந்து ரூபா 4.8 பில்லியன் ஆக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகரித்தது. அரசு வரவு செலவுத் திட்டம் 2016 இல் முன்வைக்கப்பட்ட திட்டத்துடன் இணைவாக, ரூபா 3.1 பில்லியன் இலங்கை சேமிப்பு வங்கியில் (SLSB) முற்றாக உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனமாக 2019 அக்டோபர் 11 இல் முதலீடு செய்யப்பட்டது (மேலும் விவரங்களுக்கு பக்கம் 68 முதல் 69 வரை பார்க்கவும்).

## D பிற சொத்துக்கள் மீதான அதிகரிப்பு

2019 ஆம் ஆண்டின் இறுதியில், வருமதிகள், முன்கூட்டிய கொடுப்பனவுகள், சிரேஷ்ட பிரஜைகளுக்கு வட்டி செலுத்துதல் தொடர்பாக திறைசேரியிலிருந்தான வருமதிகள், திறைசேரிக்கான முன்கூட்டிய கொடுப்பனவுகள் மற்றும் பெயரளவு/நிறுத்தி வைத்த வரி வருமதிகள் உள்ளிட்ட பிற சொத்துக்கள் ஒரு வருடத்திற்கு முன்பு ரூபா 31.2 பில்லியனில் இருந்து 12.8% ஆல் அதிகரித்து ரூபா 35.2 பில்லியன் ஆக உயர்வடைந்தது. வட்டி அல்லாத வருவாய் உழைக்கும் சொத்துக்கள் மொத்த சொத்துக்களில் 3% ஐக் குறிப்பதால், அத்தகைய தொகைகளை மீட்க தேவையான நடவடிக்கைகளை வங்கி மேற்கொண்டு வருகிறது.

## E காசு மற்றும் காசுக்கு சமமானவற்றை முகாமை செய்தல்

### காசு மற்றும் காசுக்கு சமமானவை மற்றும் வங்கிகளில் உள்ள வைப்புக்கள்

காசு மற்றும் காசுக்கு சமமானவை கையிலுள்ள காசு மீதி, மற்றும் வங்கிகளில் உள்ள காசு மீதிகள் மற்றும் அழைப்பு மற்றும் குறுகிய அறிவிப்பில் மீட்கத் தக்கதாக உள்ள பணத்தை உள்ளடக்கியது ஆகும். 2019 ஆம் ஆண்டின் இறுதியில், வங்கியில் ரூபா 5.4 பில்லியன் காசு மற்றும் காசுக்கு சமமானவை காணப்பட, இது 2018 ஐ விட 56.5% இனால் அதிகரித்த பெறுமதியாகக் காணப்பட்டது. வங்கிகளில் உள்ள வைப்புக்கள் என்பது குறுகிய கால வைப்பு ஆகும், இது கடந்த ஆண்டு 17.6 பில்லியன் பதிவாகியுள்ள தொகையில் இருந்து 29.7% குறைந்து ரூபா 12.4 பில்லியன் ஆக 2019 இல் காணப்பட்டது. காசு மற்றும் காசுக்கு சமமானவை மற்றும் வங்கிகளுடனான வைப்புக்கள் இரண்டும் உகந்த மட்டங்களில் பேணப்படுவதுடன், மேலும் வங்கியின் குறுகிய கால கடப்பாடுகள் மற்றும் திரவத் தன்மைத் தேவைகளை வசதியாக பூர்த்தி செய்ய பயன்படுத்தப் படுகின்றன.

## F மொத்தப் பரிப்புக்கள்

மொத்த கடன்கள் 2018 ஆம் ஆண்டில் 993.8 பில்லியனில் இருந்து 12.1% அதிகரித்து ரூபா 1.1 திரில்லியனாகக் காணப்பட்டது. மொத்த கடன்கள் முந்தைய ஆண்டை விட 42.5% குறைந்துள்ள போதிலும், முதன்மையாக வாடிக்கையாளர் வைப்புக்களிலான அதிகரிப்பு காரணமாகவே இந்த அதிகரிப்பு எற்பட்டது.

## G எங்கள் கடன் சுயவிவரத்தை விவேகமாக முகாமை செய்தல்

வங்கிகள் மற்றும் பிற கடன் வாங்கியவர்கள், வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் மற்றும் பிற கடன்கள் காரணமாக எங்கள் கடன்கள் ஒரு வருடம் முன்பு 144.3 பில்லியன் ஆக்க காணப்பட்டு, இவ் ஆண்டில் 42.5% சரிந்து ரூபா 82.9 பில்லியனாக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்டது. முக்கியமாக செப்டம்பர் 2019 இல் 250 மில்லியன் அமெரிக்க டாலர் பத்திரத்தை தீர்த்துக் கொண்டதோடு, ரெப்போ (REPO) கடன்களின் வீழ்ச்சியும் அதற்கான காரணமாக இருந்தது.

### வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை

வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை பிரதிநிதித்துவம் செய்யும் மேலதிகப் பற்றுக்கள், அழைப்புப் பணக் கடன் பெறுகைகள், வங்கிகள் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தங்களிலிருந்தான கடன் பெறுகைகள் ஆகியவை, 2018 ஆம் ஆண்டில் 77.1 பில்லியன் ஆகக் காணப்பட்டு, 54.6% குறைந்து ரூபா 35.0 பில்லியன் ரூபா வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான திருப்பிச் செலுத்துதல் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தக் கடன் பெறுகைகளின் குறைவு காரணமாக வீழ்ச்சி அடைந்தது.

### ஏனைய கடன் பெற்றோருக்கு செலுத்த வேண்டியவை

ஏனைய கடன் பெற்றவர்களுக்கு செலுத்த வேண்டியவை வங்கிகளுக்கு மீள் கொள்வனவு ஒப்பந்தக் கடன் பெறுகைகளுக்காக செலுத்த வேண்டியவற்றைக் காட்டுவதுடன், அது கடந்த ஆண்டின் 14.8 பில்லியனில் இருந்து 43.2 சதவீதம் உயர்ந்து ரூபா 21.2 பில்லியனாக 2019 ல் பதிவாகியுள்ளது.

### வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள்

வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் அமெரிக்க டொலர் வடிவிலான சர்வதேச சிரேஷ்ட பத்திரம், பாதுகாப்பற்ற துணை மீட்கக்கூடிய தொகுதிக் கடன்கள் மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பற்ற மீட்கத்தக்க தொகுதிக் கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். செப்டம்பர் 2019 இல், வங்கி 250 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள அமெரிக்க டொலர் வடிவிலான சிரேஷ்ட பத்திரத்தை முதிர்வின் பின்னர் தீர்த்து இருந்தது. எனினும், வங்கி மேற்கூறிய அமெரிக்க டொலர் மதிப்பிடப்பட்ட சிரேஷ்ட பத்திரத்துக்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமெரிக்க டொலர் /இலங்கை ரூபா இடமாற்று ஒப்பந்தத்தை விலக்குவதற்கான நிதி தேவைக்கு நிதியளிக்கும் நோக்கில் சிரேஷ்ட கடன் பத்திரங்களை வழங்குவதன் மூலம் 20.0 பில்லியன் நிதியினைத் திரட்டி இருந்தது. 2019 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மேற்கண்ட முன்னேற்றங்கள் காரணமாக, 2019 டிசம்பர் மாத இறுதியில் வழங்கப்பட்ட கடன் பத்திரங்களின் தொகுப்பு ஒரு வருடத்திற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட ரூபா 52.4 பில்லியனிலிருந்து 49.1% குறைந்து ரூபா 26.7 பில்லியன் ஆக 2019 இல் காணப்பட்டது. மேலும், இத் தொகுப்பில் மூலதன போதுமை விகிதத்தை மேம்படுத்துவதற்கும் வங்கியின் சொத்துக்களுக்கும் பொறுப்புத் தொகுதிகளுக்கும் இடையிலான முதிர்ச்சியில் பொருந்தாத தன்மையைக் குறைப்பதற்காகவும் வங்கியின் மூலதனத்தை அதிகரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 6.0 பில்லியன் மதிப்புள்ள ஐந்தாண்டு தொகுதிக் கடன்களையும் உள்ளடக்கும்.

## H வரலாற்றில் மிக உயர்ந்த வருடாந்திர அணி திரட்டலுடன் ஒரு திரில்லியன் வைப்பு அடைவு மட்டத்தை அடைதல்

வைப்புக்கள் வங்கியின் மிகப்பெரிய நிதி ஆதாரமாக இருப்பதுடன், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த சொத்துக்களில் 87.8% ஆக மதிப்பிடப்பட்ட வைப்புக்கள், ஒரு வருடத்திற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட 81.0% இலிருந்து அதிகரித்துள்ளது. வங்கியின் வைப்புத் தளம் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1.02 திரில்லியனை அடைவதற்கு, ஒரு வருடத்திற்கான ரூபா 171.4 பில்லியன் என்னும் மிகப் பெரும் அணி திரட்டலை அடைந்து உள்ளது. இது முந்தைய ஆண்டின் அடிப்படையான ரூபா 839.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 21.1% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. கால வைப்புக்களே இதற்கான முக்கிய காரணம் என்று கூறலாம், இது 2018 ஆம் ஆண்டில் 641.2 பில்லியன் கால வைப்புக்களுக்கு எதிராக 24% அதிகரித்து ரூபா 798.0 பில்லியன் வைப்புக்களாக 2019 ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்து, மொத்த வைப்புக்களில் காலவைப்பின் விகிதாசாரம் 2018ல் 75.6% இல் இருந்து மதிப்பிடப்படும் ஆண்டில் 77.8% ஆக இருந்தது. சேமிப்பு

வைப்புக்களும் முந்தைய ஆண்டில் ரூபா 198.3 பில்லியனிலிருந்து 10.2% ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்து, ரூபா 218.5 பில்லியன் வைப்புக்களாக 2019ன் போது வளர்ச்சி அடைந்து இருந்தது.

கடன் வழங்கும் தொகுப்பிலான மிதமான வளர்ச்சியும், வைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட அதிக அதிகரிப்பும் முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் கடன்-வைப்பு விகிதத்தினைக் குறைக்க காரணமாக அமைந்தது.

**கடன் - வைப்பு விகிதம்**




## I ஏனைய பரிப்புக்கள் மீதான உயர்வு

### ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு

ஓய்வூதிய பயன் கடப்பாடுகள் கடந்த ஆண்டு ரூபா 3.8 பில்லியனாக பதிவாகியுள்ளதுடன், டிசம்பர் 2019 இறுதியில் 69.9% அதிகரித்து ரூபா 6.5 பில்லியன் ஆக காணப்பட்டது. இது முக்கியமாக கழிவு வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், தற்போதைய ஊழியர்களின் ஊழியர்களின் மருத்துவ உதவித் திட்டத்திற்கு இணையாக ஓய்வூதியம் பெறுபவர்களின் மருத்துவ உதவித் திட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் வழங்கப்பட்ட ஓய்வூதியங்களின் அளவு அதிகரிப்பு ஆகியன காரணமாக அமைந்தன. இதன் விளைவாக, திருத்தப்பட்ட ஓய்வூதியதாரர்களின் மருத்துவ உதவித் திட்ட வரம்பு தற்போதுள்ள வரம்பை ஒப்பிடும்போது 87.0% உயர்ந்துள்ளது.

### குத்தகைப் பரிப்பு

SLFRS 16, “குத்தகைகள்” புதிய கணக்கீட்ட நியமத்தின் முதன்முறை பின்பற்றுகைத் தேவைகளுக்கு ஏற்ப ரூபா 1.1 பில்லியன் குத்தகைப் பரிப்புக்கள் ஏற்பசைவு செய்யப்பட்டன.

### ஏனைய பரிப்புக்கள்

கட்டணம் மற்றும் செலவுகள், நிதிச் சேவைகள் மீதான வரி மற்றும் நானாவித கடன் பெறுவோர் மீதான ஏற்பாடுகள் மற்றும் சென்மதிகள் ஆகிய உள்ளடங்கலான ஏனைய பரிப்புக்கள் 2018 இல் 5.4 பில்லியனாக இருந்து, 2019 இல் 9.3% அதிகரித்து ரூபா 6.0 பில்லியன் மதிப்பில் காணப்பட்டது.

### உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

இந்த ஆண்டில், வங்கி அதன் மொத்த கடப்பாடுகள் மற்றும் உறுமுரிமைகளில் கடந்த ஆண்டு 4.5 பில்லியனுடன் ஒப்பிடும் போது 131.1% அதிகரிப்புடன் ரூபா 10.4 பில்லியனாக வளர்ச்சி அடைந்தது. இது முக்கியமாக பயன்படுத்தப்படாத கடன் வசதிகளுக்கான உறுதிப்பாட்டின் அதிகரிப்பு மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்டு, ஆனால் மைய வங்கி திட்டத்திற்கு செலுத்தப்படாத தொகையிலிருந்து எழும் மூலதன கடப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## J எங்கள் மூலதனம் வலுவாக உள்ளது

### எங்கள் மூலதனம் வலுவாக உள்ளது

மொத்த பங்குதாரர்களின் உரிமையாண்மை முந்தைய ஆண்டில் 43.1 பில்லியன் ஆக இருந்து ஆண்டின் போது ரூபா 44.4 பில்லியனாக அதிகரித்தது. 2018 ஆம் ஆண்டில் 6.72 ஆக இருந்த ஒரு பங்குக்கான வருவாய் 2019 ஆண்டின் போது, ரூபா 7.13 ஆக அதிகரித்ததன் விளைவாக பங்குதாரருக்கான இலாபம் அதிகரித்தது. வங்கியின் மூலதன தளத்தை மேம்படுத்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட வழிகளைக் கருத்தில் கொண்டு, பங்கு இலாபம் செலுத்துதலை 29.9% ஆகக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம், இதன் மூலம் வங்கியினுன் உருவாக்கப்படும் நிதி அதிகரிக்கப்பட்டது.

## மூலதன முகாமை

வங்கியின் மூலதன முகாமை வங்கியின் நீண்ட கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைய உதவுவதன் மூலம் அக்கறைதாரருக்கு பெறுமதியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி அதன் மூலதன நிலைகளை பல காரணிகளுக்கு ஏற்ப முகாமை செய்கிறது, இதில் இடர் எதிர்கொள்ளப்படும் அளவுபற்றிய நமது உள்முக மதிப்பீடு, மதிப்பீட்டு நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள், ஒழுங்கு விதிமுறையாளர்களின் தேவைகள் மற்றும் பங்குதாரர் எதிர்பார்க்கும் வருமானம் ஆகியவை அடங்கும். தேசிய சேமிப்பு வங்கி அதன் மூலதன கட்டமைப்பானது அதன் மூலதன தளத்தின் நிதி செயல்திறன் மற்றும் இழப்பு உறிஞ்சுதல் திறனை மேம்படுத்துவதில் கிடைக்கும் மூலதன கருவிகள் மற்றும் மூலதன முகாமை நடவடிக்கைகளின் வரம்பை முழுமையாகப் பயன்படுத்துகிறது என்பதை உறுதிப்படுத்த முயல்கிறது.

**கடன் - உரிமை**




### மூலதன முகாமை நோக்கங்கள்

மூலதன முகாமையின் முக்கிய நோக்கங்கள் வங்கியின் வணிக தந்திரோபாயத்தை ஆதரிப்பதும், ஒழுங்குமுறை தேவைகளை மீறாமல் கடுமையான வீழ்ச்சிகளைக் கூட எதிர்கொள்ள போதுமான அளவு மூலதனத்தை உறுதி செய்வதும் ஆகும்.

வங்கியின் மூலதன முகாமைக் குறிக்கோள்கள் பின்வருமாறு சுருக்கமாகக் கூறப்படலாம்:

கடன் தரப்படுத்தல் குறிக்கோள்களுக்கு இணக்கமாக இருப்பதற்கும், சாத்தியமான அழுத்த சூழ்நிலைகளில் நிலைத்து நிற்கவும் போதுமான மூலதனத்தை வங்கி பேணுவதனை உறுதி செய்தல்

குறைந்தபட்ச ஒழுங்கு விதிமுறை மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக போதுமான மூலதனத்தைப் பேணுதல்




வங்கியின் தந்திரோபாய குறிக்கோள்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் வணிகங்களுக்கு மூலதனத்தை ஒதுக்கீடு செய்தல்

வங்கியின் இடர் தாங்குதிறனுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் போதுமான மூலதனத்தைப் பேணுதல்

## செயன்முறை

எங்கள் மூலதன முகாமை நோக்கங்களை அமைப்பதற்கு இயக்குநர்கள் சபை (சபை) பொறுப்பாகும். சபை இந்த நோக்கத்தை மூலதன இலக்குகளின் வடிவத்தில் வெளிப்படுத்துகிறது. இந்த நோக்கங்கள் பங்குதாரருக்கு வருமானத்தை வழங்குவதோடு, வணிக வளர்ச்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுக்கும், பாதகமான சூழ்நிலைகளைத் தாங்குவதற்கும் போதுமான மூலதன வளங்கள் கிடைப்பதை உறுதி செய்து, நமது தந்திரோபாயத் திட்டங்களையும் இடர் தாங்கு திறனையும் கருத்தில் கொண்டு பின்பற்றப்படுகின்றன. எங்கள் பங்கு இலாபக் கொள்கை, காலப்போக்கில் நிலையான பங்கு இலாபத்தை செலுத்துவதாகும், இது எங்கள் மூலதன முகாமை நோக்கங்களுக்கும் நீண்ட கால வளர்ச்சி வாய்ப்புகளுக்கும் ஒத்துப் போகிறது. எங்கள் பங்கு இலாபக் கொள்கைக்கு ஏற்ப, வங்கி ரூபா 2.0 பில்லியனை 2019 ஆம் ஆண்டில் இறுதிப் பங்கு இலாபமாக வங்கி செலுத்தி இருந்தது. எங்கள் மூலதன முகாமை நோக்கங்கள் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு (BIRMC) மூலம் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலதன முகாமை மற்றும் திட்டமிடல் செயன்முறை மூலம் செயற்படுத்தப்படுவதுடன், சொத்து மற்றும் பரிப்பு முகாமைக் குழு (ALCO) மேற்பார்வையிடுகின்றது. பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி ALCO க்கு தலைமை தாங்குகிறார். தற்போதைய மற்றும் திட்டமிடப்பட்ட மூலதன நிலை குறித்து குழு வழக்கமான புதுப்பிப்புகளைப் பெறுகிறது. மூலதனத் திட்டத்திற்கான ஒரு முக்கிய சாதனம் வருடாந்த உள்ளக மூலதன போதுமான மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) ஆகும், இதன் மூலம் எங்கள் திட்டமிடப்பட்ட மூலதன வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் எங்கள் மூலதன இலக்குகளுடன் தொடர்புடைய கோரிக்கையை மதிப்பிடுகிறோம். ICAAP மூன்று ஆண்டு கால அவகாசத்தைக் கொண்டு உள்ளதுடன் பல்வேறு சூழ்நிலைகளை உள்ளடக்கியது, இதில் மாறுபட்ட நோக்கம் மற்றும் தீவிரத்தின் அழுத்த நிலைகள் உள்ளடங்கும். இந்த ஆண்டில், வங்கி அதன் மூலதனத் தேவைகளை ICAAP இன் கீழ் தரத்திற்கான அணுகுமுறை, சந்தை இடருக்கான தரப்படுத்தப்பட்ட அளவீட்டு அணுகுமுறை மற்றும் மட்டம் 1 இன் கீழ் செயற்பாட்டு இடருக்கான அடிப்படை காட்டி அணுகுமுறை ஆகியவற்றைப் பயன்படுத்தி மத்திய வங்கி அறிவுறுத்தல்படி இயக்கியது. மட்டம் 2 இடர்களை மதிப்பிடுவதற்கான நடைமுறைகள், பரந்த அளவிலான இடர்கள் மற்றும் வங்கியின் இடர் மற்றும் மூலதன முகாமை திறன்களை கணக்கில் எடுத்துக்கொண்டு, வணிக பிரிவுகளுக்கான மூலதன ஒதுக்கீடு பாதீட்டு செயன்முறையின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டு ஆண்டு முழுவதும் கண்காணிக்கப்படுகிறது. மூலதன போதுமான தன்மை மற்றும் பிற மூலதனம் தொடர்பான சிக்கல்களை மதிப்பிடுவதற்கும், உத்திகள் மூலம் செயற்படுத்துவதற்கான அதன் பரிந்துரைகளை வகுப்பதற்கும் விரிவாக்குவதற்கும் வங்கியின் கூட்டுவணிக முகாமை அவ்வப்போது சந்தித்தது. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கி முற்றடக்க மற்றும் விரிவான அழுத்த சோதனைகளை மேற்கொண்டதுடன் வங்கி அதன் வணிக நடவடிக்கைகள், சபை ஒப்புதல் அளித்த தந்திரோபாய திட்டம், இடர் தாங்கு திறன், இடர் சுயவிவரம் மற்றும் அது செயற்படும் வெளிப்புற சூழல் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது நன்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்று முடிவுசெய்தது.

வங்கி வரலாற்று ரீதியாக தக்க வருவாய் மூலம் மூலதனத்தை உருவாக்கி வருகிறது. 2019 ஆம் ஆண்டிற்கான பங்கு இலாபம் செலுத்தும் விகிதம் 29.9% ஆக இருந்தது.

## மூலதனப் போதுகை விகிதங்கள் போதுமான மட்டங்களில் பேணப்படுகின்றன

எங்கள் இடர் எடையளித்த சொத்துக்கள் (RWA) 2018 இல் பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 227.8 பில்லியன் உடன் ஒப்பிடும் போது ரூபா 255.4 பில்லியனாக, 12.1% இனால் அதிகரித்து உள்ளது. இந்த அதிகரிப்பு சொத்து வளர்ச்சிக்கு ஏற்ப இருந்ததுடன் பெரும்பாலும் கடன் RWA இன் 13.7% அதிகரிப்பு மற்றும் செயற்பாட்டு RWA இல் 10.2% அதிகரிப்பு காரணமாக இருந்தது. (இடர் எடையுள்ள சொத்துகள் பற்றிய கூடுதல் குறிப்பு 433 முதல் 445 பக்கங்களில் உள்ள பாசல் III இன் கீழ் உள்ள தூண் 3 வெளிப்பாடுகளில் கொடுக்கப்பட்டுள்ளது)

**சராசரி இடர் எடையளித்த சொத்துக்கள் மீதான திரும்பல்**




மத்திய வங்கி 2019 டிசம்பரில் உள்நாட்டு முறை சார்ந்த முக்கிய வங்கிகளை (D-SIB) கையாள்வதற்கான கட்டமைப்பில் ஒரு அறிவுறுத்தலை வெளியிட்டது, அதில் வங்கிகளை ஒப்பீட்டு மதிப்பெண் அடிப்படையில் அடையாளம் கண்டுகொண்டது. சொத்து தளத்தில் ஒரு திரில்லியன் ரூபாயைக் கடந்த போதிலும், மட்டம் I மற்றும் மொத்த மூலதன மட்டங்களில் குறைந்தபட்ச மூலதனத் தேவைகள் முறையே 8.5% மற்றும் 12.5% ஆக இருக்கும் அறிவுறுத்தலின்படி வங்கி D-SIB அல்லாததாகவே உள்ளது. 31 டிசம்பர் 2019 நிலவரப்படி மட்டம் 1 மற்றும் வங்கியின் மொத்த மூலதன போதுமை விகிதங்கள் முறையே

12.02% மற்றும் 14.35% ஆக இருந்தன, இது குறைந்தபட்ச மூலதன தேவைகளுக்கு மேலாகும். பொருந்தக்கூடிய மாற்றங்களுடன் மொத்த வெளிப்பாடுகளில் மட்டம் 1 இல் அளவிடப்படும் முடுக்கு விகிதம் 5.13% ஆக மேம்பட்டது, இது குறைந்தபட்ச தேவையான 3.0% ஐ விட அதிகமாக உள்ளது.

**மொத்த சொத்துக்கள் எதிர் இடர் எடையளித்த சொத்துக்கள்**




**பாசல் III – மூலதனப் போதுமை**




A – இடர் எடையளித்த சொத்துகள் மீதான சராசரி திரும்பல் (வரிக்கு முன்)

B – இடர் எடையளித்த சொத்துகள் மீதான சராசரி திரும்பல் (வரிக்கு முன்) தொழிற்துறை

C – மட்டம் 1 மூலதனம்

D – மொத்த மூலதனம்

## முன்நோக்கு

ஒழுங்கு விதிமுறைத் தேவைகளுக்கு மேலே மூலதன போதுமான மற்றும் திரவத்தன்மை விகிதங்கள் பராமரிக்கப்படும்.

## நிதி மூலங்கள் மற்றும் பயன்பாடு

வங்கி அதன் நிதி நிலையை தீவிரமாக நிர்வகித்து வருவதுடன், கடன் வாய்ப்புகளை சாதகமாகப் பயன்படுத்தி, வாடிக்கையாளர் வைப்புக்கள் மற்றும் பிற மூலங்களின் வழியாக தொடர்ச்சியான அடிப்படையில் வங்கி ஒரு வலுவான திரவத் தன்மை நிலையை கொண்டுள்ளது என்பதை உறுதிசெய்கிறது. அரசுக்கு சொந்தமான வங்கியாக கிடைக்கும் மூலதனத்தின் வரம்புகளுடன் வங்கித் துறையின் தன்மையையும் கருத்தில் கொண்டு, உரிமையாண்மை விகிதத்திற்கான எங்கள் கடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 25 மடங்காக இருந்தது.

வங்கி நிதியிடலின் கிரயத்தைக் குறைக்கும் அதே வேளை, அதன் தற்போதைய மற்றும் எதிர்வு கூறப்பட்ட சொத்துக்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக, தகுந்த தொகையிலான, கால அவகாசம் உள்ள மற்றும் பன்முகப் படுத்தப்பட்ட நிதிகளைக் கொண்டு இருப்பதை வங்கி தொடர்ந்தும் உறுதி செய்கிறது. போட்டி மற்றும் ஒழுங்குமுறைச் சூழலைப் பொறுத்து பொருத்தமான நிதி உத்திகள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக நிதிச் சந்தைகள் தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

நிதிக் கலவையின் முக்கிய அங்கமாக வங்கி தனது வைப்புத் தளத்தை உருவாக்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்தியது. வங்கி வாடிக்கையாளர்களின் வைப்புக்கள், கடன் பத்திரங்கள், நீண்ட காலக் கடன்கள் மற்றும் மறு கொள்முதல் ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்படும் பத்திரங்கள் ஆகியவற்றை அதன் முதன்மை நிதி ஆதாரங்களாக நம்பியுள்ளது. வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புத்தொகை பொதுவாக குறுகிய முதிர்ச்சியைக் கொண்டுள்ளதுடன் அவற்றில் உபரும் பகுதி கோரிக்கையின் பெயரில் மீளச் செலுத்தப்பட வேண்டியவை ஆகும். இந்த வைப்புக்களின் குறுங்காலத் தன்மை வங்கியின் சொத்து மற்றும் பரிப்பு பிறழ் முதிர்வு காரணமாக எழும் திரவத் தன்மை இடரை அதிகரிப்பதுடன், வங்கி போட்டி மிக்க விலையிடல் மற்றும் சந்தைப் போக்குகளின் தொடர் கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் உத்வேகமாக முகாமை செய்கின்றது.

| | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். | 2017 ரூ. மில். |
|---|---|---|---|
| **நிதி மூலங்கள்** | | | |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான வருமானம் | **117,998** | 110,454 | 100,543 |
| வைப்புக்கள் | **170,677** | 101,634 | 75,188 |
| கடன் பெறுகைகள் | **6,288** | 31,086 | 32,251 |
| முதலீடுகளின் முதிர்வுகள் | **18,132** | 43,245 | 17,167 |
| ஏனையவை | **15** | 7 | 1,136 |
| | **313,110** | 286,426 | 226,285 |
| **நிதிகளின் பயன்பாடு** | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **31,734** | 48,291 | 63,125 |
| கடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | **94,261** | 15,976 | 39,002 |
| கடன் பெறுகைகளின் மீள் செலுத்துகை | **67,873** | 107,553 | 21,197 |
| செலுத்திய வட்டி | **83,363** | 86,068 | 73,070 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | **9,576** | 8,944 | 6,977 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் கொடுப்பனவுகள் | **4,450** | 3,732 | 3,411 |
| மூலதனச் செலவினம் | **1,505** | 1,742 | 1,050 |
| சேய் மற்றும் துணை உரிமங்கள் மீதான முதலீடுகள் | **3,111** | 800 | – |
| பங்கு இலாபங்கள் | **2,000** | 500 | 5,111 |
| செலுத்திய வரிகள் | **8,725** | 6,738 | 7,620 |
| ஏனையவை | **6,512** | 6,082 | 5,722 |
| | **313,110** | 286,426 | 226,285 |

### தேசிய சேமிப்பு வங்கியின் நிதியிடல் மற்றும் பயன்பாடு 2019

கடன் - வைப்பு விகிதங்கள் 2019 இன் முடிவில் 44.70% ஆக இருந்தது, இது ஒரு வருடம் முன்பு அறிவிக்கப்பட்ட 48.06% ஐ விடக் குறைவாக இருந்ததுடன், இது முந்தைய ஆண்டை ஒப்பிடும் போது கடன் வளர்ச்சியில் மிதமான தன்மை காரணமாக அமைந்து இருந்தது. மேலும், அரசாங்கப் பத்திரங்களில் வருடத்தில் திரட்டப்பட்ட 60% வைப்புத்தொகையை இடர் இல்லாத குறைந்தபட்ச விளைவைத் தரும் விகிதத்தில் முதலீடு செய்வதற்கான சட்டபூர்வமான தேவையால் வங்கி கட்டுப்படுத்தப்படுகிறது. 2019 டிசம்பர் மாத இறுதியில் அரச பத்திரங்களை மொத்த வைப்பு விகிதத்திற்கு உகந்த அளவில் 60.88% ஆக பராமரிக்க முடிந்தது, இது 2018 இல் அறிக்கையிடப்பட்ட 60.94% இலிருந்து ஓரளவு குறைந்துள்ளது.

**நிதி மூலங்கள்**




**நிதிகளின் பயன்பாடு**




கொள்ளப்பட்ட சேய் நிறுவனமாக ரூபா 3.1 பில்லியன் பெறுமதிக்கு கையகப் படுத்தியமை மற்றும் ரூபா 2.0 பில்லியன் பங்கு இலாபங்களை செலுத்திய நிதி நடவடிக்கை, கடந்த ஆண்டை விட 300% அதிகரிப்பாகவும், தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உழைக்கப் பட்ட நேர்க் கணிய காசப் பாய்ச்சலை பகுதி அளவில் எதிர்த் தீர்த்தது.

### ஆறு மூலதனங்களின் மீதான முதலீடு

கடந்த மூன்று ஆண்டுகளில், மொத்த மூலதன முதலீடு ரூபா 5.6 பில்லியனில் நாம் முதலீடு செய்துள்ளதுடன், அதில் ரூபா 2.3 பில்லியன் 2019 இல் முதலீடு செய்யப்பட்டது. இது எங்கள் வணிகத் திட்டங்களுக்கு ஏற்ப முந்தைய ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட 2.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது 7.3% அதிகரிப்பு ஆகும். எங்கள் முதலீடுகளில் நாம் முக்கியமாக நடைமுறை அல்லாச் சொத்துக்கள், திறன் மேம்பாடு, சமூக மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் எண்ணியல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பங்கள் மீதான வணிக மாற்ற திட்டங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தினோம்.

**காசுப் பாய்ச்சல் முகாமை**

| | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல் | **16,462.8** | 9,117.9 |
| தொழிற்பாட்டு சொத்துக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | **(114,421.5)** | (24,660.1) |
| தொழிற்பாட்டு பரிப்புக்களிலான அதிகரிப்பு/(குறைவு) | **108,707.7** | 23,714.6 |
| செலுத்தப்பட்ட வருமானன வரி | **(3,798.6)** | (3,365.8) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான நிகர காசு** | **6,950.4** | 4,806.6 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான நிகர காசு** | **(2,228.5)** | (3,843.8) |
| **நிதியீட்ட நடவடிக்கைகளில் இருந்தான நிகர காசு** | **(2,780.0)** | (1,280.0) |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிலான நிகர (அதிகரிப்பு)/குறைவு | **1,941.9** | (317.2) |
| ஆண்டு ஆரம்பத்தில் இருந்த காசு மற்றும் காசுக்கு சமமானவை | **3,352.0** | 3,669.2 |
| ஆண்டு இறுதியில் இருந்த காசு மற்றும் காசுக்கு சமமானவை | **5,293.9** | 3,352.0 |

எங்கள் காசு மற்றும் காசுக்கு சமமானவை 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 5.3 மில்லியனாகக் காணப்பட்டது. இது தொழிற்பாட்டு நடவடிக்கைகள் அதிகரித்ததன் விளைவாக முந்தைய ஆண்டை விட 57.9% அதிகரித்துள்ளது. இலங்கை சேமிப்பு வங்கியை (SLSB) 100% உரிமை

| | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். | 2017 ரூ. மில். |
|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | **1,516** | 1,295 | 396 |
| பயிற்சி மற்றும் அபிவிருத்தி | **40** | 39 | 34 |
| தகவல் தொழிநுட்பம மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பு விருத்தி | **691** | 772 | 712 |
| சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | **30** | 17 | 20 |

## நீண்ட கால நிதியிடல்

எங்கள் நீண்டகால நிதி என்பது பங்குதாரரின் உரிமையாண்மை, நீண்ட கால கடன் பெறுகைகள், நிதிச் சாதனங்களின் வழங்கல், நீண்ட கால வைப்புக்கள் மற்றும் பிற நீண்ட கால கடன்கள் ஆகியவற்றின் கலவையாகும்.

எங்கள் நீண்டகால நிதி விகிதம் 2018 இல் பதிவு செய்யப்பட்ட 8.3 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 8.9 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில், ரூபா 20 பில்லியன் சிரேஷ்ட கடன் பத்திரங்களை வழங்குவதன் மூலம் வங்கி வெற்றிகரமாக நீண்டகால நிதியுதவியை அதிகரித்து உள்ளது.

## கடன் சுயவிவரம்

எங்கள் நீண்ட கால மூலதன விரிவாக்க திட்டங்கள் மிதக்கும் மற்றும் நிலையான வீத நீண்ட கால கடன் மற்றும் உள்நாட்டில் உருவாக்கப்படும் நிதிகளின் கலவையால் நிதியளிக்கப்படுகின்றன.

| கடன் சுய விபரம் | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். | 2017 ரூ. மில். |
|---|---|---|---|
| குறுங் கால (1 வருடத்துக்குக் குறைந்த) | **50,994** | 126,281 | 179,857 |
| நடுத்தர கால (1 முதல் 3 வருடங்கள்) | **25,623** | 12,032 | 38,286 |
| நீண்ட காலம் (3 வருடத்துக்கு மேல்) | **6,323** | 6,000 | 6,000 |
| | **82,940** | 144,313 | 224,143 |

| கடன் சுய விபர கட்டமைப்பு | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். | 2017 ரூ. மில். |
|---|---|---|---|
| மீள் கொள்வனவு ஒப்பந்த கடன் பெறுகை | **44,142** | 73,658 | 61,253 |
| அந்நிய நாணயக் கடன் பெறுகை | **12,023** | 18,183 | – |
| வழங்கிய சிரேஷ்ட பத்திரங்கள் | – | 46,383 | 156,703 |
| இரண்டாம் நிலைப் பரிப்புக்கள் | **6,006** | 6,006 | 6,006 |
| தொகுதிக் கடன்கள் | **20,685** | – | – |
| ஏனையவை | **84** | 83 | 180 |
| | **82,940** | 144,313 | 224,143 |

## கடன் மதிப்பீடு

எங்கள் கடன் மதிப்பீடுகள் நமது சொந்த கணிசமான இடர்களால் மட்டுமல்ல, இலங்கையின் இறையாண்மைப் பத்திரக் கடன் மதிப்பீட்டின் நகர்வு போன்ற முறைசார் இடர்களாலும் பாதிக்கப்படுகின்றன. டிசம்பர் 2018 இல், ∴பிட்ச் மதிப்பீடுகள் இறையாண்மையின் நீண்ட கால வெளிநாட்டு- நாணய வழங்குநரின் இயல்புநிலை மதிப்பீட்டை “B+” இலிருந்து “B” ஆக நிலையான கண்ணோட்டத்துடன் தரமிறக்கியது. இலங்கையின் தேசிய மதிப்பீட்டு அளவை மறு சீரமைத்ததைத் தொடர்ந்து, ∴பிட்ச் மதிப்பீடுகள் தேசிய சேமிப்பு வங்கியின் (NSB) தேசிய நீண்டகால மதிப்பீட்டை பிப்ரவரி 2019 இல் “AAA (lka)” இலிருந்து “AA+ (lka)” என்று திருத்தியுள்ளன. மீண்டும் 2019 இன் பிற்பகுதியில், ∴பிட்ச் மதிப்பீடுகள் இலங்கையின் நீண்ட கால அந்நிய செலாவணி வழங்குநரின் இயல்புநிலை மதிப்பீட்டின் நிலைப்பாட்டை எதிர்மறையாக மாற்றியமைத்தன, மேலும் வரி குறைப்பு காரணமாக “B” ஐ உறுதிப்படுத்தியுள்ளது, இது புதிய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நிதிச் சுமையை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், ICRA Lanka Limited; [SL] AAA வழங்குபவரின் மதிப்பீட்டை 2019 ஆம் ஆண்டில் வங்கிக்கு நிலையான கண்ணோட்டத்துடன் வழங்கியுள்ளது.

## பங்கு இலாபம்

வங்கி ரூபா 2019 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு 2.0 பில்லியன் பங்கு இலாபம் வழங்கி உள்ளது, இது முந்தைய ஆண்டில் செலுத்தப்பட்ட 500 மில்லியன் அளவுக்கு 4 மடங்கிற்கும் மேலான தொகை ஆகும். ஒரு பங்கிற்கு பங்கு இலாபம் 2018 இல் ரூபா 0.8 க்கு எதிராக 2019 இல் ரூபா 2.13 வழங்கப்பட, பங்கு இலாபக் காப்பு விகிதம் 2019 ஆம் ஆண்டில் பங்கு இலாப செலுத்தும் விகிதத்தின் அதிகரிப்பு காரணமாக கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட 9.0 மடங்கினை விடக் குறைந்து 3.35 மடங்காக காணப்பட்டது.

### விளைவுள்ள பங்கு இலாப வீதம் மற்றும் பங்கு இலாபக் காப்பு




## திரவத் தன்மை முகாமை

அழுத்தம் மிக்க சந்தை நிலைமைகளில் திரவத் தன்மை இடரை மதிப்பிடுவதற்கு ஏற்ப பொருத்தமான திரவத் தன்மை இடையகங்கள் நடத்தப்பட்டன. கொந்தளிப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட திரவத் தன்மை சூழல்கள் இருந்தபோதிலும், செயற்திறன் மிக்க திரவத் தன்மை முகாமை நடவடிக்கைகள் மூலம் ஐந்தொகை வளர்ச்சியை முழுமையாக ஆதரவு அளிக்கப்க்க போதுமான திரவத் தன்மை பராமரிக்கப் பட்டது.

### திரவத் தன்மையான சொத்துக்களுக்கு பரிப்பு




*(மத்திய வங்கி அறிக்கையிடலின் படி)*

ஒழுங்குமுறை மற்றும் நம்பத்தகுந்த அழுத்த சூழ்நிலைகளை சந்திக்க சந்தைப்படுத்தக்கூடிய மற்றும் திரவ சாதனங்களின் தொகுதிகள் திரவத் தன்மைகளில் எதிர்பாராத இடையூறுகளுக்கு எதிராக பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டன. இந்த தொகுதிகள் பல்வகைப்படுத்தல் மற்றும் திரவத் தன்மையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்குள் முகாமை செய்யப்படுகின்றன. முகாமை செய்யப்பட்ட திரவத் தன்மை, பாசல் III திரவத் தன்மைக் காப்பு விகிதத்தின் (LCR) கீழ் தகுதிவாய்ந்த உயர் தர திரவ சொத்துக்கள் (HQLA) உள்ளிட்ட பிணைப்பொறுப்பளிக்கப்படாத சந்தைப்படுத்தக்கூடிய கருவிகளைக் குறிக்கிறது.

பாசல் III இன் திரவத் தன்மைக் காப்பு விகிதம் வங்கியின் 30 நாட்காட்டி நாள் திரவத் தன்மை இடர் சுயவிவரத்தின் குறுகிய கால நெகிழ்வுத்தன்மையை ஊக்குவிக்கிறது, இது ஒரு அழுத்தமான சூழலில் சாத்தியமான வெளிப்பாடுகளைச் சந்திக்க போதுமான உயர் தர திரவச் சொத்துக்கள் இருப்பதை உறுதிசெய்கிறது. பாசல் III நிகர நிலையான நிதி விகிதத்தின் (NASFR) நோக்கம் வங்கித் துறையில் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் பிற்புலத்தை மேம்படுத்துவதே ஆகும், இதன் மூலம் வங்கிகளின் சொத்துக்களின் கலவை மற்றும் ஐந்தொகை நடவடிக்கைகள் தொடர்பாக நிலையான நிதி விவரங்களை பராமரிக்க வேண்டும். கிடைக்கக்கூடிய நிலையான நிதி NSFR ஆல் கருதப்படும் ஓராண்டு கால எல்லைக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் மூலதனம் மற்றும் பரிப்புகளின் பகுதி என வரையறுக்கப்படுகிறது.

எங்கள் திரவத் தன்மை சுயவிவரம் ஆரோக்கியமாக இருந்தது, சட்டரீதியான திரவச் சொத்து விகித (SLAR) தேவைப்பாட்டுக்கேற்ப திரவச் சொத்துக்கள் மற்றும் பிற திரவத் தன்மை ஆதாரங்கள் 33.9% ஆல் அதிகரித்து ரூபா 568.5 பில்லியனை அடைந்தது. LCR, மொத்த உயர் தரமான திரவ சொத்துக்களால் 30 நாட்களில் நிகர பணப் பரிமாற்றத்தால் அளவிடப்படுவதுடன், இது ஆண்டு முழுவதும் தொடர்ந்து 100% க்கு மேல் பராமரிக்கப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள 2019 இன் முடிவில் எங்கள் திரவத் தன்மை காப்பு விகிதங்கள் குறைந்தபட்ச தடைகளை விட மேலாக இருந்தன. வங்கியின் நீண்டகால நிதி ஸ்திரத்தன்மையை அளவிட பயன்படும் NSFR 175.18% ஆக மேம்பட்டது. கீழேயுள்ள விகிதங்களை வங்கி தனியான அடிப்படையில் கணக்கிடுகிறது.

| | 2019 | 2018 | அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|
| SLAR – குறைந்த பட்சத் தேவை 20% | **60.20** | 54.88 | 5.32 |
| ரூபா LCR – குறைந்த பட்சத் தேவை (2019 – 100%, 2018 – 90%) | **278.12** | 245.06 | 33.06 |
| அனைத்து நாணய அலகு LCR – குறைந்த பட்சத் தேவை (2019 – 100%, 2018 – 90%) | **276.64** | 321.29 | (44.65) |
| NSFR – குறைந்த பட்சத் தேவை (2019 – 100%) | **175.18** | 146.67 | 28.51 |

## நிதியிடல் மற்றும் திரவத் தன்மை இடரை முகாமை செய்தல்

நிதி இடைநிலை அடிப்படையில் வங்கியின் முதன்மை நோக்கு குறுகிய கால வைப்புகளை நீண்ட கால கடன்களாக மாற்றுவதாகும். இந்த வகிபாகத்தை நிறைவேற்றும் போது, வங்கிகள் இயல்பாகவே திரவத் தன்மை பொருத்தமின்மைக்கு ஆளாகின்றன, இதன் விளைவாக நிதி மற்றும் சந்தை திரவத் தன்மை இடர்கள். வலுவான திரவத் தன்மை இடர் முகாமை கட்டமைப்பின் மூலம், வங்கி செயற்பாடுகள் சாதாரண மற்றும் அழுத்த நிலைமைகளின் கீழ் தடையின்றி தொடர்கின்றன என்பதை உறுதிப்படுத்த அதன் நிதி மற்றும் சந்தை திரவத் தன்மை இடரை வங்கி முகாமை செய்கிறது. திரவத் தன்மை இடர் முகாமை கட்டமைப்பை ஆதரிக்கும் முக்கிய நோக்கங்கள் எல்லா நேரங்களிலும் நிதி சந்தை நம்பிக்கையை பராமரித்தல், முக்கிய பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் ஒழுங்குமுறை திரவத் தன்மைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவை அடங்கும்.

வங்கி மற்றும் நிதிச் சேவை முறை மீதான பொது நம்பிக்கையைப் பேணுவதற்கு வங்கி நிலையான நிதி ஆதாரங்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதற்கும், எல்லா நேரங்களிலும் போதுமான அளவு திரவத் தன்மையை பராமரிப்பதற்கும் வங்கி மூலதனத்தைப் பொறுத்தவரை நிதி மற்றும் திரவத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. பங்குதாரருக்கான வருவாயை உருவாக்குவதற்கான அதன் இயக்கத்தில் தேசிய சேமிப்பு வங்கி ஒருபோதும் அதன் திரவத் தன்மையில் விட்டுக் கொடுப்புக்களை செய்யாது.

திரவத் தன்மை இடர் முகாமை செயல்பாட்டில் சொத்து, பரிப்பு குழுவினால் வழக்கமான பகுப்பாய்வு மற்றும் திரவத் தன்மை நிலையை கண்காணித்தல் மற்றும் சந்தை அணுகலை பராமரித்தல் ஆகியவை அடங்கும். வழக்கமான திரவத் தன்மை முன்னறிவிப்புகள், திரவத் தன்மை விகிதங்கள் மற்றும் முதிர்வு இடைவெளி பகுப்பாய்வு ஆகியவை இந்த நோக்கத்திற்காக பகுப்பாய்வு கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. திரவத் தன்மை மற்றும் நிதி இடர் ஆகியவை அளவீட்டு வரம்பைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றன, இதில் திரவத் தன்மை பாதுகாப்பு விகிதம் (LCR) மற்றும் நிகர நிலையான நிதி விகிதம் (NSFR) ஆகியவை அடங்கும். திரவத் தன்மை இடர் முகாமை குறித்த கூடுதல் விவரங்களுக்கு பக்கங்கள் 263 முதல் 266 வரை இடர் முகாமை அறிக்கையைப் பார்க்கவும்.

## நிதி செயற்திறன் முன்நோக்கு

நிலையான முதலீடுகளின் மாற்றம், உலகளாவிய வளர்ச்சி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை மீதான நம்பிக்கையின் மீளுருவாக்கம், நிதி ஒருங்கிணைப்பு கவனத்திற்குரியதாக இருந்தாலும், எதிர்மறையான இடர் கடன் மதிப்பீடுகளுடன், 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5% ஆன ஒரு சாதாரண முன்னேற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம் (சர்வதேச நாணய நிதியம்). இலங்கை மத்திய வங்கி வட்டி விகிதங்களை சிறிது காலம் நிறுத்தி வைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த அனுமானங்களின் அடிப்படையில், மற்றும் முக்கிய அரசியல், பொருளாதார அல்லது ஒழுங்குமுறை முன்னேற்றங்களைத் தவிர்த்து, 2020 ஆம் ஆண்டில் எங்கள் கடன் மற்றும் வைப்பு வளர்ச்சி மேம்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். கடன்கள் மற்றும் முற்பணத் தொகுப்பிலான வீதம் மற்றும் விரிவாக்கம் காரணமாக எங்கள் நிகர வட்டி எல்லை அடுத்த ஆண்டு ஓரளவு மேம்படும்.

செயற்பாட்டு செலவுகள் நன்கு கட்டுப்படுத்தப்படும், மேலும் எங்கள் தொழிற்பாட்டு இயக்கிகள் கடந்த ஆண்டை விட மேம்பட வேண்டும். SLFRS 9 கணக்கீட்டு நியமம் நிலையற்ற தன்மையை அதிகரிக்கக் கூடும் என்றாலும், நிலையான கடன் இழப்பு விகிதத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம். எங்கள் மூலதன விகிதம் ஒழுங்கு விதிமுறை இலக்குகளுக்கு மேலே இருக்கக்கூடும், இது எங்கள் தற்போதைய பங்கு இலாபம் பாதுகாப்பை பராமரிக்க அனுமதிக்கும். கடைசியாக, உரிமையாண்மை மீதான எங்கள் இயல்பாக்கப்பட்ட வருவாயும் 2020 ஆம் ஆண்டில் சற்று முன்னேற வேண்டும்.

ஆயினும்கூட, உலக சுகாதார அமைப்பால் (WHO) ஒரு தொற்றுநோயாக அறிவிக்கப்பட்டுள்ள கொவிட்-19 பரவலுடன் உலகம் முழுவதும் வங்கி மற்றும் நிதித்துறை உள்ளிட்ட இலங்கை பொருளாதாரம் சார்ந்த சூழ்நிலை மாறிவிட்டது. மேலதிக விபரங்களை பக்கம் 34 இல் “தொழிற்பாட்டு சூழல்” பகுதியின் கீழ் காணலாம்



| முக்கிய பெறுபேற்றுக் குறிகாட்டி | **2019 செயற்றிறன்** | முன்னோக்கு 2020 | நடுத்தர காலம் முதல் நீண்ட கால இலக்குகள் |
|---|---|---|---|
| உரிமையாண்மை மீதான திரும்பல் | **15.32%** | நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் படி | 10.0% – 12.5% |
| நிகர வட்டி எல்லை | **2.63%** | நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் படி | 2.5% – 3.0% |
| வைப்புக்களிலான வளர்ச்சி | **21.1%** | நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் படி | 10.0% – 12.0% |
| வட்டி வருமானத்திலான வளர்ச்சி | **7.4%** | நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் படி | 11.0% – 11.5% |
| மொத்த மூலதனப் போதுகை விகிதம் | **14.35%** | சட்ட நியதிக் குறைந்த பட்ச எல்லையிலும் அதிகமாக | சட்ட நியதிக் குறைந்த பட்ச எல்லையிலும் அதிகமாக |
| கிரய - வருமான விகிதம் | **49.35%** | நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் படி | 53% – 54% |

# வணிக வரிசைகள் மீளாய்வு

## கிளை முகாமை



### உற்பத்திகள் மற்றும் சேவைகள்

வைப்புக்களை ஏற்றல், சில்லறை கடன் வழங்குதல், வங்கி உத்தரவாதம், அட்டை சேவைகள் மற்றும் கொடுக்கல்வாங்கல் உள்ளடங்கலான முழு வீச்சிலான சேவைகள்

### வாடிக்கையாளர்கள்

இயற்கையான நபர்கள் மற்றும் சட்டரீதியான நபர்கள்.

### விநியோக வழிமுறைகள்

கிளைகள், ATMகள், தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள், CDM/CRM இயந்திரங்கள், இணையவழி வங்கி, தொலைபேசி, அழைப்பு நிலையம் மற்றும் கையடக்க POS இயந்திரங்கள்.

### தொழிற்பாட்டு சூழல்

- ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்த பொருளாதார நடவடிக்கைகள்
- ஏனைய பணக் கொள்கைகளுடன் இணைந்த, வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் மீது விதிக்கப்பட்ட வட்டி உச்சவரம்பு தீர்மானம் மேற்கொள்ளலை இலகுபடுத்தியது.
- கடன் வளர்ச்சியிலான மந்தநிலை

### இடர் மற்றும் சவால்கள்

- சொத்து தரத்தில் தொடர்ச்சியாக வீழ்ச்சி
- சேமிப்புத் திரட்டலை அதிகரிப்பதன் மூலம் குறைந்த செலவு நிதியிடலை அதிகரித்தல்
- வட்டி வருமானம் மற்றும் வட்டி எல்லையிலான வட்டி வீத உச்சவரம்பின் தாக்கம்
- வீழ்ச்சியடையும் சந்தைப் பங்கு
- கிராமப்புற வைப்புக்கள் படிப்படியாக அடிமட்ட நிதி நிறுவனங்களுக்கு நகர்வடைதல்
- குறைந்தளவு அட்டை பயன்பாட்டு நிலை
- அரசு பத்திரங்கள் மீதான முதலீட்டின் கட்டாயத் தேவைப்பாடு காரணமாக வரையறுக்கப்பட்ட மூலங்கள்

### தந்திரோபாய கவனம் செலுத்தும் பகுதிகள்

- எமது வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்வதுடன், புதிய வாடிக்கையாளர் சேகரிப்பில் கவனம் செலுத்துதல்
- உற்பத்தி நோக்குநிலையில் இருந்து எமது உறவுமுறையில் கவனம் செலுத்தி, வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வாழ்க்கைக் கட்டங்கள் மூலமாக சேவை செய்தல்
- நிகர வட்டி வருமானம் மற்றும் கொடுக்கல் வாங்கல் எண்ணிக்கைகளில் அதிகரித்த கவனம்
- முன்னெச்சரிக்கையான கடன் கொள்கை மற்றும் சேகரித்தல் மற்றும் சேத இழப்புகளிலான கவனம்
- கிரய வினைத்திறன்களை தொழிற்படுத்தல்
- நியாயமான வளர்ச்சியுடன் சந்தை பங்கை பேணுதல்

### 2019 இலான முக்கிய விருத்திகள்

- கிளைகள் மற்றும் தபால் வலையமைப்பு மூலம் இதுவரையான அதிகபட்ச வைப்பாகிய ரூபா 171.4 அடையப்பட்டது
- இவ்வாண்டில் 1 புதிய கிளை திறக்கப்பட்டதுடன், 26 CRM இயந்திரங்கள் பொருத்தப்பட்டன.
- 13,000 க்கும் மேற்பட்ட புதிய வாடிக்கையாளர்கள் இணைய வங்கி வலையமைப்பில் சேர்க்கப்பட்டனர்
- DMS முறைமையின் செயற்படுத்தல்.
- ”சிஹினா மாலிகா” என்னும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக சிறப்பு வீட்டுக் கடன் திட்டம் அறிமுகம்
- “தேசேவ இ-இணைப்பு எப்போது வேண்டுமானாலும் இணையவும்” என்ற கருப்பொருளுடனான வங்கி சுய பதிலளிக்கும் இணையப் பயன்பாட்டின் அறிமுகம்
- கிராமப்புற வைப்புக்களை அதிகரிக்கும் வகையில், பிராந்திய முகாமையாளர்களின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டு தபால் வங்கிப் பிரிவு பலப்படுத்தப்பட்டது
- இணைய வங்கிப் பிரயோகத்துக்காக, லங்கா பே உற்பத்திகளின் அறிமுகம் (சுங்க கொடுப்பனவுகள், BOI கொடுப்பனவுகள், நேரடி வரவு வைத்தல், உள்நாட்டு இறைவரிக் கொடுப்பனவுகள்)
- நட்டமடையும் கிளைகள் 54% ஆல் குறைக்கப்பட்டது
- பிரார்த்தனா பிளஸ் சேமிப்புத் திட்டம் மூலம் இளைஞர் பிரிவை இலக்காகக் கொண்ட உற்பத்தி மீள் அமுலாக்கம்
- ஊழியர்களின் வீட்டுக் கடன் தொகை ரூபா 7.5 மில்லியனாக அதிகரிப்பு
- வரவு அட்டைகளுக்கான பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில் கொடுப்பனவு அட்டைத் தொழிற்துறை தரவுப் பாதுகாப்பு நியமம் (PCIDSS) தர நிர்ணயம் பெறப்பட்டது.
- மார்ச் மாதத்தை செயற்பாடற்ற கடன்களின் மீட்பு மாதம் எனப் பிரகடனப்படுத்தி, கடன் அறவீடு விரைவுபடுத்தப்பட்டது.
- EMV சிப் மற்றும் NCF தொழிநுட்பத்துடன் வரவு அட்டைகளின் அறிமுகம்.

### பிரதம செயற்றிறன் குறிகாட்டிகள் (KPI)

- வைப்புக்களில் 21.1% வளர்ச்சி
- தபால் வைப்பு திரட்டலில் 168.9% வளர்ச்சி
- சில்லறைக் கடனில் 15% வளர்ச்சி
- 2018 ஆம் ஆண்டில் 9.58% ஆக இருந்த வைப்புக்களின் சந்தைப் பங்கு 10.75% ஆக அதிகரிப்பு
- தொழிற்துறை சராசரி 4.7% ஐ விட 1.57% ஆக குறைவாக உள்ள மொத்த தொழிற்படாக் கடன் விகிதம் விகிதம்

### முன்னோக்கிய பாதை

- எண்ணியலாக்கத்தை விரைவுபடுத்துவதுடன், எண்ணியல் திறன்களிலான முதலீடு
- பாதுகாப்பு அம்சங்களை இழக்காது, சுய சேவை வழிமுறைகளில் எண்ணியல் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல்
- பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையில் முன்னேற்றம் மற்றும் கடன் வளர்ச்சியில் மீட்டெடுப்பு தொடர்பான எதிர்பார்ப்பு

- வீழ்ச்சியடையும் சந்தைப் பங்கை மீள் நிலைநிறுத்தல்
- தொழிற்பாட்டு வினைத்திறனை இயக்குவதற்காக கிரய உத்தமமாக்கல் தந்திரோபாயங்கள் மற்றும் மூலதன இணைப்புத் தொழிநுட்பம்

**இலக்கு**

- அடையாளம் காணப்பட்ட பகுதிகள்/ உற்பத்திகளில் இலக்கு வளர்ச்சியை அடையும் அதேவேளை சந்தைப் பங்கையும் பேணுதல்
- குறைந்த கிரய நிதி மற்றும் கிராமப்புற வைப்புக்களை அதிகரித்தல்
- இரட்டைத் தான வளர்ச்சி மூலம் சில்லறைக் கடன் தொகுதிகளை அதிகரித்தல்
- சில்லறை கடனுக்கான செயற்படா சொத்து விகிதத்தை வங்கித் துறை சராசரியை விட குறைவாக முகாமை செய்தல்

## கூட்டுவணிக நிதி



**உற்பத்திகள் மற்றும் சேவைகள்**

- நிதி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சேய் நிறுவனங்களுக்கும் நேரடியாகக் கடன் வழங்குதல்,
- நிதி வசதிகளை கட்டமைத்தல் (வாடிக்கையாளர்களுக்கான உய்த்தறி உற்பத்திகள்)
- கடன் வழங்குபவர்களுக்கும் கடன் பெறுபவர்களுக்கும் இடையிலான தீர்ப்பனவு மற்றும் கொடுக்கல்வாங்கல்களை ஒருங்கிணைக்கும் இணைந்த வசதிகளுக்கான முகவர் பங்கை வகித்தல்
- நம்பிக்கை சான்றிதழ்கள், தனியார் இடவமைத்தல் மற்றும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்தல்
- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதில் முன்னணி தொழில் நிபுணத்துவம்
- கடன் பத்திரங்களை வழங்குதல்

**வாடிக்கையாளர்கள்**

கூட்டு வணிகங்கள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள்

**விநியோக வழிமுறைகள்**

நேரடி அணுகுமுறை

**தொழிற்பாட்டுச் சூழல்**

- பலவீனமான பேரினப் பொருளாதார அடிப்படைகள் மற்றும் மெதுவான பொருளாதார வளர்ச்சி
- நிர்மாணம், சுற்றுலா மற்றும் விவசாயம் போன்ற சில துறைகளிலான மந்தநிலை
- குறைந்த முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல்கள்
- எதிர்பார்த்ததிலும் குறைவான கடன் வளர்ச்சி

**இடர் மற்றும் சவால்கள்**

- கடனுக்கான கேள்வியின் மிதமாக்கம்
- சந்தைத் திரவத் தன்மையிலான தளம்பல்
- செயற்பாடற்ற கடன்கள் அதிகரிக்கும் வாய்ப்பு
- அரசு பத்திரங்கள் மீதான முதலீட்டின் கட்டாயத் தேவைப்பாடு காரணமாக வரையறுக்கப்பட்ட மூலங்கள்

**தந்திரோபாய கவனம் செலுத்தும் பகுதிகள்**

- புதிய வாடிக்கையாளர் சேர்ப்பு
- கட்டண அடிப்படையிலான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் கவனம்
- அதிக இடருள்ள துறைகளில் கவனத்துடன் முக்கிய வளர்ச்சித் துறைகளில் கவனம் செலுத்துதல் (சக்தி, பயன்பாடுகள், உட்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க சக்தி, பசுமை வணிகங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள்)
- இலங்கை முழுதும் எமது தடத்தை விரிவாக்க உறவை வலுப்படுத்துதல் மற்றும் பங்காளர்களை மேம்படுத்துதல்
- கடன் தரத்தை நிர்வகித்தல்
- விலை மாதிரிகள் மீள்நிர்ணயம் மற்றும் மூலதன ஒதுக்கீட்டை மேம்படுத்துதல்

**2019 இலான முக்கிய விருத்திகள்**

- வெற்றிகரமாக ரூபா 20.0 பில்லியன் கடன் பத்திரங்கள் வழங்கல்
- ஆண்டின் போது சுமார் ரூபா 20.0 பில்லியன் கடன்கள் கூட்டுவணிக வாடிக்கையாளர்களுக்கு செயற்றிட்ட நிதியுதவியின் கீழ் வழங்கப்பட்டன.
- விவசாயம் மற்றும் SMEக்கு ஆதரவாக மற்றைய நிதி சேவை நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் ரூ. 10.0 பில்லியன் கடன்கள் வழங்கப்பட்டன
- அபிவிருத்தி திட்டங்களின் உட்கட்டமைப்பிற்காக பொது நிதிக்கு ரூபா 7.5 பில்லியன் கடன்கள் வழங்கப்பட்டன
- விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடன் பத்திரங்களில் ரூபா 4.0 பில்லியன் முதலீடு செய்யப்பட்டது.

**பிரதம செயற்றிறன் குறிகாட்டிகள் (KPI)**

- கூட்டுவணிக கடன் வழங்கல்களில் 14.87% வளர்ச்சி
- கூட்டுவணிக நிதியிடல் தொழிற்பாடுகளிலிருந்தான கட்டண அடிப்படையிலான வருமானத்தில் 11.5% வளர்ச்சி
- செயற்படா கடன் விகிதம் 0%

**முன்னோக்கிய பாதை**

- கடன் தொகுப்பின் தரத்தை பாதுகாத்தல்
- செயன்முறை மேம்பாடுகள் மற்றும் தன்னியக்கம்
- சந்தைப் போக்குகளைக் கண்காணிப்பதன் மூலமான விவேகமான கடன் அணுகுமுறை
- அதிக வளர்ச்சியுடன், ஆனால் குறைந்த மற்றும் நடுத்தர இடர் விபரத்துடன் துறைகளுக்கு கடன் வழங்குதல்.
- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான கடன் வழங்குவதன் மூலம் அரசாங்க நிதிக்கு ஆதரவளித்தல்

**இலக்கு**

- வருடாந்த வளர்ச்சியில் ஒற்றைத் தான வளர்ச்சியை அடைவதன் மூலம் கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரிக்கப் பங்களிப்பு செய்தல்
- செயற்பாடற்ற கடன் விகிதத்தை தற்போதைய நிலையில் விரும்பிய விதத்தில் பேணுதல்

## சர்வதேச வங்கியியல்



**உற்பத்திகள் மற்றும் சேவைகள்**

- ஐ.அமெரிக்க டொலர், யூரோ, பவுண்ட், அவுஸ். டொலர் மற்றும் யென் நாணய அலகுகளிலான வெளிநாட்டு நாணய வைப்பு (சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு)
- உள்முக மற்றும் வெளிப்புற பண மாற்றல்
- அந்நிய செலாவணி பரிமாற்றம்
- இறக்குமதி நாணயக் கடிதம் வழங்குதல்
- இறக்குமதிப் பட்டியல்களைக் கையாளுதல் மற்றும்
- கப்பல் மற்றும் விமானக் கேள்வு உத்தரவாதங்களை வழங்குதல்

**வாடிக்கையாளர்கள்**

இலங்கையில் வதிவுள்ளோர், இலங்கைக்கு வெளியே வசிக்கும் இலங்கையர்கள், இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டினர்.

**விநியோக வழிமுறைகள்**

கிளைகள், இணையவழி வங்கி, தொடர்புடைய வங்கிகள், பரிவர்த்தனை இல்லங்கள், உலகளாவிய பண பரிமாற்ற நிறுவனங்கள், யூரோகிரோ தபால் வலையமைப்பு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள், தொலைபேசி மற்றும் அழைப்பு நிலையம்

**தொழிற்பாட்டுச் சூழல்**

- உலகளாவிய வர்த்தக நடவடிக்கைகளிலான மந்தநிலை
- இறக்குமதியைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
- முக்கிய மூல சந்தைகளில் இருந்து அந்நிய செலாவணி வருவாய் குறைவடைதல் (உ-ம்: மத்திய கிழக்கு)
- ஏராளமான எண்ணியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பிற பண பரிமாற்று நிறுவனங்களின் வளர்ச்சி

**இடர் மற்றும் சவால்கள்**

- குறைவடையும் நிகர வட்டி எல்லை
- நிதி அல்லாத நிறுவனங்கள் சந்தையில் நுழைதல்.

**தந்திரோபாய கவனம் செலுத்தும் பகுதிகள்**

- முக்கிய மூல சந்தைகளில் பண மாற்றலுக்கான சந்தை ஊடுருவல் மற்றும் சந்தை வளர்ச்சி
- மத்திய கிழக்கு சந்தைகளில் சார்ந்திருப்பதைக் குறைக்க பிற சந்தைகளைத் தேடுதல்
- வர்த்தக சேவைகளுக்கான அணுகல் சந்தை அரசு நிறுவனங்கள்/ தொழிற்சங்கங்கள்/புதிய வாகன முகவர்களுடனான ஏற்பாடுகளுடன் வங்கிக்கு அனுமதிக்கப்படல்
- கட்டண அடிப்படையிலான வருமானத்தை மேம்படுத்தல்

**2019 இலான முக்கிய விருத்திகள்**

- ரூபா 40.1 பில்லியன் வெளிநாட்டு மாற்றல் பதிவிடப்பட்டது
- நிர்ணயிக்கப்பட்ட நிதி இலக்குகள் அடையப்பட்டன
- Emirates NBD Bank PJSC (எமிரேட்ஸ்) மற்றும் Erste குழும வங்கி ஏஜி (அவுஸ்ரியா) ஆகியவற்றுடனான முகவர் வங்கி உறவுமுறை மற்றும் ஜி பண பரிமாற்ற கம்பெனி லிமிட் (கொரியா) உடன் பனப்பரிமாற்ற உறவுமுறை உருவாக்கம்
- வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக்களுக்கு 12 மாத மாதாந்த வட்டிக் கொடுப்பனவு அறிமுகம்
- CAD (கனேடிய டொலர்), SGD (சிங்கப்பூர் டொலர்), CHF (சுவிஸ்/பிராங்க்) மற்றும் AED (அரபு எமிரேட்ஸ் திர்ஹாம்) வெளிநாட்டு நாணயக் கணக்குகளை பராமரிக்க வாடிக்கையாளர்களுக்கு வசதியளிக்கப்பட்டது

**பிரதம செயற்றிறன் குறிகாட்டிகள் (KPI)**

- வெளிநாட்டு வைப்புத்தொகையில் 9.1% வளர்ச்சியுடன் ரூபா. 11.86 பில்லியன் வைப்பு அடையப்பட்டது
- ரூபா 79 மில்லியன் அடையப்பட்டதன் மூலம் கட்டண அடிப்படையிலான வருமான இலக்கை ரூபா 30 மில்லியன் கடக்கப்பட்டது
- பணம் அனுப்புவதற்கான சந்தை பங்கை 22 bps அதிகரித்து 3.29% ஆக உயர்ந்தது

**முன்னோக்கிய பாதை**

- தொழிற்பாட்டு மேன்மை (உ-ம்: வினைத்திறனான பணப் பரிமாற்றம்)
- உயர் வளர்ச்சி மிக்க பணம் அனுப்பும் சந்தைகளுக்கு விரிவாக்கம்
- ஏற்றுமதி வர்த்தக நிதி வணிகத்தில் அதிக கவனம் செலுத்துதல்
- வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல்

**இலக்கு**

- வெளிநாட்டு நாணய வைப்புகள் மற்றும் பணம் அனுப்புதல்களில் இரட்டைத்தான வளர்ச்சியை அடைதல்
- பணம் அனுப்பும் சந்தைகளில் சந்தைப் பங்கு வளர்ச்சியை மேம்படுத்துதல்

## திறைசேரி



### உற்பத்திகள் மற்றும் சேவைகள்

- அரசாங்க பத்திரங்கள், பங்கு மற்றும் வெளிநாட்டு செலாவணி, மீள் கொள்வனவு உடன்படிக்கைகள் கடன் பெறுகை மற்றும் நிலைமாறு மீள் கொள்வனவு கடன் வழங்கல்களிலான முதலீடு

### வாடிக்கையாளர்கள்

நிதி நிறுவனங்கள், நிதி அல்லாத நிறுவனங்கள், தனிநபர்கள், அரச உடமை நிறுவனங்கள்.

### விநியோக வழிமுறைகள்

நேரடி அணுகல், இணையவழி, வர்த்தக தளங்கள்.

### தொழிற்பாட்டுச் சூழல்

- சந்தையில் திரவத்தன்மையில் நிலவும் தளம்பல்கள்
- சந்தையில் திரவநிலைப் பற்றாக்குறை
- வட்டி வீதங்களைக் குறைக்கும் மத்திய வங்கியின் நடவடிக்கைகள்
- அரச பத்திரங்களிலான குறைவான திரும்பல்
- அரச பத்திர சந்தையில் இருந்து முதலீடு வெளியேறுதல்

### இடர் மற்றும் சவால்கள்

- குறைந்த வட்டி விகிதத்தில் அரசாங்கத்தின் பத்திரங்கள் மறு முதலீடு செய்யப்படல்
- திரவத்தன்மை மற்றும் முதலீட்டை முகாமை செய்தல்
- அரச பத்திரங்களை முதலீடு செய்வதற்கான கட்டாயத் தேவைகள் மற்றும் வாடிக்கையாளர் வைப்புகளைப் பயன்படுத்தி கடன் வழங்குதல் ஆகியவற்றுக்கு இடையிலான மாற்றுத் தெரிவுகள்
- அரச பத்திரங்களுக்கான இரண்டாம் சந்தை செயற்பாட்டில் இன்மை

### தந்திரோபாய கவனம் செலுத்தும் பகுதிகள்

- நிலையான வருமானம் மற்றும் பத்திரத் தொகுதியை மேம்படுத்துவதற்காக மீளமைத்தல்
- அரசாங்க பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான சட்டரீதியான தேவையைப் பேணுதல்

### 2019 இலான முக்கிய விருத்திகள்

- இணையவழி காசு முகாமை முறையை செயற்படுத்துதல்
- 250 மில்லியன் அமெரிக்க டொலர் சிரேஷ்ட பத்திரங்களை வெற்றிகரமாக தீர்ப்பனவு செய்தது.

### பிரதம செயற்றிறன் குறிகாட்டிகள் (KPI)

- அரசாங்க பத்திரங்களை வைப்பு விகிதத்திற்கு உகந்த மட்டத்தில் 60.9% ஆக பராமரித்தல்
- வட்டி வருமானத்தில் 48.50% அரச பத்திரங்களிலிருந்து மொத்த வட்டி வருமானத்திற்கு பங்களிப்பு செய்தல்
- அரசாங்க பத்திரங்களிலிருந்து 10.7% வருவாயை உறுதிப்படுத்தல்

### முன்னோக்கிய பாதை

- ரூபாயின் மதிப்பில் உலகளாவிய நிகழ்வுகளின் தாக்கம்
- முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் சந்தையில் முதலீடுகள் மற்றும் மூலதன பாய்ச்சல்கள் மீது உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிகழ்வுகள் மற்றும் கொள்கைகளின் தாக்கம்
- வங்கியின் முதிர்வு பொருத்தமின்மையைக் குறைக்க பயனுறுதி மிக்க திரவநிலை முகாமையில் கவனம் செலுத்துதல்
- புதிய முறைமைகள் மற்றும் செயன்முறைகளை செயற்படுத்துதல் மூலம் முன்-பின் அலுவலகங்களில் செயற்பாட்டு மேன்மை

### இலக்கு

- வங்கியின் முறிகள், பங்கிகள் மற்றும் செலாவணிச் சந்தைகளில், கவர்ச்சிகரமான வர்த்தக வாய்ப்புகள் மூலம் வருவாயை மேம்படுத்துதல்
- அதிகபட்ச வருவாய்க்கு திரட்டப்பட்ட நிதியை முதலீடு செய்தல்

# உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்

**வங்கியின் பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பை உள்ளடக்கிய உற்பத்தி மூலதனம் ஒரு முக்கியமான பெறுமதி இயக்கி ஆகும். ஒரு தனித்துவமான போட்டி எல்லையை வழங்கும் உயர்தர சொத்து தளத்தை உருவாக்க நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறோம்.**

## இது எதை உள்ளடக்கியுள்ளது

வங்கியின் உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் வாடிக்கையாளர்களை அடைய உதவும் மற்றும் தொழிற்பாட்டு மேன்மையைப் பெற உதவும் பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இது கிளை வலையமைப்பு, ATM வலையமைப்பு, தகவல் தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் மென்பொருள் மற்றும் பிற எண்ணியல் வழிமுறைகள் உள்ளிட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கும்.

- **பௌதீக உட்கட்டமைப்பு:** ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், கிளைகளின் வலையமைப்பு, ATMகள், CRM கள், வணிகர் விற்பனைப் புள்ளி, கையடக்கமான விற்பனைப் புள்ளி இயந்திரம், தபால் நிலையங்கள் மற்றும் துணை அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் mCash சில்லறை விற்பனையாளர்கள்
- **எண்ணியல் உட்கட்டமைப்பு:** இணைய வங்கி, அரட்டைப் பெட்டி மற்றும் சமூக ஊடகப் பிரசன்னம் போன்ற தகவல் தொடர்பாடல் முறைமைகள் மற்றும் எண்ணியல் தளங்கள்

## உள்ளீடுகள்

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் – ரூ. 14,163 மில்லியன்.
- மூலதன செலவு – ரூ. 2,207 மில்லியன்.
- பௌதீக தொடு புள்ளிகள்
- மெய்நிகர் தொடு புள்ளிகள்/எண்ணியல் வழிமுறைகள்
- எண்ணியல் உட்கட்டமைப்பு

## இது எவ்வாறு பெறுமதி சேர்க்கிறது

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் முகாமை வாடிக்கையாளர்களுக்கு உகந்த அணுகல் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதன் மூலம் சுய சேவை வழிமுறைகள் மூலம் தடையின்றி அணுகக்கூடிய உறவை பலப்படுத்துகிறது. இந்த மூலதனம் செயற்பாட்டு செயற்திறன், செலவினங்களைக் குறைத்தல், இலாபத்தை மேம்படுத்துதல் மற்றும் வங்கியின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு நேரடியாக பங்களிக்கிறது.

## எங்கள் அணுகுமுறை

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்திலான முதலீடு என்பது வங்கியின் தந்திரோபாயத்தை வழங்குவதற்கான திறனை உறுதி செய்வதற்கான தொடர்ச்சியான மற்றும் மீண்டெழும் செயன்முறையாகும். உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் மீதான முதலீட்டை தீர்மானிக்கும் காரணி வங்கியின் தந்திரோபாய நோக்கங்களை அடைவதற்கு வழங்கப்படும் பெறுமதி ஆகும்.

ஒரு தனித்துவமான போட்டி நன்மையை வழங்க, வங்கியின் நீண்டகால வளர்ச்சி வாய்ப்புகளை பாதுகாக்கும் உயர்தர சொத்து தளத்தை உருவாக்க நாங்கள் முயற்சி செய்கிறோம். வேலையில்லா நேரத்தை அல்லது மறு வேலைகளை அகற்ற எல்லா சொத்துகளும் எப்போதும் உகந்த மட்டத்தில் பராமரிக்கப்படுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

## 2019 க்கான முக்கிய சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

**முக்கிய சவால்கள்**

- தொடர்ச்சியாக மாற்றமடையும் வாடிக்கையாளர் விருப்பங்கள்
- தொடர்ச்சியான முதலீடுகள் மற்றும் திட்டங்களின் நிதி இயலுமை
- புவியியல் பிரசன்னத்தை விரிவாக்குவதற்கான வரையறைகள்
- தகவல் முறைமைப் பாதுகாப்பு
- புதிய தொழில்நுட்பத்தை நோக்கிய சில வாடிக்கையாளர்களது எதிர்ப்பு



**வாய்ப்புகள்**

- எங்கள் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துதல்
- எங்கள் வங்கியின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்
- வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துதல்
- எங்கள் எண்ணியல் திறனை ஒரு தந்திரோபாய வேறுபாட்டுக் கருவியாகப் பயன்படுத்துதல்
- எண்ணியல் வங்கிக்கு விரைவான மாற்றத்தை ஏற்படுத்துதல்
- எங்கள் அமைப்பின் விரைவுத் தன்மையை வலுப்படுத்துதல்

## உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் பெறுமதியை மேம்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள்

- எங்கள் நீண்டகால வளர்ச்சி வாய்ப்புகளுக்கு ஒரு தனித்துவமான போட்டி நன்மையை வழங்கும் உயர்தர சொத்து தளத்தை உருவாக்குதல்,
- அனைத்து சொத்துகளும் வேலையில்லா நேரத்தை அல்லது மறு வேலைகளை அகற்ற உகந்த மட்டங்களில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல்
- செலவுகளைக் குறைக்க ஒருங்கிணைந்த மூலதன திட்டங்கள்
- வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் அணுகலை விரிவாக்குவதற்கும் எண்ணியல் திறன்களில் முதலீடு செய்தல்
- புதிய பௌதீக கிளைகள் மற்றும் எண்ணியல் வழிமுறைகளைத் திறப்பதற்கு இடையில் சமநிலையை ஏற்படுத்துதல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளை அதிக தந்திரோபாய இடங்களுக்கு மாற்றுதல்
- தகவல் பாதுகாப்பை பலப்படுத்துதல்
- செயற்பாட்டு சிறப்பை அதிகரிக்க, முன் முதல் இறுதி செயற்பாடுகளை தானியக்க முறைமையாக்கல்

## பொருண்மை விடயங்கள்



## தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்



## குறுங்காலம் முதல் நடுத்தர காலம் வரையான தந்திரோபாய முன்னுரிமைகள்



## வெளியீடுகள்

- 17,847 புதிய இணைய வங்கி வாடிக்கையாளர்கள்
- கிளை வலையமைப்பு – 256
- ATMs – 286
- காசு மீள்சுழற்சி இயந்திரங்கள் (CRM) - 48
- தபால் நிலையங்கள் மற்றும் துணை தபால் நிலையங்கள் – 4,063
- mCash சில்லறை விற்பனையாளர்கள் – 16,000+
- ICT முறைமைகள், எண்ணியல் தளங்கள் மற்றும் மேகத்தள சேவைகள்
- 42 சூரிய கலம் நிறுவப்பட்ட கிளைகள்

## பெறுமதி உருவாக்கத்துக்கான இயக்கிகள்




I எமது பிரசன்னம்

II எமது அடைவை விரிவுபடுத்தல்

III எமது எண்ணியல் வழித் தடத்தை விரிவாக்கல்

IV எமது தொழிற்பாட்டு செயன்முறைகளை மேம்படுத்தல்

## முக்கிய தரவுகள்



நாடு முழுவதும் 256 கிளைகள்



286 ATMs

48 CRMs



450+ கையடக்க விற்பனைப் புள்ளி இயந்திரங்கள் மற்றும் Tab கணினிகள்



NSB iSaver 16,000+ சில்லறை வணிகங்கள்




4,063 தபால் மற்றும் உப தபால் நிலையங்கள்



எண்ணியல் மூலதனத்தில் ரூபா 691 மில்லியன் மூலதனம்



39 Smart வலயங்கள்

## பெறுபேற்று அட்டை

| | அதிகரிப்பு (குறைவு) | **2019** | 2018 |
|---|---|---|---|
| கிளைகளின் எண்ணிக்கை | 1 | **256** | 255 |
| Smart வலயங்களின் எண்ணிக்கை | 34 | **39** | 5 |
| ATM களின் எண்ணிக்கை | (2) | **286** | 288 |
| CRM களின் எண்ணிக்கை | 26 | **48** | 22 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நிகர புத்தகப் பெறுமதி (ரூபா மில்லியன்) | 697 | **14,163** | 13,466 |

## ஏனைய மூலதனங்களுடனான இணைப்பு

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் வங்கியின் ஒவ்வொரு மூலதனத்தையும் பாதிப்பதுடன் ஒவ்வொரு மூலதனத்தின் மீதும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.



செயன்முறை மேம்பாடுகள் மற்றும் புதிய முறைமைகளை செயற்படுத்துவதன் மூலம் மேலதிக வேலைகளை உருவாக்குதல், பயிற்சி மற்றும் திறன் விரிவாக்கம்

கிளை விரிவாக்கம் வர்த்தக நாம கட்புல நிலையை அதிகரிக்கிறது

பௌதீக மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்பை விரிவாக்குவதன் மூலம் வாடிக்கையாளர் வசதித் தன்மை மற்றும் வலுவான வாடிக்கையாளர் மற்றும் வழங்குனர் உறவுகளின் அதிகரிப்பு

சக்தி வினைத்திறனான கட்டிடங்கள் மற்றும் எண்ணியல் உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்வது குறைந்த ஆற்றல் நுகர்வுடன், கார்பன் தடத்தையும் குறைக்கிறது

செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடுகள் செலவுக் குறைப்புகளுக்கு காரணமாகின்றன

## விட்டுக் கொடுப்புக்கள்

- எமது பௌதீக வலையமைப்பை விரிவாக்கல்
- எமது எண்ணியல் வழிமுறைகளை விரிவாக்கல்



- **எண்ணியல் தொழிநுட்பம் மற்றும் உட்கட்டமைப்பின் மீதான முதலீடு**




## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

**1 NO POVERTY** — பொருளாதார வளங்களுக்கு சம உரிமைகள் மற்றும் நிதி சேவைகளுக்கான அணுகலை உறுதி செய்தல்

**12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION** — வங்கி சேவைகளை எண்ணியல் மயமாக்குவதன் மூலம் காகிதக் குறைப்புக்கு பங்களிப்பு செய்தல்

**7 AFFORDABLE AND CLEAN ENERGY** — கிளைகளில் சூரிய சக்தியை நிறுவுதல்

**10 REDUCED INEQUALITIES** — நாடு முழுவதும் smart மண்டலங்கள் உள்ளிட்ட கிளைகளை நிறுவுவதன் மூலம் ஒரு பரந்த சமூகத்திற்கு வங்கி சேவைகளுக்கான அணுகலை வழங்குதல்

**13 CLIMATE ACTION** — சக்தி வினைத்திறனான கட்டிடங்களில் முதலீடு செய்தல் மற்றும், வங்கிச் சேவைகளை எண்ணியல் மயமாக்குவதிலும் முதலீடு செய்வதன் மூலம் கார்பன் தடத்தைக் குறைத்தல்.

**11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES** — சக்தி வினைத்திறனான கட்டிடங்களில் முதலீடு செய்தல்

## எமது பிரசன்னம்

### எமது விஸ்தரிக்கப்பட்ட உள்நாட்டுப் பிரசன்னம்

நிதி சேர்க்கையை ஊக்குவிக்கும் ஒரு வங்கி என்ற வகையில், எமது நாட்டின் ஒவ்வொரு மாகாணத்தையும் மாவட்டத்தையும் உள்ளடக்கிய எங்கள் விரிவான வலையமைப்பின் மூலம் சமூகத்தின் ஒவ்வொரு அடுக்கிற்கும் நாம் சேவை செய்கிறோம். இந்த வலையமைப்பு 6 உயர் நிலைக் கிளைகள், 8 பிராந்திய அலுவலகங்கள், 4,063 தபால் நிலையங்கள்/ துணை தபால் நிலையங்கள் மற்றும் விசா மற்றும் மாஸ்டர் வரவு அட்டை வசதிகளை வழங்கும் 334 தன்னியக்க கூற்று (ATM) இயந்திரங்கள்/பண மீள் சுழற்சி இயந்திரங்கள் (CRM) உள்ளிட்ட 256 கிளைகளைக் கொண்டு உள்ளன.

நாடு முழுவதும் உள்ள பண வைப்பு இயந்திரங்கள் (CDM) மற்றும் பண மறுசுழற்சி இயந்திரங்கள் (CRM) உள்ளிட்ட 4900 தன்னியக்க கூற்று இயந்திரங்களை இணைக்கும் தேசிய கட்டண வலையமைப்பு ஆகிய Lanka Pay Common ATM Switch முறைமையின் ஒரு பகுதியாக நாங்கள் இருக்கிறோம். மேலும், 16,000 mCash சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக கையடக்க விற்பனைப் புள்ளி (POS) இயந்திரங்கள் மூலமாகவும் அணுகத்தக்கதாக இருக்கிறோம்.

கிளைகளின் விபரங்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு எங்கள் வலைப் பக்கத்தைப் பார்வையிடவும்.

**GRI 102-4, 6**

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **வட மத்திய மாகாணம்** | 15 | 17 | 1 |
| 6. அனுராதபுரம் | 12 | 14 | 1 |
| 7. பொலனறுவை | 3 | 3 | - |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **வட மாகாணம்** | 20 | 25 | 4 |
| 1. யாழ்ப்பாணம் | 14 | 19 | 4 |
| 2. கிளிநொச்சி | 1 | 1 | - |
| 3. மன்னார் | 2 | 2 | - |
| 4. முல்லைத்தீவு | 2 | 2 | - |
| 5. வவுனியா | 1 | 1 | - |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **வட மேல் மாகாணம்** | 26 | 35 | 5 |
| 6. குருநாகல் | 18 | 22 | 1 |
| 7. புத்தளம் | 8 | 13 | 4 |




| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **மத்திய மாகாணம்** | 28 | 34 | 3 |
| 16. கண்டி | 17 | 21 | 1 |
| 17. மாத்தளை | 4 | 5 | 1 |
| 18. நுவரெலியா | 7 | 8 | 1 |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **மேல் மாகாணம்** | 81 | 126 | 23 |
| 10. கொழும்பு | 43 | 71 | 13 |
| 11. கம்பஹா | 26 | 39 | 7 |
| 12. களுத்துறை | 12 | 16 | 3 |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **கிழக்கு மாகாணம்** | 17 | 17 | - |
| 19. அம்பாறை | 8 | 7 | - |
| 20. மட்டக்களப்பு | 7 | 8 | - |
| 21. திருகோணமலை | 2 | 2 | - |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **ஊவா மாகாணம்** | 12 | 15 | - |
| 22. பதுளை | 6 | 9 | - |
| 23. மொனராகலை | 6 | 6 | - |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **தென் மாகாணம்** | 36 | 41 | 1 |
| 13. காலி | 13 | 15 | - |
| 14. அம்பாந்தோட்டை | 10 | 11 | - |
| 15. மாத்தறை | 13 | 15 | 1 |

| | கிளைகள் | ATM/ CRM | திறன் வலயம் |
|---|---|---|---|
| **சப்பிரகமுவ மாகாணம்** | 21 | 24 | 2 |
| 24. கேகாலை | 10 | 11 | 1 |
| 25. இரத்தினபுரி | 11 | 13 | 1 |

## எங்கள் அடைவை விஸ்தரித்தல்

### எங்கள் தீவு முழுவதுமான வலையமைப்பு மூலம் எங்கள் உள்நாட்டு அடைவை அதிகரித்தல்

வாடிக்கையாளர் தொடர்புகளை எளிதாக்குவதிலும், எங்கள் வர்த்தக நாமத்தின் கட்புல நிலையை வழங்குவதிலும் கிளைகள் முக்கிய பங்கு வகிப்பதால், எங்கள் உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தை விரிவாக்குவது தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். எவ்வாறாயினும், மாறிவரும் வாடிக்கையாளர் நடத்தை மற்றும் அதிக வாடிக்கையாளர்கள் தன்னியக்க கூற்று இயந்திரம் மற்றும் வங்கிக்கான எண்ணியல் தளங்கள் போன்ற மாற்று வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், இந்த வளர்ந்து வரும் தேவைகளுக்கு திறம்பட பதிலளிக்க நாங்கள் பின்பற்றுகிறோம்.

எங்கள் பௌதீக தொடர்புப் புள்ளிகள் எங்கள் பெறுமதி உருவாக்கும் செயற்பாட்டில் ஒரு முக்கிய சொத்து ஆகும். எங்கள் எண்ணியல் உட்கட்டமைப்பை உருவாக்கும் அதே வேளையில், தந்திரோபாய இடங்களில் புதிய கிளைகளைச் சேர்ப்பதன் மூலம் எங்கள் கிளை வலையமைப்பை தொடர்ந்து மேம்படுத்துகிறோம். 2019 ஆம் ஆண்டில், மாகொலாவில் ஒரு புதிய கிளையைத் திறந்தோம். வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் எங்கள் ஊழியர்களுக்கு ஒரு இனிமையான வேலை அனுபவத்தை வழங்குவதற்கும் கிளை இடமாற்றம், விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல் ஆண்டு முழுவதும் முழு மூச்சுடன் தொடர்ந்தது. சுன்னாகம், புறக்கோட்டை புத்தளம், மானிப்பாய், அத்துருகிரிய, மகாபாகே மற்றும் ஹாலி-எல ஆகிய கிளைகள் புதிய விசாலமான இடங்களுக்கு மாற்றப்பட்டன. எங்கள் அலுவலகங்களுக்கு உகந்த பணிச்சூழலை வழங்குவதற்கும், வாடிக்கையாளர்களுக்கு முழுமையான ஒருங்கிணைந்த தீர்வை வழங்குவதற்கும் ஆதரவளிப்பதற்காக தலைவர் பிரிவு, கிளை முகாமை, சட்ட, இடர் முகாமை மற்றும் நலன்புரி உள்ளிட்ட தலைமை அலுவலகத்தில் ஐந்து பிரிவுகள் புதுப்பிக்கப்பட்டன.

ஏப்ரல் 2019 இல் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர், எந்தவொரு பேரழிவுகள் மற்றும் வன்முறைகளால் ஏற்படும் உயிரிழப்புகளிலிருந்து நமது பௌதீக சொத்துக்களைப் பாதுகாக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன.

### எங்கள் மாதிரிக் கிளை எண்ணக்கரு மற்றும் சுய வங்கியியல் முன்மொழிவை விரிவுபடுத்துதல்

அதிநவீன வங்கி சேவைகள் மூலம் ஒவ்வொரு தொடு புள்ளியிலும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒரு முன்மாதிரியான அனுபவத்தை வழங்குவதற்காக “மாதிரிக் கிளை” எண்ணக்கரு 2017 இல் தொடங்கப் பட்டது. இந்த எண்ணக்கருவின் கீழ் ஒவ்வொரு கிளையிலும் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துவதற்காக “NSB connect” என்ற வர்த்தக நாமப் பெயரில் ஒருங்கிணைந்த எண்ணியல் ஊடாக ஒப்பம் (IDMS) உடன் எண்ணியல் வங்கிக்கு தன்னியக்க கூற்றுப் பொறி மற்றும் பண மீள் சுழற்சிப் பொறி பொருத்தப்பட்ட ஒரு மாதிரி “திறன் (Smart) வலயம்” இருக்கும். அனைத்து வர்த்தக நாமமாக்கல் மற்றும் எண்ணியல் ஒப்பமிடல் காட்சிப் படுத்தல்களும் 5S நியமத்தின் படி வடிவமைக்கப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் முதல் திறன் வலயம் ஒன்றை அறிமுகப்படுத்தியதிலிருந்து, கடந்த இரண்டு ஆண்டுகளில், திறன் வலய எண்ணிக்கையை படிப்படியாக அதிகரித்து, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தமாக 39 ஆகக் கொண்டு வந்துள்ளோம். அடுத்தடுத்த 25 புதிய திறன் வலயங்களைச் சேர்ப்பதே எங்கள் திட்டம். இது 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்தமாக 64 ஆக உயரும்.

எங்களுக்கு சொந்தமான கட்டிடங்களில் மொத்தம் 29 திறன் வலயங்கள் நிறுவப்பட்டுள்ளன, அதே நேரத்தில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் குத்தகைக்கு விடப்பட்ட கிளை கட்டிடங்களில் 5 திறன் வலயங்கள் நிறுவப்பட்டுள்ளன.

| | திறன் வலயங்கள் |
|---|---|
| 2017 | 2 |
| 2018 | 3 |
| 2019 | 34 |
| 2020 (உத்தேச) | 25 |

### மாற்றுத் திறன் கொண்டோர் அனுகலை எளிதாக்குதல்

குறைபாடுகள் அல்லது உடலியல் சார் வரையறைகள் உள்ளவர்களின் சிறப்புத் தேவைகளை அறிந்திருப்பதால், மாற்றுத் திறனாளி வாடிக்கையாளர்களுக்கு எங்கள் கிளைகளுக்கு விசேட அனுகலை வழங்குவதன் மூலம் எந்தவித சிரமமும் இல்லாமல் எங்களுடன் வங்கியில் ஈடுபட வழி வகுத்துள்ளோம். தீவு முழுவதும் 224 கிளைகளில் மாற்றுத் திறனாளிகள் அணுகல் வழங்கப்படுகிறது. புதிய கிளைகள் மற்றும் இடமாற்றம் மற்றும் ஏற்கனவே உள்ள கிளைகளின் விரிவாக்கம் ஆகியவற்றில் இந்தத் தேவையை நிவர்த்தி செய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

### நிலைபேறான சக்தி வினைத்தினுள்ள கட்டடங்கள்

காலநிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கி பங்களிப்பதற்கான எங்கள் முயற்சிகளில், சக்தி வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் எங்கள் கிளைகளில் செலவு குறைந்த சக்தி சேமிப்பு வழிமுறைகளைப் பிடிக்கவும் பல நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன. அனைத்து புதிய கிளைகளும் எங்கள் பசுமைக் கட்டிட எண்ணக்கருவின்படி கட்டப்பட்டுள்ளன, அவை சக்தி நுகர்வு குறைக்க பங்களிக்கும் சுழற்சி இயற்கை ஒளி மற்றும் காற்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. நாங்கள் 42 கிளைகளில் சூரிய மின்சக்தி முறைமைகளையும் நிறுவியுள்ளோம், இது எங்கள் மின்சார பயன்பாட்டைக் குறைத்துள்ளது. பக்கம் 166 இல் இயற்கை மூலதனத்தின் கீழ் பசுமை எண்ணக்கருக்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

எங்கள் கிளை வளாகங்கள் வெப்பத்தை உறிஞ்சும் மெருகூட்டப்பட்ட ஜன்னல்களை பொருத்துவதன் மூலம் குறைந்த சக்தியை நுகரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பசுமை கட்டிடம் என அடையாளம் காணப்பட்ட எங்கள் கதிர்காமம் சுற்றுலா பங்களா இயற்கை ஒளி மற்றும் காற்றை மேம்படுத்துவதன் மூலம் விளக்குகள் மற்றும் குளிரூட்டும் வசதிகளுக்கு குறைந்தபட்ச மின்சாரத்தை பயன்படுத்துகிறது.

## எங்கள் எண்ணியல் தடத்தை விரிவாக்கல்

வாடிக்கையாளர்களின் அதிகரித்துவரும் நுட்பம் மற்றும் வசதி மற்றும் நெகிழ்வுத்தன்மையை வழங்கும் எண்ணியல், சுய சேவை வழிமுறைகளுக்கான தேவை ஆகியவற்றால், இந்த தேவைகளுக்கு திறம்பட பதிலளிக்க எங்கள் எண்ணியல் உட்கட்டமைப்பை தொடர்ந்து பலப்படுத்தினோம். தொடர்ச்சியான முதலீடுகள் மூலம் நாங்கள் எங்கள் சுய சேவை முன்மொழிவுகள், கட்டண தீர்வுகள், எண்ணியல் தீர்வுகள் மற்றும் தகவல் பாதுகாப்பை பலப்படுத்தினோம். இந்த முதலீடுகள் எங்கள் வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துகின்றன, செயல்முறைகளை எளிதாக்குகின்றன, மேலும் எங்கள் ஊழியர்களின் செயல்திறனையும் வினைத்திறனையும் அதிகரிக்க உதவுகின்றன.

### எண்ணியல் வழிமுறைகள் தளத்தை மேம்படுத்துதல்

இணையவழிப் பயனர்கள் மற்றும் வேகமாக விரிவடைந்துவரும் தொழில்நுட்ப ஆர்வலர்களின் போக்கு அதிகரித்து வருவதால், எண்ணியல் வழிமுறைகளில் ஒரு பரந்த வாடிக்கையாளர் பிரிவை, குறிப்பாக இளைஞர்களை அடைய நாங்கள் கவனம் செலுத்தினோம். புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவதன் மூலம் எங்கள் வணிகத்தை விரைவுபடுத்தவும், தற்போதுள்ள வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்வதற்கும், எங்கள் வணிகத் தெரிவு நிலையை அதிகரிப்பதற்கும் இது உதவியது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், எங்கள் இன்ஸ்டாகிராம் பக்கம் தொடங்கப்பட்டது, இது குறிப்பாக இளைஞர்களிடையே பிரபலமான தகவல் தொடர்பு முறையாக மாறியுள்ளது.

### பாதுகாப்பான வரவு அட்டை முகாமை

எங்கள் நாட்டின் காசு அல்லாத முன்முயற்சிகளுக்கு ஆதரவாக எங்கள் வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கம் மிக்க மற்றும் பாதுகாப்பான கொடுப்பனவுத் தெரிவுகளை நாங்கள் தொடர்ந்து உருவாக்கி வழங்குகிறோம்.

- மோசடியை ஒழிக்க, வங்கி ஈ.எம்.வி (ஐரோப்பா, மாஸ்டர அட்டை மற்றும் விசா) இன் உள்நாட்டு அச்சிடலைத் தொடங்கியது. காந்தக் கோடு மட்டும் உள்ள அட்டையை விடவும் மிகவும் பாதுகாப்பான சிப் இயலுமை அட்டை மற்றும் வரவு அட்டைகள் மற்றும் ஏற்கனவே இருக்கும் 450,000 அட்டைகளை ஈ.எம்.வி சிப் அடிப்படையிலான அட்டைகளாக 2019 வரை மாற்றியது.
- மேலும், வங்கி NFC (புலம் தொடர்புக்கு அருகில்) தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி விசா மற்றும் மாஸ்டர் வரவு அட்டைகளை இயக்கியது, தகவல்களைக் குறைத்தல் மற்றும் குளோனிங் செய்வதற்கு எதிராக அதிகபட்ச பாதுகாப்பை இது வழங்குகிறது.
- கையடக்கத் தொலைபேசி அடிப்படையிலான அட்டை செயற்படுத்தும் நடைமுறையை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் ஆதாரங்களை பாதுகாத்து, குறுஞ் செய்தி மூலம் வழங்கப்படும், ஈ.எம்.வி கார்டுகளுக்கான பசுமை PIN வெளியீட்டை வங்கி அறிமுகப்படுத்தியது.
- வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தும் அனைத்து கிளைகளுக்கும் சிஎம்எஸ் (CMS) அனுகலை வழங்கும் புதிய அட்டை முகாமை முறைமை (சிஎம்எஸ்) 2018 ஆம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்டது.
- வரவு அட்டைகள் தொடர்பான வாடிக்கையாளர் குறைகளை தானியங்கி கண்காணிப்பு அமைப்பு ஒருங்கிணைக்கும் அட்டை மையம், அழைப்பு நிலையம் மற்றும் ஏடிஎம் (ATM) ஆதரவு சேவை பிரிவுகளால் கையாளப்படுகிறது.

- தரவு பாதுகாப்பு சான்றிதழான பிசிஜ-டிஎஸ்எஸ் (PCI -DSS) சான்றிதழ்: வங்கியின் பாதுகாப்பு தரங்களை தொடர்ந்து மேம்படுத்துவதற்கும், அட்டை தொடர்பான மோசடிகளிலிருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கும் எங்கள் முயற்சிகளில், பணம் செலுத்தும் அட்டை தொழில் தரவு பாதுகாப்பு தரநிலை பி.சி.ஐ-டி.எஸ்.எஸ் (PCI -DSS) சான்றிதழைப் பெற்ற முதல் இலங்கை அரச வங்கியாக நாங்கள் இருக்கிறோம். அட்டைதாரர் தரவு பாதுகாப்பு தர நியமம் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் விவரங்களுக்கு, பக்கம் 127 இல் உள்ள “புலமை மூலதனம்: தரவு பாதுகாப்பை வலுப்படுத்துதல்” ஐப் பார்க்கவும்.

## 2019 இல் நடைமுறைப் படுத்தப்பட்ட கொடுப்பனவுத் தீர்வு முறைமைகள்

பாதுகாப்பான இலத்திரனியல் கொடுப்பனவுகளை மேம்படுத்த மத்திய வங்கி தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஒரு நிகழ்நேர கொடுப்பனவுத் தீர்ப்பனவு Lanka Pay-CEFTS மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது, இது நிகழ்நேர வங்கி நிதி பரிமாற்றங்களுக்கு மிக உயர்ந்த பாதுகாப்புடன் உதவுகிறது. இந்த பரிவர்த்தனைகளை தன்னியக்க கூற்றுப் பொறி, வங்கிச் சேவைக் கரும பீடம், இணையவழி வங்கியியல் அல்லது எந்த கைத் தொலைபேசி கொடுப்பனவு கருவி போன்ற எந்த கொடுப்பனவு வழிமுறை வழியாகவும் தொடங்கலாம். ஆண்டின் போது, வங்கி பல கொடுப்பனவுத் தீர்வுகளையும் உருவாக்கியுள்ளது. அவை பின்வருமாறு:

### லங்கா பே இணையவழிக் கொடுப்பனவுத் தளம் (LPOPP)

LPOPP உடன் இணைப்பதன் மூலம், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு CEFTS (இணையம், கைத் தொலைபேசி, ஏடிஎம் அல்லது வங்கிக் கரும பீடம்) போன்றவற்றுடன் இணைக்கப்பட்ட எந்த வழிமுறையிலும் நேரடியாக பணம் செலுத்த உதவியுள்ளோம். இந்த கொடுப்பனவுகள் நிகழ்நேர மற்றும் 24X7 அடிப்படையில் வரவு வைக்கப்படுகின்றன. வாடிக்கையாளர்களுக்கு நிகழ்நேர அடிப்படையில் கட்டண உறுதிப்படுத்தல் விவரங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், இலங்கை சுங்கத்திற்கு பணம் செலுத்தவும் வங்கி வாடிக்கையாளர்களுக்கு உதவுகிறது.

### ஜஸ்ட்பே (Justpay)

சில்லறைக் கொடுப்பனவுகளுக்கு இது ஒரு வசதியான, பாதுகாப்பான மற்றும் கிரயம் குறைந்த தெரிவு ஆகும், அவை முதன்மையாக பணம் மற்றும் அட்டைகளால் செய்யப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் வசதியை அதிகரிக்கும் வகையில், திறன் பேசியைப் பயன்படுத்தி சில்லறைக் கொடுப்பனவுகளை செலுத்த வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப் படுகிறார்கள். திறன் பேசி செயலிகளைப் பயன்படுத்த அதிகபட்சமாக ரூபா 10,000 அல்லது நேரடியாக அதிகபட்சமாக வணிகரின் கணக்கிற்கு 10,000 இனைப் பரிமாற்றிக் கொள்ள முடியும்.

### அமெரிக்க டொலர் இணையவழித் தீர்ப்பனவு முறைமை

லங்காபேயில் இருந்து புதிய அமெரிக்க டொலர் காசோலை தீர்ப்பனவு மூலம் விரைவாக நிதியைப் பெறுவதற்கு வைப்பாளர்களுக்கு நாங்கள் வசதி செய்துள்ளோம், இது தேறச் செய்தலை விரைவுபடுத்துகிறது, இதன் மூலம் கடன் பெறுவதற்கான தாமதங்களை நீக்குகிறது.

## எங்கள் தொழிற்பாட்டு செயன்முறையை மேம்படுத்துதல்

வங்கியின் எண்ணியல் யுகத்தில் அனைத்து வங்கி நடவடிக்கைகளுக்கும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, எங்கள் முறைமைகள் மற்றும் செயன்முறைகளை தொடர்ந்து பராமரித்து மேம்படுத்துகிறோம். இது பாதுகாப்பான மற்றும். முன்னெச்சரிக்கையான வங்கி முறை மூலம் எண்ணியல் யுகத்தில் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கு பதிலளிப்பதற்கும் தொழிற்பாட்டு மேன்மையை அடைவதற்கும் முன்னணியில் இருக்க எங்களுக்கு உதவுகிறது. எண்ணியல் உட்கட்டமைப்பில் எங்கள் முதலீடுகள் மூலம் சிறந்த வாடிக்கையாளர் சேவையை மிக விரைவான மற்றும் திறமையான முறையில் தொடர்ந்து வழங்குகிறோம், இது எங்கள் பௌதீக உட்கட்டமைப்பை நிறைவு செய்கிறது. இந்த முதலீடுகள் எங்கள் அன்றாட நடவடிக்கைகளின் சீரான செயற்பாட்டை ஆதரிக்கின்றன.

### ஒருங்கிணைந்த மைய வங்கித் தீர்வு

மை வங்கித் தீர்வின் கொள்முதல் 2019 இல் நிறைவடைந்தது. இந்த நவீன தீர்வு வைப்புக்கள், கடன், காசோலைகள், கடன்கள், பிணையங்கள், வசூலிப்பு மற்றும் கொடுப்பனவுகளை ஒரே தளத்தில் உள்ளடக்கியது. எங்கள் முக்கிய வங்கி தீர்வு பின்வருவனவற்றில் கவனம் செலுத்துகிறது:



மைய வங்கித் தீர்வை ஏற்றுக்கொள்வது, அதிநவீன ஒருங்கிணைந்த வங்கித் தேவைகளை உயர் மட்ட தன்னியக்கமாக்கல் மற்றும் இடர் அற்ற அமுலாக்கத்தை கையாள எங்களுக்கு உதவுகிறது. இது பயன்பாட்டை எளிதாக்குவதற்கும், ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் இணக்கத்தை உறுதி செய்வதோடு செயற்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கும் உதவும். இது ஊழியர்களின் உற்பத்தித்திறன் மற்றும் மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்திற்கு வழிவகுக்கும். நீண்ட காலமாக, வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு மிகவும் திறமையான முறையில் பதிலளிக்கக்கூடிய, சந்தைக்கு மேம்பட்ட நேரம் மற்றும் அதிக உற்பத்தித்திறனுடன் கூடிய, மிகவும் சுறுசுறுப்பான மற்றும் தரவு சார்ந்த ஒரு அமைப்பாக மாற்ற முடிகிறது. பணமதிப்பிழப்பு தடுப்பு தீர்வு (AML), திறைசேரி முகாமை முறைமை (TMS) மற்றும் மனித வள முகாமை முறைமை போன்ற பிற முறைமைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இந்த மைய வங்கி முறை பூர்த்தி செய்யப்படும்.

### திறைசேரி முகாமை முறைமை

புதிய திறைசேரி முகாமை முறைமை இந்த ஆண்டில் கையகப்படுத்தப்பட்டது, வங்கியின் அனைத்து திறைசேரி செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்கவும், பலப்படுத்தவும், நெறிப்படுத்தவும் இது உதவுகிறது. பணம் மற்றும் திரவத் தன்மையில் அதிக கட்புல நிலையை நாம் கொண்டிருக்கவும், வங்கியின் கணக்குகள் தொடர்பில் கட்டுப்பாட்டைப் பேணவும், இணக்கத்தைப் பராமரித்தல், ஒருங்கிணைந்த அறிக்கையிடல் கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் மற்றும் உள்நாட்டு வங்கி மற்றும் நிதி பரிவர்த்தனைகளை மிகவும் திறமையாக நிர்வகிக்கவும் இது உதவும். தீர்வு அறிக்கை, பணிப்பாய்வு மற்றும் நாளாந்த வேலைப் பூர்த்தி கணக்கு இணக்க செயன்முறை மற்றும் மனித பிழையிலிருந்து குறைக்கப்பட்ட இடர்கள் ஆகியவற்றில் அதிக நெகிழ்வுத்தன்மையை அனுமதித்துள்ளது.

### மனித வள முகாமை முறைமை

மனித வள செயற்பாடுகளை தானியக்கமாக்கும் நோக்கில், நாங்கள் ஒரு மனித வள முகாமை முறையை கையகப்படுத்தும் செயற்பாட்டில் இருக்கிறோம். இந்த முறைமை ஊழியர்களின் தகவல்களை சேகரித்தல், சேமித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், ஆட்சேர்ப்பு மற்றும் உள்ளக மதிப்பீடு, ஊதியம், செயற்திறன் மதிப்பீடு, பணியாளர் நலன்கள் முகாமை மற்றும் கற்றல் மற்றும் மேம்பாடு உள்ளிட்ட மனிதவள செயற்பாடுகளின் செயல்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்தும்.

### பணச் சலவை மோசடி எதிர்ப்புத் தீர்வு (AML)

மோசடி மற்றும் பணச் சலவை நடவடிக்கைகளைத் தடுக்க பரிவர்த்தனைகளை கண்காணிக்கவும், தடம் காணவும் AML தீர்வு 2019 இல் செயற்படுத்தப்பட்டது. AML தீர்வை ஏற்றுக் கொள்வது வாடிக்கையாளர் அறிந்து கொள்ளல் (KYC) வாடிக்கையாளர் தொடர்பான விழிப்புக்கவனம், வாடிக்கையாளர்களை வடிகட்டல் மற்றும் பொருளாதாரத் தடைகள் பட்டியல்களுக்கு எதிரான பரிவர்த்தனைகள் மற்றும் AML விதிமுறைகளுக்கு இணங்குவது போன்ற விடயங்களில் ஒரு நிலையான கண்காணிப்பை வழங்கியுள்ளது. கணினி-இயக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் தடுப்புப்பட்டியலில் உள்ள வாடிக்கையாளர்களைக் கண்காணிப்பதன் காரணமாக எங்கள் முன்னெச்சரிக்கை ஆய்வு நடைமுறைகளும் பெரிதும் மேம்படுத்தப்படும். இந்த தீர்வு மைய வங்கி முறையைப் பூர்த்தி செய்வது, வங்கியின் செயற்பாட்டு திறனை மேம்படுத்தியுள்ளது.

### எளிதாக்கல் பண முறைமை (Cash@Ease System)

2019 ஆம் ஆண்டில் Cash@Ease System முறைமையை அமல்படுத்துவதன் மூலம் வங்கியின் காசு முகாமை செயன்முறையை நாங்கள் நெறிப்படுத்தினோம். கிளைகள் மற்றும் திறைசேரிப் பிரிவு முழுவதும் காசு முகாமை செயற்பாட்டில் செயற்பாட்டு வினைத்திறனை இந்த முறைமை எளிதாக்கியுள்ளது, தினசரி பண நிலைகளைப் பார்ப்பதற்கும் திறைசேரி, நிலுவைகளை முகாமை செய்தல் மற்றும் பரிவர்த்தனைகளின் இணைய வழி உறுதிப்படுத்தல்களை அனுப்புதல போன்றவற்றுக்கும் வசதியளிக்கிறது. இது வங்கி முழுவதும் செலவு சேமிப்பு, அதிகரித்த துல்லியம், மேம்பட்ட செயற்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலைகளை கணிசமாக எளிதாக்கியுள்ளது.

## எதிர்கால முன்னுரிமைகள்

### குறுங் காலம்

- Lanka QR அடிப்படையிலான உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு மற்றும் கட்டண அட்டைகளுடன் கைத் தொலைபேசி செயலியை இணைப்பதற்கு எண்ணியல் தளத்தை செயற்படுத்தல்
- இலத்திரனியல் வர்த்தகத்திற்குக் கிடைக்கத்தக்கதாக உள்ள மிக உயர்ந்த பாதுகாப்பு தரமான 3DS2.0 ஐப் பெற்றுக் கொள்ளுதல்
- CRM கள், திறன், ATM பகுதிகள் மற்றும் எண்ணியல் தளங்கள் வழிமுறையில் வாடிக்கையாளர் தொடர்பு புள்ளிகளை விரிவுபடுத்துதல்
- புதிய விதிமுறைகளுடன் அறிக்கையிட வங்கியின் AML முறைமையை விரிவுபடுத்தி மேம்படுத்தல்

### நடுத்தர காலம்

- திறன் பேசி அல்லது எண்ணியல் சாதனத்தைப் பயன்படுத்தி எந்த நேரத்திலும் வாடிக்கையாளர்களை எங்கிருந்தும் வங்கி நடத்த உதவும் வகையில் ஒரு முழுமையான எண்ணியல் வங்கித் தீர்வு.
- மைய வங்கித் தீர்வு மனிதவள முகாமை முறைமை மற்றும் திறைசேரி முகாமை முறைமையுடன் ஒருங்கிணைக்கப்படல்
- ஒரு தகவல் பாதுகாப்பு முகாமை முறைமை (ISMS) செயற்படுத்துதல் மற்றும் ISO 27001 சான்றிதழ் செயன்முறையைப் பெறுதல்
- வங்கியின் தகவல் பாதுகாப்பு முகாமை முறைமையைப் பலப்படுத்துதல்
- கிளை வலையமைப்பை நெருக்கமாக கண்காணிக்க வசதியாக “இணைய வழி இணக்க மதிப்பீடுகளை” நோக்கி நகர்தல்

### நீண்ட காலம்

- துரித உத்வேகம் மிக்க மற்றும் தரவு உந்துதல் அளிக்கப்பட்ட நிறுவனமாக மாற்றமடைதல்



# புலமை மூலதனம்

**அருவச் சொத்துக்களை உள்ளடக்கும் புலமை மூலதனம் போட்டி நன்மைக்கான ஓர் முக்கிய மூலாதாரமாகும். புலமை மூலதனத்தின் பெறுமதியை அதிகரித்தல் நீண்ட காலத்தில் ஓர் பெறுமதி உயர்வை அடைய உதவும்.**

## முக்கிய உள்ளடக்கங்கள்

புலமை மூலதனம் என்பது எமது அக்கறையுள்ள தரப்பினருக்குப் பெறுமதியை உருவாக்குவதற்கு அவசியமானதாகவுள்ள எமது உள்ளார்ந்த அறிவு, வாடிக்கையாளர் விசுவாசம், வர்த்தக நாமம் மற்றும் நற்பெயர், உள்ளக முறைமைகள் மற்றும் செயற்பாடுகள், கூட்டு வணிகப் பெறுமதிகள், கொள்கைகள் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் தொகுப்பாகும்.

## உள்ளீடுகள்

- கற்றல் மற்றும் விருத்தி
- கொள்கைச் சட்டகங்கள் மற்றும் செயன்முறைகள்
- நியம தொழிற்பாட்டு நடைமுறைகள்
- கூட்டுவணிகக் கலாச்சாரம்
- பொறுப்பு மிக்க தலைமைத்துவம்

## பெறுமதி சேர்ப்பு முறை

புலமை மூலதனம் நீண்ட காலத்தில் தேசிய சேமிப்பு வங்கிக்கு பெறுமதி உச்சத்தை அளிக்கத்தக்க போட்டி நன்மைக்கு அவசியமான ஓர் மூலக்கூறு என நாம் பலமாக நம்புகின்றோம். இது போட்டி நன்மைக்கான ஓர் மூலாதாரமாகிய புத்தாக்கத்தைத் தூண்டுவதுடன், எதிர்கால செல்வத்தின் உருவாக்கத்தை விளைவாகத் தரும்.

## எமது அணுகுமுறை

நாம் பலமான செயன்முறைப் பாய்ச்சல்கள், ஏனைய நிறுவனங்களுடனான வியாபாரக் கூட்டுக்கள், கற்றல் மற்றும் புத்தாக்கத்துக்கான பலமான ஊக்குவிப்பு ஆகியவற்றின் மூலம் நமது புலமை மூலதனத்தை உருவாக்கிக் கொள்கின்றோம். நாம் எமது புலமை மூலதனத்தின் விருத்தியை புதிய உற்பத்தி விருத்திகள், முறைமைகளின் மேம்பாடு சுற்றுச் சூழல் தாக்கம் மற்றும் தொழிற்பாட்டுக் கிரயங்களைக் குறைக்கத்தக்க வினைத்திறன் மிக்க செயன்முறைகள் ஊடாக உருவாக்கி, எமது கூட்டு வணிக விம்பம் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக் கொள்கிறோம்.

## 2019க்கான முக்கிய சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள்

**பிரதான சவால்கள்**

- தகவல் பாதுகாப்பு
- மூலதன ஒதுக்கீட்டு வரையறைகள் காரணமாக ஒன்றில் ஒன்று தவிர்க்கப்படும் செயற்றிட்டங்கள்
- மாற்றங்களுக்கான தடைகள்
- நிலைபேறான வர்த்தக நாமப் பெறுமதி



**வாய்ப்புக்கள்**

- வேலைப்பாய்வு முறைமைகளின் எண்ணியலாக்கம்
- மேம்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல்
- விரைவான வேலைச்சூழல்
- தொழிற்பாட்டு வினைத்திறன் மேம்பாடு

## புலமை மூலதனத்தின் பெறுமதியை மேம்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள்

- எமது ஊழியர்களின் நிபுணத்துவம் மற்றும் திறன்கள் மூலம் எமது புலமை மூலதனத்தை இணைத்தல்
- வணிக செயன்முறைகள் மற்றும் முகாமைத்துவ முறைகள் ஆகியவற்றின் வினைத்திறனை அதிகரித்தல்
- நெறிமுறை மிக்க நடைமுறைகள், ஒருங்கிணைவுத் தன்மை மற்றும் வகைகூறலின் மூலம் கூட்டு வணிக விம்பம் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுதல்.
- தகவல் தொழில்நுட்பத்தில் முதலீட்டை உச்சப்படுத்துதல்
- புத்தாக்கத்தைத் தூண்டும் நிறுவனக் கலாச்சாரத்தை வளர்த்தல்
- நிலைபேறான வணிக நடைமுறைகள் மூலம் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைத்தல்

## பெறுமதி உருவாக்கத்துக்கான இயக்கிகள்



## பொருண்மை விடயங்கள்



## தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்



## குறுங்காலம் முதல் நடுத்தர காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்



## முக்கிய தரவுகள்



**உச்சப் பாதுகாப்பு மிக்க**

இலங்கையின் வங்கியாகத் தொடர்ந்தும் நான்காவது ஆண்டிலும்



**தரவுப் பாதுகாப்பு**

கொடுப்பனவு அட்டைத் தொழிற்துறை தரவுப் பாதுகாப்பு நியம தரச் சான்றைப் பெற்றுக் கொண்ட இலங்கையின் முதலாவது அரச துறை வங்கி



**AA- இலிருந்து AA**

ஆக வர்த்தக நாம தரவரிசை அதிகரித்துள்ளது



**ரூபா 34,771 மில்லியன்**

வர்த்தக நாமப் பெறுமதி 25% இனால் அதிகரிப்பு



**AAA**

கடன் தரவரிசைப்படுத்தல் ஐசிஆர்ஏ லங்கா லிமிட்டட (ICRA Lanka Limited) இனால் வழங்கப்பட்டது



**28.4%**

28.4% ஆன ஊழியர்கள் 10 வருடத்திற்கும் மேற்பட்ட சேவையில் உள்ளவர்கள்

## பெறுபேற்று அட்டை

| | அதிகரிப்பு (வீழ்ச்சி) | 2019 | 2018 |
|---|---|---|---|
| வர்த்தக நாமப் பெறுமதி (ரூபா மில்லியன்) | 6,969 (வருடாந்தம் 25% ஆல் உயர்வு) | **34,771** | 27,802 |
| வர்த்தக நாமத் தரப்படுத்தல | ஒரு புள்ளி ஏற்றம் | **AA** | AA- |
| கடன் தரவரிசைப் படுத்தல் | – | **AAA** | AAA |
| 10 வருடத்திற்கும் அதிகம் சேவையிலுள்ள ஊழியர்கள் (%) | 2.0 | **28.4** | 26.4 |

## ஏனைய மூலதனங்களுடனான இணைப்பு

புலமை மூலதனம் வங்கியின் ஏனைய மூலதனங்களில் தாக்கம் செலுத்துவதுடன் ஏனைய மூலதனங்களினால் தாக்கம் அடைகின்றது.



பயிற்சி மற்றும் மேம்பாட்டுக்கான முதலீடு தொழிற்பாட்டு மேன்மைக்கு அடித் தளமான எங்கள் ஊழியர்களின் உள்ளார்ந்த அறிவு, திறன்கள் மற்றும் அனுபவங்களை மேம்படுத்துகிறது.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மையின் மீதான எங்கள் கவனம் பங்குதாரர்களிடையே எங்கள் நிலைத்தன்மை முயற்சிகளில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது

உட்கட்டமைப்பு, முறைமைகள் மற்றும் செயன்முறைகளிலான முதலீடுகள் மேம்பட்ட வணிக செயன்முறைகளை விளைவாகத் தருகின்றன.

நிதி மூலதனத்தின் வளர்ச்சியானது எங்கள் செயன்முறைகளை மேம்படுத்தவும், வர்த்தக நாம விருத்தி மற்றும் ஊழியர்களின் மேம்பாடு போன்ற துறைகளில் முதலீடு செய்யவும் உதவியது, இது எங்கள் நிறுவன நற்பெயரை மேம்படுத்தியுள்ளதுடன் எங்கள் பங்குதாரர்களிடையே வங்கி மீதான நம்பிக்கையை அதிகரித்துள்ளது

எங்கள் மதிப்புகள், வணிக நெறிமுறைகள் மற்றும் இடர் முகாமைக் கட்டமைப்பு எங்கள் நிறுவன நற்பெயரை மேம்படுத்துவதுடன், வாடிக்கையாளர்கள் மற்றும் பிற அக்கறையுள்ள தரப்பினரின் நம்பிக்கையை பலப்படுத்துகிறது

## விட்டுக் கொடுப்புக்கள்

- பயிற்சி மற்றும் விருத்தி மீதான முதலீடு
- எண்ணியல் உட்கட்டமைப்பு வலையமைப்பை விரிவுபடுத்தல்



- **புதிய மற்றும் மேம்பட்ட எண்ணியல் தொழில்நுட்பத்தின் மீதான முதலீடு**




## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS

வங்கி முழுவதும் நெறிமுறை நடத்தை, நல்லாட்சி மற்றும் இணக்கத்தை ஊக்குவித்தல்

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE

புத்தாக்கத் தன்மையை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பில் முதலீடு செய்யும் ஒரு கலாச்சாரத்தை வளர்த்தல்

## வெளியீடுகள்

- 5 வது மிக மதிப்புமிக்க வர்த்தக நாமம் ரூபா 34.77 பில்லியன்
- PCI-DSS சான்றிதழைக் கொண்ட முதலாவது அரச வங்கி என்ற பெருமையை வைத்திருத்தல்
- வங்கியினுள்ளே வடிவமைக்கப்பட்ட தரவு முகாமை முறைமைகள் மற்றும் அட்டை முகாமை முறைமைகள்
- அண்மைய தளத் தொடர்பாடல் (Near Filed Communication) அனுமதி அளிக்கப்பட்ட வரவு அட்டைகள் மற்றும் EMV வரவு அட்டைகளின் உள்ளக அச்சிடுதல் ஆகியவற்றின் அறிமுகம்
- இணையவழி ஐ.அ.டொலர் கொடுப்பனவுகள் மற்றும் Just Pay தீர்வுகளை தொழிற்படுத்தும் லங்கா பே கொடுப்பனவுத் தீர்வுகள் வங்கியினுள் உருவாக்கப்பட்டது
- தொழிற் துறை நியமங்களை உள்ளக அறிவு மற்றும் அனுபவத்துடன் செயற்படுத்துதல்

## புகழ்பெற்ற ஒரு அமைப்பை உருவாக்குதல்

1972 ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து தேசிய சேமிப்பு வங்கி அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரு வீட்டுத் துறைப் பெயராக மாறியுள்ளது. எங்கள் முன்னோடி, இலங்கை சேமிப்பு வங்கி (CSB) இலிருந்து 187 ஆண்டுகால வங்கி மரபுரிமையை வரைந்து, எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பை உறுதி செய்வதில் நாங்கள் முன்னணியில் உள்ளோம். அனைத்து வைப்புக்கள் மற்றும் வட்டி மீதான உரிமை கோரல்களை ஆதரிப்பதற்கான எங்கள் தனித்துவமான அரசாங்க உத்தரவாதத்துடன், இலங்கையில் முதன்மையான சேமிப்பு வங்கியாக, எங்கள் வர்த்தக நாம நம்பிக்கை மற்றும் நம்பிக்கைக்கு ஒத்ததாக இருக்கிறது, மேலும் 2019 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக குளோபல்/பைனான்ஸ் இனால் பாதுகாப்பான வங்கி என்னும் கௌரவம் வழங்கப்பட்டமை என்பது இந்த உண்மையை எடுத்துக்காட்டுகிறது. நிதி மற்றும் நிதி அல்லாத பல மைல்கற்களை அடைய நாம் பலத்திலிருந்து வலிமைக்கு சீராக வளர்ந்துள்ளோம். தீவு முழுவதும் எங்கள் பரந்த வலையமைப்பு ஒரு பரந்த வாடிக்கையாளர் பிரிவை அடைய உதவுகிறது.

### எங்கள் வர்த்தக நாம மதிப்பு மற்றும் மதிப்பீடுகளை அதிகரித்தல்

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு முழுவதும் எங்கள் வர்த்தக நாம நிலை வலுவாக இருந்ததுடன், தற்போது போதுமான மூலதன சுயவிவரம் மற்றும் குறைந்த இடர் முதலீட்டு தொகுப்பு, வைப்புக்கள் மற்றும் அவற்றுக்கான வட்டி மீதான 100% அரச உத்தரவாதம் ஆகியவற்றுடன் ஐசிஆர்ஏ லங்கா லிமிட்டட் (ICRA Lanka Limited) வங்கியின் கடன் மதிப்பீட்டை [SL] AAA என மதிப்பிட்டது. மேலும், தேசிய சேமிப்பு வங்கியை இலங்கையில் ஐந்தாவது மிக மதிப்புமிக்க ரூபா 37,441 மில்லியன் வர்த்தக நாமமாக பிராண்ட்/பைனான்ஸ் 2019 இல் மதிப்பிட்டது. எமது வர்த்தக நாமப் பெறுமதி வருடாந்த வளர்ச்சி வீதம் 25% இனைப் பதிவு செய்து, மேம்பட்டது. வர்த்தக நாமத் தரப்படுத்தல் 2018 இல் AA- இல் இருந்து 2019 இல் AA ஆக மேம்பட்டது.

| ஆண்டு | வர்த்தக நாமப் பெறுமதி ரூ. பில். |
|---|---:|
| 2015 | 22.65 |
| 2016 | 26.47 |
| 2017 | 24.59 |
| 2018 | 27.80 |
| 2019 | 34.77 |

*மூலம்: தர நிதியியல் அறிக்கை, மே 2019*

**தேசிய சேமிப்பு வங்கி வர்த்தக நாமப் பெறுமதி**




### உள்ளார்ந்த அறிவு

1972 ஆம் ஆண்டிலிருந்து தேசத்திற்கு சேவை செய்த 47 ஆண்டுகளில் வங்கியின் தொழில்நுட்ப அறிவும் அறிவும் திரட்டப்பட்டிருப்பது எங்கள் போட்டி நன்மைகளின் உள்ளார்ந்த பகுதியாகும். பல தசாப்தங்களுக்கும் மேலாக முதிர்ச்சியடைந்த செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் பத்து வருடங்களுக்கும் மேலாக வங்கியில் இருந்த அதிக சதவீத ஊழியர்களைக் கொண்ட எங்கள் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள், முக்கியமாக நமது உள்ளார்ந்த அறிவுக்கு பங்களிக்கின்றனர். ஒவ்வொரு ஊழியரிடமும் உள்ள மறைவான அறிவுக் களஞ்சியங்களினை அடையாளம் கண்டு, மிக முக்கியமான ஊழியர்களை நாங்கள் தக்க வைத்துக் கொள்வதன் மூலம் அத்தகைய அறிவை நாங்கள் அகழ்வு செய்கிறோம். கூடுதலாக, வெவ்வேறு புவியியல், தலைமுறைகள் மற்றும் பின்னணியைச் சேர்ந்த எங்கள் ஊழியர்கள் பல்வேறு அறிவு மற்றும் திறன்களை தேசிய சேமிப்பு குடும்பத்திற்கு கொண்டு வருகிறார்கள்.

எங்கள் மனிதவளக் கொள்கை உயர் மட்ட ஊழியர்களின் ஈடுபாட்டை எளிதாக்குவதுடன், சேகரிக்கப்பட்ட அறிவைப் பரப்புவதற்கும் ஆவணப் படுத்துவதற்கும் பல கட்டமைக்கப்பட்ட திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள், அறிவு பகிர்வு அமர்வுகள், வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி கருவிகளின் முறைசாரா வழி ஆகியவை இதில் அடங்கும். எங்கள் அனுபவம் மிக்க ஊழியர்களால் நடத்தப்படும் எங்கள் உள்ளக பயிற்சி மற்றும் தூண்டல் திட்டங்கள், தற்போதுள்ள அறிவை எங்கள் புதிய ஊழியர்களுக்கு மாற்ற உதவுகின்றன. கூட்டு வணிக முகாமைக் குழுவில் 55% க்கும் மேற்பட்டவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வங்கியில் பணியாற்றியுள்ளனர், 28.4% ஊழியர்கள் வங்கியில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நிபுணத்துவம் பெற்றவர்கள். ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கான எங்கள் திறன் 98.1% உயர் பணியாளர்களை வைத்திருத்தல் விகிதத்தால் பிரதிபலிக்கிறது. இந்த காரணிகள் எங்கள் வங்கியின் உள்ளார்ந்த அறிவை வளப்படுத்த பங்களித்தன.

### எங்கள் கூட்ட வணிக வர்த்தக நாமத்தை உருவாக்குதல்

விளம்பரம், நிகழ்வுகள், கண்காட்சிகள், அனுசரணைகள் மற்றும் சிறப்பு விளம்பர பிரச்சாரங்கள் ஆகியவற்றிலிருந்து மாறுபட்டு ஆண்டு முழுவதும் வர்த்தக நாம உருவாக்கல் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எங்கள் உற்பத்திகளை வெகுஜன ஊடகங்கள், சமூக ஊடகங்கள், வலைத்தளம் மற்றும் பிற இணைய அடிப்படையிலான விளம்பரம், விளம்பர பலகைகள் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் நாடு முழுவதும் மேம்படுத்தல் செய்கிறோம். இந்த வகையான விளம்பரங்கள் எங்கள் வர்த்தக நாமத் தெரிவு நிலையை மேம்படுத்தியுள்ளன, அவை எல்லா தரப்பிலிருந்தும் பரந்த மக்கள் தொகையுடன் ஒத்திருக்கும். மத நிகழ்வுகள் உட்பட பல்வேறு தேசிய, சமூக மற்றும் கலாச்சார நிகழ்வுகளுக்கு நிதியுதவி மற்றும் இணை அனுசரணை வழங்குவது எங்கள் வர்த்தக நாம விம்பத்தை வளர்க்கவும் பொது உறவுகளை முன்னேற்றவும் உதவியது.

GRI 102-16

## பெறுமதிகள் மற்றும் நெறிமுறைகள்

### எங்கள் பெறுமதிகள்

எங்கள் வங்கி அடிப்படையாகக் கொண்ட அடிப்படை நம்பிக்கைகளான எங்கள் நிறுவன பெறுமதிகள் 47 ஆண்டுகளில் உருவாகியுள்ளன. அவை எங்கள் நிறுவன பார்வை, எங்கள் நோக்கம் மற்றும்

எங்கள் செயல்களைத் தூண்டுவது பற்றிய தெளிவான அறிக்கையை வழங்குகின்றன. இந்த மதிப்புகள் எங்கள் கூட்டு வணிக கலாச்சாரத்தை வடிவமைத்துள்ள அதே வேளையில் அவை எங்கள் நெறிமுறைகள், நமது அடையாளம் மற்றும் நமது தத்துவத்திற்கு பங்களித்தன.



**நம்பிக்கை**

தொடர்புபட்ட அணைவரது அக்கறைகள் மீதும் முழுமையான நம்பிக்கையைக் கொண்டிருப்பதன் மூலம் உறவுமுறைகளைக் கட்டி எழுப்புதல்



**பரஸ்பர மரியாதை**

ஒவ்வொரு தனிநபரது மரபுரிமைப் பெறுமதிகளை ஏற்பிசைப்பதுடன், ஒவ்வொருவரையும் கௌரவத்துடன் நடாத்துதல்



**நாணயத் தன்மை**

எமது அனைத்து நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களில் நேர்மையாக, நிலைமாறாத தன்மையுடன் மற்றும் வெளிப்படையாக இருத்தல்



**ஆக்கத் திறன்**

ஏற்கனவே உள்ள நடைமுறைகளை சவாலுக்கு உட்படுத்துவதுடன், அதே வேளை புத்துருவான எண்ணக்கருக்களைத் தேடுதல்

## நெறிமுறை வணிக நடத்தை

ii. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையும் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாதங்களில் செலுத்தப்படும் வெகுமதிக் கொடுப்பனவு
iii. ஒவ்வொரு ஆண்டும் இறுதியில் அதிகபட்சம் ஏழு நாட்கள் வரை சலுகை மற்றும் மருத்துவ விடுப்பைக் காசாக்குதல்.
iv. முந்தைய 12 மாத காலப்பகுதியில் திருப்திகரமாக செயல்படுபவர்களுக்கு ஆண்டு அதிகரிப்பு
v. எரிபொருள்/பயணம், விடுதி உதவி, வாழ்வாதாரம் மற்றும் கடமை பயண ஏற்பாடுகள்
vi. வேலை சார்ந்த கொடுப்பனவு மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு
vii. பங்களிப்பு இல்லாத ஓய்வூதிய திட்டம் மற்றும் பங்களிப்பு விதவைகள் மற்றும் அனாதைகள் திட்டம்

***மீளளிப்பு***

i. தொழில்சார் நிறுவனங்களுக்கான உறுப்புரிமைக் கட்டணம்
ii. இலங்கை வங்கியியல் நிறுவகத்தினால் (IBSL) நடாத்தப்படும் பிரயோக வங்கியியல் மற்றும் நிதியியல் பாடநெறியில் இடைநிலை மற்றும் டிப்ளோமா மட்டத்தை பூர்த்தி செய்யும் ஊழியர்களுக்கான விசேட கட்டணக் கொடுப்பனவுகள்
iii. தேர்ந்தெடுக்கப்பட்ட, பொருத்தமான, ஊழியர்களால் நிறைவு செய்யப்பட்ட கற்கைகளுக்கான அனுசரணை

***மானியக் கடன் சலுகைகள்***

i. வீட்டுவசதி, வாகன கடன்கள் மற்றும் நுகர்வு மற்றும் துயர கடன்கள் மற்றும் திருவிழா முற்பணங்கள் போன்ற பிற மானியக் கடன்கள்.

***மருத்துவ உதவி திட்டங்கள்***

i. நிபுணர்/வெளி நோயாளர் பிரிவு மருத்துவ கட்டணங்கள், மருத்துவமனையில் சேருதல், சிக்கலான நோய்கள், பரிசோதனையாளர்கள் உட்பட அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் கண் மற்றும் பல் பராமரிப்பு ஆகியவற்றிற்கான பாதுகாப்பு வழங்கும் ஊழியர் மருத்துவ உதவித் திட்டம்
ii. நிரந்தர ஊழியர்களுக்கான இழப்பீட்டுத் திட்டம், இறப்பு, நிரந்தர குறைபாடுகள் அல்லது பகுதி குறைபாடுகள் ஏற்பட்டால் அதிகபட்சமாக ரூபா 1 மில்லியன்

**ஓய்வூதிய நன்மைகள்**

GRI 201-3

அனைத்து நிரந்தர ஊழியர்களும் பங்களிப்பு இல்லாத ஓய்வூதிய திட்டத்தில் பங்கேற்க உரிமை உண்டு மற்றும் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நியமனம் செய்யப்பட்ட தேதியில் இருக்கும் ஓய்வூதிய திட்டத்தைப் பொறுத்தது ஆகும்.

ஓய்வூதிய பயன்திட்ட கடமைகளின் வகைகள் பின்வருமாறு:

- ஓய்வூதிய நிதி (திட்டம் I மற்றும் திட்டம் II)
- பங்களிப்பு விதவைகள்/விதவைகள் மற்றும் அனாதை நிதி (திட்டம் II க்கு மட்டுமே)
- பங்களிப்பு ஓய்வூதிய மருத்துவ திட்டம்

வங்கியின் ஓய்வூதிய நிதி முழுமையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட நன்மை ஓய்வூதிய திட்டத்தின் கீழ் நன்மைகளை வழங்குவதற்கான செலவு திட்டமிடப்பட்ட அலகு கடன் செயல்பாட்டு மதிப்பீட்டு முறையின் அடிப்படையில் கண்டறியப்படுகிறது. வங்கியின் ஓய்வூதிய நிதி (திட்டம் I) 1995 அக்டோபர் 1 ஆம் தேதிக்கு முன்பு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு பொருந்தும், இதற்கு ரூபா 400 மில்லியன் 2019 ஆம் ஆண்டில் வங்கியால் பங்களிப்பு செய்யப்பட்டது. நிதியிடப்படாத பரிப்பு ரூபா 4,862 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

1995 அக்டோபர் 1 அல்லது அதற்குப் பிறகு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு பொருந்தும் ஓய்வூதிய நிதிக்கு (திட்டம் II) வங்கியின் பங்களிப்பு ரூபா 263.5 மில்லியனாகும். ஊழியரின் மொத்த சம்பளத்தில் 12% இந்த நிதிக்கு வங்கி பங்களிக்கிறது.

ஓய்வூதிய மருத்துவ திட்டம் மற்றும் விதவைகள், விதவைகள் மற்றும் அனாதை நிதி ஆகிய இரண்டும் பங்களிப்புத் திட்டங்களாகும். வங்கி ரூபா 187.4 மில்லியனை இந்த திட்டத்திற்கு செலுத்தியதுடன், செலுத்தப்படாத பரிப்பு ஆண்டு முடிவில் ரூபா 1,739.9 மில்லியன் ஆகும். ஓய்வூதிய மருத்துவ திட்டத்திற்கு மாதாந்திர பங்களிப்பு ஊழியரின் வயதைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

விதவைகள், விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியத்தின் பணியாளர் /உறுப்பினரின் பங்களிப்பு ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தால் தீர்மானிக்கப்படுவதுடன், உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் அவர்களின் அடிப்படை மாத சம்பளத்தில் 5% பங்களிக்க வேண்டும்.

2019 இல் ஊழியர் நலன்களில் புதிய சேர்ப்பனவுகள்

- ஊழியர்களின் வீட்டுக் கடனுக்கான கடன் தொகை ரூபா 7.5 மில்லியன்.
- உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கான நுகர்வு கடன்களின் அளவு ரூபா 1 மில்லியனில் இருந்து ரூபா 1.5 மில்லியனாக அதிகரிப்பு
- தொழில்சார் நிறுவனங்கள்/சங்கங்களுக்கு ஊழியர்களால் செய்யப்பட்ட சந்தா கொடுப்பனவுகளை மீள் செலுத்துதல் அதிகரித்துள்ளது.
- ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான பங்களிப்பு மருத்துவ உதவித் திட்டம் திருத்தப்பட்டு ஊழியர்களின் மருத்துவ உதவித் திட்டத்திற்கு இணையாக நன்மைகளை வழங்கியது.

- ஒரு நாளைக்கான உணவு கொடுப்பனவு, கிளை முகாமையாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு, ஒரு ஊழியரின் மறைவுக்கு வழங்கப்படும் இழப்பீடு மற்றும் சேவையில் இருக்கும் போது வழங்கப்படும் இழப்பீடு மற்றும் வருடாந்திர ஊழியர்களின் பயணத்திற்கான போக்குவரத்து கொடுப்பனவு உள்ளிட்ட பிற பணியாளர் நல வசதிகளும் அதிகரித்துள்ளன
- செயல்திறன் அடிப்படையிலான கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில், 2018 இல் நிர்ணயிக்கப்பட்ட சேமிப்பு அணிதிரட்டல் இலக்கை அடைவதற்கான கிளைகளுக்கு சிறப்பு செயல்திறன் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

GRI 401-1

## ஊழியர்களைத் தக்கவைத்தல்

எங்கள் ஊழியர்களைத் தக்கவைத்துக் கொள்வதை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம், குறிப்பாக, ஊழியர்களை ஈடுபடுத்தும் செயலூக்கமான முன்முயற்சிகளை செயற்படுத்துவதன் மூலம் ஊழியர் விலகலைக் குறைந்தபட்ச மட்டத்தில் வைத்திருக்க முற்படுகிறோம். 2018 ஆம் ஆண்டில் நிரந்தர ஊழியர்களுக்கான தக்க வைப்பு விகிதம் 98.1% ஆக இருந்தது, இது 2018 ஆம் ஆண்டில் 97.9% ஆக இருந்தது. இந்த ஆண்டின் ஊழியர் புரள்வு விகிதம் 1.9% ஆக இருந்தது, இது முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.1% இலிருந்து குறைவதை பிரதிபலிக்கிறது. தொழிற்துறையில் மிக உயர்ந்த தக்கவைப்பு விகிதங்கள் மற்றும் மிகக் குறைந்த ஊழியர் புரள்வு விகிதங்கள் எங்களிடம் உள்ளன. இது நிலையான உழைக்கும் கலாச்சாரத்தின் வலுவான பிரதிபலிப்பாகும், மேலும் எங்கள் ஊழியர்களுக்காக நாங்கள் வளர்த்துள்ள அதிக ஈடுபாடு மற்றும் ஊக்கமளிக்கும் பணியிடமாகும். எங்கள் நிறுவன நோக்கங்களை உணர்ந்து கொள்வதற்கு அனைத்து மட்டங்களிலும் எங்கள் உயர் செயற்திறன் கொண்ட பணியாளர்களை ஆட்சேர்ப்பு, உந்துதல் மற்றும் தக்கவைத்தல் ஆகியவற்றை எளிதாக்க நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறோம். 2019 ஆம் ஆண்டிற்கான மொத்த ஊழியர்களின் புரள்வு 82 ஊழியர்கள், அவர்களில் 56% ஆண்கள் மற்றும் 79% முக்கியமாக ஓய்வு காரணமாக 55 வயதிற்கு மேற்பட்டவர்கள். அதிக புரள்வான 61% 2019 இல் முகாமை மட்டத்தில் இருந்தது.

**வயது அடிப்படையில் புரள்வு**




**தர வரிசை அடிப்படையில் புரள்வு**




**பால் அடிப்படையில் புரள்வுக்கான காரணம் - 2019**




## விளைதிறன் மிக்க தொடர்பாடல்

தலைமை அலுவலகத்திற்கும் கிளை வலையமைப்பிற்கும் இடையிலான தகவல் தொடர்பு வழிமுறைகளை நாங்கள் திறந்த மற்றும் பயனுள்ளதாக வைத்திருக்கிறோம், இதன்மூலம் எங்கள் ஊழியர்கள் அனைவரும் புவியியல் இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் ஒருவருக்கொருவர் நன்கு இணைந்திருக்க முடியும். ஆரோக்கியமான மற்றும் நிலையான பணி உறவுக்காக முகாமை மற்றும் பணியாளர்களிடையே தகவல் தொடர்பு முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது, முகாமை ஊழியர்களுக்கு பரிந்துரைகள், சிக்கல்கள் மற்றும் தீர்வுகளை ஒரு செயலில் கொண்டு வர ஊக்குவிக்கிறது. இது ஊழியர்களின் ஈடுபாட்டிற்கு உகந்த வேலை சூழ்நிலையை எளிதாக்குவதுடன், உற்பத்தித் திறனை அதிகரிக்கும். வங்கியின் உற்பத்தித் திறனுக்கு இடையூறு விளைவிக்கும் ஏதேனும் சிக்கல்களைத் தீர்க்க, தொடர்பு கொள்வதற்கு மற்றும் சுட்டிக் காட்டுவதங்கு முறையான வழிகள் வழங்கப்பட்டுள்ளன.

### ஊழியர் தொடர்பாடல் வழிமுறைகள்

பணியாளர் தகவல் தொடர்புக்கு வசதியாக, நாங்கள் பல வழிமுறைகளை நிறுவினோம். வங்கியின் தந்திரோபாய திசை, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குறித்து ஊழியர்களுக்குத் தெரியப்படுத்தும் போது, இந்த தகவல் தொடர்பு வழிமுறைகள் ஊழியர்களுக்கு முகாமை கருத்துக்களை வழங்க உதவுகின்றன. ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் தொடர்பு கொள்ள நாங்கள் எப்போதும் முயற்சி செய்கிறோம்.

ஊழியர் தொடர்பு வழிகள்

- இணைய கருத்தரங்குகள் - நாடு முழுவதும் கிளைகளுக்கு இடையே நேரடி தொடர்பு மற்றும் திறந்த விவாதங்களை எளிதாக்குதல்
- ஊழியர் கருத்து ஆய்வுகள்
- அக இணையம்
- சுற்று நிருபங்கள்
- ஊழியர்கள் அறிவிப்பு பலகை
- முகாமை மின்னஞ்சல்கள்
- மனித வளப் பிரிவின் முறையான கடிதங்கள்

GRI 102-41

### ஒன்றுகூடல் மற்றும் கூட்டு பேரம் பேசும் சுதந்திரம்

எங்கள் ஊழியர்களின் சுதந்திரத்தை நிலை நிறுத்தவும், கூட்டு பேரம் பேசுவதற்கான உரிமையை அங்கீகரிக்கவும், தொழிற் சங்கங்களுடன் தகவல் தொடர்பு வழிகளைத் திறந்து வைத்திருக்கின்றமை தொழிற் சங்க பிரதிநிதிகளுடனான தொடர்பு தகவல்களை வழங்குவதற்கான மேலதிக வாய்ப்பை உருவாக்குகிறது, மேலும் அவர்களின் உறுப்பினர்கள் மற்றும் பிற பிரதிநிதி சங்கங்கள் வணிக நடவடிக்கைகள் மற்றும் எங்கள் வங்கியின் குறிக்கோள்கள் பற்றிய முழு புரிதலைப் பெற அனுமதிக்கிறது. ஜாதிகா சேவக சங்கமய, இலங்கை வங்கி ஊழியர் சங்கம், இலங்கை சுயாதீன வங்கி ஊழியர் சங்கம், நிர்வாக அதிகாரிகள் சங்கம், மற்றும் அனைத்து இலங்கை வங்கி ஊழியர் சங்கம் உள்ளிட்ட வங்கியில் செயல்படும் தொழிற்சங்கங்களுடனான எங்கள் உறவு மிகவும் ஆரோக்கியமாக தொடர்கிறது. அதன் ஊழியர்களின் கூட்டுறவு சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசும் உரிமையை திறம்பட அங்கீகரிப்பது ஆகியவை வங்கியால் தொடர்ந்து உறுதிப்படுத்தப்படுகின்றன.

சம்பளம் மற்றும் சம்பளம் அல்லாத சலுகைகளுக்கான கூட்டு ஒப்பந்தம் வங்கியின் முகாமைக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கையெழுத்திடப்படுகிறது. தொழிற் சங்கங்களுடனான கூட்டு ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் வங்கியின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் பிற நிதி நன்மைகளை பாதிக்கின்றன.

### பணியாளர் குறை தீர்க்கும் வழிமுறைகள்

நபரின் உடனடி மேலதிகாரத்தில் தொடங்கி, படிநிலைக்கு ஏற்ப குறைகளைத் தீர்க்க “படி ஏணி அமைப்பு” ஏற்றுக் கொள்ளப்படுகிறது. “திறந்த கதவுக் கொள்கை” குறைகளை மனித வளக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு சுயாதீனக் கட்சிக்கு நேரடியாக அனுப்ப அனுமதிக்கிறது. முடிந்த வரையில் முந்தையதைப் பயன்படுத்தி சிக்கல்களைத் தீர்க்க ஊழியர்களை ஊக்குவிக்கிறோம். ஆண்டின் போது, முறையான குறை தீர்க்கும் வழிமுறைகள் மூலம் தாக்கல் செய்யப்பட்ட மொத்த குறைகளின் எண்ணிக்கை 30 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, அவற்றில் ஆண்டின் போது 19 தீர்க்கப்பட்டன. அனைத்து குறைகளும் பாரபட்சமின்றி கையாளப்படுகின்றன.

### இடித்துரைப்பாளர்கள் கொள்கை

ஊழல் அல்லது மோசடி சம்பவங்களைப் புகாரளிக்கும்போது பாகுபாடு அல்லது பணிநீக்கம் மூலம் - எந்தவொரு ஊழியரும் எந்த வகையிலும் பாதிக்கப்படாதவகையில் தேசிய சேமிப்பு வங்கியின் இடித்துரைப்பாளர்கள் கொள்கை நிறுவப்பட்டது. கொள்கையானது, தடுப்பு, முன்கூட்டியே கண்டறிதல், அறிக்கையிடல், கண்காணித்தல், மீட்பு மற்றும் பின்தொடர்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்தக் கொள்கையின் மூலம் கணக்கியல், கணக்காய்வு, வற்புறுத்தல், கூட்டு, ஊழல், அகக் கட்டுப்பாடுகள், முறைகேடு, நிதி அறிக்கை, மோசடிகள் மற்றும் முறைகேடு உள்ளிட்ட பல துறைகள் தொடர்பான தவறான நடத்தைகள் குறித்து ஊழியர்கள் பாதுகாப்பாக இடித்துரைப்பாளர்கள் எடுத்துரைக்கலாம்.

## எதிர்கால முன்னுரிமைகள்

| குறுங்காலம் | நடுத்தர அளவு காலம் | நீண்ட காலம் |
| --- | --- | --- |
| எங்கள் ஊழியர்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்த பல்வேறு வகையான சுகாதார மற்றும் ஆரோக்கிய சேவைகளை தொடர்ந்து வழங்குதல் | மனித மூலதன செயன்முறைகளின் எண்ணியல் மயமாக்கல் மற்றும் தன்னியக்கம் | விருப்பத்துக்கு உரிய தொழில் தருனராக மாறுதல் |
| மகிழ்ச்சியான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்காக உற்பத்தி அறிவு, வாடிக்கையாளர் சேவை நுட்பங்கள் மற்றும் மென்மையான திறன்கள் குறித்த மதிப்பீட்டை முன் வரிசை ஊழியர்களுக்கு வழங்குதல் | செயற்திறன் உந்துதல் கலாச்சாரத்திற்கு மாறுவதற்கு இலக்கு அடிப்படையிலான செயல்திறன் மதிப்பீட்டு முறையை (KPI அடிப்படையிலான) பின்பற்றுதல் | எங்கள் மக்கள் ஈடுபட்டுள்ள மற்றும் அவர்களின் நல்வாழ்வைக் கவனித்துக்கொள்ளக்கூடிய சூழலை உருவாக்குதல் |
| வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்த முன் அலுவலக குழுவை உருவாக்குதல் | இலத்திரனியல் கற்றல் தளத்தை அறிமுகப்படுத்துதல் | |
| ஆட்சேர்ப்பு பணியை மேம்படுத்தல் | | |



# சமூக மற்றும் உறவு மூலதனம்

**தொழிற்பாட்டுக்கான எங்கள் சமூக மற்றும் சட்ட உரிமத்தின் நம்பகத்தன்மையை தீர்மானிக்கும் சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் சமூகங்கள், அக்கறையுள்ள தரப்பினர்களின் குழுக்கள் மற்றும் பிற வலையமைப்புக்களுடனான எங்கள் உறவுகளை உள்ளடக்கியது ஆகும்.**

## முக்கிய உள்ளடக்கங்கள்

எங்கள் உருவாக்கத்தில் இருந்து, நம்பிக்கை, ஒருமைப்பாடு, பெறுமதிப் பகிர்வு, சமூகத்திற்கான பங்களிப்பு மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் நெருங்கிய உறவுகளை உருவாக்குதல் எங்கள் நெறிமுறைகளுக்கு மையமாக உள்ளது. சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் சமூகங்கள், அக்கறையுள்ள தரப்பினர்களின் குழுக்கள் மற்றும் பிற வலையமைப்புக்களுடனான எங்கள் உறவுகளை உள்ளடக்கியது ஆகும்.

## உள்ளீடுகள்

- வாடிக்கையாளர்களுடன் வலுவான மற்றும் நீடித்த உறவு
- ஊழியர்களுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டுடனான ஒரு நேர்க்கணிய உறவு
- அரசு மற்றும் ஒழுங்கு விதிமுறையாளர்கள்
- சமூகங்கள், குடிமக்கள் மற்றும் ஊடகங்களுடன் செயற்திறன் மிக்க தொடர்பாடலைப் பேணுதல்
- வணிக கூட்டாளர்கள் மற்றும் வழங்குனர்களுடன் கூட்டு மற்றும் பரிவர்த்தனை உறவுகள்.

## இது எவ்வாறு பெறுமதியைச் சேர்க்கிறது

தொழிற்பாட்டுக்கான எங்கள் சமூக மற்றும் சட்ட உரிமத்தின் நம்பகத்தன்மை, தனித்தனியாகவும் கூட்டாகவும் பெறுமதியை உருவாக்கும் எங்கள் அக்கறையுள்ள தரப்பினருடன் வலுவான உறவைத் தக்க வைத்துக் கொள்வதற்கான நமது திறனைப் பொறுத்தது ஆகும். இந்த உறவுகள் எங்கள் வங்கியின் முக்கியமான எண்ணக்கருக்களை வடிவமைக்கின்றன. நம்பிக்கையை வளர்ப்பதற்கும் அனைவருக்கும் பெறுமதியை உருவாக்கும் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்கும் எங்கள் அனைத்து அக்கறையுள்ள தரப்பினர்களுடனான எங்கள் உறவுமுறை அவசியம் ஆகும்.

## எங்கள் அணுகுமுறை

- முன்மொழிவுகள் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை விஞ்சிய வகையிலான பெறுமதியை வழங்குவதன் மூலம் திடமான நீண்டகால வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குதல்
- சமூக ஈடுபாட்டுத் திட்டங்கள் மூலம் எங்கள் செயற்பாடுகளுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள சமூகங்களுக்கும் ஆதரவை வழங்குதல்
- எங்கள் வழங்கல் சங்கிலி மூலம் உற்பத்தி மற்றும் சேவைகளுக்கு ஆதரவு அளித்தல்
- திறன்களை மேம்படுத்துதல் மற்றும் மக்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்
- பெறுமதியை அதிகரிக்கும் போது சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குதல் மற்றும் ஒரு அர்த்தமுள்ள பங்களிப்பை செய்ய நாங்கள் முயற்சி செய்கிறோம்
- பக்கம் 70 இல் விவரிக்கப்பட்டுள்ள "அக்கறைதாரர் ஈடுபாட்டின்" கீழ் நிலையான மற்றும் வெளிப்படையான அக்கறைதாரர் ஈடுபாட்டின் மூலம் நாங்கள் செயல்படும் சமூகம் மற்றும் சமூகத்திற்கு அதிகரித்த மதிப்பை வழங்குதல்.
- அக்கறையுள்ள தரப்பினர் ஈடுபாட்டின் ஒட்டுமொத்த பொறுப்பு பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு சபை மற்றும் அதிகாரத்தால் வழங்கப்படுகிறது.

எங்கள் ஊழியர்களுடனான உறவு பக்கம் 130 இல் மனித மூலதனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது, அதே நேரத்தில் சுற்றுச்சூழலுடனான உறவு பக்கம் 162 இல் இயற்கை மூலதனத்தில் விவாதிக்கப்படுகிறது. எனவே, இந்த பிரிவு எங்கள் வாடிக்கையாளர்கள், ஒழுங்கு விதிமுறையாளர்கள், வணிக கூட்டாளர்கள் மற்றும் சமூகத்துடனான உறவைப் பற்றி விவாதிக்கிறது.

## 2019 க்கான முக்கிய சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள்

**முக்கிய சவால்கள்** → **வாய்ப்புகள்**

முக்கிய சவால்கள்:

- அக்கறையுள்ள தரப்பினர்களின் எதிர்பார்ப்புகளில் தொடர்ச்சியான வளர்ச்சி
- அக்கறையுள்ள தரப்பினர்களிடையே அக்கறை முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் முகாமை செய்தல்
- பல அக்கறையுள்ள தரப்பினர்களின் தேவைகளை பூர்த்திசெய்ய வள ஒதுக்கீட்டை மேற்கொள்ளல்
- நல்லுறவைப் பேணுவதிலான தோல்வி நற்பெயர் இழப்பினை ஏற்படுத்தும்.

வாய்ப்புகள்:

- எங்கள் அக்கறையுள்ள தரப்பினர்களின் தேவைகளை எங்கள் வணிகத்துடன் ஒருங்கிணைத்து, எங்கள் கடமைகளை வழங்குவதற்கான திறன்
- எங்கள் பல அக்கறையுள்ள தரப்பினர்களின் கரிசனைகளுக்கு அதிக ஈடுபாடு மற்றும் பதிலளிப்பதை உறுதி செய்தல்
- நீண்ட காலத்திற்கு சமூகத்தில் நேர்க் கணியத் தாக்கத்தை உருவாக்கும் திறன்



## சமூக மற்றும் உறவு மூலதனத்தின் பெறுமதியை மேம்படுத்துவதற்கான உத்திகள்

- எங்கள் வணிகத்தைத் தக்கவைக்க அக்கறையுள்ள தரப்பினார்களுடன் நீண்டகால உறவுகளை உருவாக்குதல்
- நிலைபேறான சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பகிரப்பட்ட பெறுமதியை உருவாக்குதல்
- வலுவான சமூக முகாமை மற்றும் நியாயமான வகிபாகம் மூலம் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் நிலைபேறான தன்மையை உறுதி செய்தல்

## பொருண்மை விடயங்கள்



## தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்



## பொருண்மை விடயங்கள்




## முக்கிய தரவுகள்



20.9 மில்லியன்

கணக்குகளின் எண்ணிக்கை



ரூபா 8,095 மில்லியன்

விற்பனைப் புள்ளிக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி



351

பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள்



963

தொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கப்பட்டது



ரூபா 29.8 மில்லியன்

கூட்டு வணிக சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்டங்கள் மீதான முதலீடு



348,904

தொலைபேசி வழியாக பெறப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை



2,142,769

வழங்கப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை



ரூபா 63.6 மில்லியன்

விற்பனைப் புள்ளி வாடிக்கையாளர்களுக:கு வழங்கப்பட்ட கடன் பெறுமதி



ரூபா 75,966.5 மில்லியன்

வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி

## பெறுபேற்று அட்டை

| | அதிகரிப்பு/ குறைவு | 2019 | 2018 |
|---|---|---|---|
| கணக்குகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 0.5 | **20.9** | 20.4 |
| கூட்டு வணிக சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்டங்கள் மீதான முதலீடு (ரூபா மில்லியன்) | 13 | **30** | 17 |
| வழங்குனர்களின் எண்ணிக்கை | 198 | **351** | 153 |
| ஊட்கட்டமைப்பு மீதான முதலீடு (ரூபா மில்லியன்) | 2,458 | **7,520** | 5,062 |
| வழங்கப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை | 19,367 | **251,471** | 232,104 |

## மூலதனங்களுக்கான இணைப்பு

சமூக மற்றும் உறவு மூலதனம் வங்கியின் ஏனைய மூலதனங்களில் தாக்கம் செலுத்துவதுடன் ஏனைய மூலதனங்களினால் தாக்கம் அடைகின்றது.



கூட்டு வணிக சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்ட முன்முயற்சிகள் ஊழியர்களின் வேலை – வாழ்க்கை சமத்துவத்தை மேம்படுத்துவதுடன், ஊழியர் ஈடுபாட்டையும் ஏற்படுத்துகிறது.

கூட்டு வணிக சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்டங்கள் மீதான முதலீடுகள் வங்கியின் வர்த்தக நாம நற்பெயரை வலுப் படுத்துகிறது.

ஒழுங்கு விதிமுறை இணக்கப்பாடு இயற்கை மூலதனத்தைக் கட்டி எழுப்பும்

எண்ணியல் தளங்கள் மீதான முதலீடு உற்பத்தி செய்யப்பட்ட முதலீட்டினை மேம்படுத்தும்

நிதி மூலதனத்தைக் குறித்துக் காட்டும் கூட்டு வணிக சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்டங்கள் மீதான முதலீடுகள்

## விட்டுக் கொடுப்புக்கள்

- **வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல் மற்றும் எமது வாடிக்கையாளர் எதிர்பார்ப்பை விஞ்சுதல்**
  - முதலீடுகளின் மீது செலவிடல்
  - வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குவதற்காக பொருத்தமான திறனை பயன்படுத்தல்
  - திறன்கள் மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்தல்
  - புதிய வணிக வாய்ப்புக்கள் மற்றும் புதிய வருமானத் தொகுதிகள்
- **சமுதாய அபிவிருத்தி செயற்றிட்டங்களில் ஈடுபடுதல்**
  - முதலீடுகளின் மீது செலவிடல்
  - நேர்க்கணிய விம்பம் மற்றும் விசுவாசத்தை அதிகரித்தல்
  - பொருத்தமான சமுதாய உறவுமுறைகள் மூலம் உருவாக்கப்பட்ட பொறுப்புணர்வு மிக்க கூட்டு வணிகப் பிரஜாவுரிமை மற்றும் நன்மதிப்பு
- **ஒழுங்கு விதிமுறைகளுடன் இணங்குதல்**
  - முறைமைகள் மற்றும் செயன்முறைகளைப் பொருத்தமான இடத்தில் ஏற்படுத்துவதில் செலவிடல்
  - பிரயோகிப்பதற்கு அவசியமான திறன்களை விருத்தி செய்தல்
  - பொருத்தமான நற்பெயர் முகாமை மற்றும் ஆளுகையின் சிறந்த நடைமுறை

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு




"I am Fit" நிகழ்ச்சித் திட்டம் மூலம் ஆரோக்கியமான தேசத்தைக் கட்டி எழுப்ப எமது ஆதரவை வழங்குதல்.




எமது திறமையான கொள்முதல் செயன்முறை மூலம் நாம் பொறுப்பு உணர்வு மிக்க நுகர்வினை ஊக்குவிக்கிறோம்.







தேசத்தின் உட்கட்டமைப்பு விருத்திக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் நிலைபேறான சமூகங்களை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்தல்







நிதிச் சேர்க்கையினை இயக்குவதன் மூலம் வறுமை மற்றும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கப் பங்களிப்பு செய்தல்




"ஹப்பன்" புலமைப் பரிசில் திட்டம், "ஆங்கிலம் எளிமையானது" செயற்திட்டம் ஆகியவற்றின் மூலம் கல்வியறிவு மற்றும் கல்வியை ஊக்குவித்தல் மற்றும் சலுகைகளை வழங்குதல் மற்றும் வணிக முகாமைத்துவத்துக்கான தேசிய பாடசாலையில் (NSBM) இல் உயர் கல்வியைத் தொடர சலுகை அடிப்படையிலான நிதி உதவி வழங்குதல்

- **வணிகக் கூட்டுக்களை கட்டி எழுப்புதல்**




## வெளியீடுகள்

- தொழிற்படுவதற்கான சமூக உரிமத்தைப் பேணுதல்
- வாடிக்கையாளர் மைய மற்றும் பொருத்தமான சேவை வழங்கல்
- நியாயமான மற்றும் சமத்துவம் மிக்க கேள்விப் பத்திர செயன்முறை
- ஒழுங்குபடுத்தப்பட்ட வர்த்தக ஒன்றியங்களுடனான கூட்டு ஒப்பந்தம்
- நியாயமான, வெளிப்படையான மற்றும் நெறிமுறைசார் முகாமை

## விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குதல் - வாடிக்கையாளர் மூலதனம்

### வாடிக்கையாளர் மூலதனம் எங்களுக்கு ஏன் முக்கியமானது

எங்கள் தேசத்தில் மிகவும் பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தளம் எங்களிடம் உள்ளது என்பதை நாங்கள் வைத்திருக்கும் 20 மில்லியனுக்கும் அதிகமான கணக்குகள் சான்றளிக்கின்றன. எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளை திறம்பட பூர்த்தி செய்வதற்கும், அவர்களின் நிதி நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், சேவை தரம் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை எங்கள் முதன்மையான பொருண்மை மிக்க விடயமாக நாம் அடையாளம் கண்டுள்ளோம், மேலும் வாடிக்கையாளர்களை எங்கள் முதன்மைத் தந்திரோபாய நோக்கமாக இயக்குகிறோம். நாங்கள் செய்யும் எல்லாவற்றின் மையத்திலும் வாடிக்கையாளரை வைத்திருப்பதுடன், தற்போதுள்ள எங்கள் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் புதியவற்றைப் பெறுவதற்கும் பொருத்தமான மற்றும் புதுமையான செலவு குறைந்த தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாங்கள் பொருத்தமானவர்களாக இருக்கிறோம்.

### எங்கள் அணுகுமுறை

ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஏற்றுக்கொள்வது, எங்கள் விரிவான கிளை வலையமைப்பு, கைத் தொலைபேசி மற்றும் இணைய வங்கி மற்றும் பிற தளங்கள் போன்ற பல வழிமுறைகள் மூலம் எங்கள் எல்லா தொடர்புகளிலும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குகிறோம். எங்கள் வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக, வாடிக்கையாளர் திருப்தியை அளவிடுவதற்கும், வாடிக்கையாளர் கேள்விகள் மற்றும் புகார்களுக்கு விரைவாகவும் திறம்படவும் பதிலளிப்பதற்கும், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு விரிவான உற்பத்தி தொகுதியை வழங்குவதற்கும், நாங்கள் கட்டி எழுப்பிய அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரே வங்கி எண்ணக்கருவின் மூலம் பன்முக உறவுகளைத் தொடரவும் சமீபத்திய முறைகளை நாங்கள் பின்பற்றினோம்.

### வாடிக்கையாளர் மூலதனத்தின் பெறுமதியை மேம்படுத்துவதற்கான உத்திகள்

- வாடிக்கையாளர்களுக்கு அதிக பெறுமதியை வழங்கும் வகையில் விநியோக வலையமைப்பை மாற்றுதல்
- எண்ணியல் வாடிக்கையாளர் சேவை மாதிரியை பலப்படுத்துதல்
- துண்டமாக்கல் மற்றும் வாடிக்கையாளர் பயணங்களில் கவனம் செலுத்துதல்

### பொருண்மை விடயங்கள்



### குறுங் காலம் முதல் நீண்ட காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்



### ஒரு விசுவாசம் மிக்க வாடிக்கையாளர் தளத்தைக் கட்டி எழுப்புவதற்கான பெறுமதி சேர்ப்பு இயக்கிகள்

- மேன்மையான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல்
- பன்முகப்பட்ட வாடிக்கையாளர் தளத்திற்கு சேவை செய்தல்
- வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாத்தல்
- வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்துதல்
- வாடிக்கையாளர் முறைப்பாடுகளைத் தீர்த்தல்
- வாடிக்கையாளர்களிடம் பொறுப்புடன் செயல்படுதல்
- வாடிக்கையாளர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல்

### மேன்மையான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல்

20 மில்லியனுக்கும் அதிகமான கணக்குகளைக் கொண்ட நாட்டில் மிகவும் பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தளம் எங்களிடம் உள்ளது. ஒவ்வொரு வகையிலும் ஒரு நெருக்கமான புரிதலை வளர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் நாங்கள் செய்கிறோம். அவர்களின் மாறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய நாங்கள் முயற்சி செய்வதுடன் அவர்கள் விரும்பும் வழிமுறைகள் மூலம் தொடர்புடைய உற்பத்திகளை வழங்குவதன் மூலம் ஒரு முன்மாதிரியான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குகிறோம். எங்கள் விரிவான, வாடிக்கையாளர் சார்ந்த உற்பத்தித் தொகுதி இலங்கை சமூகத்தின் அனைத்து பிரிவுகளையும் இலக்காகக் கொண்டுள்ளது. பரந்த கிளை வலையமைப்பு, தபால் வலையமைப்பு, கைத் தொலைபேசி மற்றும் இணைய வங்கி மற்றும் பிற எண்ணியல் தளங்களில் வழங்கப்படும் எங்கள் உயர்தர சேவை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வங்கியுடன் எளிமையான, தடையற்ற, நேரடி ஈடுபாட்டை வழங்குகிறது.

### எண்ணியல் மயமாக்கல் மூலம் மகிழ்ச்சியான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல்

எங்கள் வணிகத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வாடிக்கையாளர் அனுபவம் அவசியம். எங்கள் வழிமுறைகள், மக்கள் மற்றும் உற்பத்திகள் மூலம் வாடிக்கையாளர் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் மறக்க முடியாத தருணங்களை உருவாக்க நாங்கள் முயற்சி செய்கிறோம். வங்கியிலிருந்து மகிழ்ச்சியான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க, வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துதல், அணுகலை மேம்படுத்துதல், செயற்திறன், நிதி நல்வாழ்வு மற்றும் கல்வியறிவை மேம்படுத்துதல் மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துகிறோம்.

வங்கியின் எண்ணியல் சகாப்தத்தில், வங்கியின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்தோம், மேலும் எங்கள் அமைப்புகள் மற்றும் செயன்முறைகளை தொடர்ந்து பராமரித்து மேம்படுத்துகிறோம். அதன்படி, திறைசேரி முகாமை முறைமை மற்றும் மனித வள முகாமை முறைமை ஆகியவற்றுடன் சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒருங்கிணைந்த T24 மைய வங்கியியல் தீர்வை அமுல்படுத்த வங்கி தொடங்கியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு எண்ணியல் அனுபவத்தை மேம்படுத்துவதற்கான வங்கியின் முன்முயற்சிகளுக்கு சான்றளித்து, LK domain பதிவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியில் தேசிய சேமிப்பு வங்கியின் கூட்டு வணிக வலைத் தளம் ஆகிய www.nsb.lk, Bestweb இல் மிகவும் பிரபலமான கூட்டு வணிக வலைத்தள விருதை (வெண்கலம்) பெற்றது.

வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக, எங்கள் எண்ணியல் திறன்களில் நியாயமான மற்றும் நிலைபேறான முதலீடுகளை நாங்கள் தொடர்ந்து செய்தோம் - எங்கள் உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கும், புத்தாக்கங்களை தொழிற்படுத்தவும், சுறுசுறுப்பை மேம்படுத்துவதற்கும், எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு சுய சேவை செய்வதற்கான திறனை அதிகரிப்பதற்கும். எங்கள் வாடிக்கையாளர்களின் வேகமாக மாறிவரும் வாழ்க்கை முறைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அதிக அளவிலான ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கும் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துவதற்கும், தன்னியக்க கூற்றுப் பொறிகள், பண மீள்சுழற்சிப் பொறிகள் மற்றும் ஒருங்கிணைந்த எண்ணியல் ஊடக ஒப்பம் ஆகியவற்றைக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கி இணைப்பு மண்டலங்களை நாங்கள் தொடர்ந்து நிறுவினோம். மேலும், நாங்கள் எங்கள் கிளை வலையமைப்பை தன்னியக்கமயமாக்குவதோடு வாடிக்கையாளர் சேவையை மையமாகக் கொண்ட வாடிக்கையாளர் தொடர்புப் புள்ளிகளை விரிவுபடுத்தினோம். மேலும் விவரங்களுக்கு, பக்கம் 112 இல் உள்ள உற்பத்தி மூலதனம் மற்றும் பக்கம் 120 இல் உள்ள புலமை மூலதனம் ஆகியவற்றைப் பார்க்கவும்.

**எண்ணியல் ஈடுபாடு**

2019 ஆண்டின் போது, எங்கள் வாடிக்கையாளர்களுடனான இணைய வழி ஈடுபாட்டை சமூக ஊடகங்கள் மூலம் ஆழமாக வேரூன்றியுள்ளோம்.

www.nsb.lk
சராசரி மாதாந்த வருகை தருவோர் 51,000
2019 இல் இரு விருதுகள் பெறப்பட்டன.
613,000
120.6%

twitter.com/NSBSLOfficial
116 பின்தொடர்வோர்
முற்று முழுதாக இயல்பான வளர்ச்சி
116
84%



www.facebook.com/NSBSLOfficial
இரசிகர் தளம் 109,640
109,640
27%

www.youtube.com/c/NationalSavingsBankNSBSLOfficial
920 சந்தா தாரர்கள்
முற்று முழுதாக இயல்பான வளர்ச்சி
920
65%

www.linkedin.com/company/nsbslofficial
512 பின்தொடர்வோர்
முற்றுமுழுதாக இயல்பான வளர்ச்சி
512
33%

www.instagram.com/NSBSLOfficial
908 பின்தொடர்வோர்
01 மார்ச் 2019 இல் ஆரம்பிக்கப்பட்டது
908

**எங்கள் உற்பத்திக் கொடைமுனைவை மேம்படுத்தல்**

பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் பிரிவுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தனிப் பயனாக்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளை நாங்கள் வழங்குகிறோம். வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தேவைகளுடன் ஒத்திசைவாக, வாடிக்கையாளர்களின் மாறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்ய பின்வரும் உற்பத்திகள் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- **இ-இணைப்பின் அமுலாக்கம்**

எங்கள் இணைய வங்கி தளம் "NSB e-connect எப்போது வேண்டுமானாலும் இணைந்திருங்கள்" என்ற தொனிப் பொருளின் கீழ் மீண்டும் தொடங்கப்பட்டது.

இந்த சேவைகள் முற்றிலும் இலவசமாக, மீதி விசாரணை, பயன்பாட்டுப் பட்டியல் கொடுப்பனவு மற்றும் நிதிப் பரிமாற்றங்கள் ஆகியவை உள்ளடங்கலான வங்கி சேவைகளின் வரிசையைப் பெறுவதற்கான வசதியை அனுபவிக்கின்றன.

- **தேசிய சேமிப்பு வங்கி இன்ஸ்டாகிராம் ஊடக அமுலாக்கம்**

சமூக ஊடக பயனர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், வாடிக்கையாளர்களுடன், குறிப்பாக மில்லினியல்களுடன் அதிக அளவில் ஈடுபாட்டை உருவாக்க NSB இன்ஸ்டாகிராம் ஊடகத்தைத் தொடங்கினோம். இது வர்த்தக நாமத்தின் உயர் கட்புலத் தெரிவு நிலையைப் பெறவும், எங்கள் காட்சிப்படுத்தலை சந்தைப்படுத்தலில் மேம்படுத்தவும் மற்றும் ஒரு பாரிய வாடிக்கையாளர் தளத்துடன் மிகவும் திறம்பட இணைக்கவும் எங்களுக்கு உதவியது.

- **பிரார்த்தனா + சேமிப்பு சான்றிதழ்**

இது உலக சிக்கனதினத்தை இலக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பிரார்த்தனா சேமிப்புச் சான்றிதழின் நீட்டிக்கப்பட்ட பதிப்பாகும். பிரார்த்தனா+, வாடிக்கையாளர்களுக்கு ரூபா 25,000 முதல் ரூபா 10,000,000 பெறுமதியான ஒரு வருடம் முதல் 20 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கான தெரிவுகளை வழங்குகிறது. ஆரம்ப வைப்பு முதிர்வு காலம் மற்றும் முதிர்வு மதிப்பைப் பொறுத்து மாறுபடும். இந்த உற்பத்தி வாடிக்கையாளருக்கு அதிக வருமானத்தை அளிக்கிறது, அதே நேரத்தில் வங்கியின் நீண்ட கால வைப்புத் தளத்தை அதிகரிக்கும்.

- கொரியாவுக்கு புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கான புறப்படும் கடன் திட்டம் 12 மாத அறிமுகம்
- மாதாந்த வட்டி செலுத்த வேண்டிய வெளிநாட்டு நாணயத்தில் நிலையான வைப்புத் திட்டம் (அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண்ஸ் மற்றும் அவுஸ்திரேலிய டொலர்
- புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான சிறப்பு வீட்டுக் கடன் திட்டம் "சிஹின மாலிகா"

**வங்கியியலை எளிதாக்குதல்**

வேகமாக மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகளுக்கு பதிலளிப்பதற்கும் குறைபாடற்ற மற்றும் வேகமான வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கும் நெகிழ்வுத் தன்மையுடன் திறமையாக செயற்படுவதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துகிறோம். பெறுமதி சேர்க்காத நடவடிக்கைகளை அகற்றுவதன் மூலம் (126 முதல் 127 பக்கங்களைப் பார்வையிடுக) காத்திருப்பு நேரங்களைக் குறைக்கும் மற்றும் அதிகாரத்தை விடுவிப்பதன் மூலம் வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குனர்களுக்கு சேமிப்புக் கணக்குகள், கடன் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான செயன்முறைகளை நாங்கள் மீண்டும் வடிவமைத்து எளிமைப் படுத்தினோம். மிக முக்கியமானவற்றில் கவனம் செலுத்த உயர் மட்ட முகாமை பொறுப்பளிக்கப்பட்டது. மேலும், கணினி மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் வாடிக்கையாளர் பயணங்களின் தன்னியக்க மயமாக்கலை அதிகரிக்க பல திட்டங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ளன. (118 முதல் 119 பக்கங்களில் பார்க்கவும்).

**விசேட தேவைகளுடைய வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்தல்**

எங்கள் வங்கிக்கு வரும் அனைவரையும் தனிப்பட்ட மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடாத்துவது எமது சிறந்த வாடிக்கையாளர் சேவையின் மையத்தில் உள்ளது. மேலும் அனைத்தையும் உள்ளடக்கிய சமூகத்தை வென்றெடுப்பதில் பங்கு வகிப்பதன் மூலம், வாடிக்கையாளர்களின் சிறப்புத் தேவைகளைப் புரிந்து கொள்வதோடு, எங்கள் கிளைகளில் அவர்களுக்கு சிறப்பான வங்கி அனுபவத்தையும் வழங்குகிறோம். மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகல் வசதியுடன் எங்கள் கிளைகளை நிறுவ நாங்கள் முயற்சி செய்கிறோம், இது அனைத்து புதிய கிளைகளுக்கும் கட்டாயமாக உள்ளது. இதுவரை, எங்கள் 224 கிளைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு அணுகலை வழங்கியுள்ளது.

**மாறுபட்ட வாடிக்கையாளர் தளத்திற்கு சேவை செய்தல்**

இலங்கையில் ஒரு முன்னணி நிதி நிறுவனமாக, சமூகத்தின் அனைத்து பிரிவுகளிலிருந்தும் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிறோம். எங்கள் வர்த்தக நாமமான தேசிய சேமிப்பு வங்கியின் "தேசிய" அம்சத்திற்கு உண்மையாக இருந்து, வங்கிச் சேவையைப் பெறாத மற்றும் வங்கிச் சேவையைத் தேவைக்குக் குறைவாகப் பெற்றுக் கொள்ளும் நமது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் சேவை செய்கிறோம். எங்கள் பரந்த அளவிலான புதுமையான மற்றும் மலிவு தீர்வுகள் மூலம், ஒவ்வொரு வாழ்க்கை நிலையிலும் வாடிக்கையாளர்களின் நிதித் தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்கிறோம்.


திருமணம் மற்றும் ஒரு குடும்பத்தை ஆரம்பித்தல்
ஓய்வு பெறல் திட்டமிடுகை
ஓய்வு பெறல்
ஆதனம் அல்லது வாகனம் ஒன்றை கொள்வனவு செய்தல்
முதல் வேலை
உயர் கல்வி
முதல் சேமிப்புக் கணக்கு
0
10
20
30
40
50
60
70
ஹப்பன்
பிரார்த்தனா
நான் திடமாய் உள்ளேன்
கௌரவ
சிரேஷ்ட பிரஜை
நியோ
புத்தி
பென்ஷன் +
வாகனக் கடன்
திரிய
பசுமைக் கடன்
தனிப்பட்ட கடன் (தனிநபர்)
ரீச்
வீடமைப்புக் கடன் (கெதொர, அலங்கார, விகாசிதா)
சாரிகா
ரன் சஹன
ஸ்த்ரீ
ஹப்பி
பஸ் அவுருது

GRI 418-1

## வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாத்தல்

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கு வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாப்பது மிக முக்கியம். எண்ணியல் வங்கியின் அதிகரிப்புடன், இணையவழிக் குற்ற இடர் அதிகரித்துள்ளது. அதனால் தான் இணையவழிப் பாதுகாப்பைத் தேசிய சேமிப்பு வங்கியில் ஒரு பொருண்மை மிக்க விடயமாக அடையாளம் கண்டுள்ளோம். வாடிக்கையாளர் தனியுரிமையைப் பாதுகாப்பதற்கும், எங்கள் முறைமைகளைப் பாதுகாப்பதற்கும் நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளில், சமீபத்திய தொழில்நுட்பத்தில் முதலீடு செய்துள்ளோம். தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் சட்டம், வாடிக்கையாளர் சாசனம் மற்றும் எங்கள் தகவல் முறைமைப் பாதுகாப்புக் கொள்கை ஆகியவற்றால் எங்கள் முறைமைகளின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படுகிறது.

எங்கள் முறைமைகளின் பாதுகாப்பை மதிப்பிடுவதற்கும் உறுதி செய்வதற்கும் வழக்கமான சோதனைகள் நடாத்தப்படுகின்றன. இணைய வழிப் பாதுகாப்பு இடர் முகாமை தொடர்பாக வங்கியின் தகவல் பாதுகாப்பு அதிகாரி (ISO) சுயாதீனமாக கண்காணித்து, செயற்படுத்தல் மற்றும் ஏதேனும் விதிவிலக்குகள் குறித்து சபைக்கு அறிவிக்கிறது. வாடிக்கையாளர் தனியுரிமையை மீறுதல் அல்லது வாடிக்கையாளர் தரவை இழப்பது தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் இல்லை, அல்லது 2019 ஆம் ஆண்டில் வங்கியில் விதிக்கப்பட்ட அபராதமோ அல்லது வேறு எந்த தடை உத்தரவோ இருக்கவில்லை. வாடிக்கையாளர் தரவு மற்றும் தனியுரிமையைப் பாதுகாக்க வங்கி எடுத்துள்ள அளவீடுகள் குறித்து மேலும் அறிய, பக்கம் 127 இல் உள்ள புலமை மூலதனம் பகுதியைப் பார்க்கவும்.

## வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்துதல்

விதிவிலக்கான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் உறவுகளை வளர்க்கிறோம். எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் தொடர்புகளிலிருந்து சிறந்த அனுபவத்தைப் பெறுவதை உறுதிப்படுத்த நாங்கள் முயற்சி செய்கிறோம். வாடிக்கையாளர் சேவையை தொடர்ந்து மேம்படுத்துவதற்கான எங்கள் முயற்சிகளில், அவர்களின் அனைத்து நிதித் தேவைகளுக்கும் ஒருங்கிணைந்த, முழுமையான தீர்வுகளை வழங்க நாங்கள் அர்ப்பணித்துள்ளோம். வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவதற்கான எங்கள் முயற்சிகளில், வாடிக்கையாளர் மதிப்பு.

முன்மொழிவுகளை வழங்க வாடிக்கையாளர் திருப்தி நிலைகளை துல்லியமாக மதிப்பிடுவதன் மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்கிறோம். இந்த ஆய்வுகளின் முடிவுகள் ஒட்டுமொத்த தந்திரோபாய வடிவமைப்பை உருவாக்குவதற்கு ஒரு முக்கிய உள்ளீட்டை வழங்குகின்றன. எங்கள் நியமிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை அதிகாரிகள் மூலம், கிளை மட்டத்தில் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளை நாங்கள் தொடர்ந்து வழங்குகிறோம். வரவு அட்டை வைத்திருப்பவர்களுக்கு விசுவாச திட்டங்கள் மற்றும் வெகுமதி திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் விசுவாசத்தை நாங்கள் தொடர்ந்து செலுத்தினோம். வாடிக்கையாளர்கள் தங்கள் கேள்விகள், முறைப்பாடுகள், குறைகளை மற்றும் பிற கருத்துக்களை அனுப்ப பல தளங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## வாடிக்கையாளர் கரிசனைத் தீர்த்தல்

அனுபவத்தின் பயணம் வாடிக்கையாளரின் ஆரம்ப தொடர்புடன் தொடங்கி அவர்களின் வங்கி சிக்கல்களை நிறைவேற்றுகிறது. அனைத்து வாடிக்கையாளர் முறைப்பாடுகளையும் திறம்பட தீர்க்க ஒரு வலுவான முறைமையினை நாங்கள் செயற்படுத்தியுள்ளோம். வாடிக்கையாளர் குறைகளை முன்வைக்க அழைப்பு நிலையம், இணையவழி வழிமுறைகளை மற்றும் கிளைகள் உட்பட பல தளங்கள் நிறுவப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்கள் தங்கள் கேள்விகள், முறைப்பாடுகள், குறைகள் மற்றும் பிற கருத்துக்களை 24/7 செயற்படும் தேசிய சேமிப்பு வங்கி அழைப்பு நிலையத்துக்கு அனுப்பலாம், தீவுகளில் உள்ள எங்கள் கிளைகளில் பயிற்சி பெற்ற ஊழியர்கள், கிளை வளாகத்தில் உள்ள பரிந்துரை பெட்டிகள், சமூக ஊடகங்கள், வலைத்தளம் www. nsb.lk மற்றும் மின்னஞ்சல், ஸ்கைப் மற்றும் வலை அரட்டை போன்ற பிற எண்ணியல் முறைகள். வங்கி மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களிடையேயான தகவல் தொடர்புக்கான முதன்மை முறை, எங்கள் அழைப்பு மையம், இது வாடிக்கையாளர் கேள்விகள் மற்றும் குறைகளை கையாள அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அனைத்து அழைப்புகளும் அதிக பயிற்சி பெற்ற மற்றும் திறமையான வாடிக்கையாளர் சேவை பிரதிநிதிகளால் கையாளப்படுகின்றன. ஒரு வினவல் ஆரம்பத்தில் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பும் முகவரால் கையாளப்படுகிறது. ஒவ்வொரு வினவலுக்கும் ஒரு குறிப்பு எண் உருவாக்கப்படுகிறது, இது வாடிக்கையாளருக்கு அவர்களின் வினவலைப் பின்தொடர வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர் புகார்கள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை ஒவ்வொரு மாதமும் தொகுக்கப்பட்டு நிர்வாகத்திற்கு வழங்கப்படுகிறது.

வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்குச் செல்வதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், கடினமான சூழ்நிலைகளைத் திருப்புவதற்கும் தேவையான திறன்களைக் கொண்டு “வங்கி முழுவதும்” பயிற்சித் திட்டத்தின் மூலம் எங்கள் ஊழியர்களை நாங்கள் தொடர்ந்து சித்தப் படுத்தினோம். தீர்க்கப்பட்ட வழக்குகளின் விகிதம் 84.7% ஆக அதிகரித்து வாடிக்கையாளர் புகார்களைக் கையாள்வதிலும் தீர்ப்பதிலும் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு தெளிவாகத் தெரிந்தது.

ஒரு அழைப்புக்கு பதிலளிக்க எடுக்கும் சராசரி நேரம்

**<30விநாடிகள்**





பெறப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை

**203**
(2018 – 220)



மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை

**4,759**
(2018 – 2,539)

தொலைபேசி மூலம் பெறப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை

**348,904**
(2018 – 248,977)

தீர்க்கப்பட்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை

**172**
(2018 – 160)



இலங்கை மத்திய வங்கிக்கான முறைப்பாடுகளின் எண்ணிக்கை - **பூச்சியம**

நிதி குறைகேள் அதிகாரிக்கான முறைப்பாடுகளின் எண்ணிக்கை - **பூச்சியம்**

அட்டைகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை- விற்பனைப்புள்ளி

**2,706**
(2018 – 1,588)

அட்டைகள் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை - அட்டை விசாரணைகள்

**957**
(2018 – 836)



GRI 417-2, 3

### வாடிக்கையாளர்களிடம் பொறுப்புடன் செயற்படுதல்

உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதில் இருந்து சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை வரை வாடிக்கையாளர்களுடனான எங்கள் நடவடிக்கைகள் மற்றும் வாடிக்கையாளர்களின் உறவின் அனைத்து அம்சங்களிலும் பொறுப்பு ஆழமாக பொறிக்கப்பட்டுள்ளது. பின்வரும் நடவடிக்கைகள் மூலம் நாங்கள் பொறுப்பை உறுதி செய்கிறோம்:

- எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான மற்றும் பாதுகாப்பான உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குதல்
- தகவலறிந்த முடிவுகளை எடுக்க தெளிவான, பொருத்தமான மற்றும் சரியான நேரத்தில் தகவல்களைத் தொடர்பாடல் செய்தல்
- திறம்பட மற்றும் உடனடியான முறையில் பின்னூட்டங்களைக் கையாளுதல்
- வாடிக்கையாளர்களைப் புரிந்து கொள்வதற்கும் தரமான சேவையை வழங்குவதற்கும் எங்கள் ஊழியர்களின் திறனை வளர்த்தல் வட்டி விகிதங்கள், நாணய மாற்று வீதங்கள், கடன் விகிதங்கள் மற்றும் கிளைகள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் கூட்டு வணிக வலைத் தளங்களில் காட்சிப்படுத்தல் போன்ற எங்கள் கடன் மற்றும் வைப்புத் உற்பத்திகளில் தொடர்புடைய எல்லா தரவையும் காண்பித்தல்.
- உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு பொருந்தக்கூடிய அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகள் மத்திய வங்கி வழிகாட்டுதல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் படி வாடிக்கையாளர்களுக்கு முறையாகத் தெரிவிக்கப்படுகின்றன. நிதிக் குறைகேள் அதிகாரி மூலம் வங்கியின் முறைப்பாடு தீர்க்கும் செயன்முறை மத்திய வங்கி வழிகாட்டுதல்களின் படி அனைத்து கிளைகளிலும் காட்டப்படும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு இணங்க, ஒரு பொது தகவல் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார், மேலும் பொதுமக்களுக்கான தகவல்களை அணுகுவதற்கான உரிமையை உறுதி செய்வதற்கான நடைமுறையை நாங்கள் வகுத்துள்ளோம்.

விதிமுறைகளுக்கு இணங்க எங்கள் விளம்பரங்கள் அனைத்தும் பின்வரும் தகவல்களைக் கொண்டுள்ளன:

- எங்கள் அழைப்பு நிலையம் மற்றும் கூட்டு வணிக வலைத் தள முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள்

- வங்கியின் ICRA லங்கா லிமிட்டட் கடன் தர மதிப்பீடு
- தேசிய சேமிப்பு வங்கிக்கான தனித்துவமான அம்சம் – 100% அரசு உத்தரவாதம்

வங்கி சின்னம் மற்றும் மகுட வாசகம்: மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் எந்தவொரு உற்பத்தி மற்றும் சேவைப் பெயரிடல் அல்லது சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் தொடர்பான விதிமுறைகள் அல்லது பிற வழிகாட்டுதல்களுக்கு இணங்காத நிகழ்வுகள் எதுவும் காணப்பட்டு இருக்கவில்லை.

### வாடிக்கையாளர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல்

ஒவ்வொரு ஆண்டும், வாடிக்கையாளர்களின் அணுகல் மற்றும் திருப்தியை மேம்படுத்துவதற்காக எங்கள் வாடிக்கையாளர்களுக்காக தீவு முழுவதும் எங்கள் தொடு புள்ளிகளில் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை நடத்துகிறோம். 76 சந்தைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் சந்தைப்படுத்தல் உதவியாளர்களை செயற்படுத்துவதன் மூலம் எங்கள் சந்தைப்படுத்தல் பிரிவு பலப்படுத்தப்பட்டது. வாடிக்கையாளர் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக தீவு முழுவதும் விளம்பர பிரச்சாரங்களை நடத்த அவர்கள் கள சந்தைப்படுத்தல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். ஸ்திரி மற்றும் ஹப்பன் வைப்பு பிரச்சாரங்கள், குறிப்பாக வெற்றிகரமான பிரச்சாரமாக இருந்தன, அவை அதிக வாடிக்கையாளர் விழிப்புணர்வை ஏற்படுத்தின. டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் புதிய பள்ளி மாணவர்களை குறிவைத்து ஹப்பன் குழந்தைகளின் சேமிப்பு தயாரிப்புக்காக ஒரு சிறப்பு பரிசு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் விளைவாக ஹப்பன் கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது, இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். சர்வதேச மகளிர் தினத்தை நினைவுகூரும் வகையில் மார்ச் மாதத்தில் நடத்தப்பட்ட ஸ்திரி விளம்பர பிரச்சாரம், ஸ்திரி சேமிப்பு உற்பத்தியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது, பல புதிய ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்கள் கப்பலில் வந்து இன்றுவரை அதிக அணிதிரட்டலை பதிவு செய்ய முடிந்தது.

GRI 102-9

## வணிகக் கூட்டாளர் மூலதனம் - வணிகக் கூட்டாளர்களுடன் பலமான உறவுமுறைகளைக் கட்டி எழுப்புதல்

### வணிகக் கூட்டாளர் மூலதனம் எமக்கு ஏன் அவசியமானது

இலங்கையில் உள்ள ஓர் நம்பகமான நிதிச் சேவை வழங்குனர் என்ற வகையில், நாம் பலமான, உற்பத்தித் திறன் மிக்க மற்றும் நீண்ட கால உறவுமுறைகளை எமது வணிகக் கூட்டாளர்களுடன், தொடர்புபட்ட வங்கிகளுடன், பரிமாற்ற வீடுகளுடன், வழங்குனர்களுடன், புற வழங்கல் சேவை தருனர்களுடன் மற்றும் ஏனைய வணிகப் பங்காளர்களுடன் எற்படுத்தி உள்ளோம். இந்த உறவுமுறைகள் எமது பெறுமதி உருவாக்க செயன்முறை மற்றும் முறையான மற்றும் தடையற்ற சேவை வழங்கலுக்கான ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதுடன், இடையூறுகள் இன்றி வணிகத்தை முறையாக நடாத்திச் செல்லவும் உதவுகின்றன.

### எமது அணுகுமுறை

நாம் எமது வணிகக் கூட்டாளர்களை எமது வணிகத்தின் ஒரு பகுதியாக நோக்குவதுடன், நாம் ஓர் விருப்பத்துக்கு உரிய வங்கியாகத் தெரிவு செய்யப்படுவதில் முக்கியம் மிக்கவர்களாக இருக்கின்றனர். ஓர் அரச வங்கி என்ற வகையில், முறையான, வெளிப்படையான, எமது உள்நாட்ட மற்றும் சர்வதேச வணிகக் கூட்டாளர்களுடனான உறவுமுறைகளில் எமது நிறுவனத்தில் உள்ள நெறிமுறை மிக்க கூட்டு வணிகக் கொள்கைகள் ஊடாக ஓர் வரம்பை உருவாக்கி இருக்கிறோம். இந்த நிலைபேறான நீண்ட கால உறவுமுறைகளை உருவாக்கி தொழிற்பாட்டு ஒன்றிணைப்பு, சந்தை அணுகல் மற்றும் புதிய வணிக வாய்ப்புக்கள் ஆகிய விடயங்களில் பரஸ்பர நன்மையைப் பெற முயற்சிக்கிறோம்.

### வணிகக் கூட்டாளர் மூலதனத்தின் பெறுமதியை மேம்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள்

- ஒழுங்கு முறையான ஈடுபாடு
- வெளிப்படையான மற்றும் நிலைபேறான கொள்முதல் நடைமுறைகளை உறுதி செய்தல்

### பொருண்மை விடயங்கள்




### குறுங் காலம் முதல் நீண்ட காலத்துக்கான தந்திரோபாய முன்னுரிமைகள்




### வணிகக் கூட்டாளர்களுடன் பலமான உறவுமுறையைக் கட்டி எழுப்புவதற்கான பெறுமதி உருவாக்கும் இயக்கிகள்

- பொறுப்புணர்வு மிக்க கொள்முதல்
- புற வழங்கல் சேவை வழங்குநர்களுக்கு பெறுமதியை வழங்குதல்
- பொறுப்புணர்வு மிக்க தொடர்பாடல்
- எங்கள் தந்திரோபாய கூட்டணிகளை வலுப்படுத்துதல்
- தொழிற்துறை உறுப்பினர்கள்

**எமது வணிகக் கூட்டாளர் சுயவிபரம்**



**நிதியியல் சேவைகள் வழங்குனர்**

- வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள்
- தொடர்புடைய வங்கிகள்
- பரிமாற்ற இல்லங்கள்
- யூரோஜிரோ நிறுவனங்கள்



**புற வழங்கல் சேவைகள் வழங்குனர்**

- பாதுகாப்பு
- உணவு மற்றும் குடிநீர்
- சுகாதார மற்றும் துப்புரவு சேவைகள்
- போக்குவரத்து மற்றும் பிற
- கட்டுமான மற்றும் பராமரிப்பு சேவைகள்



**தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகள்**

- தகவல் தொழில்நுட்ப வன்பொருள் வழங்குனர்கள்
- தகவல் தொழிநுட்ப மென்பொருள் உருவாக்குநர்கள் மற்றும் வழங்குனர்கள்
- வலையமைப்பு சேவைப் பாதுகாப்பு





**தொழில்சார் சேவைகள்**

- கணக்காய்வாளர்கள்
- ஆலோசனை சேவை வழங்குநர்கள்



**நிலையான சொத்துக்கள்**

- வாகனங்கள்
- தளபாடங்கள்
- காணி மற்றும் ஆதனம்
- அலுவலக உபகரணங்கள்
- காகிதாதிகள்
- பிற பொருட்கள்



**பயன்பாட்டு வழங்குநர்கள்**

- மின்சாரம்/நீர்/ஆற்றல்

GRI 204-1

**பொறுப்புணர்வு மிக்க கொள்முதல்**

எங்கள் வழங்குனர்கள் தந்திரோபாய பங்காளிகளாக கருதப்படுகிறார்கள், அதற்கு பதிலாக, தரம், சேவை மற்றும் நெறிமுறைகளின் மிக உயர்ந்த தரங்களை பின்பற்றுவதை நாங்கள் எதிர்பார்க்கிறோம். மொத்த கொள்முதல் செலவு ரூபா 2.2 பில்லியன் மேற்கொள்ளப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டில் எங்கள் பொருட்கள் மற்றும் சேவைகள் 100% உள்நாட்டு சமூகங்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதன் மூலம் உள்ளூர் வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. எங்கள் வழங்குனர்கள் அனைவரும் இலங்கை அரசினால் அமைக்கப்பட்ட தேசிய கொள்முதல் வழிகாட்டுதல்களுடன் கடைபிடிக்கப்படுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

எங்களிடம் ஒரு வெளிப்படையான வழங்குனர் தேர்வு செயன்முறை உள்ளது. எங்கள் கொள்முதல் செயன்முறை பாகுபாடு இல்லாத மற்றும் சமத்துவமான கையாள்கை, இரகசியத்தன்மை, நேர்மை, திறந்த தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றைச் சுற்றி வருகிறது. பெறுமதியை சீரான முறையில் உருவாக்க எங்களிடம் பல்வகைப்பட்ட வழங்கல் சங்கிலி உள்ளது. எங்கள் வலுவான கொள்முதல் செயன்முறையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- பொருளாதாரப் பெறுமதி மற்றும் கொள்முதல் செயற்றிறனை அதிகரித்தல்
- பரிந்துரைக்கப்பட்ட நியமங்கள், விவரக் குறிப்புகள், விதிகள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றுதல்
- கொள்வனவு செய்த சொத்துக்களை அகற்றுவதில் அல்லது உரிமைகள், சலுகைகள் அல்லது பிரத்தியேக சலுகைகளை வழங்குவதில் வருமானத்தை அதிகப்படுத்துதல்
- ஆர்வமுள்ள தரப்பினர் கொள்முதல் செய்வதில் பங்கேற்க நியாயமான மற்றும் சமமான வாய்ப்பை வழங்குதல்
- பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கலை விரைவாக நிறைவேற்றுதல்
- உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல்
- மதிப்பீடு மற்றும் தேர்வு நடைமுறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் சீரான தன்மையை உறுதி செய்தல்
- ஏலதாரர் வழங்கிய தகவலின் இரகசியத் தன்மையைத் தக்க வைத்துக் கொள்ளுதல்

மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப எங்கள் கொள்முதல் திட்டத்தை ஆண்டுதோறும் புதுப்பிக்கிறோம். நிலையான சொத்துக்கள், நுகர்வு பொருட்கள், பரிசு பொருட்கள், அச்சிடுதல், சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர நடவடிக்கைகள், பராமரிப்பு மற்றும் கட்டுமான சேவைகள் மற்றும் சிறப்பு சந்தர்ப்பங்களில் ஆலோசனை உதவி வாங்குவதற்கு வெளி வழங்குனர்களின் சேவைகள் பெறப்படுகின்றன. வங்கியின் கொள்கை வெவ்வேறு கொள்முதல் செய்வதற்கான பல்வேறு நடைமுறைகளை தெளிவாகக் கூறுகிறது. வங்கியின் வழங்கல் பிரிவு கொள்முதலை மேற்கொள்ளும் போது, கொள்முதல் நடைமுறைகளை அந்தந்த கொள்முதல் குழுக்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் இயக்குநர்கள் குழு, பொது மேலாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி அல்லது பிரதிநிதித்துவ அதிகாரத்தால் நியமிக்கப்பட்ட ஏல திறப்புக் குழு மேற்பார்வையிடுகின்றன. ஆரம்ப சுற்றுச்சூழல் தேர்வுகள் (IEE), சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடுகள் (EIA) ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கும் உறுதி செய்வதற்கும் மற்றும் தேவைப்படும் போது அதிகாரிகளிடமிருந்து தேவையான ஒப்புதல்களைப் பெறுவதற்கும் கொள்முதல் பிரிவு பொறுப்பாகும்.

பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் எங்கள் கொள்முதல் செயற்பாட்டில் நிலைத்த தன்மையை ஒருங்கிணைத்துள்ளோம். சேவைகள் அல்லது தயாரிப்புகளின் தரம், போட்டி விலைகள், அனுபவம் மற்றும் திறன், நிதித் திறன், நெகிழ்வுத்தன்மை மற்றும் திறன் மற்றும் சட்டத் தேவைகளுக்கு இணங்குதல் ஆகியவை பொதுவான தேர்வு அளவுகோல்களில் அடங்கும்.

### புற ஒப்பந்த சேவை வழங்குநர்களுக்கு பெறுமதியை வழங்குதல்

ஆண்டின் போது, நாங்கள் ரூபா 398.7 மில்லியன் வங்கியில் உள்ள ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை உள்ளடக்கிய எங்கள் அவுட்சோர்ஸ் சேவை வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டது. புற ஒப்பந்த வழங்கல் குறித்த வழிகாட்டுதல்களை வழங்கும் மற்றும் புற ஒப்பந்த வழங்கல் செயற்பாடு, சேவை, செயன்முறை அல்லது செயற்பாடு மற்றும் அதன் செயற்பாட்டின் தேவையை மதிப்பிடுவதற்கான அளவுகோல்களை எங்கள் புற ஒப்பந்த வழங்கல் கொள்கை குறிப்பிடும். இது 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டுதல்களின் படி வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவுகள் 46 (1) மற்றும் 76 (ஜே) (1) பிரிவுகளால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துகிறது. இதன் சமீபத்திய திருத்தம் 2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க வங்கி (திருத்தம்) சட்டம் முறையே உரிமம் பெற்ற வணிக வங்கி மற்றும் உரிமம் பெற்ற சிறப்பு வங்கியின் செயற்பாடுகளை ஒப்பந்தப் புற வழங்கல் செய்வது தொடர்பாகக் குறிப்பிடுகின்றன.

### பொறுப்புணர்வு மிக்க தொடர்பாடல்

எங்கள் தகவல் தொடர்பாடல் கொள்கையால் வரையறுக்கப்பட்ட அனைத்து உள்ளக மற்றும் வெளிப்புற தகவல் தொடர்புகள் மிகுந்த பொறுப்பு, பொறுப்புக்கூறல், நிலைத்த தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றைக் கொண்டு கையாளப்படுகின்றன. எங்கள் தகவல் தொடர்புக் கொள்கை ஒரு பயனுறுதி மிக்க கட்டமைப்பாக நிரூபிக்கப்பட்டுள்ளது, இது எங்கள் வர்த்தக நாம விம்பம், வாடிக்கையாளர் விசுவாசம் மற்றும் பங்குதாரர்களின் விழிப்புணர்வை மேம்படுத்த பொறுப்புடன் தகவல்களை சரியான நேரத்தில் பரப்புவதற்கு உதவுகிறது.

### எங்கள் தந்திரோபாய கூட்டணிகளை வலுப்படுத்துதல்

வளங்களையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கும், பகிரப்பட்ட வணிக நோக்கங்களை அடைவதற்கும் நோக்கமாக, பல சர்வதேச அமைப்புகளுடன் தந்திரோபாய கூட்டணிகளை உருவாக்கியுள்ளோம். இந்த கூட்டாண்மைகள் ஒரு போட்டி விளிம்பைப் பெற எங்களுக்கு உதவியது, அதே நேரத்தில் இலாப வளர்ச்சி மற்றும் நிறுவன மதிப்பை ஈட்டுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குகிறது.

உலகில் எங்கிருந்தும் பாதுகாப்பான பணம் அனுப்புவதற்கு வசதியாக உலகளாவிய பண பரிமாற்ற நிறுவனங்களுடன் முக்கிய தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். நாங்கள் ஸ்வி∴ப்ட் முறைமையின் உறுப்பினராக உள்ளதுடன், எங்கள் பணம் அனுப்பும் சேவையான தேசிய சேமிப்பு வங்கி U-Trust மூலம் இலங்கை வெளிநாட்டவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சேவை செய்கிறோம். இலங்கை பயனாளிகளுக்கு நம்பகத் தன்மையுடனும் வசதியாகவும் பணம் அனுப்புவதற்காக வங்கி பல சர்வதேச பண பரிமாற்ற சேவைகள் மற்றும் வெளிநாட்டு வங்கிகளுடன் பணம் அனுப்பும் வணிக உறவுகள் மற்றும் தொடர்புடைய ஏற்பாடுகளில் நுழைந்துள்ளது. பல நாடுகளில் இருந்து யூரோகிரோ தபால் உறுப்பினர் அமைப்புகள் வழியாக தங்கள் சேவை இடங்கள் வழியாக பணம் செலுத்துபவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் பணம் அனுப்புவதற்கான வசதிகளையும் வங்கி வழங்குகிறது.

எங்கள் உலகளாவிய பண பரிமாற்ற சேவைகள் 35 பரிமாற்ற இல்லங்கள் மற்றும் 14 தொடர்புடைய வங்கிகளுடனான எங்கள் இணைப்பு மூலம் வசதி செய்யப்படுகின்றன. சர்வதேச பண பரிமாற்ற சேவைகளில் ஈடுபட்டுள்ள பரிவர்த்தனை இல்லங்கள்/ வங்கிகள் மற்றும் வங்கியுடன் இணைந்த யூரோகிரோ உறுப்பு நிறுவனங்கள், தேசிய சேமிப்பு வங்கியின் தொடர்புடைய வங்கிகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள வங்கியின் பிரதிநிதிகளின் பட்டியல் 458 முதல் 461 பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

2019 இல் வணிக கூட்டுக்களை வலுப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள்:

- தொடர்புத் திறன் வங்கிகளுடன் புதிய உறவுகளை உருவாக்குவதன் மூலம் தேசிய சேமிப்பு வங்கி தனது பணம் அனுப்பும் சேவையை விரிவுபடுத்தியது:

- எமிரேட்ஸ் என்.பி.டி வங்கி பி.ஜே.எஸ்.சி மற்றும் எர்ஸ்டே குருப் வங்கி ஏ.ஜி., பரிவர்த்தனை இல்லங்கள்: க்மோனி டிரான்ஸ் கோ எல்.டி மற்றும் இஸ்ரேலின் பணம் அனுப்பும் வழிமுறைகள்: யூரோகிரோ உறுப்பினர்களாக வரையறுக்கப்பட்ட அஞ்சல் நிறுவனம் மற்றும் கொரியா போஸ்ட்.
- மத்திய கிழக்கு, இத்தாலி, சைப்ரஸ், தென் கொரியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் சந்தைகளின் உள்ளடக்கத்தை அதிகரிப்பதற்காக பண பரிமாற்ற சேவைகள், பணம் அனுப்புதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய வங்கி ஒப்பந்தங்களுக்கான பரிமாற்ற வீடுகளுடன் வலுவான உறவுகளை உருவாக்குவது தொடர்ந்தது.
- இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு திறமையான பணம் அனுப்பும் சேவையை வழங்குவதற்காக, வணிகத்தை மேம்படுத்துவதற்கும் புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவதற்கும் வணிக ஊக்குவிப்பு அதிகாரிகள் வங்கியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- வீட்டுவசதி மற்றும் தனிநபர் கடன் தொகுதிகளை மேம்படுத்துவதற்காக அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் 56 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

GRI 102-13

### தொழிற் துறை உறுப்பினர்கள்

இலங்கையில் நிதிச் சேவைத் துறையில் ஒரு முக்கிய வீரராக, தொழில் சகாக்களுடன் நாங்கள் ஈடுபடுவதன் மூலம் நமது நாட்டின் நிதித் துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதில் முக்கிய பங்கு வகித்தோம். தொழில் சவால்களைத் தீர்ப்பதற்கும் உகந்த தொழிற்பாட்டு சூழலை உருவாக்குவதற்கும் பின்வரும் நிறுவனங்களில் உறுப்பினர்களை நாங்கள் வைத்திருக்கிறோம்:

- தேசிய வணிக்க கழகம்
- லங்கா க்ளியர் பிரைவேட் லிமிடெட்
- இலங்கை தொழில் தருனர் சம்மேளனம்
- உலகளாவிய வங்கிகளுக்கு இடையிலான நிதித் தொலைத் தொடர்புக்கான சமூகம் (ஸுறுஐகுவு)
- இலங்கை ஸ்வி.்.ப்ட் பயனர் குழு
- யூரோஜிரோ உலகளாவிய கொடுப்பனவு சமுதாயம்
- உலக சேமிப்பு வங்கியியல் நிறுவனம

## ஒழுங்கு விதிமுறை இணக்கத்தை வலுப்படுத்துதல் - ஒழுங்கு விதிமுறை மூலதனம்

### ஒழுங்கு விதிமுறை மூலதனம் ஏன் எங்களுக்கு முக்கியமானது

அரசாங்கமும் ஒழுங்கு விதிமுறை அமைப்புகளும் ஒரு நல்ல மற்றும் நிலையான வங்கி முறை மற்றும் பொருளாதாரத்தின் ஆரோக்கியமான செயற்பாட்டை எளிதாக்குகின்றன. அரசுக்கு சொந்தமான உரிமம் பெற்ற சிறப்பு வங்கியாக, தேசிய சேமிப்பு வங்கி 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களால் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. ஒழுங்கு விதிமுறை தேவைகளுக்கு இணங்குவதற்கும், எங்கள் நிறுவனம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மீதான பொது நம்பிக்கையை வலுப்படுத்த பொருத்தமான நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் நாங்கள் ஆழ்ந்த உறுதிபூண்டுள்ளோம்.

பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க எங்கள் இயக்க உரிமத்தைத் தொடரவும் எங்கள் நற்பெயரை வலுப்படுத்தவும் உதவுகிறது. நாங்கள் அரசாங்கத்திற்கு செலுத்தும் வரி நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

### எங்கள் அணுகுமுறை

எங்கள் அனைத்து நடவடிக்கைகளிலும் ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்குவதன் மூலமும், தேவையான நியமங்கள் மற்றும் நெறிமுறை மற்றும் பொறுப்பான வணிகத்தில் சர்வதேச சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் எங்கள் இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்த நாங்கள் பணியாற்றுகிறோம். நிச்சயமற்ற தன்மை மற்றும் இடர்களுக்கு விவேகத்துடன் முகாமை செய்யவும் பதிலளிக்கவும் எங்கள் உத்திகள் மற்றும் செயற்பாடுகளை ஒரு வலுவான வணிக மாதிரியுடன் இணைத்துள்ளோம்.

### ஒழுங்கு விதிமுறை மூலதனத்தின மதிப்பை மேம்படுத்துவதற்கான உத்திகள்

- ஒழுங்கு விதிமுறை மாற்றங்களை அடையாளம் காணவும், மதிப்பீடு செய்யவும், பதிலளிக்கவும் ஒருங்கிணைந்த, விரிவான மற்றும் சரியான நேரத்தில் அணுகுமுறையைப் பராமரிக்கிறோம்.
- செயற்பாட்டு பிற்புலத்தை வலுப்படுத்துதல், அழுத்த சோதனைத் தரங்களை மேம்படுத்துதல், தாக்க சகிப்புத்தன்மையை மதிப்பாய்வு செய்தல் மற்றும் செயற்திறன் அளவீடுகளை மேம்படுத்துதல்
- தொழில் ஒழுங்குமுறை முயற்சிகளில் பங்கேற்கவும் (ஆலோசனை ஆவணங்கள்)

### பொருண்மை விடயங்கள்



### குறுகிய காலத்திலிருந்து நடுத்தர கால தந்திரோபாய முன்னுரிமைகள்



### ஒழுங்குமுறை இணக்கத்தை வலுப்படுத்துவதற்கான பெறுமதி உருவாக்கும் இயக்கிகள்

- ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்குதல்
- பணச் சலவை, இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு
- வலுவான முகாமை மற்றும் விவேகமான இடர் முகாமை
- அரசுக்கான பங்களிப்பு

### விதிமுறைகளுக்கு இணங்குதல்

நிதிச் சேவைகளின் எண்ணியல் மயமாக்கலுடன் கூடிய மாறும் வங்கிச் சூழலில், வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்வதற்கும் அதிகரிக்கும் இடர்களை எதிர்கொள்வதற்கும் வங்கிகள் மற்றும் ஒழுங்கு விதிமுறை முறைமைகள் உருவாக வேண்டியது அவசியம் ஆகும். அரசுக்கு சொந்தமான வங்கியாக இருப்பதால், இது மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது, நாங்கள் தேசிய சேமிப்பு வங்கியில் இணக்க கலாச்சாரத்தை வளர்த்துள்ளோம். இலங்கை மத்திய வங்கி (CBSL) வழங்கிய வங்கிச் சட்டம், நிதிச் சட்டம், நிதி பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டம், பரிவர்த்தனை கட்டுப்பாட்டுச் சட்டம், தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் பிற விதிமுறைகளை நாங்கள் பின்பற்றுகிறோம். கூடுதலாக, நாங்கள் நிதி அமைச்சகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை கணக்கீட்டு மற்றும்

கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை மற்றும் பாராளுமன்றத்துடன் நெருக்கமான உறவுகளைப் பேணுகிறோம், தேவையான ஒழுங்கு விதிமுறைத் தேவைகளுக்கு இணங்குகிறோம். இலங்கை மத்திய வங்கி பிறப்பித்த உத்தரவுகளைத் தொடர்ந்து, வங்கியின் செயற்பாடுகள் தொடர்பான குறிப்பிட்ட தகவல்களை சரியான நேரத்தில் சமர்ப்பிக்கிறோம்.

GRI 205-2, 3 மற்றும் 206-1

### பணச் சலவை, இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடைமுறைகள்

அதிகரித்த எண்ணியல் மயமாக்கலுடன் இணைய பாதுகாப்பின் மீதான அதிகரித்து வரும் கவலையைப் பற்றி அறிந்திருப்பதால், இணையவழிப் பாதுகாப்பு, மோசடித் தடுப்பு மற்றும் பணச் சலவை எதிர்ப்பு ஆகியவை முக்கிய பொருண்மை மிக்க சிக்கல்களில் ஒன்றாக அடையாளம் கண்டுள்ளோம். எங்களிடம் வலுவான இடர் முகாமை உள்ளதுடன், எங்கள் வாடிக்கையாளர்களை மோசடியிலிருந்து பாதுகாக்கும் முறைமையும் உள்ளதுடன், இணையக் குற்றங்கள் மற்றும் பணச் சலவை ஆகியவற்றைத் தடுக்க ஒழுங்கு விதிமுறையாளர்களுக்கு நாங்கள் தொடர்ந்தும் உதவி புரிகிறோம்.

பணச் சலவை செய்தல் மற்றும் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளை அடையாளம் கண்டு அறிக்கையிடுவதன் மூலம் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல். ஊழல், போட்டி எதிர்ப்பு தொடர்பான நம்பிக்கை மீறல், தனியுரிமை நடைமுறைகள் மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் தயாரிப்பு மற்றும் சேவைகளின் பயன்பாடு, சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை பின்பற்றாமையால் ஏற்படும் அபராதம் அல்லது கண்காணிப்பு அல்லாத தடைகள் எதுவும் இவ்வாண்டில் விதிக்கப்படவில்லை.

### வலுவான முகாமை மற்றும் விவேகமான இடர் முகாமை

வங்கியின் இடர் முகாமை முறைமையின் செயற்திறனைக் கண்காணிக்க கடுமையான இடர் முகாமை கொள்கை மற்றும் முகாமை முறைமையை நாம் செயற்படுத்தியுள்ளோம். எங்கள் வங்கியின் குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்குரிய தந்திரோபாய முன்னுரிமையாக ஒரு இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்துவதன் மூலம், உள்ளிருந்து மற்றும் வெளிப்புற சூழலில் இருந்து எழும் இடர்களை திறம்பட எதிர்பார்க்கவும், முகாமை செய்யவும் மற்றும் தணிக்கவும் ஒரு வலுவான இடர் கலாச்சாரத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். வங்கியின் முகாமைக் கட்டமைப்பானது இடர் முகாமையை ஆதரிக்கிறது, இது ஒரு முறையான அணுகுமுறை சார்ந்த இடர் முகாமை மேற்பார்வையை வழங்குகிறது. மேலதிக விவரங்கள் இடர் முகாமை பிரிவின் கீழ் அறிக்கையின் 248 முதல் 274 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

### அரசுக்கு பங்களிப்பு செய்தல்

ஒரு முன்னணி அரசுக்கு சொந்தமான வங்கியாக, அரசாங்கத்தின் சார்பாக வரி செலுத்துவதன் மூலமும் வரி வசூலிப்பதன் மூலமும் ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். அரசாங்கத்திற்கும் பிற தொடர்புடைய ஒழுங்குமுறை மற்றும் சட்டரீதியான அதிகாரிகளுக்கும் பொருந்தக்கூடிய அனைத்து சட்டரீதியான நிலுவைத் தொகையையும் எங்கள் ஊழியர்களின் சார்பாகவும், அனைத்து தொடர்புடைய வரிகளையும் நாங்கள் செலுத்துகிறோம்.

## வளரும் சமூகங்களை உருவாக்குதல் - சமுதாய மூலதனம்

### சமுதாய மூலதனம் ஏன் எங்களுக்கு முக்கியமானது

அரசுக்குச் சொந்தமான வங்கியாக, எங்கள் மக்களும் எங்கள் வாடிக்கையாளர்களும் தங்கள் வாழ்க்கையை கட்டியெழுப்பும் சமூகங்களுக்குத் திருப்பித் தருவதன் மூலம் வளர்ந்து வரும் உள்நாட்டு சமூகத்தை உருவாக்க நாங்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளோம். எனவே, நாங்கள் செயற்படும் சமூகத்தில் தொடர்ந்து ஒரு முக்கிய பங்கை நாங்கள் வகிக்கிறோம்.

### எங்கள் அணுகுமுறை

சமூக அபிவிருத்தி திட்டங்களில் முதலீடு செய்வது பொருளாதாரத்தில் நேர்க் கணிய தாக்கத்தை உருவாக்கும் தேசிய மேம்பாட்டு நிகழ்ச்சி நிரல் மற்றும் ஐ.நா. எஸ்.டி.ஜி. களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள முக்கிய முன்னுரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.

### சமுதாய மூலதனத்தின் பெறுமதியை மேம்படுத்துவதற்கான உத்திகள்

- சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் கரிசனைகளை கருத்திற் கொண்ட முதலீடுகள்
- சமூகத்தில் தன்னார்வமாகப் பங்களிப்பு செய்தல்
- உள்நாட்டு மக்கள் மற்றும் வணிகங்களுக்கு உதவுதல்

### பொருண்மை விடயங்கள்



### குறுகிய காலத்திலிருந்து நடுத்தர கால தந்திரோபாய முன்னுரிமைகள்



GRI 203-1

### வளரும் சமூகங்களை உருவாக்குவதற்கான பெறுமதி உருவாக்கும் இயக்கிகள்

- தேசிய அபிவிருத்திக்கான பங்களிப்பு
- நிதி சேர்க்கையை இயக்குதல்
- சமூகங்களுக்குத் திரும்ப வழங்குதல்
- சமூக அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான தந்திரோபாய கூட்டணிகள்

### தேசிய அபிவிருத்திக்கான பங்களிப்பு

எங்கள் நிலையான வணிக அணுகுமுறையின் ஒரு பகுதியாக, முதலீட்டு வளர்ச்சியை நாங்கள் ஊக்குவிக்கிறோம், இது நீண்டகால பொருளாதார வளர்ச்சி மற்றும் உள்ளூர் சமூகங்களை மேம்படுத்துதல் மூலம் அனைத்து குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துகிறது. அரசாங்கத்தின் பெரிய அளவிலான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம், நாங்கள் தேசிய வளர்ச்சியை உந்துகிறோம், உள்ளூர் சமூகங்களை மேம்படுத்துகிறோம். எங்கள் கவனம் நீண்டகால முன்னேற்றம் மற்றும் செழிப்பை வழங்கும் துறைகளில் முதலீடு செய்வதாகும். இந்த ஆண்டில் பின்வரும் திட்டங்களுக்கு நாம் ஆதரவு வழங்கினோம்:

- ஆண்டில், நாங்கள் ரூ. 7.5 பில்லியன் நீர் மற்றும் மின்சாரம் அடிப்படையிலான உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான பங்களிப்பு
- வேளாண்மை மற்றும் சிறிய நடுத்தர அளவு உரிமங்களின் வளர்ச்சிக்காக,

நாங்கள் ரூ. 10.0 பில்லியன் மறைமுகமாக மற்ற நிதி நிறுவனங்கள் மூலம் பங்களிப்பு செய்தோம்.

**நிதி சேர்க்கையை இயக்குதல்**

எங்கள் தேசத்தின் அனைத்து குடிமக்களுக்கும், குறிப்பாக நலிந்த அல்லது வங்கியில்லாத வாடிக்கையாளர்களுக்கு எண்ணியல் மற்றும் எண்ணியல் அல்லாத வழிமுறைகள் மூலம் நிதி சேவைகளுக்கு வசதியான அணுகலை வழங்குவதன் மூலம் நிதி சேர்க்கையை ஊக்குவிப்பதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துகிறோம். வங்கி அல்லாத வாடிக்கையாளர்களிடையே, குறிப்பாக நம் நாட்டின் தொலைதூர பகுதிகளில் எங்கள் அஞ்சல் மற்றும் துணை அஞ்சல் வலையமைப்பு மூலம் சேமிப்பு கலாச்சாரத்தை திறம்பட வளர்த்துள்ளோம். அஞ்சல் வைப்பு எங்கள் மொத்த வைப்புத் தளத்தின் 1.5% ஆகும். கூடுதலாக, வழக்கமான வணிக நேரங்களில் கிளைக்கு வர முடியாத வாடிக்கையாளர்களுக்கு விற்பனைப் புள்ளி இயந்திரங்கள் மற்றும் கையடக்க இலத்திரனியல் கருவிகளைப் பயன்படுத்தி தேசேவ ரீச் மூலம் வீட்டுக்கு வீடு வைப்பு வசதியை நாங்கள் வழங்குகிறோம்.

தேசிய சேமிப்பு வங்கி iSaver மூலம், வாடிக்கையாளர்களுக்கு மொபிடெல் விற்பனை நிலையங்கள் மூலம் வங்கியியல் சேவைகளுக்கு 24 மணிநேர அணுகல் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த சேவை, செல்வத்தை உருவாக்குவதற்கும் முதலீட்டிற்கான நிதிகளின் இயக்கம் ஆகியவற்றிற்கும் பங்களித்ததுடன் சேமிப்பு பழக்கத்தை மேலும் வளர்த்துள்ளது.

வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கும் போது, நிதி கல்வியறிவு மூலம் வாடிக்கையாளரை மேம்படுத்துகிறோம். கிளைகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு நடத்திய ஒவ்வொரு கிளை செயற்படுத்தும் திட்டம் மற்றும் ஊக்குவிப்பிலும், சிக்கனம் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தை வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்கிறோம். குறிப்பாக, iSaver மற்றும் தேசேவ ரீச் விளம்பர பிரச்சாரங்கள் தினசரி சேமிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கிராம சக்தி மக்கள் இயக்கம் (GSP) குறிப்பாக 2030 ஆம் ஆண்டளவில் வறுமையை ஒழிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. கிராம சக்தி மக்கள் இயக்கத்தின் ஆரம்ப கட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 கிராம நிலதாரி பிரிவுகளில் கிராம சக்தி மக்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டன, அவை நிறுவன பதிவாளர் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்துடன் கூட்டு சேர்ந்து, ஒவ்வொரு கிராம சக்தி மக்கள் சங்கமும் ஆரம்ப வைப்புத்தொகையான ரூ. 10,000.00 உடன் ஒரு அரச வங்கியில் கணக்கைத் திறக்க எதிர்பார்க்கப் படுகின்றனர்.

பின்வரும் நிதியியல் அறிவு தொடர்பான பிரச்சாரங்கள் 2019இல் மேற்கொள்ளப்பட்டன.

| பிரச்சாரம் | இலக்கு சந்தை | மேம்படுத்தல் காலப்பகுதி | பிரச்சார ஊடகம் |
|---|---|---|---|
| ஹப்பன் தரம் 1 கணக்குத் திறத்தல் பிரச்சாரம் | தரம் 1 மற்றும் முன் பள்ளி சிறார்களின் பெற்றோர் | ஜனவரி 2019 | வானொலி, தொலைக் காட்சி, அச்சு ஊடகம், சமூக ஊடகம், கிளை மட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட மேம்படுத்தல் பிரச்சாரம் |
| மகளிர் தினப் பிரச்சாரம் | 16 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் | மார்ச் 2019 | வானொலி, தொலைக் காட்சி, அச்சு ஊடகம், சமூக ஊடகம், குறுஞ் செய்தி சந்தைப்படுத்தல், கிளைத் தொலைக்காட்சித் திரைகள், கிளை மட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட அமுலாக்கல் பிரச்சாரம் |
| U Trust | இலங்கை புலம் பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் | 2019 ஜனவரி மற்றும் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை | வானொலி, தொலைக் காட்சி, அச்சு ஊடகம், சமூக ஊடகம், குறுஞ் செய்தி சந்தைப்படுத்தல், கிளைத் தொலைக்காட்சித் திரைகள், ATM திரைகள், கிளை மட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட அமுலாக்கல் பிரச்சாரம் |
| இலங்கையின் முயற்சியாண்மை திட்டத்தின் கீழான கடன்கள் | நடுத்தர வருமானம் உழைப்போர், சிறிய நடுத்தர அளவு உரிமங்கள், முயற்சியாளர்கள் | ஆண்டு முழுவதும் | அச்சு ஊடகம், எண்ணியல் ஊடகம், கடன் சந்தைகள் |
| ரன் சஹன | 18 வயதுக்கு மேற்பட்ட வளர்ந்தோர் | ஆண்டு முழுவதும் | வானொலி, தொலைக் காட்சி, அச்சு ஊடகம், சமூக ஊடகம், பிரச்சாரப் பலகைகள், கிளை மட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட அமுலாக்கல் பிரச்சாரம் |
| ஹப்பி சேமிப்புக்கள் | 16 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் | 2019 மார்ச் முதல் செப்டம்பர் வரை | வானொலி, தொலைக்காட்சி, அச்சு ஊடகம், சமூக ஊடகம் |

| பிரச்சாரம் | இலக்கு சந்தை | மேம்படுத்தல் காலப்பகுதி | பிரச்சார ஊடகம் |
|---|---|---|---|
| புத்தி கடன் பிரச்சாரம் | 18 வயதுக்கு மேற்பட்ட வளர்ந்தவர்கள் | ஆண்டு முழுவதும் | சமூக ஊடகம், கல்வி நிறுவனங்களிலான இலத்திரனியல் துண்டுப் பிரசுரங்கள், கிளை மட்ட மேம்படுத்தல்கள், கல்விசார் கண்காட்சிகள் |
| பிரார்த்தனா | பெற்றோர் | அக்டோபர் 2019 முதல் | வானொலி, அச்சு ஊடகம், சமூக ஊடகம், துண்டுப் பிரசுர விநியோகம், கிளைத் தொலைக்காட்சித் திரைகள், ATM திரைகள் |
| பிரார்த்தனா + | 16 வயதுக்கு மேற்பட்ட தனிநபர்கள் | அக்டோபர் 2019 முதல் | வானொலி, அச்சு ஊடகம், சமூக ஊடகம், துண்டுப் பிரசுர விநியோகம், கிளைத் தொலைக்காட்சித் திரைகள், ATM திரைகள் |
| சிங்கள தமிழ் புத்தாண்டுக்கான எண்ணியல் மேம்படுத்தல் – “நெகெத் சீத்துவ”, “அமதக உணு அவுருது” மற்றும் “உணவுத் தயாரிப்பு” காணொளித் தொடர் | சமூக ஊடகங்கள் மூலம் | 05 ஏப்ரல் – 14 ஏப்ரல் 2019 | சமூக ஊடகம் மற்றும் வலைத் தளம் |
| Ayubo.life உடன் இணைந்த மீண்டும் கொழும்புக்கு – மெய்நிகர் படிமுறைச் சவால் | தேசிய சேமிப்பு வங்கி வாடிக்கையாளர்கள் | 18 மார்ச் – 12 ஏப்ரல் 2019 | சமூக ஊடகம் |
| உலக சிக்கன தினம் புகைப்படப் போட்டி | முகநூல் பின்தொடர்வோர் | 1 ஆகஸ்ட் – 31 அக்டோபர் 2019 | முகநூல் |

GRI 413-1

## சமூகங்களுக்குத் திருப்பி வழங்குதல்

நாங்கள் செயற்படும் சமூகங்களுக்கு வலுப்படுத்தவும் சமூக துணிவும் வழங்குவதற்கான எங்கள் முயற்சிகளில், சமூகங்களுக்கான சீரான மற்றும் நிலையான விளைவுகளை வழங்குவதற்காக சமூக மேம்பாட்டு திட்டங்களை நாங்கள் தொடர்ந்து வடிவமைத்து செயற்படுத்தினோம். சமூக நல்வாழ்வை மேம்படுத்துதல், கல்வியை மேம்படுத்துதல், சுகாதார மற்றும் சமூக, கலாச்சார மற்றும் மத மேம்பாட்டுக்கு ஆதரவளிப்பதில் கவனம் செலுத்தும் சமூக அமைப்புகள் மற்றும் சமூகத் திட்டங்களை நாங்கள் ஆதரிக்கிறோம். கூடுதலாக, அனுசரைண, நன்கொடைகள் மற்றும் உதவித்தொகை மற்றும் எங்கள் மக்கள் திரட்டிய நிதி மூலம் சமூக முயற்சிகளை நாங்கள் ஆதரிக்கிறோம்.

### சிறப்பு நிகழ்வுகள் மற்றும் அனுசரணைகள்

31 அக்டோபர் 2019 அன்று நடைபெற்ற உலக சிக்கன தினத்தை நினைவுகூரும் வகையில், மேற்கு மாகாணத்தில் 700 வாடிக்கையாளர்கள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டு மதிப்புமிக்க பரிசுகள் வழங்கப்பட்டனர்.

### கல்வியை ஊக்குவித்தல்

தரம் ஐந்து புலமைப் பரிசில் தேர்வில் அதிக சாதனை புரிந்தவர்களை அங்கீகரித்து, ஹப்பன் உதவித் தொகை விருதுகளின் 15 ஆவது பதிப்பு 2019 அக்டோபர் 31 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக கற்றல் சிரமங்களைக் கொண்ட குழந்தைகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதும், வெற்றிபெற அவர்களின் தைரியத்தையும் உறுதியையும் பாராட்டியதன் மூலம், 25 மாணவர்களை நாங்கள் பாராட்டினோம்.

### கலைகள் மூலம் இணைவோம்

குழந்தைகளில் படைப்பாற்றல் மற்றும் கலைத் திறமையை வளர்ப்பதற்காக, 2019 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் அழகியல் பிரிவின் கூட்டுடன் தொடர்ச்சியாக 4 வது முறையாக பாட்டா ஹபங்கம் போட்டியை நடத்தினோம். பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்ட மண்டபத்தில் நடைபெற்ற பிரமாண்ட இறுதிச் சுற்றில் இருபத்தைந்து வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

### கண்காட்சிகளில் பங்கேற்பு

எங்கள் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் எங்கள் வர்த்தக நாமத்தை மேம்படுத்துவதற்கும் 2019 ஆம் ஆண்டில் பல கண்காட்சிகளில் எங்கள் பிரசன்னத்தை உறுதி செய்தோம். இந்த ஆண்டில் நாங்கள் பங்கேற்ற சில கண்காட்சிகளில், மாத்தறை, அனுராதபுரம், தம்புள்ளை, அம்பாந்தோட்டை, களுத்துறை, கிரிந்திவலை, கண்டி/கம்பளை மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய இடங்களில் இடம்பெற்ற Kedella, Future Minds, Kedella Mid-year, Infotel மற்றும் Enterprise Sri Lanka கண்காட்சிகள் உள்ளடங்கும்.

### அனுசரணைகள்

பௌத்தாலோக வெசாக் திருவிழா, தேசிய ஓய்வூதியதாரர் தினம், சர்வதேச முதியோர் தினம், ஹெல்ப் ஏஜ் இலங்கை மருத்துவ முகாம்கள், பாதுகாப்பு உதவித்தொகை விருதுகள், கொழும்பு பல்கலைக்கழகம் சிங்கள இந்து புத்தாண்டு விழா,

சியானே பக் மகா உலேல, இலங்கை நாடாளுமன்றத்தினால் நடாத்தப்படும் 25 வது பிரஜைகள் தேசிய வீரர் விருது வழங்கல் நிகழ்வு போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்வுகளுக்கு நாங்கள் நிதியுதவி செய்தோம். APB வருடாந்த அமர்வு, Signis Sri Lanka, இலங்கை இராணுவ நடனம், இலங்கை விமானப்படை நலன்புரி, இலங்கை மருத்துவ தொழில் கல்லூரி வருடாந்த நிகழ்வு மற்றும் CMA வருடாந்த தேசிய மாநாடு முதலியவை அவற்றினுள் பெயர் குறிப்பிடத்தக்க சில நிகழ்வுகள் ஆகும்.

### சமூக வளர்ச்சியை இயக்குவதற்கான தந்திரோபாய கூட்டணிகள்

ஆரோக்கியமான மற்றும் படித்த சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் சமூகப் பெறுமதியை வழங்க அரசாங்க அமைச்சுக்களுடன் நாங்கள் கூட்டுசேர்ந்தோம். அவ்வாறு செய்யும்போது, ஐ.நா.வின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நமது தேசத்தில் அடைவதற்கு நாங்கள் பங்களிப்பு செய்கிறோம்.

### நான் பொருத்தமாக இருக்கிறேன் (I'm Fit) நிகழ்ச்சித் திட்டம்




"நான் பொருத்தமாக இருக்கிறேன்" நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு கல்வி அமைச்சகம் மற்றும் சுகாதார அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. 2020 ஆம் ஆண்டில் நடத்தப்படும் இந்த திட்டம், "நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" என்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைவதற்குப் பங்களிக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் 6,7 மற்றும் 8 மாணவர்களின் தரம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த கொழும்பு மாவட்டத்தில் உள்ள 10 பள்ளிகளை இந்த திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. இந்த திட்டம் சமூகத்திற்கு சாதகமான தாக்கத்தை உருவாக்குவதுடன் வங்கிக்கு சாதகமான வர்த்தக நாம விம்பத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஐ.நா. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் ஆங்கில கல்வி செயற்திட்டம்




நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்குப் பங்களிப்பதற்காக, "ஆங்கிலம் எளிமையானது" செயற்திட்டத்தை நடாத்துவதற்காக 2020 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. கல்வி அமைச்சின் ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பிரிவினால் நடத்தப்படவுள்ள இந்த திட்டத்தின் மூலம் 8,9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களின் ஆங்கில எழுத்தறிவை வளர்ப்பதே எங்கள் நோக்கம். 2017 க.பொ.த சாதாரண நிலை தேர்வில் ஆங்கில முடிவுகளின் அடிப்படையில் எட்டு தேசிய பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளின் கல்விப் பொதுத் தராதர சாதாரண ஆங்கில தேர்ச்சி விகிதங்களை அதிகரிப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கம் ஆகும். இந்த சமூகப் பொறுப்புணர்வு செயற்திட்டத்தின் மூலம் "தரமான கல்வியின்" ஐக்கிய நாடுகளின் நிலையான இலக்கை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

## எதிர்கால முன்னுரிமைகள்

#### குறுங்காலம்

தற்போதுள்ள உற்பத்திகளை பெறுமதியுடன் மீண்டும் தொடங்குதல் மற்றும் இளைஞர்களைப் பெறுவதில் ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவத்துடன் முக்கிய உற்பத்திகளுக்கு வாடிக்கையாளர் ஈடுபாட்டை அதிகரிக்க கிளையளவில் திட்டங்களை நடத்துதல்

நேர்க் கணிய வர்த்தக நாம விம்பத்தை உருவாக்க சிந்தனை மிக்க தகவல்தொடர்பு பிரச்சாரங்கள் மற்றும் வர்த்தக உத்திகளை உருவாக்குதல்

#### நடுத்தரளவு காலம்

திறன் பேசி அல்லது எண்ணியல் சாதனத்தைப் பயன்படுத்தி எந்த நேரத்திலும் வாடிக்கையாளர்களை எங்கிருந்தும் வங்கி நடத்த உதவும் வகையில் முழுமையான எண்ணியல் வங்கி தீர்வை அமுல்படுத்தல்

வங்கிச் சேவையைப் பெறாத மற்றும் வங்கிச் சேவைகளைத் தேவைக்கும் குறைவாகப் பெறுகின்றவர்களுக்கு நிதி உள்ளடக்கலைத் தொழிற்படுத்தல்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி நிலையான நிதி நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் முன்னேற்றத்தை அடைதல்

#### நீண்ட காலம்

பாதுகாப்பான மற்றும் நிலைத்த நிதியியல் சூழல் முறைமைக்கு வசதி அளித்தல்

செழிப்பு மிக்க சமுதாயம் மீதான நேர்க் கணியத் தாக்கம்



# இயற்கை மூலதனம்

**இயற்கை மூலதனத்தினைக் கட்டி எழுப்புதல் ஓர் காபன் குறைவான பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்து, தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததிகளுக்காக எமது கிரகத்தினைப் பாதுகாப்பதுடன், வங்கியின் நீண்டகால நிலைபேறான பெறுமதி உருவாக்கத்தினை உறுதி செய்கிறது.**

## இதனுள் உள்ளடக்கப்படுபவை

இயற்கை மூலதனம் என்பது எமது தொழிற்பாடுகளை சாத்தியமாக்குவதற்காக நாம் பிரதானமாக நம்பியுள்ள இயற்கை மூலதன இருப்புக்கள் மற்றும் சுற்றுச்சூழல் முறைமை சேவைகளினை உள்ளடக்கியது ஆகும். இதனுள் காற்று, நீர், சக்தி மற்றும் இயற்கை சூழல் ஆகியவை அடங்கும்.

## உள்ளீடுகள்

- காற்று
- நீர்
- நிலம்
- தாதுக்கள்
- காடுகள்
- உயிர்ப் பல்வகைமை மற்றும் சுற்றுச்சூழல் முறைமை ஆரோக்கியம்

## இது எவ்வாறு பெறுமதி சேர்க்கிறது

இயற்கை மூலதனத்தை உருவாக்குவது நமது சுற்றுச்சூழல் வழித் தடத்தைக் குறைக்க உதவுவதுடன், இதன் மூலம் கார்பன் குறைந்த பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கிறது. இது தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினருக்கான நமது கிரகத்தைப் பாதுகாக்கவும் வங்கியின் நீண்டகால நிலையான பெறுமதி உருவாக்கத்தை உறுதிப்படுத்தவும் உதவுகிறது.

## எமது அணுகுமுறை

எமது கவனம் எமது கார்பன் வழித் தடத்தைக் குறைத்தல், பசுமை நடவடிக்கைகளைத் தொழிற்படுத்தல், நிலைபேறான நிதியிடலை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பசுமை முயற்சிகளை ஆதரித்தல் ஆகும். வங்கியைப் பாதிக்கும் ஒரு பொருண்மைமிக்க சிக்கலாக சுற்றுச்சூழல் வழித்தடம் அடையாளம் காணப்பட்டதால், இந்த விடயத்தை நிவர்த்தி செய்வதற்கும் வங்கியின் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதற்கும் நாம் தந்திரோபாயங்களை வகுத்துள்ளோம். நிதி வருவாயை உருவாக்கும் போது, சுற்றுச்சூழல் முகாமையில் கூட்டாணமை கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளை தொடர்ச்சியாக உள்ளடக்குவதையும் எமது மைய வணிக செயன்முறையினுள் சுற்றுச்சூழல் தொடர்பான கரிசனையினைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதையும் கொண்டிருக்கிறோம்.

## 2019 க்கான பிரதான சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள்

**முக்கிய சவால்கள்** → **வாய்ப்புகள்**

முக்கிய சவால்கள்

- பசுமை முயற்சிகளுக்கான அதிக முதலீட்டுத் தேவை
- வங்கியால் சுற்றுச் சூழலில் ஏற்படும் தாக்கத்தை அளவிடுதல்
- வங்கி முழுவதுமான கார்பன் வழித்தடத்தைக் குறைத்தல்
- இயற்கை மூலதனம் மற்றும் பசுமை திட்டங்களை முகாமை செய்வதன் முக்கியத்துவம் குறித்து அக்கறையுள்ள தரப்பினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- காகித பயன்பாட்டைக் குறைக்க வாடிக்கையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் எண்ணியல் தொழிநுட்பங்களைப் பயன்படுத்த வசதியளித்தல்
- இயற்கை பேரழிவுகளால் ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகள்

வாய்ப்புகள்

- சுற்றுச்சூழல் வழித் தடத்தைக் குறைப்பது வங்கியின் நீண்டகால நிலைபேறான தன்மையை உறுதி செய்யும்.
- பசுமை முன்முயற்சிகளில் புதுமைகளை ஊக்குவித்தல் (பசுமை தயாரிப்புகள், பசுமை நிதி, பசுமை கட்டிடங்கள்)
- தொழிற்பாடுகளிலிருந்து எழும் சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்புகளைத் தணிக்கும் திறன்
- வளங்களின் திறமையான பயன்பாட்டை செயற்படுத்துதல் செலவுக் குறைப்பு மற்றும் நிதி நிலைமை மீது சாதகமான தாக்கத்தைக் கொண்டுள்ளது.



## இயற்கை மூலதனத்தின் பெறுமதியை மேம்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள்

- விசேட முன்முயற்சிகள் மூலம் நீண்ட காலத்திற்கு சக்தி செயற்திறனை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பயன்பாட்டை அதிகரித்தல்
- எண்ணியலாக்கம் மற்றும் உற்பத்தி வளர்ச்சியிலான முதலீடுகள் மூலம் எமது பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்தி வரம்பை விரிவாக்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்துதல்
- வங்கி பயன்படுத்தும் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் இயற்கை வளங்கள்/வளங்களின் (உதாரணமாக, எரிசக்தி, நீர், காகிதம் மற்றும் கழிவு முகாமை) நுகர்வைக் குறைத்தல்

## பொருண்மை விடயங்கள்



## தொடர்புபட்ட அக்கறையுள்ள தரப்பினர்



## குறுங்காலம் முதல் நடுத்தர காலம் வரையான தந்திரோபாய முன்னுரிமைகள்



## பெறுமதி உருவாக்க இயக்க சக்திகள்




## முக்கிய தரவுகள்

222 எண்ணிக்கையிலான பசுமைக் கடன்கள் வழங்கப்பட்டன

ரூபா 193.2 மில்லியன் பசுமைக் கடன்கள் 2019 இல் வழங்கப்பட்டன

26 வலை அளவையிடல் இணைக்கப்பட்ட கிளைகள்

40,210 அலகுகள் தேசிய கட்டமைப்புக்கு மாற்றப்பட்டன

35,696 GJ சக்தி நுகர்வு

79,368 M3 நீர் நுகர்வு

42 சூரிய கலம் பொருத்தப்பட்ட கிளைகள்

## பெறுபேற்று அட்டை

| | அதிகரிப்பு/ வீழ்ச்சி | 2019 | 2018 |
|---|---|---|---|
| தேறிய அளவையிடலுக்கு இணைக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | 13 | **26** | 13 |
| வழங்கப்பட்ட பசுமைக் கடன்களின் எண்ணிக்கை | (559) | **222** | 781 |
| வழங்கப்பட்ட பசுமைக் கடன்களின் பெறுமதி (ரூ. மில்.) | (463.4) | **193.2** | 656.6 |
| தலா ஊழியருக்கான சக்தி நுகர்வு (GJ) | 0.16 | **7.57** | 7.41 |
| தலா கிளைக்கான சக்தி நுகர்வு (GJ) | 8.39 | **139.44** | 131.05 |
| நீர் நுகர்வு (M3) | 3,207 | **79,368** | 76,161 |

## ஏனைய மூலதனங்களுடனான இணைப்பு

இயற்கை மூலதனம் வங்கியின் ஒவ்வொரு மூலதனத்தினாலும் தாக்கமடைவதுடன், ஒவ்வொரு மூலதனத்தின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.




## வர்த்தக மாற்றுத் தெரிவுகள்

- **தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள்**
- **காலநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகள்**
- **பசுமை முன்முயற்சிகளிலான முதலீடுகள்**



## SDGs களுக்கான பங்களிப்பு




வங்கி முழுவதும் நீர் சேமிப்பு மற்றும் பொறுப்பு மிக்க நுகர்வு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் சுத்தமான நீர் மற்றும் சுகாதாரத்தை ஊக்குவித்தல்




பசுமைக் கிளைகள் மற்றும் கிளைகளை சூரிய சக்தியாக மாற்றும் கிளைகளைக் கட்டமைப்பதன் மூலம் மலிவு மற்றும் சுத்தமான ஆற்றலுக்கு பங்களிப்பு செய்தல்




தேசேவ வேளாண் வனவியல் திட்டம் மூலம் நிலைபேறான நகரங்களையும் சமூகங்களையும் உருவாக்குதல்




வளங்களின் பொறுப்பான நுகர்வு மூலம், மற்றும் எண்ணியல் மயமாக்கல் மூலம் காகிதக் குறைப்புக்கு பங்களிப்பு செய்து, நாம் பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தியை ஊக்குவிக்கிறோம்




பசுமைக் கட்டிடங்களில் முதலீடு செய்தல், தொழிற்பாடுகளை எண்ணியலாக்குதல், பொறுப்பான கடன் வழங்குதல் மற்றும் வளங்களின் பொறுப்பான முகாமை போன்றவற்றின் மூலம் கார்பன் தடத்தைக் குறைப்பதில் பங்களிப்பு செய்தல்




## ஓர் நிலைபேறான உலகுக்குப் பங்களிப்பு செய்தல்




## வெளியீடுகள்

- சக்தி வினைத்திறன் முன்முயற்சிகள்
- பொறுப்பு மிக்க நுகர்வு
- புத்துருவாக்கத்தக்க சக்தி நோக்கிய கடன் வழங்கல்
- பசுமை முன்முயற்சிகள்
- எண்ணியலாக்கம் நோக்கிய இயக்கம்

### பசுமைக் கட்டடங்கள்

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கும், நிலைபேறான மற்றும் செழிப்பான சமூகங்களை உருவாக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் நாம் மேற்கொண்ட முயற்சிகளில், சக்தி, நீர் மற்றும் இயற்கை வளங்களை மீதப்படுத்தும் மற்றும் மக்களின் நல்வாழ்வையும் வாழ்க்கைத் தரத்தையும் பராமரிக்கும் பசுமை கட்டிடக் கருத்தை நாம் பின்பற்றியுள்ளோம். சூரிய மின்சக்தி முறைமைகளை மாற்று மின்சக்தியாக நிறுவுவதன் மூலம் புதுப்பிக்கத்தக்க சக்தியைப் பயன்படுத்த எமது ஏற்கனவேயுள்ள கிளைகளில் 3% இனைப் படிப்படியாக மாற்றியுள்ளோம். அதன்படி, 13 சூரிய கலன் நிறுவப்பட்ட கிளைகள் வலை அளவீட்டுடன் இணைக்கப்பட்டு, இது மொத்த எண்ணிக்கையை 26 ஆக உயர்த்தியது.

எங்கள் கிளை வளாகத்தை எரிசக்தி வினைத்திறனான பணியிடங்களாக மேம்படுத்தியுள்ளோம். அவை மெருகூட்டப்பட்ட ஜன்னல்களால் வடிவமைக்கப்பட்டு, அவை வெப்ப காப்புப்பொருளை உருவாக்குவதுடன், அவை இடங்களை குளிர்விப்பதில் குறைந்த சக்திப் பயன்பாடு காரணமாக சக்தி நுகர்வு குறைவதுடன் இயற்கையாகவே அழகான உட்புறங்களை உருவாக்கி அலுவலக வளாகத்தை மகிழ்ச்சியான இடமாக மாற்றி, அவை உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் வெப்பத்தின் ஓட்டத்தை குறைக்கின்றன, எமது புதிய கிளைகள் பசுமையான கட்டிடங்கள் கருத்தை பின்பற்றி கட்டப்பட்டுள்ளன, அங்கு இயற்கை காற்று மற்றும் ஒளியின் பயன்பாட்டை அதிகரிக்க இடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கதிர்காமத்தில் திறந்து வைக்கப்பட்ட எமது மிகச் சமீபத்திய சுற்றுலா பங்களா விளக்கு மற்றும் குளிரூட்டும் வசதிக்கான மின்சார பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் இயற்கை ஒளி மற்றும் காற்றை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.

கிளைகளுக்குள் மின்சார சாதனங்களைப் பாதுகாக்க மின்னல் காப்பு சாதனங்களை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம். எரிசக்தி திறனான மின் சாதனங்களையும் நாம் நிறுவியுள்ளதுடன், எமது கட்டடங்களில் பல சக்தி சேமிப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளோம். சுற்றுச்சூழல் நட்பு முறையில் கழிவு நீர் மற்றும் கழிவு நீரை நிர்வகிக்க அனுராதபுரத்தில் உத்தேச புதிய கட்டிடத்திற்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்படும்.

### தேசேவ வேளாண் வனவியல் திட்டம் - வரவிருக்கும் தலைமுறைகளுக்கு ஓர் வேறுபாட்டை ஏற்படுத்துதல்

“ஒரு மரத்தை நடுவோம்” என்பது 2019 ஆம் ஆண்டில் தமிழ் சிங்கள புத்தாண்டுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய பாரம்பரியமாகும். இந்த மரபுக்கு இணங்க, 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தேசேவ வேளாண் வனத் திட்டத்தினைத் தொடர்ந்தோம். இந்தத் திட்டம் தற்போதுள்ள உயிர்ப் பல்வகைமையை தக்கவைக்க, பாதுகாக்க மற்றும் சாத்தியமான இடங்களில் மேம்படுத்துவதுடன், ஒருவரின் சொந்த தோட்டத்திலிருந்து சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதற்கானதாகும். ஏப்ரல் 2019 இல் சிங்கள தமிழ் புத்தாண்டில் பரிவர்த்தனைகளில் ஈடுபட கிளைகளுக்கு வருகை தந்த வாடிக்கையாளர்களிடையே 6,500 க்கும் மேற்பட்ட மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. எமது புதிய கிளையை மாக்கொலவில் திறந்து வைக்கும் போது புதிய மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. இந்த முயற்சிகள் மூலம் பசுமையான உலகத்தை நாங்கள் தொடர்ந்தும் ஆதரிக்கிறோம்.

### எண்ணியலாக்கம் மூலம் நிலைபேறான உலகுக்கு ஆதரவளித்தல்

எமது செயற்பாடுகளை எண்ணியல் மயமாக்குவதன் மூலம், குறைந்தபட்ச இயற்கை வளங்கள் தேவைப்படும் மற்றும் நிலைபேறான உலகை ஆதரிக்க, நமது சுற்றுச்சூழல் தடத்தைக் குறைக்க முயற்சிக்கிறோம். நேரத்தையும் வளங்களையும் சேமிக்க எங்கள் விரிவான எண்ணியல் உற்பத்திகளைப் பயன்படுத்தி இணைய அடிப்படையிலான அல்லது கையடக்கத் தொலைபேசி வங்கி ஊடகங்களுக்கு மாற்றமடைய எமது வாடிக்கையாளர்களை நாம் தொடர்ந்தும் ஊக்குவிக்கிறோம். அச்சிடப்பட்ட அறிக்கைகளுக்கு பதிலாக மின் செய்திக் கடிதங்களுக்கு அங்கத்தவராகும் எமது வாடிக்கையாளர்கள் காகித பயன்பாட்டைக் குறைத்துள்ளனர். உக்கத் தக்க மேம்படுத்தல் கருவிகளை நோக்கி நகர்வது மற்றும் எண்ணியல் மற்றும் சமூக ஊடக விளம்பரங்களின் அதிகரித்த பயன்பாடு சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மைக்கு பங்களித்தன. இவ் வருடத்தில், EMV தொழிநுட்பத்துடன் அட்டைகளை குறுஞ்செய்தி வழியாக வழங்குவதற்கான விருப்பத்துடன், காகித அடிப்படையிலான இரகசிய இலக்க கடிதங்களின் பயன்பாட்டை நீக்குவதன் மூலம் பசுமை எண்ணக்கருவை ஆதரிக்கிறோம். மேலும், இந்தத் தெரிவுகள் கையடக்கத் தொலைபேசி அடிப்படையிலான அட்டை செயற்படுத்தும் நடைமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் தரவுகளின் பாதுகாப்பை மேம்படுத்துகிறோம்.

### வெளிவாரி உறுதிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட காலத்திற்கு 2019 ஆம் ஆண்டில் இலங்கை காலநிலை நிதியத்தால் வழங்கப்பட்ட 1,460tCO2 உடன் கார்பன் நடுநிலை சான்றிதழைப் பெற்றுள்ளோம். 2020 ஆம் ஆண்டில் வழங்கப்படும் 2019 ஆம் ஆண்டிற்கான சான்றிதழுக்கு நாங்கள் ஏற்கனவே விண்ணப்பித்துள்ளோம்.




### அரசாங்கத்தின் கிகாலி (Kigali) திருத்தத்துடனான இணக்கம்

சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு வள அமைச்சினால் நடாத்தப்பட்ட கிகாலி சீர்திருத்த விழிப்புணர்வு மற்றும் மாற்று தொழிநுட்பங்கள் குறித்த வட்டமேசை மாநாட்டில் நாம் பங்கேற்று இருந்தோம். இந்தத் திருத்தம் குறித்து நிறுவனங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த கலந்தாய்வு ஆகும். இலங்கை உள்ளிட்ட 65 நாடுகளின் ஒப்புதலைத் தொடர்ந்து, ஓசோன் அழிவைக் குறைக்கும் பொருள்களுக்கான மாண்ட்ரீல் நெறிமுறைக்கான கிகாலி திருத்தம் 2019 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த நூற்றாண்டில் புவி வெப்பமடைதலை 0.4°C இனால் குறைப்பதற்காக ஹைட்ரோ ஃப்ளூரோ கார்பன்கள் (HFC), சக்திவாய்ந்த பச்சை வீட்டு வாயுக்கள் (GHG) உற்பத்தி மற்றும் நுகர்வு குறைக்க இந்த சீர்திருத்தம் முயல்கிறது.

## பொறுப்புமிக்க நுகர்வு

GRI 302-1

### சக்தி நுகர்வு

மின்சாரம், டீசல் மற்றும் பெட்ரோல் போன்ற புதுப்பிக்க முடியாத பற்றாக்குறையான மூலங்களிலிருந்து உருவாக்கப்படும் எரிசக்தி பயன்பாட்டை பொறுப்புடன் முகாமை செய்வதற்கான எல்லா முயற்சிகளையும் நாம் செய்கிறோம். பொறுப்பு மிக்க உற்பத்தி மற்றும் வளங்களின் நுகர்வு மூலம் நமது சுற்றுச்சூழல் தடத்தைக் குறைத்து பாதுகாப்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

எமது முதன்மை சக்தி மூலம் தேசிய கட்டம் வழியான மின்சாரம் மற்றும் சூரிய கலன் முறைமை மூலம் உருவாக்கப்படும் மின்சாரம்

ஆகும். வங்கி முழுவதுமான சக்தியின் வினைத்திறனான நுகர்வை உறுதி செய்ய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- எரிசக்தி பயன்பாட்டைக் குறைக்க பிரிக்கப்பட்ட வளிப் பதனாக்கி அலகுகளை தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளில் சக்தி வினைத்திறனுள்ள இன்வெர்ட்டர் இயக்கப்படும் முறைமைகளாக மாற்றுகிறோம்.
- வழக்கமான மின்குமிழ்களை ஒளி காலும் இருவாயி மின்குமிழ்கள் மற்றும் குறைந்த மின்சாரத்தை நுகரும் CFL மின்குமிழ்களுடன் மாற்றுதல்.
- சக்தியை சேமிப்பதன் முக்கியத்துவம் மற்றும் மின்சாரத்தை சேமிப்பதற்கான வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் தொடர்ச்சியான தொடர்பாடல் மூலம் வங்கியில் ஒரு நிலைபேறான தன்மை உணர்வுள்ள கலாச்சாரத்தை வளர்ப்பது
- A4 காகிதங்கள், உறைகள் மற்றும் கோப்புகள் போன்ற எழுதுபொருள் பொருட்களை மறுசுழற்சி செய்வதை ஊக்குவித்தல் சுற்றுச்சூழல் நட்பான CFC இல்லாத வளிப் பதனாக்கி அலகுகளை மட்டுமே பயன்படுத்துதல்,
- எரிசக்தி பாதுகாப்பிற்கு சக்தியை சேமிக்க பங்களிக்கும் ஒளி விளக்குகள் மற்றும் LED திரைக் கணினித் திரைகளை பயன்படுத்தல்.
- வழக்கமான வங்கி நேரங்களில் வளிப் பதனாக்கி பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல்
- விடுமுறை நாட்களில் பணியாளர்களை வேலை செய்வதை ஊக்கமிழக்க செய்கிறோம்.

GRI 303-5

### நீர் நுகர்வு

தரமான குடி நீருக்கான அணுகல் பாரிய அளவில் சவாலானதாக இருந்தாலும், குறைந்த அளவைப் பயன்படுத்துவதன் மூலமோ அல்லது முடிந்தவரை தண்ணீரை சேமிப்பதன் மூலமோ நீரைப் பயன்படுத்துவதைக் குறைக்க நாங்கள் எல்லா முயற்சிகளையும் செய்கிறோம். விவேகமான பயன்பாட்டிற்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதன் மூலம், நீரை முகாமை செய்வதில் தற்போதைய நடைமுறைகளை தொடர்ந்து மேம்படுத்துகிறோம். முந்தைய ஆண்டில் 76,161 (M3) உடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டில் எமது நீர் நுகர்வு 79,368 M3 ஆக இருந்தது. வெள்ள நீர் பொது வடிகால் முறைமை மூலம் வெளியேற்றப்படுவதுடன், கழிவு நீர் வளாகத்திற்குள் தரமான ஊறவைக்கும் குழிகள் மூலம் வெளியேற்றப்படுகிறது. எமது புதிதாக கட்டப்பட்ட சில கிளைகளில் மழைநீர் சேகரிப்பு முறைமை பொருத்தப்பட்டிருக்கிறது, இது மாற்று நீரின் முக்கிய ஆதாரமாக உள்ளது, இது மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்களில் இருந்து புதிய நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.

### கழிவு முகாமை

திண்மக் கழிவுகளை பொறுப்பற்ற முறையில் அகற்றுவதன் தீவிரத்தன்மையையும், உயிர்ப் பல்வகைமை மற்றும் மனித சுகாதாரத்தின் மீதான அதன் விளைவுகளையும் புரிந்துகொண்டு, கழிவுகளை பொறுப்புடன் அகற்றுவதற்கான கழிவு முகாமை நடைமுறைகளை நாம் செயற்படுத்தியுள்ளோம். கிளை வலையமைப்பு முழுவதும் நடாத்தப்படும் விழிப்புணர்வு திட்டங்கள் மூலம், கழிவு முகாமை நடைமுறைகள் குறித்து எங்கள் ஊழியர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். எமது ஊழியர்களின் ஆதரவோடு கழிவுகளை பிரிப்பதை நாங்கள் பயிற்சி செய்கிறோம், இதற்கு அந்தந்த நகராட்சி/நகர சபைகள் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் மூன்றாம் தரப்பு மறுசுழற்சி சேவை வழங்குநர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளன. மறுசுழற்சி செய்வதற்காக காகிதக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட கழிவுத் தாள் மற்றும் உணவு மற்றும் பொலித்தீன் கழிவுகள் சேகரிக்கப்பட்டு நகராட்சி திடக்கழிவு முகாமைக்கு ஒப்படைக்கப்படுகின்றன.

17 ($M^3$)
தலா உழியருக்கான நீர் நுகர்வு

310 ($M^3$)
தலா கிளைக்கான நீர் நுகர்வு

3000 கிலோ பத்திரிகைகள்
மீள் சுழற்சி நிறுவனம் ஒன்றின் ஊடாக மீள் சுழற்சி செய்யப்பட்டன

உணவுக் கழிவுகள் மற்றும் பொலித்தீன்
கொழும்பு மாநகர சபையினால் சேகரிக்கப்பட்டன

உதிரிப் பொருட்கள்
வழங்கல் பிரிவின் ஊடாக ஏலமிடப்பட்டது

ரூபா 80 மில்லியன்
கிளைகளில் சூரிய சக்திக்காக முதலீடு செய்யப்பட்டன

42 கிளைகள்
சூரிய கலங்கள் பொருத்தப்பட்டன

26 கிளைகள்
தேறிய அளவையிடல் மூலம் மையத் தொகுதிக்கு இணைக்கப்பட்டன

7.57 GJ
தலா ஊழியருக்கான சக்தி நுகர்வு

139.44 GJ
தலா கிளை ஒன்றுக்கான சக்தி நுகர்வு

## நிலைபேறான நிதியிடல்

### பொறுப்புமிக்க கடன்வழங்கல்

சுற்றுச்சூழல் மற்றும் சமூக விருத்திக் கட்டத்தை முன்னேற்றுவதற்கும், எமது வணிகத்தை பொறுப்பான முறையில் நடாத்துவதற்கும் நாம் உறுதியாக இருக்கிறோம். எமது கடன் நடவடிக்கைகள் சுற்றுச்சூழலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதையும், நீண்டகால நிலைபேறான வளர்ச்சியை ஊக்குவிப்பதும் நமது தொடர்ச்சியான வெற்றிக்கு அடிப்படை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். எனவே, எமது கடன் நடைமுறைகளுக்கு எமது கடன் மற்றும் இடர் மதிப்பீட்டு செயன்முறைக்கு சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுமை (ESG) கருத்தாய்வுகளை உட்பொதித்துள்ளோம். எமது கூட்டாண்மை கடன் கொள்கையில் ஒரு விலக்கு பட்டியல் சேர்க்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல், மக்கள் அல்லது சமுதாயத்திற்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான தெளிவான சான்றுகள் உள்ள எந்தவொரு செயலிலும் நாங்கள் ஈடுபடவோ அல்லது தெரிந்தோ நிதியளிக்க மாட்டோம். எமது வாடிக்கையாளர்கள் உள்நாட்டு ESG தொடர்பான அனைத்து சட்டங்களையும் விதிகளையும் பூர்த்தி செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். சாத்தியமான கடன் வாங்குபவர்கள் கடன்களைப் பெறுவதற்கு சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டை உருவாக்குவது கட்டாயமாகும். காலப்போக்கில் அதிக ESG தொழில் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய பொருத்தமான நிலைபேறான நடைமுறைகளை மேலும் பின்பற்ற எங்கள் வாடிக்கையாளர்களை சாதகமாக பாதிக்க முற்படுகிறோம். அதிக ESG இடர்களைக் கொண்ட பரிவர்த்தனைகள் மேம்பட்ட மதிப்பீடு மற்றும் ஒப்புதல் தேவைகளுக்கு உட்பட்டவையாகும். தெளிவான வழிகாட்டுதல்கள் மற்றும் பாத்திரங்கள் மற்றும் போதிய முற்பாதுகாப்பு ஆய்வு மற்றும் முகாமைக்கான பொறுப்புகளுடன் விரிவான சுற்றுச்சூழல் சமூக இடர் முகாமை (ESRM) கொள்கையை நாங்கள் வகுத்துள்ளோம். ஆண்டின் போது, சுற்றுச்சூழலில் பாதகமான தாக்கங்கள் காரணமாக எந்த வசதிகளும் கடன்களும் நிராகரிக்கப்படவில்லை.

ESRM சட்டகம்



### "பசுமை" கடன்கள் மூலம் ஒரு "பசுமை" பொருளாதாரத்தை மேம்படுத்துதல்

சமூக அடிப்படையிலான மின் உற்பத்தித் திட்டமான சூரிய பல சங்கிரமய திட்டத்தை ஆதரிப்பதற்காக எமது முதன்மை உற்பத்தியான NSB சுற்றுச்சூழல் கடனைத் தொடர்ந்தோம். இச் செயற்றிட்டம் எரிசக்தி மற்றும் மீளுருவாகும் சக்தி அமைச்சு, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சாரக் கம்பனி தனியார் நிறுவனம் ஆகியவற்றுடனான ஓர் ஒத்துழைப்பு மூலம் 2016 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இல்லங்கள், மதத் தலங்கள், ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில்கள். சலுகைக் கடன் திட்டத்தின் மூலம், வாடிக்கையாளர்கள் தங்கள் மின்சார கட்டணங்களில் சேமிக்கும் போது கிரகத்தை காப்பாற்றக்கூடிய புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாற உதவுவதன் மூலம் நாட்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை செயல்படுத்துவதற்கும் பெருக்குவதற்கும் நாங்கள் ஆதரவளிக்கிறோம். சலுகைக் கடன் திட்டம் மூலம் மீளுருவாகும் சக்தி உருவாக்கத்துக்கு வாடிக்கையாளர்கள் மாற்றமடைந்து அதன் மூலம் தமது மின் கட்டணங்களையும் சேமித்து, பாதுகாத்துக் கொள்ள முடியும்.

வாடிக்கையாளர்கள் தங்கள் மின்சார பயன்பாட்டின் அடிப்படையில் நிகர அளவீட்டு திட்டம், நிகர கணக்கியல் திட்டம் மற்றும் நிகர கூட்டல் திட்டம் உள்ளிட்ட பல விருப்பங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. மில். |
|---|---|---|
| 2016 | 35 | 26.42 |
| 2017 | 902 | 685.58 |
| 2018 | 781 | 656.61 |
| 2019 | 222 | 193.2 |

## எதிர்கால முன்னுரிமைகள்

**குறுங்காலம்**

- எண்ணியல்/சுய சேவை முறைகளுக்கு மாற்றமடைய, வாடிக்கையாளர்களை ஊக்குவித்தல்
- கிளைகளில் சூரிய கலங்களை நிறுவுவதைத் தொடர்தல்
- சுற்றுச்சூழல் முன்முயற்சிகளில் முதலீடு செய்தல்

**நடுத்தர காலம்**

- சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தை வலுப்படுத்துவதன் மூலம் கடன் வழங்கலில் நிலைபேறான நிதியிடலை மேம்படுத்துதல்
- சூரிய கலங்கள் கொண்ட பசுமைக் கிளைகள் மூலம் கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்தல்
- சக்தி, காகிதம் மற்றும் நீர் நுகர்வைக் குறைத்தல்
- காகிதமில்லாத சூழலை நோக்கி நகர்தல்
- பசுமைக் கடன் வழங்கல் மூலம் கார்பன் குறைவான பொருளாதாரத்துக்கு ஆதரவளித்தல்

**நீண்ட காலம்**

- சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்புள்ள உற்பத்திகள் மற்றும் செயன்முறைகளை உருவாக்குதல்
- சுற்றுச்சூழல் முறைமையைப் பாதுகாப்பதிலான முதலீடு



# பூகோளவியல் அறிக்கையிடல் முன்முனைவுகளின் (GRI) உள்ளடக்கச் சுட்டெண்

| GRI நியமம் | வெளிப்படுத்தல்கள் | பக்க இலக்கம் | குறிப்புக்கள்/ விடுபாடுகள் |
|---|---|---|---|
| **பூகோளவியல் அறிக்கையிடல் முன்முனைவுகள் (GRI) உள்ளடக்கச் சுட்டி - "மூலத்தின் அடிப்படையில்"** | | | |
| GRI **நியம வெளிப்படுத்தல்கள்** | | | |
| 102-1 | நிறுவனத்தின் பெயர் | 4 | |
| 102-2 | நடவடிக்கைகள், குறிப்பீடுகள், உற்பத்திகள் மற்றும் சேவைகள் | 306 & 426-429 | |
| 102-3 | நிறுவனத்தின் தலைமை அலுவலக அமைவிடம் | 192 | |
| 102-4 | தொழிற்பாடுகளின் அமைவிடம் | 116 | |
| 102-5 | உரித்துடைமையின் தன்மை மற்றும் சட்ட வடிவம் | 192 | |
| 102-6 | பணியாற்றும் சந்தைகள் | 116 | |
| 102-7 | நிறுவனத்தின் அளவு | 7-11 | |
| 102-8 | ஊழியர்கள் மற்றும் ஏனைய தொழிலாளர்கள் பற்றிய தகவல் | 133 | |
| 102-9 | வழங்கல் சங்கிலி | 154-157 | |
| 102-10 | நிறுவனம் மற்றும் வழங்கல் சங்கிலி தொடர்பான குறிப்பிடத்தக்க மாற்றங்கள் | 68-69 | |
| 102-11 | முன்னெச்சரிக்கை கொள்கை அல்லது அணுகுமுறை | 36-47 | |
| 102-12 | வெளிவாரி முன்முயற்சிகள் | 5 | |
| 102-13 | நிறுவனங்களின் உறுப்புரிமை | 157 | |
| 102-14 | சிரேஷ்ட தீர்மானம் மேற்கொள்பவரின் கூற்று | 12-18 | |
| 102-16 | விழுமியம், கோட்பாடு, நியமங்கள் மற்றும் நடத்தை மாதிரி | 124-125 | |
| 102-18 | ஆளுகைக் கட்டமைப்பு | 198 | |
| 102-40 | அக்கறையுள்ள தரப்பினர் குழுக்களின் பட்டியல் | 70 | |
| 102-41 | கூட்டுப் பேரம் பேசல் உடன்படிக்கைகள் | 142-143 | |
| 102-42 | அக்கறையுள்ள தரப்பினரை அடையாளம் காணுதல் மற்றும் தெரிவு செய்தல் | 70-77 | |
| 102-43 | அக்கறையுள்ள தரப்பினர் ஈடுபாடு தொடர்பிலான அணுகுமுறை | 70-77 | |
| 102-44 | முக்கிய விடயங்கள் மற்றும் அவை தொடர்பிலான கரிசனை | 70-77 | |
| 102-45 | ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் | 4 | |
| 102-46 | அறிக்கையின் உள்ளடக்கம் மற்றும் தலைப்பு எல்லைகளின் வரையறை | 4 | |
| 102-47 | பொருண்மையான தலைப்புக்களின் பட்டியல் | 80 | |
| 102-48 | தகவல்களின் மீள் கூற்றுக்கள் | 4 | |
| 102-49 | அறிக்கையிடலிலான மாற்றங்கள் | 4 | |
| 102-50 | அறிக்கையிடும் காலப்பகுதி | 4 | |
| 102-51 | மிக அண்மைய அறிக்கையின் திகதி | 4 | |
| 102-52 | அறிக்கையிடல் சுற்றோட்டம் | 4 | |
| 102-53 | அறிக்கை தொடர்பான வினாக்களுக்கான தொடர்பு மையம் | 6 | |
| 102-54 | பூகோளவியல் அறிக்கையிடல் முன்முனைவுகள் நியமங்களுக்கு அமைவான அறிக்கையின் கோரல்கள் | 5 | |
| 102-55 | மைய மூலப்பிரமாணங்களுக்கு அமைவான GRI சுட்டிகள் | 170 | |
| 102-56 | வெளிவாரி உறுதிப்பாடு | 288 | |

| GRI நியமம் | வெளிப்படுத்தல்கள் | பக்க இலக்கம் | குறிப்புக்கள்/ விடுபாடுகள் |
|---|---|---|---|
| **GRI தனித்துவமான வெளிப்படுத்தல்கள்** | | | |
| **பொருளாதாரம்** | | | |
| **பொருளாதார செயற்திறன்** | | | |
| **GRI 103: முகாமைத்துவ அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| **GRI 201: பொருளாதார செயற்றிறன்** | | | |
| 201-1 | உருவாக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட நேரடி பொருளாதார பெறுமதி | 91 | |
| 201-3 | வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டக் கடப்பாடுகள் மற்றும் ஏனைய ஓய்வூதியத் திட்டங்கள் | 141 | |
| **சந்தைப் பிரசன்னம்** | | | |
| **GRI 103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| **GRI 201: சந்தைப் பிரசன்னம்** | | | |
| 202-1 | இழிவு உள்நாட்டு வேதனங்களுடன் ஒப்பிடுகையில், பால் ரீதியிலான, நியம நுழைவு மட்ட வேதனங்களின் விகிதாசாரம். | 140 | |
| 202-2 | உள்நாட்டு சமூகத்திலிருந்து உள்வாங்கப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவம் | 135 | |
| **மறைமுக பொருளாதார விளைவுகள்** | | | |
| **GRI 103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| **GRI 203: மறைமுக பொருளாதார விளைவுகள்** | | | |
| 203-1 | ஆதரவளிக்கப்பட்ட உட்கட்டமைப்பு முதலீடு மற்றும் சேவைகள் | 158 | |
| **கொள்முதல் நடைமுறைகள்** | | | |
| **GRI 103: முகாமை நடைமுறைகள்** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| **GRI 204: கொள்முதல் நடைமுறைகள்** | | | |
| 204-1 | உள்நாட்டு வழங்குனர்கள் மீது செலவிடப்படும் விகிதாசாரம் | 156 | |
| **ஊழலுக்கு எதிரான நடைமுறைகள்** | | | |
| **GRI 103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |

| GRI நியமம் | வெளிப்படுத்தல்கள் | பக்க இலக்கம் | குறிப்புக்கள்/ விடுபாடுகள் |
|---|---|---|---|
| **GRI 205: ஊழலுக்கு எதிரான நடைமுறைகள்** | | | |
| 205-2 | ஊழலுக்கு எதிரான நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலான தொடர்பாடல் மற்றும் பயிற்சி | 139 & 158 | |
| 205-3 | ஊழல் தொடர்பான நிரூபிக்கப்பட்ட நிகழ்வுகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 158 | |
| **போட்டிக்கு எதிரான நடத்தை** | | | |
| **GRI 103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| **GRI 206: போட்டிக்கு எதிரான நடத்தை** | | | |
| 206-1 | போட்டிக்கு எதிரான நடத்தைக்கு ஆதரவான சட்ட நடவடிக்கைகள், நம்பிக்கைக்கு எதிரான மற்றும் தனியுரிமை நடவடிக்கைகள் | 158 | |
| **சூழல்** | | | |
| **சக்தி** | | | |
| **GRI 103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| **GRI 302: சக்தி** | | | |
| 302-1 | நிறுவனத்தின் உள்ளேயான சக்தி நுகர்வு | 166 | |
| **நீர் மற்றும் கழிவகற்றல்** | | | |
| **GRI 103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| **GRI 303: நீர் மற்றும் கழிவகற்றல்** | | | |
| 303-5 | நீர் நுகர்வு | 167 | |
| **சமூகம்** | | | |
| **வேலைவாய்ப்பு** | | | |
| **GRI 103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| **GRI 401: வேலைவாய்ப்பு** | | | |
| 401-1 | புதிய ஊழியர் பதவிக்கு அமர்த்தல் மற்றும் ஊழியர் புரள்வு | 135 & 142 | |
| 401-2 | தற்காலிக அல்லது பகுதிநேர ஊழியர்களுக்குக் கிடைக்காத, முழு நேர ஊழிர்களுக்கு வழங்கப்படும் பயன்கள் | 136 & 140 | |
| 401-3 | தாய்தந்தையருக்கான விடுமுறைகள் | 139 | |

| GRI நியமம் | வெளிப்படுத்தல்கள் | பக்க இலக்கம் | குறிப்புக்கள்/ விடுபாடுகள் |
|---|---|---|---|
| **தொழில்சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு** | | | |
| GRI **103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| GRI **403: தொழில்சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு** | | | |
| 403-9 | வேலை தொடர்பான காயமடைதல்கள் | 139 | |
| **பயிற்சியளித்தல் மற்றும் கல்வி** | | | |
| GRI **103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| GRI **404: பயிற்சியளித்தல் மற்றும் கல்வி** | | | |
| 404-1 | தலா ஊழிருக்கான சராசரி பயிற்சியளித்தல் மணி நேரம் | 136 | |
| 404-2 | ஊழியர் திறன்களை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிலைமாறுகை உதவித் திட்டங்கள் | 136 | |
| 404-3 | வழக்கமான செயற்றிறனைப் பெறும் ஊழியர்களின் விகிதாசாரம் மற்றும் தொழில் விருத்தி மீளாய்வுகள் | 138 | |
| **பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்புக்கள்** | | | |
| GRI **103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| GRI **405: பன்முகத்தன்மை மற்றும் சம வாய்ப்புக்கள்** | | | |
| 405-2 | ஆண்கள் மற்றும் பெண்களுக்கான அடிப்படை சம்பளம் மற்றும் வெகுமதிகளின் விகிதம் | 139 & 140 | |
| **பேதப்படுத்தலின்மை** | | | |
| GRI **103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
| GRI **406: பேதப்படுத்தலின்மை** | | | |
| 406-1 | பேதப்படுத்தல் நிகழ்வுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் | 139 | |

| GRI நியமம் | வெளிப்படுத்தல்கள் | பக்க இலக்கம் | குறிப்புக்கள்/ விடுபாடுகள் |
|---|---|---|---|
| **உள்நாட்டு சமுதாயங்கள்** | | | |
| GRI **103: முகாமை அணுகுமுறை** | | | |
| 103-1 | பொருண்மைமிக்க தலைப்பு மற்றும் அதன் எல்லையின் விளக்கம் | 78-88 | |
| 103-2 | முகாமைத்துவத்தின் அணுகுமுறை மற்றும் அதன் பகுதிகள் | 78-88 | |
| 103-3 | முகாமைத்துவத்தின் அணுகுமுறையின் மதிப்பீடு | 78-88 | |
